பதிற்றுப் பத்து

மூலமும் ஆராய்ச்சிப் புத்துரையும்

முனைவர் கரு. அழ. குணசேகரன்



உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
தரமணி சென்னை - 600 113

பதிற்றுப்பத்து
மூலமும்
ஆராய்ச்சிப் புத்துரையும்

(கலையியல் மற்றும் சமூகவியல் நோக்கில்)

புத்துரை

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Patiṟṟuppattu mūlamum ārāyccip putturaiyum
Commentator	:	Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	663
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xliv + 332
No. of Copies	:	1200
Price	:	Rs. 170/- (Rupees One hundred and Seventy only)
Printed by	:	United Bind Graphics 43/95, Millers Road, Kilpauk Chennai - 600 010
Subject	:	Text & Neo-commentary of Patiṟṟupattu, the chronology of Chera kings of Sangam epoch

முன்னுரை

சங்க இலக்கியப் பிற நூல்களைப் போலப் பதிற்றுப்பத்துக்குப் பலர் உரை எழுதவில்லை. உ.வே.சா., அவ்வை துரைசாமிப் பிள்ளை போன்ற ஒருசிலரே உரை எழுதியுள்ளனர். பதிற்றுப்பத்திற்கு முதன்முதலில் கிடைக்கப்பெற்றது பழைய உரையே ஆகும். இவ்வுரை பதவுரையும் அன்று; அருஞ்சொற்பொருள் உரையும் அன்று; குறிப்புரையும் அன்று. எல்லா உரை நெறிகளையும் தழுவிச் செல்கின்றது.

> "இவ்வுரையினை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. 76ஆம் பாடலின் உரையில் சின்னமையைச் சின்னூல் என்றது போல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க என்று இவர் எழுதுகின்றார் . சின்னூல் என்பது குணவீர பண்டிதரால் இயற்றப் பெற்ற நேமிநாதத்திற்குப் பெயராக வழங்கப் பெற்றது . நேமிநாதம் நன்னூலாருக்கு முன் தோன்றியது. ஆதலின் இவ்வுரையாசிரியரும் நன்னூலாரின் காலத்திற்கு முற்பட்டவர் எனலாம். 68வது பாடலில் வடபுலம் என்பதற்குப் போக பூமியாகிய உத்தர குரு என்று உரை எழுதுகின்றார். இதன்வழி இவர் சமணராக இருக்கலாம் என உரைப்பாரும் உள்ர் . இதற்கு முன்னும் பதிற்றுப் பத்திற்குப் பல உரைகள் இருந்திருக்க வேண்டும் என்பாரும் உள்ர்".[1]

காலப் பழமையுடைய சங்க இலக்கியத் தொகை நூல்களில் ஒன்றாக இலங்கும் பதிற்றுப்பத்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதன் முதலாக அச்சேறியது. அதன் பின் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. இன்றுவரை வெளிவந்துள்ள பதிப்புகள் பற்றிய விவரம் வருமாறு:

1. பக். 337, உரையாசிரியர்கள், மு.வை.அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு -1968, திருத்திய பதிப்பு (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்).

1904-பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும்,குறிப்புரையும் - உ.வே.சாமிநாதையர் - வைஜெயந்தி அச்சுக் கூடம், - சென்னை.

1920- பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும் - உ.வே.சாமிநாதையர் - திருவாவடுதுறை ஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகர் பொருளுதவியுடன், கமர்சியல் அச்சுக் கூடம் -சென்னை.

1949-1957 வரை ஐந்து மறுபதிப்புகள் - பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும் - உ.வே.சாமிநாதையர் - உ.வே.சா., லிபரேட்டர் அச்சுக் கூடம் - சென்னை.

1950-1973 வரை ஆறு மறுபதிப்புகள் - பதிற்றுப்பத்து மூலமும் உரையும் - அவ்வை சு.துரைசாமிப் பிள்ளை - கழக வெளியீடு - சென்னை.

1960 - பதிற்றுப்பத்து மூலமும் உரையும் - பண்டிதர் சு.அருளம்பலம் - யாழ்ப்பாணத்துக் காரைநகர் அ.சிவானந்த நாதர் வெளியீடு - யாழ்ப்பாணம்.

1964-பதிற்றுப்பத்து மூலமும் உரையும் - மீ.பொன் இராமநாதன் செட்டியார் - இராமநாதன் செட்டியார் பதிப்பகம் - சென்னை.

1974- பதிற்றுப்பத்து தெளிவுரையுடன் - புலியூர்க்கேசிகன் - பாரி நிலையம் - சென்னை.

2004- பதிற்றுப்பத்து மூலமும் உரையும் - முனைவர் அ.ஆலிஸ் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை.

2009- பதிற்றுப்பத்து மூலமும் தெளிவுரையும் - முனைவர் ச.வே.சுப்பிரமணியன் - மெய்யப்பன் பதிப்பகம் - சென்னை.

மேற்காட்டிய பதிப்புகள் பலவற்றைப் பெற்றுள்ள இந்நூல் பதிப்பாசிரியர்கள் வரைந்த உரைகளுடனே வெளியிடப் பெற்றுள்ளது. அவ்வுரைகள் அருஞ்சொல் பொருள் கூறுவனவாகவும், பிண்டமாகக்

கருத்தினை உணர்த்துவனவாகவும், குறிப்புரை எனக் கொள்ளத் தக்கனவாகவும் உள. இவ்வுரைகளை வரைந்த உரையாசிரியர்கள் யாவரும் சேர மன்னர்தம் புகழினை விதந்தோதும் நோக்கிலேயே எழுதியுள்ளனர். சான்றாக:

பாடல் 14- மன்னனுடைய பல குணங்களையும் ஆற்றலையும் ஒருங்கு கூறி வாழ்த்துதல்.

பாடல் 16- அரசனது வென்றிச் சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச் சிறப்பும் கூறுதல்.

பாடல் 21- மன்னவன் பெருமையும் கொடைச் சிறப்பும் கூறி வாழ்த்துதல்.

பாடல் 44- மன்னவன் நெடுங்காலம் வாழ்க என வாழ்த்துதல்.

பாடல் 81 - காம வேட்கையிற் செல்லாத மன்னனின் வெற்றி வேட்கைச் சிறப்புக் கூறுதல் எனுமாறு சேரன் சிறப்புகள் உரையாசிரியர் களால் விரித்துரைக்கப்பட்டிருந்தன.

உ.வே.சா., அவ்வை சு.துரைசாமிப்பிள்ளை, புலியூர்க்கேசிகன் போன்றோர் பதிப்புகளில் பாடலில் சிறப்பாக அமைந்த தொடரையே பாடலின் தலைப்பாகக் கொடுத்துள்ளனர். சான்றாகப் பாடல் 12 மறம் வீங்கு பல்புகழ், பாடல் 37 வலம் படு வென்றி, பாடல் 38 பரிசிலர் வெறுக்கை, பாடல் 65 நாள் மகிழ் இருக்கை, பாடல் 85 நாடு காண் நெடுவரை.

மேற்சுட்டப்பட்ட தலைப்புக்களை உற்றுநோக்கும் போது சேர மன்னர் பெருமைகளையும், சிறப்புகளையும், வீரத்தன்மைகளையும் பரிசில் வழங்கிய கொடைத்தன்மைகளையும் மையப்படுத்தியே இந்நூலிற்கு உரை செய்துள்ளனர் என்பது நன்கு புலனாகும். பெரும்பாலான பாடல்களில் நாடு மக்கள் பாணன் மற்றும் கூத்தர்கள் போன்ற கலைஞர்கள் பற்றிய செய்திகள் அப்பாடல்களைப் புனைந்த புலவர்களால் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆயினும் உரை வரைந்தோர் ஒருவரேனும் இச்செய்திகளைத் தக்கவாறு விளக்கிக் கூறவில்லை. சுருங்கக் கூறின் பாணர், கூத்தர், விறலியர், துணங்கையர், கோடியர், வயிரியர், பொருநர், கண்ணுளர் போன்ற

கலைஞர் பெருமக்களின் ஊடாடல் குறித்தும் அவர்தம் பங்களிப்புகள் குறித்தும் அவர்களின் கலைத் திறன்கள் குறித்தும் அக்காலச் சமூக அமைப்பில் கலைஞர்களான இவர்தம் வாழ்வியல் குறித்தும் மக்களோடும் மன்னரோடும் ஐவகை நிலங்களோடும் அவர்கள் உறவாடிய விதங்கள் குறித்தும் எந்தவொரு உரையிலும் அழுத்தமுறப் பதிவு செய்யப்படவில்லை. சொல்லப் போனால், கலைஞர்கள் பற்றிய எந்தக் குறிப்புக்களையும் குறிப்பிட்டுச் சமூகத்தில் அவர்களுக்கு இருந்த உறவு நிலை குறித்துச் சரிவரக் குறிக்காமல் உரையாசிரியர்கள் விலகிச் சென்றமை தெரிகிறது. பாணர் மற்றும் கூத்தர் குறித்த பதிவுகள் அற்ற பாடல்கள் பதிற்றுப்பத்தில் 23 பாடல்களே என அறுதி இட்டுக் கூற முடியும். எஞ்சியுள்ள பிற அனைத்துப் பாடல்களிலும் கலைஞர்களைக் குறிப்பிட்டுப் புலவர்கள் பரக்கவே பேசியுள்ள போதிலும் உரையாசிரியர் கள் அக்கலைஞர்களைப் பொருட்படுத்தாது உரைசெய்துள்ளனர் என உணர முடிகிறது. சங்க இலக்கியங்களில் கலைஞர்களின் பதிவுகள் குறித்துப் பதிற்றுப்பத்தில் மட்டுமல்ல பிற அனைத்துத் தொகுப்புகளிலும் இதே பார்வையினை உரையாசிரியர்கள் பலரும் கொண்டிருந்தமை யினை எண்ணிப் பார்க்க முடிகிறது. கலைமற்றும் கலைஞர்கள் குறித்த பதிவுகளையும் ஆய்வுத் தேடல்களையும் உரையாசிரியர்கள் அழுத்தப்படுத்திக் கூறாமைக்குப் பத்தி இலக்கியக் காலத்தின் தாக்கம் பெற்றதின் வழி என மதிப்பீடு கொள்ள முடிகிறது. மேற்குறிப்பிட்ட பாணர், பாடினியர் போன்ற கலைஞர்கள் சங்க காலங்களில் மிதவைச் சமூகமாக வாழ்ந்தார்கள். குடிகளையும், அரசனையும் இணைக்கும் இணைப்புத் தளமாகக் கலைஞர்தம் வாழ்வியல் நிலவியது. ஓர் ஊர் ஒரு நாடு என ஓர் எல்லைக்குள் கலைஞர்கள் வாழ்க்கை அடங்கவில்லை. எல்லா நாடும், எல்லா ஊரும் கலைஞர்தம் நாடாகவும், ஊராகவும் திகழ்ந்தன. இவ்வாறு மிதவைச் சமூகமாக வாழ்ந்த கலைஞர்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்திற்குப் பின் வந்த இலக்கியங்களில் காணப் பெறவில்லை. பத்தி இலக்கியக் காலத்தில் தோன்றிப் பின் நன்கு செழித்து வளர்ந்த சிற்றிலக்கியங்களில் கூடக் கலைஞர்கள் பற்றிய செய்தி மிகவும் குறைவே. கலம்பகத்தில் பாண், விறலி அனைய உறுப்புகள் உண்டு. அங்கும் சங்க இலக்கியப் பதிவுகளில் பாணனும், விறலியும் பெற்றிருந்த செல்வாக்கும், சிறப்பும் இல்லை. பத்தி இலக்கியக் காலத்தில் சமூகமோ, தனிமனித வாழ்வோ அரசு அரசன் பற்றிய வாழ்வியலோ இலக்கியப் பாடுபொருளாக அமையவில்லை. இறைவனும் இறையுணர்வுமே

பாடுபொருளாயின. ஆதலால் சமுதாய அங்கத்தினர்களான கலைஞர்களும் அவர்தம் கலைகளும் அவ்விலக்கியங்களில் குறிப்பிடப் பெறுவதற்கான சூழல் இல்லாது போயிற்று. ஆனால் சங்கம் மருவிய காலங்களிலும் பத்தி இலக்கியக் காலங்களிலும் பாணர்கள் உள்ளிட்ட கலைஞர்கள் என்னவாயினர் என்பது குறித்த தேடல் தமிழ் ஆய்வாளர்களின் கவனத்தில் இருந்து விலகி விட்டது.

கலையும் கலைஞரும் ஒருங்கிணைந்த சமூக அமைப்பாக விளங்கிய சங்க இலக்கியக் காலச்சமூகக் கட்டமைப்பை உரையாசிரியர்கள் சரிவரப் புரிந்து கொள்ளாமையால் கலைஞர்களைப் பற்றிய செய்திகள் அவ்வுரையாசிரியர்களால் ஆய்ந்தளித்துப் பதிவு செய்யாமல் போனதின் வழியாகக் கலைஞர்களின் தடயங்கள் தொடர்ந்து இலக்கியங்களில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இயல், இசை, நாடகம் என முத்தமிழ் குறித்துப் பெருமை பேசிக் கொள்ளும் நாம் இசை குறித்த ஆய்விலும் நாடகம் குறித்த ஆய்விலும் இலக்கியத்திற்குச் செலுத்திய கவனத்தினை விட மிகக் குறைவாகவே மதிப்பீடு செய்துள்ளோம் என நம்மை நாமே விமர்சனம் செய்யும் சூழலில் உள்ளோம்.

புறக்கணிக்கப்பட்டுள்ள கலை மற்றும் கலைஞர்கள் குறித்த இசையியல் மற்றும் நாடகவியல் குறித்த தேடலைச் செம்மொழி மதிப்பு நிலை பெற்றிருக்கக் கூடிய இன்றைய நிலையில் எண்ணிப் பார்க்க வேண்டிய, ஆய்வுலகிற்கு முன் மொழியப்பட வேண்டிய சமூகத் தேவை ஏற்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தில் கலைஞர்கள் பற்றிய பதிவுகள் பல்வேறு நிலைகளில் விளக்கப்பட்டுள்ளன. அக்கலைஞர்கள் எவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றும் எந்த நோக்கத்தில் கலைஞர்கள் போர்க்களங்களிலும் அவைக்களங்களிலும் ஐவகை நிலங்களிலும் வாழ்ந்தனர் என்றும் அவர்களின் உறவு நிலை மற்றும் அக்காலச் சமூக இயங்கு தளத்தில் கலைஞர்களின் பங்கு நிலை யாது என்றும் நாம் தெளிவு பெறப் போதுமான சான்றுகள் பல்வேறு பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் பதிற்றுப்பத்தில் பாணர் மற்றும் கூத்தர் மரபினர் வழியேதான் சேரனின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன எனச் சொல்லத்தக்க வகையில் எண்ணிறந்த சூழல்களில் இவர்களின் ஊடாடல் குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கலைஞர்கள் நோக்கில் சேர

மன்னர்களை விளக்கும் போக்கு இந்த உரையில் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

கலையியல் மற்றும் சமூகவியல் நோக்கில் பதிற்றுப்பத்து எனும் இந்த உரை வழியே இனக்குழுச் சமூகத் தலைவர்கள் அவர்தம் தலைமையின் கீழ் வாழ்ந்த சமூகத்தின் வாழ்நிலையை உணர்ந்து கொள்ள வாய்ப்புள்ளது. இனக்குழுச் சமூகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியான சீறூர் நாடன், குறுநில மன்னர்கள் வாழ்ந்த சமூகத்தில் மக்களின் வாழ்க்கைப் பின்புலம், மன்னரின் ஆளுமைத் திறன்கள், பாணர் போன்ற கலைஞர்களின் உறவு நிலைகள் போன்றவை எடுத்து விளக்கப்படுகின்றன. பாணர், பாடினியர், கோடியர், கண்ணுளர் போன்றோரின் தன்மைகள், அவர்தம் கலைத் திறன்கள், அவர்கள் இனக்குழுவாக வாழ்ந்தமை, அவர்கள் ஓர் இடத்தில் இராது அலைவுறு சமூகமாக - நாடோடிகளாக வாழ்ந்த நிலைமைகள் இவ்வுரையில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

சொல்லுக்குச் சொல் பொருள் காணும் போக்கு என்பது இந்த உரை முயற்சியில் கைக்கொள்ளப்படவில்லை. காரணம், பழைய உரையாசிரியர்கள் மற்றும் புதிய உரையாசிரியர்கள் உ.வே.சா. தொடங்கிப் பதிப்புலகிற்கு வந்த பல்வேறு பதிப்பாசிரியர்களும் சொற் களுக்கு விளக்கம் தரும் பணியை ஏலவே செய்துள்ளனர்.சங்க இலக்கியச் செம்பதிப்பு உருவாக்கம் எனும் சீரிய நோக்கம் கொண்டு உழைக்கும் காலம் இது. கணினி உலகில் உலகெங்கும் உள்ள தமிழ் ஆய்வுக்காரர்களும் தமிழ் அன்பர்களும் எளிதில் கண்டு தெளிவடையும் வகையில் பல மூலங்களும் பல உரைப் பிரதிகளும் காட்சிக்கும் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய காலம் இது. பாமரத் தமிழனுக்கும் சங்க இலக்கியக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் பாடல்களையும் முன் வைத்துச் செயல்படக் கூடிய காலம் இது. இத்தகைய சூழலில் செய்துள்ள பணிகளைச் சிரமேற்கொண்டு அடுத்த நிலைச் சிந்தனையாக ஆய்வுலகிற்கு முன் வைக்கும் பணிகளுள் ஒன்றாகக் கலையியல் நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் அணுகிப் பார்க்கும் வகைக்கு உதவும் வகையில் இந்த உரை அமைக்கப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்து என்னும் இப்பனுவல் புறநானூற்றுப் பாடல்களைப் போல் போரையும், போரின் வெற்றி குறித்த சிறப்புச் செய்திகளையும்

உள்ளடக்கிக் கொண்டதாக அமைந்துள்ளது. குறிப்பாகச் சேர மன்னர்களின் சிறப்பை எடுத்தியம்பும் பாடல் தொகுதியாக இது விளங்குகிறது. போர்ச் செய்திகளைப் பாடல்தோறும் விளக்கும் பதிற்றுப்பத்து மென்மை உள்ளம் கொண்ட கலைஞர்களான பாணர், விறலியர், துணங்கையர், வயிரியர், கோடியர், கூத்தர் போன்ற கலைஞர் பெருமக்களை விதந்தோதும் இலக்கியமாகவும் விளங்குகிறது. மேற்குறிப்பிட்ட கலைஞர் பெருமக்களைச் சுட்டி விளக்கியவாறு சேரரின் சிறப்புகள் சொல்லப்படுகின்றன என்பதைப் பதிற்றுப்பத்துக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் கவனிக்கத் தவறியுள்ளனர் என்பதை உணரமுடிகிறது. புறப்பாட்டில் கலை விவரணங்களை எண்ணும் போது முரணாகத் தோன்றினாலும் கூட இக்கருத்தே முதன்மையானதாக அமைகிறது என்பதில் வியப்பு இருக்க முடியாது. உரையாசிரியர்கள் சேரரையும் அவர் சிறப்புகளையும் முதன்மைப்படுத்தி விளக்கிய அளவுக்குக் கலைஞர்களின் பங்களிப்பினைச் சரிவர விளக்கவில்லை என்றே தோன்றுகிறது.

யாம் அரங்கியல் துறையில் இருபது ஆண்டுக்காலம் பணியாற்றிய அனுபவங்கள் கொண்ட தமிழ் இலக்கியவாதியாக இருப்பதனால் உரையாசிரியர்களால் அழுத்தமுறப் பெறாத பாணர் மற்றும் கூத்தர்கள் குறித்த பார்வையில் அணுகிப் பார்க்கும் முறைமையில் எம்மால் இவ்வுரை வரையப்பெற்றுள்ளது. பதிற்றுப் பத்துப் போரையும், போரில் ஈடுபட்ட வீரர்களையும், வெற்றி பெற்ற விவரங்களையும் விளக்கமுறத் தருவதாக அறிஞர்கள் கூறுவர். எட்டுத்தொகையுள் காணப்படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய எட்டினுள் புறப்பொருள் வகையில் அமைந்தவை பதிற்றுப்பத்தும், புறநானூறும் என்ற இரண்டும் ஆகும்.

பதிற்றுப்பத்துப் பலரும் கூறுவது போலப் புறப்பொருள் சார்ந்த ஒரு நூல். எனினும் கலையியல் பார்வையில் பதிற்றுப்பத்தினை ஆராய்ந்து பார்த்திருப்பது இந்த உரையின் தனித்தன்மை ஆகும்.

முதுகலைத் தமிழ் இலக்கியம் மதுரை தியாகராசர் கல்லூரியில் படித்த காலத்தே பேரா.நா.பாலுசாமி, முனைவர் சுப.அண்ணாமலை, அ.சங்கரநாராயணன் போன்ற பேராசிரியர்கள் பலர் எமக்குப் பாடங்கள்

நடத்திய போது தொல்காப்பியச் சூத்திரங்களானாலும் சங்க இலக்கியங்கள் மற்றும் பத்தி இலக்கியங்களானாலும் இசையோடு பாடியே விளக்கங்கள் சொன்ன முறைமைகள் குறித்து எண்ணுந் தோறும் இனிக்கிறது. பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வண்ணம், தூக்குக் குறித்துப் பாடம் நடத்திய போது நாட்டுப்புறப்பாடல்களை மேடைகள்தோறும் பாடிக் கொண்டிருந்த எனக்குள் சந்தம் குறித்தும், தாளம் குறித்தும் குறிப்புகள் பதிவாகியிருந்தமை என் மனதில் தேடல்களாயின. தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த முதுபெரும் பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களால் நான் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு விரிவுரையாளராக அழைக்கப்பட்ட போது சங்க இலக்கியத்தின்பால் அவர் காட்டிய ஆய்வுச் சிந்தனைகள் என்னுள் அழுத்த நிலை பெற்றிருந்தன. புதுவை மத்தியப் பல்கலைக் கழகத்திற்கு நாடகத் துறைக்கு இணைப்பேராசிரியராக நான் பணி மேற்கொண்ட போது பெட்ரோட் பிரெக்ட், ஸ்டனிலாவ்ஸ்கி, மேயர் ஹோல்டு போன்ற மேலை நாடகக் கோட்பாட்டாளர்களையும், அவர்தம் நாடகவியல் சிந்தனைகளையும், பரதமுனியின் நாட்டிய சாத்திரத்தையும் மாணவர்களுக்காக வகுப்பு நடத்த வேண்டியும், ஆய்வாளர்களுக்கு வழிகாட்டிட வேண்டியும் எனது கற்கை நெறிமுறை அமையலானது. இருபது ஆண்டுகள் நாடகவியல் குறித்த சிந்தனையில் பலி ஆடுகள் (தலித் நாடகம்), பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு(பெண்ணிய நாடகம்) எனும்படியான நாடகங்களை எழுதவும், இயக்கவும் என்னைத் தகவமைத்துக் கொள்ள வாய்ப்புகள் ஏற்படலாயின. 20-08-2008 இல் இயக்குநராக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நான் பணி அமர்த்தப்பட்ட போது பழந்தமிழ் இலக்கியங்கள் குறித்த வாசிப்புகளை மேற்கொள்ளவும் ஆய்வுக்குட்படுத்தவும் தொடர்புடைய பணிகளில் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்ளவும் முனைப்பினைக் கூர்மைப்படுத்திக் கொள்ளவும் முயன்றேன். பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து என இம்மூன்றினையும் கலைத் துறையுடன் குறிப்பாக நாடகத்துறையுடன் பொருத்திக் கண்டு ஆய்வுக்குட்படுத்த வேண்டித் தீவிரவாசிப்புக்குட் படுத்தினேன். உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்திருந்தமை எனது வாசிப்புகளையும், ஆய்வுச் சிந்தனைகளையும் முடுக்கிவிட்டது. செம்மொழி மத்திய ஆய்வு

நிறுவனத்தின் நிதி உதவி பெற்று நடத்தப்பட்ட சங்க இலக்கியங்கள் தொடர்பான கருத்தரங்குகளுக்கு அவ்வப்போது நான் அழைக்கப் பட்டேன். அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுத முற்பட்டேன். இதன் தொடர்ச்சியில் பதிற்றுப்பத்தில் எனது ஆய்வுச் சிந்தனை தொடர்ந்தது.

பதிற்றுப்பத்தில் ஒரு சில பாடல்களை வாசித்த போது எனக்குள் வியப்பு நேரிட்டது. ஆம் கலைஞர்கள் அனைத்துப் பாடல்கள் தோறும் இடம்பெற்றிருந்தனர். இன்னும் சொல்லப் போனால் பாணர்,கூத்தர், விறலியர், கண்ணுளர், வயிரியர், பொருநர், துணங்கையர் போன்ற கலைஞர் பெருமக்கள் இடம்பெறாத பதிற்றுப்பத்துப் பாடல்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். கலை வடிவங்களும், கலைஞர்களும் இடம்பெற்றுள்ள பதிற்றுப்பத்துப் பாடல்கள் உரையாசிரியர்களின் பார்வையில் போர்ச் செய்திகளைக் கூறி மன்னர்தம் புகழினைப் பேசும் பாடல்களாகவே பட்டன. எனவே அவர்தம் உரைகளில் சேர மன்னர்களின் வெற்றிச் சிறப்புகள் விதந்தோதப்பட்ட அளவுக்கு மேற்குறிப்பிட்ட கலைஞர் பெருமக்கள் குறித்த செய்திகள் குறைவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. 'அலவன் ஆடிய வடு' எனும் தொடர் இடம் பெற்ற ஒரு பாடலில் கடற்கரையோரம் அமைந்துள்ள பனஞ்சோலைப் பகுதி, பனை மரத்துக் கொண்டைகள் ஒன்றையொன்று உரசியவாறு இருக்கின்றன. இது மேலே கூரை வேய்ந்ததைப் போன்று அமைந்திருக்கின்றது. இயல்பாகவே பனை மரங்கள் வட்ட வடிவில் அமைந்துள்ள இடம், வட்டக் களறி என்பதாகவே காட்சியளிக்கிறது. சேரனும், அவன் தன் படை வீரர்களும் வட்டமுற அமர்ந்த நிலையில் கள்ளும், கறியும் உண்டவாறு வட்டக்களறியில் ஆடுகின்ற துணங்கைக் கூத்தினைக் கண்டு இரசித்துக் கொண்டிருக்கின்றனர்; ஒரு கட்டத்திற்கு மேல் மன்னனும் துணங்கைக் கூத்தாடுவோரோடு ஆடுகின்றான் எனுமாறு காட்டப்படும் ஆட்டக்கலைக் காட்சி போலப் பல பாடல்களில் கலைஞர்கள் நடத்தும் கலை நிகழ்ச்சிகள் பதிற்றுப்பத்தில் காட்சி வடிவங்களாக அமைகின்றன.

பதிற்றுப்பத்துப் பாடல்களில் இயல்பு நிலை அரங்கு (Realistic Theatre), நகர்வரங்கு அல்லது அசைவரங்கு (Moving Theatre), திறந்த வெளி அரங்கு, மன்னனின் திருவோலக்கத்தில் நிகழ்ந்த பெட்டி வடிவ அரங்கு (Proscenium Theatre),பாண்டில் எனும் விளக்கு ஒளிக்கலை

(Lighting Design) போன்ற நிகழ்த்துகலை குறித்த பதிவுகள் ஏராளமாகத் தென்படுகின்றன. நாடகத் துறையைச் சார்ந்த பேராசிரியர் எனும் அனுபவ நெறியும் தமிழ் இலக்கியம் படித்த அறிவும் ஒன்றிணைந்து இப்பாடல்களைக் கலையியல், சமூகவியல் நோக்கில் பார்க்கும் எம் ஈடுபாட்டினை மேலும் பெருக்கின. தமிழக மரபுச் செல்வங்கள் எனும் தலைப்பில் ஒரு தேசியக் கருத்தரங்கினை இயல், இசை, நாடகம் எனும் வகையில் மூன்று நாள் தமிழக அரசின் நிதியுதவியுடன் நான் நடத்திட வாய்ப்புக் கிட்டியது. சிறந்த அறிஞர் பெருமக்கள் ஆய்வாளர்கள் நிகழ்த்துக் கலை வல்லுநர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட அந்நிகழ்வினைப் பலரும் பாராட்டினர். எம் நிறுவனத்தைச் சார்ந்த ஒரு முதுநிலைப் பேராசிரியரின் விமர்சனப் பார்வையில் கலையியல் சார்ந்த அக்கருத்தரங்கமைவுகள் வெறும் கேளிக்கை நிகழ்வாகப் பட்டன போலும். அவர் கலைத்துறையைக் குறைத்து மதிப்பிட்டுக் கூத்தாடியமை எனும் பரிகாசச் சொல் கொண்டு மறைவாகப் பேசியதாக நான் அறிந்து அதிர்ந்தேன். தமிழ் இலக்கியத் துறையினர் முத்தமிழ் எனப் பேசினாலும் கலைத்துறையை இவ்வாறு மதிப்பிட்டதின் விளைவாகத் தான் நமது சங்க இலக்கிய ஆய்வுகள் துணங்கை, குரவை மற்றும் விறலி, பறையர், துடியர், கடம்பர், பாணன், பாடினி என்பன போன்ற கலைகளையும் , கலைஞர்களையும் குறித்த பதிவுகளைச் சரிவரக் கண்டு கொள்ளாமலே தவிர்த்துள்ளனர் என்னும் எம் சிந்தனையை அப்பேராசிரியரின் பேச்சு மேலும் வலுவாக்கியது. பதிற்றுப்பத்தை வாசிக்க நேர்ந்த போது உரையாசிரியப் பெருமக்கள் கலை குறித்த பதிவுகளின் போது சரிவர விளக்காமல் போனமைக்கான காரணம் எம்நிறுவன முதுநிலைப் பேராசிரியரின் குரலோடு அது ஒத்திசைந்த தாகவே எனக்குப்பட்டது.கலை குறித்த பதிவுகளை அழுத்தப்படுத்திய நிலையில் இப்பணியை நாமே செய்ய வேண்டும் என ஆர்வம் நேரிட்டது. அந்த ஆர்வமே பதிற்றுப்பத்திற்குக் கலையியல் நோக்கில் உரை செய்ய என்னை ஆளாக்கியுள்ளது. ஒரு சில பாடல்கள் கலை குறித்துப் பதிவுகள் கொண்டிராமல் இருந்தமையால் அவற்றை நீக்கி விட்டு உரை செய்து விடலாமா என எண்ணம் நேரிட்டது. மார்க்சிய வழிநின்று ஆய்வு செய்ய முறைமைப்படுத்திக் கொண்ட நான் அவற்றைச் சமூகவியல் நோக்கில் உரை செய்து விடுவது என முடிவெடுத்துக் கொண்டேன். இலங்கைக் கண்டியில் உள்ள ஒரு கலையரங்கில் ஒரு கலை நிகழ்ச்சியைத் தொடக்கி வைக்க

அழைக்கப்பட்டிருந்தேன். அவ்வமையம் எனது நாட்டுப்புறப்பாடல்களை மிகவும் நேசிக்கும் பேரா. கா. சிவத்தம்பி அவர்களுடன் பேசிக் கொண்டு இருக்கையில் நான் செய்து கொண்டிருக்கும் பணியை அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

பதிற்றுப்பத்தில் காணப்படும் அரங்கியல் கலை குறித்தும், பதலை, முழவு, தண்ணுமை, போன்ற இசைக் கருவிகள் குறித்தும் பகிர்ந்து கொண்டேன். கலையியல் நோக்கில் உரை எழுதும் பணியைச் செய்திட எனக்கு வாழ்த்துக் கூறினார். அவர் தந்த ஊக்கம் பதிற்றுப்பத்திற்கான உரையை விரைந்து முடிக்க எனக்கு உந்துதல் தந்தது. நண்பரும், தமிழ் ஆய்வாளருமான தோழர் பொ.வேலுச்சாமி அவர்களுடன் அவ்வப்போது தொலைபேசியில் கலந்துரையாடிப் பல தகவல்களைப் பெற்றுக்கொண்டமையை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ச.வே.சு. அவர்கள் இந்நிறுவனத்திற்கு நூலகப் பணி நிமித்தமாக வந்திருந்தார். அவரோடு பேசிக்கொண்டிருந்த போது பதிற்றுப்பத்திற்கான உரை எழுதிக் கொண்டிருந்த பணி குறித்துச் சொன்னேன். சங்க இலக்கியத்தில் இதுவரை கண்டு பிடிக்கப்படாத ஒருவித உத்தி முறை குறித்தும், சமண அறநெறிகள் ஒரு சில பாடல்களில் இடம் பெற்றிருந்தமை குறித்தும் அவருடன் கலந்து கொண்டேன்.எனது கருத்துகள் அவருக்குப் புதியனவாக விளங்கின என்றும் நான் கூறிய கருத்துகள் குறித்துக் கூடுதலாகத் தமிழ் ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டும் என்றும் கூறித் தான் உரை எழுதி அண்மையில் வெளியிட்ட பதிற்றுப்பத்தினைப் பரிசளித்து வாழ்த்துக் கூறினார். பேராசிரியர் ச.வே.சு. அவர்களுக்கு எனது நன்றியை இந்நேரத்தில் பதிவு செய்து கொள்கிறேன்.

பேராசிரியர் சோ.ந. கந்தசாமி அவர்கள் செம்மொழி மாநாட்டுத் தொடர்புடைய பணிகளைச் செய்யும் பெருட்டு எம் நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தார். அவரைச் சந்தித்துப் பதிற்றுப்பத்திற்கு உரைசெய்து கொண்டிருக்கும் செய்தியைக் கூறி அவ்வுரையில் யான் ஒரு சில புதிய கருத்துக்களை முன் வைத்து எழுதி இருந்த பகுதிகளை அவருடன் பகிர்ந்து கொண்டேன். ஊர்ப்புறச் செரு கிடைநிலை என நான் புதிதாகத் துறை வகுத்திருந்தமை எத்திணையில் சேர்ந்து விளங்கும் என நான் கேட்ட போது தொல்காப்பியரின் புறத்திணை இயலில் இடம் பெற்றுள்ள

புறத்துறையை நினைவு கூர்ந்து உறுதிப்படுத்தி எம் நூலகத்திற்கு அவரே சென்று இளம்பூரணர் உரையை எடுத்துப் பார்த்துத் தொல்காப்பியர் குறித்த புறத்துறை ஆநிரை குறித்துச் சொல்லப் படுகிறது அன்றிப் போரிடும் உத்திமுறை குறித்துச் சொல்லப்படவில்லை என்று முடிவு செய்து ஊர்ப்புறச் செரு கிடை நிலை எனும் துறை வஞ்சித்திணையில் பொருந்தும் எனச் சொன்னார். மேலும் சமணர் குறித்த சிந்தனைகள் குறித்த எனது கருத்துரையைக் கவனமாகக் கேட்ட அப்பேராசிரியர் இத்தகு கருத்துக்களை ஆதாரங்களோடு முன் வைப்பதில் தவறு இல்லை என முன்மொழிந்தார். இப்பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றி.

******

நன்றியுரை

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது. தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது. நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

பதிற்றுப்பத்தில் காணலாகும் கலையியல் குறித்த சிந்தனைகளை இலங்கையிலிருந்த **பேரா. கா. சிவத்தம்பி** அவர்களின் இல்லத்தில் அவருடன் பேசிக் கொண்டிருந்த போது பதிற்றுப்பத்துக்கு உரை செய்ய எண்ணியிருந்த எனது செயற்பாட்டை ஊக்கப்படுத்திய எனது மதிப்புக்குரிய தோழரும் முத்தமிழ் ஆய்வறிஞரும் ஆன பேரா. கா. சிவத்தம்பி அவர்களுக்கு எனது நன்றி முதன்மையானதாகும்.

பதிற்றுப்பத்து நூலுக்குக் கலையியல் நோக்கில் உரை செய்து முடித்த நிலையில் கலை நிலை சாராத பாடல்களுக்கும் சேர்த்து உரை எழுதுங்கள் என என்னை முனைப்புக் காட்டிச் செயற்படுத்திடத் துணை நின்ற எனது ஆய்வாளர் **க. கிரிவாசன்** எனது நன்றிக்கு உரியவர்.

ஐயப்பாடுகள் ஏற்பட்டபொழுதெல்லாம் தோழர் பொ. வேலுசாமி அவர்களுடன் தொலைபேசி வழியாகத் தகவல்கள் பல பெற்றேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் பல்வேறு பணிகளின் பொருட்டு வந்த பொழுதுகளில் பல்வேறு கருத்துகளைக் கலந்தாய்வுகள் செய்துகொள்ளத் துணை நின்ற **பேராசிரியர்கள் ச.வே.சு., சோ.ந. கந்தசாமி** ஆகியோருக்கும் எனது நன்றிகள் என்றுமுண்டு.

உரை எழுதி முடித்ததும் மூலப்படிகளைக் கொண்டு கணினி அச்சுக்குப் பதிவு செய்த வேளைகளில் பிழை திருத்தங்கள் கண்டு புதிதாக எனது கருத்துகளை அழுத்தப்படுத்திக் காட்ட வேண்டி உரைப்பகுதியின் பல இடங்களை அடிக்கோடிட்டுக் காட்டித் தந்துதவியதோடு ஆராய்ச்சி முன்னுரை ஒன்றும் தந்துதவியுள்ள இளவல் **இணைப்பேராசிரியர் முனைவர் இரா. கண்ணன்** அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகும்.

எம் நிறுவனத்தில் பணியாற்றும் **பேராசிரியர் முனைவர் ஆ.தசரதன்** அவர்களுடன் அவ்வப்போது எனது உரைப் பணியைப் பகிர்ந்து கொண்டதுண்டு. அவர் தந்த விமர்சனங்கள் என்னை உரத்த சிந்தனைக்குள்ளாக்கிப் பல தொடர்புடைய நூல்களை வாசித்திடத் தூண்டின. அவருக்கு எனது நன்றி உரியதாகும்.

பதிற்றுப்பத்தில் இரு பாடல்களில் காணப்படும் சமணச் சிந்தனைகள் குறித்துச் சமண நூல் எழுதிய **இளவல் ச. சந்திரசேகரன்** அவருடன் தொலைபேசியில் பேசிப் பல தகவல்கள் பெற்றுக் கொள்ள முடிந்தது. அவர் எனது அன்புக்கும் நன்றிக்கும் உரியவர் ஆவார். உரைப் பணியினை அறிந்து தானும் இதில் உதவிட முடியுமா எனக் கேட்டு நேரில் வந்து எனது நீண்ட முன்னுரையை நான் சொல்ல எழுத்துரு செய்து தந்த **பேராசிரியர் மாதவன்** அவர்களுக்கு எனது நன்றி.

ஒன்பது மாதங்கள் சனி, ஞாயிறு மற்றும் அலுவலகப் பணிநாட்களில் இரவு வேளைகள் எனுமாறு இந்த உரைப் பணி எழுதும் காலம் அமைந்திருந்தது. இக்காலக்கட்டங்களில் புதுச்சேரியிலுள்ள என் குடும்பத்தைக் காணச் செல்லும் வாய்ப்புகள் குறைவுபட்டன. என் குடும்ப உறுப்பினர்களான மனைவி **முனைவர் வீ. ரேவதி**, மகள் **கு. குணவதி**, மகன் **கு. அகமன்** ஆகியோர் எனது அன்பான நன்றிக்குரியவர்கள். என் தங்கை **பேராசிரியர் முனைவர் கே.ஏ. ஜோதிராணி** என் உடல்நிலையைக் கருத்தில்கொண்டு கவனித்த முறை இக்காலக்கட்டத்தில் முக்கியமானதாகும். என் தங்கைக்கும் என் அன்பான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் துணை இயக்குநர் **திரு. வீரபாகு சுப்பிரமணியம்** அவர்கள் அவ்வப்போது எனக்கு ஊக்கம் தந்தவர். எம் பணியாளர்கள் கணினிப் பொறியாளர் **திருமதி எ.ம. லட்சுமி** மற்றும் **திருமதி பா. கௌசல்யா**, நூலகர் **திரு. பெருமாள்சாமி** இரவுநேரங்களில் தேனீர், உணவு என வாங்கித் தந்து பல நிலைகளில் உதவி செய்த ஓட்டுநர் **கோ. இராஜமாணிக்கம்** மற்றும் காப்பாளர் **திரு. கோவிந்தராஜ்** ஆகியோர் இந்நேரத்தில் உளமார்ந்த நன்றிக்கும் உரியோராவர்.

இந்த உரைப்பணி எழுத்துருவைப் படித்துத் தங்கள் கருத்துரைகளைத் தர வேண்டிக் கொண்டதற்கிணங்கத் தத்தம் மதிப்புரைகளைத் தந்துதவிய பேராசிரியப் பெருந்தகைகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநராக இருந்து இந்நாள் சிறப்பு அலுவலராகச் சீரிய பணியாற்றி வருபவரும் என்பால் மிகுந்த பாசம் கொண்டுள்ளவருமான தமிழறிஞர் **முனைவர் க. இராமசாமி**, பேராசிரியரும் தமிழ்ப் பல்கலைக் கழக முன்னைத் துணைவேந்தரும், சங்க இலக்கியப் பதிப்புகளைச் சீரிய முறையில் உரை செய்தமையோடு வெளியீடு செய்ய நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாருக்குத் துணை நின்ற முதுநிலைப் பேராசிரியரும் ஆன **தமிழறிஞர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. நான் ஆய்வாளராக இருந்த காலந்தொட்டுப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராக இருந்தபோது என்பால் நல்ல நேசம் கொண்டவரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தரும் என் எழுத்துப் பணிகளைத் தொடர்ந்து கவனித்து உற்சாகப்படுத்தி வருபவருமான **தமிழறிஞர் முனைவர் க.ப. அறவாணன்** அவர்களுக்கு என் மனங்கனிந்த நன்றிகள் என்றும் உண்டு.

நூலாக்கத்தின் போது உதவிகள் பல செய்த சென்னை, இராணி மேரி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **முனைவர் ந. கலைவாணி** அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. இந்நூலிற்கு முகப்பு ஓவியம் வரைந்தளித்த **ஓவியர் தோழர் சந்துரு** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. இந்நூல் இந்நிறுவன வெளியீடாக வெளிவர அனுமதி அளித்த பதிப்புக்குழுவுக்கும் என் நன்றிகள்.

சென்னை. **கரு. அழ. குணசேகரன்**

முனைவர் இரா. கன்னன்
தமிழ் இணைப்பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை – 600 005

ஆராய்ச்சி முன்னுரை

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை (புறம். 72: 13-16)

முற்படக் கிளந்த அகத்திணைகள் ஏழிற்கு ஒருவாற்றான் சார்புடையனவாய் அமைந்து கிடக்கும் புறத்திணைகள் ஏழென்பது ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம் என்னும் பைந்தமிழ் இலக்கணப் பனுவலைப் பாங்குற யாத்தளித்த தொல்லாசிரியராம் தொல்காப்பியனாரும் அவர்க்கு முன்பே தண்டமிழ் ஆய்ந்து தகைமையுடன் நற்றமிழ் இலக்கணம் கண்டதனை நலம்படவே மண்டு புகழொடு விண்டோதிய பண்டைய புலவோர் யாவரும் ஒருபடவே ஓதிய கருத்தாம். இதற்கு 'முற்படக்கிளந்த' என்றும், 'என்ப' என்றும் கூறும் தொல்காப்பியரின் சொல்லாட்சிகளே சாலும் கரி என்க. அப் புறத் திணைகள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. இப்பெயர்த்ததாய் நின்ற இவ்வேழனொடு தொல்காப்பியப் புலவன் வெட்சியுள் அடக்கிய கரந்தையையும், உழிஞையில் அடக்கிய நொச்சியையும் தனித்தனித் திணைகளாய்க் கொண்டும், பொதுவியல் என்னும் ஒன்றனைப் புதியதாய்ப் புதுக்கியும் அகத்திணைகளான கைக்கிளை மற்றும் பெருந்திணையை அகப்புறம் என வருவித்து உரைத்தும் இவற்றையெல்லாம் ஒருங்கு இயைத்துக் கூட்டிப் புறத்திணைகள் பன்னிரண்டாம் என நுவன்றோரும் நூல் செய்தோரும் உளர். இக்கருத்து உடையோர்,

அங்ஙன முரைப்பின் அவற்றது வகையால்
பாங்குறக் கிளந்தனர் என்ப அவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பின் தும்பை யுள்ளிட்ட
மரனுடைய மரபின் ஏழே ஏனை
அமர்கொள் மரபின் வாகையும் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவிய லென்ப

என்றும்,

கைக்கிளை யேனைப் பெருந்திணை யென்றாங்
கத்திணை யிரண்டும் அகத்திணைப் புறனே

என்றும் கூறினர். ஆயினும் புறத்திணைகள் அகத்திணைகளைப் போன்று ஏழே என்பது பைந்தமிழ் இலக்கணம் பாங்குற அறிந்தோர் யாவரும் உணர்வர். அவ்வேழு திணைகளுள் ஒன்றானதும் பெருந்திணையாம் அகத்திணைக்குப் புறனானதும் காஞ்சி என்னும் திணையாம். இத்திணைக்கு உரியனவாகத் தொல்காப்பியர் காட்டும் துறைகள் இருபதனுள் ஒன்று வஞ்சினம் அல்லது வஞ்சினம் கூறல் என்பதாம். இத்துறையினைக் கூற வந்த தொல்காப்பியர்,

இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்

என விளக்குவார். அஃதாவது, 'இன்னதனை யான் ஆற்றி முடிப்பேனல்லேனாயின் இன்னதை அடைவேனாகுக' என ஒருவன் கூறும் வஞ்சினமொழி என்பதாம். மேலே எடுத்துக் காட்டிய புறப்பாடல் வஞ்சினம் என்னும் துறைக்கு உரியதாம் என்க.

இளமையிலேயே அரசோச்சும் அரும்பணியை ஏற்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிற்றரசரும் பேரரசருமாகிய அவன்தன் பகைவர் எழுவர் ஒருங்குத்திரண்டு, 'இவன் பாலறா வாயனாகிய பச்சிளம் குழவி யாதலான் இவனைப் புறமுதுகிடச் செய்தல் எமக்கு எளிதே' என நகையாட அவர்தம் எள்ளல் மொழி கேட்டு இடியேறு கேட்ட நாகம் போல் நடுங்காது களிறே யாயினும் கதுமெனப் பாய்ந்து கணநேரத்தில் வீழ்த்தும் வெஞ்சினப் புலிப்போத்தே போல வெகுண்டெழுந்து, 'எம் இளமையைக் கண்டு எமை எள்ளி நகையாடிய இவரை விடேன்; செருக்களம் கண்டு இவர்தம் செருக்கழித்து

வெல்வேன்; அல்லேனாயின் எம் குடியே எம்மைத் தூற்றுங் கொடுங்கோன்மையும், புலவர் எம்மைப் புகழ்ந்து பாடாமையும், இரப்பார்க்கு ஒன்று ஈயா வறுமையும் உடையேனாகுக' என வஞ்சினம் கூறுவதாக அமைந்தது மேற்காட்டிய பாடல். மணிகள் பலவாயினும் அதனூடே நுழைந்தோடி மாலையாக்கும் நூல் ஒன்றே போல இம்மன்னன் கூறிய வஞ்சின மொழிகள் குடி பழி தூற்றல், புலவர் பாடாது விடுத்தல், வறுமை எய்தல் ஆகிய மூன்றாயினும் புகழொடு வாழ்தல் என்னும் ஒன்றே அம்மன்னன் மனம் விழைந்த பொருள் என்பது சற்றே ஆழ்ந்து நோக்கினும் அறிதற்கு இயலும். செங்கோன்மையும் புலவர் வாழ்த்துரையும் இரப்போர்க்கு ஈதலும் என இவை யாவும் புகழினை எண்ணி விழைந்தனவே யன்றி வேறென்? இகழ் வருவதாயின் இவ்வுலகமே தரினும் அதனை வேண்டாது புகழ் வருவதாயின் தன் ஆருயிரையும் ஈந்துவக்கும் பெருமித வாழ்வினராய்ப் பண்டைய தமிழர் வாழ்ந்தனர் என்பதனை எடுத்துரைக்கும் ஏட்டுரைகள் தாம் எத்துணை? எத்துணை? அம்மட்டோ... இம் மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தோர்தம் வரலாறு தாம் எத்தனை எத்தனை. தோன்றுங்காலே புகழொடு தோன்றலை விழைந்து அப் புகழ் நோக்கியே வாழ்ந்து அப் புகழிற்காகவே வீழ்ந்த உரனுடைய உயர்ந்தோர் வரலாறு தாம் எத்தனை எத்தனை. இத்தகு பீடும் பெருமையும் கொண்ட பண்டைய தமிழர்தம் வாழ்வியலை இன்றும் எடுத்துரைக்கும் ஆவணங்களாய்த் திகழ்வன சங்க இலக்கியங்களும் தொல்காப்பிய இலக்கண நூலுமே ஆம்.

பாட்டும் தொகையுமாய் உள்ள சங்க இலக்கியங்கள் அவற்றின் பழமையான பொருள் அறிதற்கு அருமையுடையன. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுந்த அவ்விலக்கியங்களை, அவற்றின் பொருளை அறியத் துணையாக நிற்பன உரைகளே. ஆயினும் சங்க இலக்கியங்கள் புனையப் பெற்ற காலத்திற்கும் உரைகள் வரையப் பெற்ற காலத்திற்கும் இடையே பல நூற்றாண்டுக் காலப் பகுதி உள்ளமையை நாம் மறக்க ஒண்ணாது. சங்க காலத்திற்குப் பின் தமிழகத்தில் எழுந்த வேற்றின அரசுகளும் அவற்றின் ஆட்சி அதிகாரங்களும் தமிழர்தம் வாழ்வியலில் பல மாற்றங்களை விளைவித்தன. பண்பாடும் சிதைந்தது. சாதிய சமய உணர்வுகள் தலைதூக்கின. இன்னவாறு சங்க காலப் பண்பாட்டிற்கு முற்றிலும் முரண்பட்ட கலப்புப் பண்பாடு

கால்கொண்டு நிலை பெற்ற காலத்தில் வாழ்ந்தவர்களான உரையாசிரியர்கள் தாம் வாழுங் கால வாழ்வியல் கண் கொண்டே சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியத்தையும் நோக்கினர். அதனால் அவர்கள் கூறிய உரைகளில் பிழைகள் மலிந்தன. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்றும், 'வியத்தலும் இலமே இகழ்தல் அதனினும் இலமே' என்றும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றும் பொதுமைப் பண்பில் அமைந்த சங்க கால மக்களின் வாழ்வியல் அறம், உரையாசிரியர் காலச் சாதி சமய ஏற்றத் தாழ்வுகளால் பிழைபட உணரப் பெற்றது; அவ்வாறே அவர்தம் உரை வழியே உணர்த்தவும் பெற்றது. இந்நிலை இன்றளவும் தொடர்கிறது. இன்று சங்க இலக்கியம் பரக்கவே ஆயப் பெறினும், புதிய புதிய நோக்கில் ஆய்வுரைகள் வெளிவரினும், ஆய்வாளர்தம் விழைவும் அவர் சார்ந்த சாதி சமயத் தாக்கமும் அவ்வுரைகளில் தென்படுகின்றனவே ஒழிய, சங்க கால வாழ்வியலை; உண்மை வரலாற்றை; தொல் தமிழர் கருத்தியலை; வெளிக் கொணரும் முயற்சி இன்றுகாறும் எட்டவில்லை. இதற்குச் சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் புறப்பாடல்களில் பரக்கவே பேசப் பெற்றுள்ள பாணன், பாடினி, விறலி அனைய கலைஞர்தம் வாழ்வியலை எடுத்துக்காட்டும் உரை ஒன்றேனும் இன்றுகாறும் எழாமையைச் சான்றாகக் கொள்ளலாம். புரவலனை இரந்து வாழும் கீழ்நிலை மக்களாகவோ, வள்ளலின் ஈகைத் திறனை அளந்தறிவதற்கான கருவியாகவோ மட்டுமே பாணன் உள்ளிட்ட கலைஞர்களை உரையாசிரியர்கள் கருதினர். இத்தகு கலைஞர்களுக்கு உரையாசிரியர்கள் இட்ட பொதுப்பெயரான இரவலர் என்னும் சொல்லாட்சியே கலைஞர்கள் குறித்த உரையாசிரியர்தம் மதிப்பீட்டினை நன்கு உணர்த்தும். இவ்விரவலர் என்னும் சொல்லாட்சி சங்கப் புறப்பாடல் சிலவற்றுள் பயின்று வருவதே யாயினும் ஆங்கெல்லாம் இச்சொல் பொருளியல் நோக்கோடு ஆளப் பெற்றுள்ளதே யன்றிச் சமூகவியல் நோக்கில் அன்று. மேலும் பாணன் உள்ளிட்ட கலைஞர்கள் பொருளுக்காகப் புரவலன் ஒருவனையோ பலரையோ சார்ந்தே வாழ்ந்த போதிலும் பீடும் பெருமையும் உடைய நயத்தக்க நாகரிகமும் மெச்சத் தக்க மான உணர்ச்சியும் உடையோராகவே அக்காலத்தில் வாழ்ந்தனர்.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து

வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே

(புறம். 47)

என்னும் கோவூர் கிழாரின் பாடலும், 'பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே' என்னும் கபிலரின் பாவடியும், 'எத்திசை செல்லினும் அத்திசைச் சோறே' எனச் செம்மாந்து முழங்கிய ஔவையின் குரலும் அக்கலைஞர்கள் இழிநிலை மாந்தர்கள் அல்லர்; உரனும் திறனும் பீடும் பெருமையும் கூடிய நெஞ்சமும் மானவுணர்வும் கொண்டு வாழ்ந்த சான்றோர் கூட்டம் அவர் என்பதனை நன்கு உணர்த்தும். அரசியற்றி அரசியல் ஓம்புவது அரசன் கடனாயினவாறு கலைகளை இயற்றி அவற்றைக் காத்தோம்புவது கலைஞர்தம் கடனாய், வாழ்வியல் அறமாய் அக்காலத்தே இருந்தன. கலைஞர் வாழ்க்கைக்கான பொருள் கருதிப் பிற தொழில் படியாது இன்பங் கருதியும் இன்புறுத்தல் கருதியும் கலை ஒன்றனையே படிந்து கலையாகவே வாழ்ந்த கலை வாழ்வினர் ஆதலான் அவர்தம்மைக் காத்தோம்புவது நாடு புரப்போரின் அருங்கடனாயிற்று. இதனானே அவர்தம் வறுமை என்பதும் வள்ளல் ஒருவனைச் சார்தல் என்பதும் கீழ்மை யன்று; அது அவர்தம் கலை கருதிய தவ வாழ்வின் பயன் என்க. இத்தகு கலைஞர்கள் பற்றிய பதிவுகள் சங்கப் பாடல்களில் பற்பல உண்டெனினும் அவர்தம் பீடுசால் பெருவாழ்வினை விளக்கமுற எடுத்துக்காட்டப் பழங்கால உரையாசிரியர்கள் தவறினர். ஊசி வழியே செல்லும் நூல் போலப் பழைய உரை வழியே தம் உரைகளை வரைந்த இக்காலத்தவரும் சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பியப் பனுவல் ஆகியனவற்றை ஆயும் ஆய்வாளர்களும் கலைஞர்தம் வாழ்வியலை விளக்காது விடுத்தனர். முத்தமிழும் முறைபடக் கற்றுப் புலத்துறை முற்றிய பேரறிவொடு கலைக்காகவே வாழ்ந்த கலைஞர்களைக் கீழ்நிலை மக்கள் எனக் கருதுவது பிழையாக மட்டும் அமையாது; வரலாற்றை, பழந்தமிழர்

சமூகவியலை உணராத அறியாமையின் விளைவும் ஆம். காலக் கண்ணாடியாய், மாய்ந்து போன சமூகத்தின் வாழும் சான்றாய்த் திகழும் இலக்கியங்களுக்குச் சொற்பொருள் விளக்கம் கூறுதலினால் விளையும் பயன் சிறிதே; இலக்கியம் உணர்த்தும் மக்கள்தம் வாழ்வியலை விளக்கமுற எடுத்துக்காட்டுவது ஒன்றே பெரும்பயன் தரும். கலைஞர்தம் வாழ்வியலை, வரலாற்றை, சமூகக் கட்டமைப்பில் அவர் பெற்றிருந்த இடத்தைப் பதிவு செய்யாத சொற்பொருள் விளக்க உரைகளிடையே கலைஞர் பற்றிய ஆழ்ந்த ஆய்வுரையாகத் திகழும் இந்நூல் விண்மீன் நாப்பண் விளங்கும் முழுமதி போலத் துலங்குகிறது.

இசைக் கலைஞனாய் நாடகக் கலைஞனாய் நாட்டுப்புறவியல் துறைசார் அறிஞனாய் நற்றமிழ் நாட்டவரால் நன்கு அறியப் பெற்ற பேராசிரியர் முனைவர் **கரு.அழ. குணசேகரன்** அவர்கள் சங்க இலக்கிய உரையாசிரியனாய் இந்நூல் மூலம் அறிமுகமாகிறார். அவர்தம் கூர்த்த நோக்கமும் குறைவிலாப் பேரறிவும் பழுத்த பழந்தமிழ்ப் புலமையும் வரலாற்றினை அழுத்தமுற எடுத்துக்காட்ட அவர் கொண்ட முனைப்பும் இவ்வுரை வழியே வழிந்தோடுகின்றன. கலைஞனாய் வாழும் இப்பெருமகன் கலைஞர் வாழ்வியலை ஆய்ந்துரைக்க முழுத் தகுதி உடையவரே என்பது இவ்வுரையில் படிவார் யாவரும் நன்கு உணர்வர். சங்க இலக்கிய நுகர்ச்சி என்பது எளிதே அமைவது அன்று; பலாக்கனியை நுகர்வது போன்று அருமுயற்சியான் விளைவது. அத்தகு இலக்கியத்திற்கு உரை வரைதல் எனின் அது எத்தகு பெரும்பணி என்பது விளக்காமலே நன்கு விளங்கும். அத்தகு அரும்பணியைச் செய்துள்ள இவ்வுரையாசிரியர் போற்றுதற்கும் வாழ்த்துதற்கும் வணங்குதற்கும் உரியவர். (சொற்களுக்குப் பொருள் காட்டும் உரையாக இவ்வுரையை அமைக்காது இலக்கியம் காட்டும் சமூகத்தைத் தற்காலத்தவருக்கு உணர்த்த முற்படும் வகையில் இவ்வுரை அமைந்துள்ளது. இந்நோக்கில் சங்க இலக்கியத்திற்கு அமைந்த முதல் உரை இது. இவ்வுரையாசிரியர் கூறும் புதிய கருத்துகள் இனிவரும் ஆய்வுலகத் தோர்க்கும் உரை வரைவோர்க்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளன. இவர் ஆய்வுக் கடலில் மூழ்கி வெளிக்கொணர்ந்த அருமுத்துக்களுள் சில இதோ:

- பாணர்களின் வாழ்த்துப் பாட்டு என்பது பாணர்களால் நிறைவேற்றப்படும் ஒரு வகையான சடங்கு.

- Realistic Theatre என்றும் Naturalistic Theatre என்றும் அரங்கியல் வல்லுநர்கள் கூறும் இயல்பில் அரங்கு என்றும் இயற்கைசார் அரங்கு என்றும் நவீன நாடகக்காரர்கள் குறிப்பிடும் அரங்கியல் தன்மையுடன் இப்பாடல் விளங்குகிறது.

- பாணர்கள் அக்காலத்து ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த பலவிதமான சமூகங்களின் கலாச்சாரக் கூறுகளை உள்வாங்கிப் பாடிப் பல தரப்பினருக்கும் கொண்டு சென்ற தொடர்பியலாளர்கள்.

- போர்க் காலங்களிலும் பிற காலங்களிலும் மக்களின் நாடித்துடிப்புகளை மன்னருக்குக் காட்டும் சமூகக் கடமையைப் பாணர் செய்தனர்.

- பாணர்கள் மற்றும் விறலியர் போன்றோரே மன்னரின் விருந்துக்கு உரிய முதன்மையர். கலைஞர் பெருமக்களை ஒரு உறவுப் பாலமாகவும் பலமாகவும் மன்னன் கொண்டான்.

- பாசறையில் உணவு சமைக்கும் அருந்தொழில் பாணர்களால் செய்யப்பட்டது.

- பாணர்களுள் சிலர் கல்வி அறிவு பெற்று வளர்ந்தனர். அத்தகையோரே புலவர் எனப்பட்டனர்.

- தமிழ், தமிழர், தமிழகம் என்னும் கருத்தியல் சங்க காலத்திலேயே புலவர்களாலும் மக்களாலும் மன்னர்களாலும் முன்னிறுத்தப்பட்ட கருத்தியல்.

- இன்னியம் இசைத்தல் மங்கலக் குறியீடு.
  இசையாதிருத்தல், அமங்கலக் குறியீடு.

- மன்னன் சார்ந்த மக்கள் ஒழுகலாறுகள் வேறாகவும் வேட்டுவர், ஆயர், எயினர் போன்ற தொல்குடி மக்கள் ஒழுகலாறுகள், வழிபாடுகள் வேறாகவும் இருந்துள்ளன.

- வடமொழிக் கருத்தியலும் பூர்வீகத் தமிழர்களின் கருத்தியலும் இரண்டறக் கலந்த சமூக அமைப்பாகச் சங்க காலச் சமூகம் கட்டமைக்கப்பட்டிருந்தது.

- பேய் மகளிர் என்போர் போர்க்களத்தில் ஈமச்சடங்கு ஆற்றிய துணங்கையர் என்னும் ஆடு மகளிரே.

- பாணரின் சடங்கின்றித் திருவோலக்கமோ போர்ப் பாசறையோ அமையாது.

- பாணர் அனையோர் மன்னர்தம் சிறப்பை எடுத்து மொழியும் ஊடகக்காரர்களாக வாழ்ந்தனர்.

- ஆரியவழி அறம்சார் வாழ்க்கை மற்றும் சிறுகுடி வழி வந்த மரபுசார் வாழ்க்கை என இரு திறங்களையும் பதிற்றுப்பத்துப் பாடல்கள் உணர்த்துகின்றன.

- பிணங்களை எரிப்பது தமிழர் வழக்கன்று.

மேற்காட்டிய கருத்துகளும் இவை போன்ற அரிய கருத்துகள் பலவும் பெற்றிலங்கும் இவ்வுரை பழந்தமிழர் வாழ்வியல் ஆய்வில் சில புதிய வெளிச்சங்களைத் தருகிறது.

இவ்வுரையாசிரியர் காட்டும் ஊர்ப்புறச் செரு கிடைநிலை என்னும் புத்துரையும் அதற்கான விளக்கமும் தனிச் சிறப்புடையன. இவ்வாசிரியரின் இலக்கணக் கோட்பாட்டறிவிற்குச் சான்றாவன.

படைப்பாளி தான் உணர்ந்ததை உணர்ந்தவாறு உணர்த்த முற்படும்போது கலைகள் முகிழ்கின்றன. உணர்த்த முற்படும் கலைஞன் கையாளும் கருவிகளுக்கு ஏற்பக் கலைகள் பலவாக மலிகின்றன. இசை நாடகம் நாட்டியம் சிற்பம் கவிதை எனக் கலைகள் பலவாயினும் அவையெல்லாம் தோன்றுதற்கு வித்தாக அமைவது உணர்ச்சியே. ஆகப் படைப்பாளனின் உணர்ச்சி வெளிப்பாடாக அமையும் கலை, நுகர்வோனுக்கு உணர்ச்சியை ஊட்டும் பொருளாகவும் அமைகிறது. படைப்போன் படைப்புக் காலத்தில் கொண்ட உணர்வினை நுகர்வோன் நுகருங் காலத்துக் கொள்ளச் செய்யும் ஆற்றலுடையது கலை. அத்தகு ஆற்றலுடையனவே கலையாக நிலைப்பும் பெறுகின்றன.

பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர்ப் பாடப்பெற்ற சங்கப் பாடல்கள் இன்றுகாறும் செம்மாந்து வாழ்வதற்கான முதன்மைக் காரணம் அப்பாடல்களைப் புனைந்த புலவர் பெருமக்கள் தாம் உணர்ந்ததை உணர்த்தும் திறனைச் சிறப்புறப் பெற்றிருந்தமையே ஆகும். கல்லும் கனிமங்களும் காலத்தை வென்று நிற்கும் திண்ணியன. அவற்றில் உருவாகும் கலைகள் நிலைப்புப் பெறுவது என்பது இயற்கை. எளிய சிதல் வாய்பட்டே அழியும் தன்மையுடைய பனையேட்டினில் வரையப் பெற்ற பாடல்கள் பல்லாயிரமாண்டுகள் கழிந்த பின்னும் இன்றும் வாழும் நிலை ஒன்றே அவற்றின் தனிச்சிறப்பினை உணர்த்தும். இறவாத் தன்மையுடைய அவ்விலக்கியங்களின் சிறப்பினை நன்கு உணர்ந்து கொள்ளத் துணை நிற்கும் உரை நூல்களுள் இவ்வுரை நூல் தனியிடத்தைப் பெறுகிறது. சமூகவியல் கலையியல் நோக்கிச் செல்லும் இவ்உரையின் நடை பரந்து ஒழுகும் நீர்த்தாரை போன்று அமைந்து சிறக்கிறது. தேர்ந்த அளவான சொற்களில் பொருளினை விரித்துக் காட்டும் இவ்வுரையின் நடைச் சிறப்பிற்கு ஓரிரு சான்றுகளைக் காட்டுவது ஒல்லும்.

இரண்டாம் பத்தின் மூன்றாம் பாடல் பூத்த நெய்தல் என்னும் பெயருடையது. இப்பாடலில் துணங்கைக் கூத்து நிகழ்ந்த களம் குறித்துக் கூறப்பெற்றுள்ளது. வயற் பரப்பிடையே நிகழ்ந்த அக்கூத்து நிகழ்வை இவ்வுரையாசிரியர் விளக்கிக் காட்டும் முறை எளிது, இனிது.

> *சுற்றிலும் வயற்காடுகள், வயற்காடுகளுக்கு நடுவே மேட்டுப்பகுதி, வயல்களுக்குச் சொந்தக்காரர்களான மக்கள் குடியிருப்பு அமைந்துள்ளது; தென்னை மரங்கள் சூழ்ந்துள்ளன. பூக்கள் பூத்துக் குலுங்கும் பொய்கை பக்கத்தில் அமைந்துள்ளது; வண்டுகள் பூக்களை மொய்த்து ரீங்காரம் எழுப்பிய வண்ணம் உள்ளன. பறவைகள் உயர்ந்து நிற்கும் தென்னை மரங்களில் அமர்ந்து ஒலிகளை எழுப்பிக் கொண்டுள்ளன. குடியிருப்பில் உள்ள வீடுகளில் கொல்லைப் புறங்களில் ஆநிரைகள் பகற்பொழுதில் உழைத்த களைப்பில் உறங்கிக் கொண்டு இருக்கின்றன. இரவு நேரம் தொடங்கியுள்ளது. அமைதி குடி கொண்டுள்ள குடியிருப்புகளின் நடுவே ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக வட்டமாக அமர்ந்து,*

எதிர்பார்த்த நிலையில் வீற்றிருக்கின்றனர். பாட்டு ஒலி கேட்கிறது. இசைக்கருவிகள் முழங்குகின்றன. துணங்கை ஆட்டம் ஆடக்கூடிய இளைய மகளிர் பாட்டுக்கேற்ப ஆடுகின்றனர். அழகிய அவ்இளம்பெண்கள் வளையல்கள் அணிந்துள்ளனர். தலைகளில் அழகிய ஆம்பல் மலர்களைச் சூடியுள்ளனர். ஆட்டத்திற்கான தழை ஆடைகளை உடுத்தியுள்ளனர். மக்களின் இரசனைக்கேற்ப மிகுந்த ஒலி எழுப்பித் துணங்கை ஆட்டம் ஆடல் மகளிரால் ஆடப்படுகிறது. வெகு நேரம் கண்டு இரசித்த மக்கள் துணங்கை ஆட்டம் முடிவுற்றதும் அவரவர் வீடுகளுக்குச் சென்று உறங்கிவிட்டனர்.

துணங்கை ஆட்டம் ஆடிய மகளிரும், ஆடிய களைப்புத் தீர உறங்கி ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர். அதிகாலை நேரம் உதயமாகிறது. ஆநிரைகள் விழிந்துவிட்டதை உணர்த்தும் வகையில் குரலெழுப்புகின்றன. மரங்களில் ஓய்வெடுத்த பறவைகள் விடியலை வரவேற்கும் முகத்தான் ஒலிகள் செய்து உரையாடிக் கொண்டிருக்கின்றன. இளங்கதிர்களை நீட்டியவாறு கதிரவன் காட்சிக்குப் புலப்படுகிறான். வெகுதொலைவு சென்று தமக்கு உரிய இரையைத் தேட முடியாத முதுமை வாய்ந்த ஆநிரைகள் குடியிருப்பின் மையப்பகுதியில் மணம் வீசிப் பரந்த நிலையில் உதிர்ந்து கிடக்கும் ஆம்பல் மலர்களை மேய்ந்து கொண்டிருக் கின்றன. முந்திய இரவு வேளையில் துணங்கை ஆட்டம் நிகழ்த்திய வட்டவடிவ அரங்கில் உதிர்ந்து கிடந்தவை தான் அந்த ஆம்பல் மலர்கள்.

மேற்சுட்டிய உரைப் பகுதி இவ்வுரையாசிரியரின் பொருள் விளக்கத் திறனுக்குச் சிறந்ததொரு சான்று. இவ்வாறே மூன்றாம் பத்தின் முதற் பாடலுக்கு இவ்வுரையாசிரியர் வரைந்துள்ள விளக்கம் இங்குக் குறிப்பிடத்தகுந்தது. சமண சமயத் தத்துவத்தை எடுத்துக்காட்டி இப்பாடலில் வரும் ‘ஐந்தலை துணை’ என்னுந் தொடர்க்கு இவர் கூறியுள்ள விளக்கம் எண்ண எண்ண மகிழத் தக்கது. புலனடக்கம் குறித்து இவர் விளக்கியுள்ள பகுதி இவர்தம் மெய்யியல் அறிவினையும் புலமையினையும் புலப்படுத்தும் சான்றாக அமைந்து சிறக்கிறது.

கவிதை என்பது சொல்லோவியமாகும். எண்ணி எண்ணி எடுத்துக் கோர்த்த சொற்களின் கோர்வை கவிதையாக அமைகிறது. கவிதைக்குக் கூறும் உரையினையும் கவிதை போன்றே சொல்லோவியமாகப் படைத்துக் காட்ட இயலும் என்பதனை இவ்வுரையின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வுரையாசிரியர்,

பனைமரக் கொண்டைகளில் நெய்தல் மற்றும் நரவம் பூக்கள் கொடியெனப் படர்ந்து மலர்ந்து மணம் வீசுகின்றன. பனைமரங்களின் அருகருகே மன்னர் புடைசூழ அமர்ந்து பார்வையாளர்களாக விளங்குகின்றனர். வட்டக்களறியில் ஆடுமகள் ஆன விறலி பீடுநடை போட்டு வலம் வருகிறாள்; பாடுகிறாள்; இசைக் கருவிகளின் வாசிப்பு நிகழ்கிறது. சுற்றிலும் அமர்ந்துள்ள மன்னர் உள்ளிட்ட பார்வையாளர்களை வணங்கிக் கொள்கிறாள். பாடிக் கொண்டே ஆடுகிறாள். சின்ன நடை என நடனமிடுகிறாள். குறுக்கும் நெடுக்குமாக நடந்து, அசைந்து அசைந்து ஆடுகிறாள். பாம்பு அசைந்தாடுவது போல் உடை ஒப்பனை செய்து கொண்ட ஆடுமடமகள் வயின் வயின் என வரும் இடந்தோறும் குதித்துக் குதித்து ஆடுகிறாள். கிழக்கும் மேற்கும் இடையிலும் என ஆடுகளத்தைப் பயன்படுத்திக் கைகளைக் குவித்துச் சேவித்தவாறு கண்களை இடப்புறமும் வலப்புறமும் அசைத்தவாறு கால்மணி குலுங்க ஆடுகிறாள்.

மலர்ந்த நெய்தல் மலர் போன்ற கண்களால் மன்னரையும் பிறரையும் கண்டவாறு புன்முறுவலுடன் அமர்ந்தும், குதித்தும் ஆடுகிறாள். நின்றாடல், அமர்ந்தாடல், குதித்தாடல், சுழன்றாடல், வீழ்ந்தாடல், உருண்டாடல் போன்ற ஆடல்முறைகளை எல்லாம் அவள் ஆடுவதைப் பாம்பின் நடனத்துடன் சுட்டி விளக்கியிருப்பது இங்கு இரசிக்கத் தகுந்தது.

எனக் கூறிச் செல்லும் பகுதி ஒரு கவிதை போன்றே அமைந்து சிறப்பதை அறியலாம்.

அனைத்தையும் விளக்கிக் கூறுவது கவிதையாகாது. சொற்சிக்கனமே கவிதையின் கட்டமைப்பிற்கு இன்றியமையாத கூறு. எனவே சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டிய திறம் புலவனுக்கு வேண்டும். கையாண்டுள்ள ஒவ்வொரு சொல்லும் நுகர்வோர் தம் அறிவுத் திறனுக்கு ஏற்ப விரிந்து பொருள் தரத் தக்கதாய் அமையும்போதே கவிதை சிறக்கிறது. ஆதலால் புலவன் பொருளை விளங்கிக் கொள்ள ஏதுவாகப் பற்பல கவிதை உத்திகளைக் கையாள்கிறான். கவிதை உத்திகள் அனைத்தும் பொருள் புலப்பாட்டிற்கு உதவும் கருவிகளே. சங்க அகப் பாடல்களில் அமைந்து சிறக்கும் உள்ளுறை, இறைச்சி ஆகிய உத்திகள் பொருள் புலப்பாட்டிற்குப் பெரிதும் துணை செய்கின்றன. உள்ளுறையோ இறைச்சியோ புறப்பாடல்களில் அமையும் என இலக்கணிகள் கூறவில்லை. அவ்வாறு அமைந்த இடங்களை உரையாசிரியர்களும் எடுத்துக்காட்டவில்லை. இவ்உரையாசிரியர் அத்தகு உத்திகளை - பொருள் புலப்பாட்டு முறைகளைப் புறப்பாடலான பதிற்றுப்பத்தின் பாடல்களில் கண்டுணர முயன்று வெற்றியும் பெற்றுள்ளார்.

பதினாறாம் பாடலில் வரும், ஏனம் ஆகிய நுனை முரி மருப்பு என்னுந் தொடர் மதிற் கதவினை முட்டிய யானையின் கோடு முறிந்து குறைந்து பன்றியின் கோடு போல் தோற்றம் தருகிறது என்னும் பொருளைத் தரும். இத்தொடருக்கு விளக்கம் கூறும் இவ்வுரையாசிரியர் மதம் கொண்ட யானை முட்டிய போதும் நிலை தடுமாறாத கோட்டை போன்று திண்ணிய கற்பினளாகிய தலைவியின் மன ஒழுங்கைச் சுட்டும் முகமாக இத்தொடர் விளங்குகிறது எனக் காட்டுவதும், மற்றோரிடத்தில் தலைவனின் வரவினை ஆவலுடன் எதிர்நோக்கும் தலைவி போன்று பொருத எதிரியினை ஆவலுடன் எதிர்நோக்கும் மன்னன் இவன் எனக் காட்டுவதும் இவை போன்று அமைந்துள்ள பிற பிற பகுதிகளும் எண்ணி எண்ணி மகிழத்தக்கன ஆகும். சமூகக் கலையியல் நோக்கில் சங்க இலக்கியங்களைக் கண்டுணர வேண்டும் என்னும் கருத்தியலை முன்னெடுத்துச் செல்லும் இவ்வுரை பழந்தமிழ் இலக்கிய உரைகளுக்கு இடையே தனிச்சிறப்பும் தனி நோக்கும் தனித்துவமும் வாய்ந்தது என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இந்நூல் தமிழ்மொழிக்குப் புதிய வரவு. தமிழன்னைக்குப் புதிய அணி.

இத்தகு சீரியதும் சிறப்புடையதும் புதிய கருத்துகள் பொருந்தியதுமான இவ்வுரையை வரைந்த இப்பெருமகன் மேலும் பல நூல்களுக்கு உரை வரைய வேண்டும் என்பது எம் அவா. வாழ்க இவர்தம் தமிழ்த் தொண்டு; வாழ்க இவர் பல்லாண்டு என வாழ்த்தி விரிவஞ்சி இத்துடன் அமைகிறேன்.

23.05.2010

சென்னை – 5 இரா. கண்ணன்

முனைவர் க.ப. அறவாணன்
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

அணிந்துரை

பதிற்றுப்பத்து ஆய்வில் ஒரு திருப்புமுனை

'பதிற்றுப்பத்து :- கலையியல் மற்றும் சமூக இயல் நோக்கில்' எனும் முகப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கரு. அழ. குணசேகரன் படைத்துள்ள மூலமும் உரையும் எனும் நூல் பதிற்றுப்பத்தின் உரை விளக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனை.

சங்க இலக்கியத் தொகுப்பில் பதிற்றுப்பத்துக்கு எனச் சிறப்புகளும் உண்டு: எதிர்ப்புகளும் உண்டு. பண்டைத் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தருள் சேரரைப் பற்றிய தனி நூலாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. ஏனைய சோழ பாண்டியருக்கு இத்தகு தனி நூல் சங்கத் தொகுப்பில் அமையவில்லை. பதிற்றுப்பத்திற்கு அமைந்துள்ள பதிகத்தையும் ஒவ்வொரு பாடலின் ஈற்றில் அமைந்துள்ள கருத்தையும் ஐயத்திற்கு அப்பால்பட்ட ஆதாரமாகக் கொள்வதில் தடங்கல்கள் உள்ளன. சேர மன்னர்களையும் சமூகத்தில் மேல்தட்டினர் என்று கருதப்பட்ட பார்ப்பனர்களையும் முன்னிலைப்படுத்துவதற்காகவும் பார்ப்பனர்கள் சொல்லை ஒட்டியே சேர அரசர்கள் செயல்பட்டனர் என்று காட்டுவதற்காகவும் இவை அமைந்தன என்றும் இந்நோக்கத்திற்காகவே பதிகங்கள் பிற்சேர்க்கைகளாகச் சேர்க்கப்பட்டன என்றும் கருதுவர். இக்கருத்தை முற்றுமாகப் புறம் தள்ள முடியாது.

பதிகம் என்ற முகப்புப் பகுதியையும் நிறைவுக்குறிப்பு என்ற ஈற்றுப்பகுதியையும் விலக்கிவிட்டுப் பயின்றாலும் பதிற்றுப்பத்து சிறந்த இலக்கியம் என்ற முறையிலும் அரசியல் பதிவு என்ற முறையிலும் அக்காலத் தமிழ்ச் சமூகத் தகவல் களஞ்சியம் என்ற அளவிலும் முன்னிலை பெறும். **பேராசிரியர் குணசேகரன் பதிற்றுப்பத்தைச் சொல்லுக்குச் சொல் பொருளும் உரையும் எழுதும் நிலையைக் கடந்து அந்நூலைக் கலையியல் பார்வையிலும் சமூக இயல் பார்வையிலும் பார்த்துள்ளார் என்பதற்கு இந்நூல் சரியான பதிவேடாக அமைந்துள்ளது.** இந்நூலின் வழி, சங்க காலத்தவர்களான பாணர் விறலியர் முதலான கலைஞர்கள் அக்கால அரசுகளில் பெற்றிருந்த செல்வாக்கைத் தெரிந்து கொள்ள முடிகிறது. முற்கால அரசர்களும் பாணர் முதலான கலைக் குடும்பத்தினரும் ஒன்றிணைந்து பழகியதை மிக அருமையாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் காட்டியுள்ள முதன்மையான செய்திகளில் ஒருசில வருமாறு:

1. *மிதவைச் சமூகத்தாரான பாணன் பாடினி போன்றோர் ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த பலவிதமான சமூகங்களின் கலாச்சாரக் கூறுகளை உள்வாங்கிப் பாடிப் பல தரப்பினருக்கும் கொண்டு சென்ற தொடர்பு இயல் ஆளர்கள் ஆவர்.*

2. *பாணர் மரபில் தோன்றிய ஒரு பாடல் மரபாகவே பதிற்றுப்பத்துப் பாடல்கள் தோன்றின.*

3. *பாலைக் கவுதமனார் எழுதிய மூன்றாம் பத்தில் சமணர்களின் கொள்கைகள் தெளிவாகப் பதிவாகியுள்ளன.*

4. *போரின்றி அமைதியான சூழலில் கலையைக் கண்டு இரசிக்கும் மக்களையும் மக்கள் சார்ந்த நாடுகளையும் சேர மன்னன் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு இருந்தான்.*

5. *பதிற்றுப்பத்தின் வழி, ஆரியர் வழி அறநெறிகளும் சமணர் வழி அறநெறிகளும் பதிவாகி உள்ளன.*

பதிற்றுப்பத்து பாடல் எண்: 21, 22 அதற்குச் சான்று. இரு சிந்தனைகளும் கலந்த தமிழ் மரபாகச் சங்க காலம் இருந்துள்ளது.

6. *வடமொழிக் கருத்தியலும் பூர்வீகத் தமிழர்களின் கருத்தியலும் இரண்டறக் கலந்த சமூக அமைப்பாகச் சங்க காலச் சமூக அமைப்பு இருந்தது.*

7. *பாணர்களில் ஒருசிலர் தூதுவராகவும் ஒற்றராகவும் ஏவல் பணி செய்வோராகவும் அரண்மனைகளில் வாய்ப்புப் பெற்று அமர்ந்துள்ளனர்.*

8. *மன்னர்களுக்குக் கலைஞர்களும் கலைஞர்களுக்கு மன்னர்களும் உறவுகொண்டு இரத்தமும் சதையுமாக இருந்த சமூக அமைப்பு இருந்து உள்ளது.*

சிந்தனைக்கு உரிய பலவேறு புதிய பார்வைகளைப் பேராசிரியர் குணசேகரன் இப்படைப்பில் வழங்கி உள்ளார். ஏற்றுக் கொள்ளத் தயக்கமாக இருக்கிற ஓரிரு கருத்துக்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார். சான்றாக,

> *“சேரன் செங்குட்டுவனைப் பற்றிக் குறிப்பிடும் போது சீறூர் மன்னர்களை வென்று கொள்ளையடித்த பொருள்களைத் தம் வயப்படுத்தி, கோட்டை கட்டி வைத்துக் கொண்டு ஆட்சி செய்த செங்குட்டுவன் காம உணர்வுகளைத் தணித்துக் கொள்ளும் மகளிரோடு புணர்ந்தும் விளையாடியும் பொழுது கழித்து இன்புற்றிருந்தான்”*

என்பன போன்ற குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

பதிற்றுப்பத்துக் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் பேராசிரியர் குணசேகரனுடைய இப்படைப்பு சில புதிய பார்வைகளுக்கு வழித்தடம் அமைத்துள்ளது. இந்நூலைப் பயில்வோர் பண்டைய சேர மன்னர்களைப் பற்றியும் பாணர் உள்ளிட்ட கலைக் குடும்பத்தினரைப் பற்றியும் பண்டைய சமூக அமைப்பைப் பற்றியும் இதுவரை பார்த்திராத சில கோணங்களை உறுதியாக அறிந்துகொள்வர். இவற்றை வழங்கிய பேராசிரியர் குணசேகரன் நம் பாராட்டுதலுக்கு உரியவர்.

இன்று, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகச் செயல்படும் திரு. குணசேகரன் ஓர் உழைப்பின் உருவம்.

பயிலுங் காலம், ஆராய்ச்சி செய்யும் காலம், பணியாற்றும் காலம் என அனைத்து நிலைகளிலும் உழைத்துப் போராடி முயன்று அடிமேல் அடி வைத்து மேல்நிலைக்கு வந்தவர்.

தமிழ்நாட்டில் மிகச்சிறந்த நாட்டுப்புறக் கலைஞர்களுள் ஒருவராகத் திகழ்பவர்.

முற்போக்குச் சிந்தனை உடையவர்.

அனைவரிடமும் மிக அன்பாகப் பழகும் தகைமை பெற்றவர்.

நாட்டுப்புற இலக்கிய ஆர்வலரும் ஆராய்ச்சியாளருமான பேராசிரியர் குணசேகரன் பார்வையில் பண்டைய இலக்கியமான பதிற்றுப்பத்து விழுந்தது ஆய்வுலகம் செய்த நற்பேறு என்பதை இவ்வாராய்ச்சி துலக்கமுறத் தெரிவிக்கிறது.

நூலாசிரியருக்குப் பாராட்டுகள்.

சென்னை
01.06.2010

முனைவர் க.ப. அறவாணன்

வாழ்த்துரை

முனைவர் க. இராமசாமி
பொறுப்பு அலுவலர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை -5

ஒத்த பதிற்றுப்பத்து எனச் சிறப்பிக்கப்படும் எட்டுத்தொகை நூல் பண்டைத் தமிழரின் பண்பாட்டையும் வரலாற்றையும் புலப்படுத்தும் தலைசிறந்த இலக்கியமாகும். இந்நூல் சங்க காலச் சேர மன்னர்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதெனினும் தமிழ் நிலத்திற்கே பொதுவான இயற்கைக் கூறுகளையும் தமிழ் மக்களின் அகப்புற வாழ்க்கையையும் உள்ளடக்கியதாகும். பல்வேறு கண்ணோட்டங்களில் ஆராயப்படுதற்குரிய அரிய பல செய்திகள் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

சங்க இலக்கியப் புலமையும் இசைத்திறனும் நாடகப் பயிற்சியும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் அவர்கள் பதிற்றுப்பத்தினைக் கலையியல், சமூகவியல் கண்ணோட்டத்தில் திறனாய்வுசெய்து ஒரு புதிய உரையினைத் தமிழுலகிற்கு அளித்திருப்பது பாராட்டுதற்குரிய புதிய முயற்சியாகும். அக்கால மன்னர்களுக்கும் மக்களுக்கும் இடையே உறவுப் பாலமாக அமைந்த பாணர், விறலியர், கூத்தர் போன்ற விளிம்புநிலைச் சமூகத்தினரின் வாழ்க்கை நிலையைப் புலப்படுத்தியிருக்கும் பாங்கு வேறெந்த உரையிலும் திறனாய்விலும் காணப்படாத ஒன்று. பல்வேறு பாடல்களில் பொதிந்துள்ள அரங்கியல் கலைக் கூறுகளைத் தோண்டியெடுத்து வெளிக்கொணர்ந்திருப்பது போற்றுதற்குரியது. அக்காலத்தில் சமூக

மாற்றத்திற்கான முயற்சிகளை உட்கொண்ட பல நிகழ்வுகள் மக்கள் வாழ்வில் விரவியிருந்தமை திறம்பட அடையாளங்காணப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்திற்குரிய அடிப்படைக் கட்டமைப்புகளைச் சிதைக்காமல் சிந்தனையைத் தூண்டும் வகையில் ஒரு புதிய அணுகுமுறையுடன் பதிற்றுப்பத்திற்குப் படைக்கப்பட்டுள்ள இந்த உரை வருங்கால ஆய்வு முயற்சிகளுக்கு முன்னோடியாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. செவ்வியல் காலத் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஒவ்வொன்றிற்கும் புதிய நோக்கிலான ஆழமும் விரிவும் பொதிந்த உரைகளும் திறனாய்வுகளும் வெளிவர இந்நூல் தூண்டுதலாய் அமையும்.

பல்துறை வல்லுநரான பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் அவர்கள் தொடர்ந்து இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொண்டு தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டாற்றிட என் உளமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

சென்னை
04.06.2010

(க. இராமசாமி)

அணிந்துரை

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பழந்தமிழரின் கலை, பண்பாடு வரலாற்றைத் தெளிவுறுத்துவது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியங்களில் காணலாகும் கலை வரலாற்றுக் கோட்பாடுகள் பழந்தமிழரின் நாகரிகத்தைப் புலப்படுத்தும். அவர்தம் வாழ்வியல் கூறுகளுள் பாடலும் ஆடலும் இணைந்து விளங்கின.

இசைக்கலையோடு இயைந்து வாழ்ந்த பாணர் மரபினைக் குறிக்கச் சங்க இலக்கியம் பல்வேறு பெயர்களைக் கூறும். அகலவன், அகவுநர், அகவர், ஆடுநர், இயவர், கண்ணுளர், கலப்பையர், கிணைவர், கூத்தர், கோடியர், துடியன், பரிசிலர், பாடுநர், பாணன், பாண்மகள், பொருநர், முழவன், வயிரியர், ஆடுமகள், கிணைமகள், பாடினி, பாண்மகள், விறலி எனப் பல்வேறு பெயர்களைக் குறிக்கும். இச்சொற்கள் இசை மரபின் வளத்தைக் காட்டும்.

பாணர் வாழ்ந்த குடியிருப்பைப் பெரும்பாண் இருக்கை எனக் கூறும் மதுரைக்காஞ்சி. பாணர்கள் இயற்கை அழகில் மனந்தோய்ந்தவர்கள்; பூந்தோட்டங்கள் சூழ்ந்த வாழிடங்களில் அவர்கள் வாழ்ந்தனர் என்பதை மதுரைக்காஞ்சி,

வையைத் துறை துறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
அழுந்து பட்டிருந்த பெரும்பாண் இருக்கை

என்று கூறும்.

பாணரும் கூத்தரும் வாழ்ந்த வரலாற்றைப் பதிவு செய்த நூல்களுள் பதிற்றுப்பத்து மிகப் பழமையான நூலாகும். சேர மன்னர்களின் வாழ்வும் வரலாறும் பதிற்றுப்பத்தால் புலனாகின்றன. புறநானூறு முதலாய நூல்கள் சேர மன்னர்களைப் பற்றிப் பாடியிருந்தாலும் சேர மன்னர்களுடைய வரலாற்றுச் செய்திகளைக் கால ஒழுங்கு முறையில் விரித்துரைக்கும் தனிச் சிறப்புடைய நூல் பதிற்றுப்பத்தாகும்.

பண்டைத் தமிழ்மக்களின் வாழ்க்கை முறைகளும் நாகரிகப் பண்பாடுகளும் உழவு, வாணிகம் முதலிய தொழில் வகைகளும் தமிழ் நாட்டின் இயற்கை வளங்களும் சேரநாட்டின் இயற்கையும் அந்நாட்டு மலைகள், ஆறுகள், ஊர்கள், பட்டினங்கள் பற்றிய வரலாறுகளும் மேலும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சிறப்பாகப் பாணர், கூத்தர், விறலியர் ஆகியோர் பற்றி இந்நூல் மிகுதியாகப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தைப் பதிப்பித்து அதற்குப் புதிய விளக்கவுரை தந்துள்ள பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் அவர்கள் இந்நூல் மூலம் பாணர்கள் பெற்றிருந்த சிறப்பை நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

பதிற்றுப்பத்து நூலினை முதன்முதலில் டாக்டர் உ.வே.சாமிநாதையர் 1904ஆம் ஆண்டு பதிப்பித்தார். பின்னர் 1949 ஆம் ஆண்டில் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்தார். விரிவான உரைவிளக்கம் தந்து பண்டிதர் சு. அருளம்பலனார் (1956, 1960, 1963) வெளியிட்டார். மர்ரே ராஜம் பதிப்பு 1957 இல் வெளிவந்தது. தொடர்ந்து மி. பொன். இராமநாதன் செட்டியார் (1904), வித்துவான் மு. கோவிந்தராசன் (1967), புலியூர்க்கேசிகன் (1974), எம். நாராயண வேலுப் பிள்ளை (1994), புலவர் அ. மாணிக்கம் (1999), அ.மா. பரிமணம் (2003), அ. ஆலிஸ் (2004), ஞா. மாணிக்கவாசகன் (2005) ஆகியோர் பதிற்றுப்பத்தினைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் அவர்கள் இப்பதிப்பில் சமூக அணுகவியல் முறையில் இந்நூலுக்கு உரை விளக்கம் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேரமன்னர் அரசவையிலும் அவர்கள் வாழ்விலும் பாண்மரபினர் பெற்றிருந்த முதன்மையை உரையாசிரியர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

கலைஞர்கள் முன்னிறுத்திய திருவோலக்கமாகச் சேரமன்னர்கள் அவை இருந்தது என்பதையும் கலைஞர்களுக்கும் மன்னர்களுக்கும் நெருக்கமான உறவு இருந்துள்ளது என்பதையும் பல சான்றுகள் மூலம் விளக்கி நிறுவுவது குறிப்பிடத் தக்கது.

கலை நுணுக்கம் நிறைந்த உரையாசிரியர் பாடல்கள்தோறும் பரக்கக் கலைக்கூறுகள் நிறைந்திருப்பதைப் பொருத்திக் காட்டுவது அவர்தம் கலையியல் அணுகுமுறையைக் காட்டும். பதிற்றுப்பத்துப் பாடல் 13இல் (பூத்தநெய்தல்) 'கலிகெழு துணங்கை ஆடிய மருங்கு' என்பதற்கு அவர் வரைந்த உரைவிளக்கம் கலை நயமுடையதாய் விளங்குகின்றது.

வயல்கள் பொய்கைக் குளம் அமைந்திருக்கும் குடியிருப்பு, இரவு நேரம், ஆண்களும் பெண்களும் சூழ நிகழும் துணைங்கைக் கூத்து, ஆட்டத்தின் போது விழுந்த ஆம்பல் மலர்களை மறுநாள் காலையில் மேயும் முதிர்ந்த ஆநிரைகள் என அமையும் கவின்மிகு சூழலைக் காட்சிப்படுத்தித் தந்திருப்பது படிப்போருக்குப் பாடலின் கருத்தை எளிதாக உணர்த்தும்.

உரையாசிரியர் இப்பாடலின் இறுதியில், Realistic Theatre, Naturalistic Theatre என்றும் அரங்கியல் வல்லுநர்கள் கூறும் இயல்பியல் அரங்கு என்றும் இயற்கைசார் அரங்கு என்றும் நவீன நாடகக்காரர்களால் குறிப்பிடப்படும் அரங்கியல் தன்மையுடன் இப்பாடல் காட்டப்படுகிறது என்று குறிப்பிடுவது அவர்தம் கலையியல் உரை அணுகுமுறையைக் காட்டும். மூலநூலை அழகியல் உணர்வோடு உரைவிளக்கம் செய்யும்போது இப்புதிய விளக்கங்கள் படிப்போருக்குக் கிடைக்கின்றன.

பதிற்றுப்பத்துப் பாடல்களுக்கு முன்னையோர் துறை, வண்ணம், தூக்கு, பெயர் தந்து வகைமைப்படுத்தினர். நிரையவெள்ளம் எனப் பெயரமைந்த பாடலுக்கு 'ஊர்ப்புறச் செரு கிடைநிலை' எனப் புதிய துறையைச் சுட்டலாம் எனக் கருத்துரை வழங்கியுள்ளார். புறத்திணை ஆய்வாளர்கள் இதுகுறித்து மேலும் ஆராயலாம்.

எப்போதும் மன்னனையும், மன்னனின் நாட்டையும் வாழ்த்திக் கொண்டிருக்கக் கூடிய பாணர்கள், தங்களுடைய இசைக் கருவிகளான முழவு, தூம்பு, பதலை, கரடிகை முதலான இசைக் கருவிகளைக் கொண்ட பைகளைத் தூக்கிக்கொண்டு பாடித்திரியும் வாழ்க்கை வேண்டும் எனக் கூத்தர்கள் எண்ணுகின்றனர்.

மென்சொற் கலப்பையர் திரிந்து தொடை வாழ்த்த
வெய் துறவு அறியாது நந்திய வாழ்க்கை (பதிற்று.15)

எனப் பதிற்றுப்பத்து கூறும்.

பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கி
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்
கைவ லிளையர் கடவுட் பழிச்ச.

அத்தம் . . . . ஒன்றிரண்டல பல கழித்து திண்டேர்
வசையி னெடுந்தகை காண்கு வந்திசினே

'வாங்குபு தகைத்த கலப்பையர் ஆங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள்... (பதிற்று. 23)

'நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்' (மலைபடு.11)

'சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வன ராடி ஒல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பையர்
இரும்பே ரொக்கல் கோடியர் (அக.301)

என அகநானூறு கூறும்.

மன்னர் புகழ்பாடும் வீரர்கள் ஒருபுறம், மன்னரைச் சார்ந்து இரந்து வாழும் பாணர், பாடினி இன்னொருபுறம் என ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்த சமூகநிலை இத்தகைய பாடல்களால் புலனாகின்றது என்பார் உரையாசிரியர்.

இடம் விட்டு இடம் சென்று பிழைக்கும் வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள நாடோடிகளான பாணரும், பாடினியும், கூத்தரும், விறலியரும் மன்னருக்கும் மக்களுக்கும் இடையேயான ஒரு இணைப்புச் சமூகமாக இயங்கி வந்த நிலை பதிற்றுப்பத்தால் புலனாகும் என்பர்.

உரையாசிரியர் முனைவர் கரு. அழ. குணசேகரன் இவ்வுரைப் பதிப்பின் மூலம் சமூகவியல் ஆராய்ச்சி அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ள திறம் பாராட்டத்தக்கது.

உரைகள் தோன்றுவதற்கான காரணத்தை ஆராய்ந்த அறிஞர்கள் பின்வரும் கருத்தை எடுத்துரைப்பர்.

'குறிப்பிட்ட ஒருகாலத்தில் வாழும் மக்களிடையே அறிவுப்பசி தலையெடுக்கின்ற காலத்துத் தங்கள் பழம்பெரு நூல்களுக்குத் தங்கள் காலத்து வாழக்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தரமுயல்வர். பழமையில் புதுமை காணவேண்டும் என்னும் நோக்கமும் உரை எழுதுகின்ற போக்கும் இயல்பானதே'.

நூலாசிரியர் பழம்பெருநூலுக்குத் தம் காலத்தில் கலை, பண்பாட்டுச் சமூகச் சூழலுக்கேற்ப உரை வரைந்துள்ள திறத்தை இந்நூலில் காணலாம்.

நூலாசிரியர் முயற்சியைத் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டிப் போற்றுமாக. நூலாசிரியருக்கு இனிய பாராட்டுதல்கள்.

இ. சுந்தரமூர்த்தி.

பொருளடக்கம்

		பக்கம்
இரண்டாம் பத்து	– குமட்டூர்க் கண்ணனார்	3
மூன்றாம் பத்து	– பாலைக் கௌதமனார்	42
நான்காம் பத்து	– காப்பியாற்றுக் காப்பியனார்	97
ஐந்தாம் பத்து	– பரணர்	130
ஆறாம் பத்து	– காக்கை பாடினியார் நச்செள்ளையார்	171
ஏழாம் பத்து	– கபிலர்	208
எட்டாம் பத்து	– அரிசில் கிழார்	244
ஒன்பதாம் பத்து	– பெருங்குன்றூர் கிழார்	277
பின்னிணைப்பு		312

பதிற்றுப்பத்து

மூலமும்

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்

இயற்றிய

ஆராய்ச்சிப் புத்துரையும்

(கலையியல் மற்றும் சமூகவியல் நோக்கில்)

குமட்டூர்க் கண்ணனார்

இயற்றிய

இரண்டாம் பத்து

பாடல் - 11

பேர் இசை இமயமும் தென் அம் குமரியும்

வரைமருள் புணரி வான் பிசிர் உடைய,
வளிபாய்ந்து அட்ட துளங்கு இருங் கமஞ்சூல்
நளி இரும் பரப்பின் மாக் கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழு முதல் தடிந்த பேர் இசை
கடுஞ்சின விறல் வேள் களிறு ஊர்ந்தாங்குச்
செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப
அரு நிறம் திறந்த புண்உமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர் நிறம் பெயர்ந்து,
மனாலக் கலவை போல அரண் கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை
பலர் மொசிந்து ஓம்பிய திரள் பூங்கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய வேஎய்
வென்று எறி முழுங்கு பணை செய்த வெல்போர்
நார் அரி நறவின்,ஆர மார்பின்
போர் அடு தானைச் சேரலாத
மார்புமலி பைந்தார் ஓடையொடு விளங்கும்
வலன்உயர் மருப்பின் பழிதீர் யானைப்
பொலன் அணி எருத்தமேல் கொண்டு பொலிந்தநின்

பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகுமே
கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய, பேர் இசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம் தபக் கடந்தே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - புண்உமிழ் குருதி

உரை

இரண்டாம் பத்தில் காணப்படும் குமட்டூர்க் கண்ணனாரின் இப்பாடல் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த போரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 'பிணி முகம்' எனும் யானையை வாகனமாகக் கொண்ட முருகன் அலைகடலின் நடுவே உயிர்களை வருத்துகின்ற இயல்பை உடைய அசுரர்களுக்குப் பாதுகாப்பாக நின்ற சூரபதுமனை வென்ற புராணக் கதையைக் கூறும் பதிவாக அமையக் காண்கிறோம். மேற்குறிப்பிட்ட புராண முருகன் போல் சேரன் தன்படை கொண்டு தன் எதிரிகளைப் போரிட்டு வென்றான். அப்போது எதிரிகளின் மார்புகளை வேல் மற்றும் வில் ஆகிய ஆயுதங்கள் துளைக்க இரத்தம் பீரிட்டுக் கிளம்பியது. கடல் நடுவே நடந்த இந்தப் போர் முடிவில் சூரபதுமனின் மார்பிலிருந்து வெளிப்பட்ட இரத்தத்தின் மிகுதியால் கடலின் நீல நிறம் மாறிச் சிவப்பு நிறமானது. கடம்ப மரம் என்பது அக்காலத்தே நாட்டின் எல்லையையும், நாட்டின் அடையாளத்தையும் குறிக்கும் ஒரு குறியிடாக விளங்கியுள்ளது என அறிகிறோம். கடம்ப மரத்தை வெட்டிச் சாய்த்தால் வெட்டியவருக்கு அந்நாடு சொந்தமாகும் என்பது பொருளாகும். கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்திய வீரர்களைப் பாராட்டி வெற்றி கொண்ட மகிழ்ச்சியை மாலை அணிந்து கள் உண்டு களிப்படைபவனாகச் சேரலாதனின் புகழ் காட்டப்படுகிறது. முனிவர்களைக் கொண்டு விளங்கும் இமயமலைக்கும் தென்திசையில் விளங்கும் குமரிக்கும் இடைப்பட்ட பகுதியில் யாரேனும் எதிர்த்துப் போரிட வந்தால் அவர்கள் அழியுமாறு போர் செய்து வெற்றி காண்பவன் சேரன். "சிறப்பு மிக்க நீ

யானை மீதேறி வரும் அழகு இன்பம் தரத்தக்கது" எனுமாறு பாடல் சேரனின் அழகை விளக்குகிறது.

ஏனைய சங்க இலக்கியங்களில் சுட்டப் பெறாத இந்திய எல்லையின் வரையறை இப்பாடலில் சுட்டப் பட்டுள்ளது. இந்திய எல்லையின் கணிப்புக் குறித்த குமட்டூர் கண்ணனாரின் இந்தப் பாடல் சங்க இலக்கியக் காலத்துப் பாடல்களில் இருந்து விலகிக் காலத்தால் பிற்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. புராண, இதிகாசக் கருத்தியல்கள் கொண்ட பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்பட வில்லை. எனினும் ஒரு சில இடங்களில் குறிப்புகளாகக் காட்டப்படுகின்றன. இத்தகைய புராண இதிகாசப் பதிவுகள் வழியே. வைதீகம், சமணம், பௌத்தம் ஆகிய மதங்களின் ஊடுருவல்கள் சங்க இலக்கியத் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன என நாம் உய்த்துணர முடிகிறது.

"ஆரியர் துவன்றிய பேர் இசை இமயம்"

எனும் பாடல் அடி வழியே ஆரியர்களையும் அதாவது அந்தணர்களின் வேத மரபு சார் சிந்தனைகள் மன்னர்களோடும் மன்னர்களைச் சார்ந்திருந்த புலவர்களோடும் உறவு கொண்டமைந்து வெளிப்பட்ட படைப்பு இது என எண்ணிட இடம் உண்டு. ஆதலால் இப்புலவன் வடமொழி மரபில் அதாவது ஆரியர் வழி வந்த தமிழிசைப் புலவன் எனவும் உணர முடிகிறது.

பாடல் - 12

பாணர்தம் கிளையினர்க்கு வெண்ணெல் வெண்சோறு அளித்து மகிழ்ந்த வேந்தன்

வயவர் வீழ வாள் அரில் மயக்கி
இடம் கவர் கடும்பின் அரசு தலை பனிப்ப
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே
தார் அணி எருத்தின் வாரல் வள் உகிர்
அரிமான் வழங்கும் சாரல் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சு அதிர்ந்தாங்கு
முரசு முழங்கு நெடுநகர் அரசு துயிலீயாது
மாதிரம் பனிக்கும் மறம் வீங்கு பல் புகழ்
கேட்டற்கு இனிது -நின் செல்வம் கேட்டோறும்
காண்டல் விருப்பொடு -கமழும் குளவி
வாடாப் பைம்மயிர் இளைய ஆடு நடை
அண்ணல் மழ களிறு அரிஞிமிறு ஓப்பும்
கன்று புணர் பிடிய குன்று பல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கல்
தொல்பசி யுழந்த பழங்கண் வீழ
எஃகுபோழ்ந் தறுத்த வானிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி

நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலத்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிது நின் பெருங்கலி மகிழ்வே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - மறம் வீங்கு பல் புகழ்

உரை

முரசுகள் எப்போதும் முழுங்கிக் கொண்டிருக்கக் கூடிய நாட்டினைக் கொண்ட சேரன் தன்னைச் சுற்றியுள்ள பிற நாட்டு வேந்தர்களைத் தன் குடையின் கீழ் வென்று திறை செலுத்தக் கூடியவர்களாக ஆக்கி வைத்ததன் பொருட்டுச் சுற்றி விளங்கும் பிறநாட்டு வேந்தர்கள் சேரன்பால் எப்போதும் அஞ்சிய படியே ஆட்சி செய்பவர்களாக உள்ளனர்.

"கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே"

என்று கூறுவதன் வழியே இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னைச் சுற்றி அமைந்துள்ள நாடுகளைப் போரிட்டு அவர்தம் கடம்ப மரத்தினை வெட்டி வீழ்த்தித் தன் ஆட்சியின் கீழ் அடிமைப் படுத்திக் கொண்டவனாகக் காட்டப்படுகிறான். மறம் வீங்கு பல் புகழ் எனக் குறிப்பிடப்படுவதன் வழியாகக் கடம்ப மரங்களை நாட்டின் அடையாளங்களாகக் குறியீடாகக் கொண்டு விளங்கிய பிற வேந்தர்களை வென்றவன் எனக் காட்டப்படுகிறான். இப்பாடல் பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள பற்பலப் பாடல்களைப் போன்றே இரு வகைப்பட்ட செய்திகளை ஒரு பாடலில் தருதல் எனும் முறைமையினைக் கொண்டு விளங்குகிறது. இப்பாடலின் பிற்பகுதியில் பாணர் மற்றும் அவர்தம் சுற்றத்தார் வாழ்க்கை முறைமைகளைப் பதிவு செய்துள்ள செய்திகள்

விளக்கப்படுகின்றன. பிறநாட்டு வேந்தர்களின் மறம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. கலைஞர்கள் வேந்தனைப் புகழ்ந்து பாடும் போது வேந்தனின் வீரச் சிறப்பினை முதன்மைப் படுத்திக் கூறுவதை ஒரு மரபாகவே கொண்டிருந்தனர். இப்பாணர் குழுவினர் மலை காடுகளில் இருந்து பயணப் பட்ட செய்தியை முன் வைத்தும் மன்னர் புகழினைச் சிறப்பித்தும் பாடுவதனால் சேரனின் எல்லைக்குள் பயணித்து அவனின் அனுமதியை முதலாகப் பெறுவதே பாணர் மற்றும் அவர்தம் சுற்றத்தாரின் முயற்சிகளாகவும் இருந்துள்ளன. நாடோடிகளாக அலைந்து மன்றுகளிலும் மக்கள் வீதிகளிலும் கலைநிகழ்ச்சிகளை நடத்திப் பிழைத்திட மறைமுகமான அனுமதியையும் சேரனிடம் பெறுகின்றனரோ? என எண்ண வேண்டியுள்ளது.

நெடுஞ்சேரலாதனின் கொடைச் சிறப்பினையும் வெற்றிச் சிறப்பினையும் கூற வந்த இரண்டாம் பத்து, இரண்டாம் பாடல் திருவோலக்கம் குறித்த பதிவாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. மன்னர் புடைசூழ அரியணையில் வீற்றிருக்கிறார். மறம் வீங்கு பல் புகழ் நாடுகள் தோறும் பரவலாகச் சென்றடைந்திருக்கின்றது. பல நாட்டாரும் புகழ்மிக்க மன்னரைக் கேள்விப்பட்டுப் பார்க்க ஆவலோடு இருக்கின்றனர். இந்நிலையில் விறலியர் உள்ளிட்ட கலைஞர்கள் மன்னர் அவைக்கு வருகின்றனர். மன்னரைப் புகழ்ந்து பாடிக் கலை நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். பாடி ஆடிய விறலியரின் பாடுபொருள் கீழ்க்கண்டவாறு அமைகிறது. களிற்றின் மதம் பிடித்த பாலினை ஒத்த மதநீரினை வண்டினம் மொய்க்க முன் வருகின்றன. அதுபோலப் பாணர்களும், இரவலர்களும், கலைஞர்களும் மன்னரைக் கண்டு பரிசில் பெற வந்துள்ளனர் என்றும், பகைப்புலத்திலே வென்று பெற்ற செல்வங்களைப் புகழ் பாடும் இரவலர்களுக்குத் தந்து கொண்டிருக்கும் வள்ளல் பெருமானே குன்று பல கடந்து வறுமைக்கு ஆட்பட்டு வழிநடை வருத்தங்களைப் பெற்று வாடிக் கருத்துப்போன இக்கலைஞர்களுக்குப் பரிசில் அளித்துக் கலைஞர்கள் வாயால் வாழ்த்துப் பெறுவாயாக எனும் பொருள் கொண்டதாகவும் அவர்தம் பாடலின் பொருள் அமைந்துள்ளது.

.... குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கல்
தொல்பசி யுழந்த பழங்கண் வீழ
எஃகுபோழ்ந் தறுத்த வாளிணக் கொழுங்குறை

மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலத்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிது நின் பெருங்கலி மகிழ்வே

கலைஞர்கள் முன்னிறுத்திய திருவோலக்கமாகச் சேரனின் அவை இருந்தது என்பதும் கலைஞர்களுக்கும், மன்னர்களுக்கும் எவ்வாறு நெருக்கமான உறவு இருந்துள்ளது என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது. தொல்பசி கொண்டு பல நாட்கள் உடுத்தி இருந்ததனால் கறை படிந்த ஆடைகளோடு, கலைஞர்கள் காணப்படுகின்றனர். நுண் மாசு படிந்ததும் கிழிந்ததும் ஆன கலைஞர்கள் உடுத்தி இருந்த ஆடை நனைந்த பருந்தின் சிறகு சேற்றில் படிந்த நிறத்தை ஒத்ததாக இருந்தது. வறுமைக்கான அடையாளத்தைக் கண்ட மன்னன் கலைஞர்களின் வாழ்த்தைப் பெறுவதற்காக விருந்து அளித்து மகிழ்ந்தான். மன்னர் அவைகளில் பாணர்கள் தம் கிளை சூழப்பாடி, ஆடி. நாட்டையும்நாட்டு மன்னனையும் வாழ்த்திப்பாடும் மரபு அக்காலத்தே நடைமுறையில் இருந்துள்ளது. **மன்னரின் திருவோலக்கத்தில் பாணர்கள் பாடி ஆடி வாழ்த்துதல் என்பது ஒருவகையான சடங்கினை நிறைவேற்றும் முகத்தான் அமைந்துள்ளது என்றும் உணர முடிகிறது.** பாணர்களின் வாழ்த்துப்பாட்டு என்பது பாணர்களால் நிறைவேற்றப்படும் ஒரு வகையான சடங்கு முறை என்பதை நாம் சங்கப் பாடல்கள் பலவற்றில் மன்னரோடு பொருத்தி அறியும் போது உறுதி கொள்ள முடியும். திருவோலக்கம் மட்டுமல்ல போர்ப்பாசறைகளிலும் பாணர்களின் வாழ்த்துப்பாடல்கள் அமைந்திருப்பதனையும் இங்கு எண்ணுதல் தகும்.

பாடல் - 13

துணங்கை ஆடிய மருங்கும் வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்

தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்
ஏறுபொருத செறு உழாது வித்துநவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமை நிரை தடுக்குநவும்
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்
ஒலிதெங்கின் இமிழ் மருதின்
புனல் வாயில் பூம்பொய்கை
பாடல் சான்ற பயம்கெழு வைப்பின்
நாடு கவின் அழிய நாமம் தோற்றிக்
கூற்று அடூஉ நின்ற யாக்கை போல
நீ சிவந்து இறுத்த நீர் அழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு கார் உடை போகி
கவைத்தலை பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க
ஊரிய நெருஞ்சி நீறு ஆடு பறந்தலை
தாது எரு மறுத்த கலி அழி மன்றத்து
உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து
உள்ளுநர்ப் பனிக்கும் பாழ் ஆயினவே

காடே கடவுள் மேன புறவே
ஒள் இழை மகளிரொடு மள்ளர் மேன
ஆறே அவ் அனைத்து அன்றியும் ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந்த ராஅ
குடிபுறத் தரநர் பாரம் ஓம்பி
அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழை வேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசி இகந்து ஒரீஇ
பூத்தன் று பெரும நீ காத்த நாடே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - பூத்த நெய்தல்

உரை

நீர் வளம் மிகுந்து அமைந்த வயல்களைக் கொண்ட பகைவரின் நாட்டின் சிற்றூர்கள் நன்கு மலர்ந்த பூக்களாலும் கரும்பு விளைச்சலாலும் செழித்திருந்தன. போரின் பின் அந்நாட்டின் பசுக்கள் தங்குகின்ற மன்றங்கள் பசுக்கள் இன்றியும், பசுக்கள் இட்ட சாணங்கள் இன்றியும் வளங்கள் சீர் கெட்டுள்ளன. முட் செடிகள் படர்ந்துள்ளன. மக்கள் பயணப்பட்டு இருந்த பாதைகள் முட்புதர்களால் மக்கள் நடமாட்டம் இன்றி நெருஞ்சி முட்கள் படர்ந்து கிடக்கின்றன.உன் சினத்தால் பகைவர் நாட்டில் நின் படைகள் தாக்கியதன் பொருட்டுச் சீர் கெட்ட நிலையில் யாரும் இல்லாத, யாரும் வாழாத நிலை ஏற்பட்டு ஊர்களும், மன்றுகளும் விளங்கின. யாரும் உழாத நிலையில் வயல்களும் ஆள் நடமாட்டம் இன்றிப் பாழடைந்து இருந்தன. யாரும் அங்குச் செல்ல அஞ்சி உள்ளனர். யாரேனும் ஆள் நடமாட்டம் இல்லாத அல்லது மக்கள் ஆரவாரம் இல்லாத பாழடைந்த அப்பகுதிகளுக்குச் செல்ல நினைத்தால் பேய்களின் நடமாட்டம் என மனம் நடுங்கி அவ் எண்ணத்தை நீக்கிச் செல்லாது நீங்கி விடுவர். நின் நாடு வளம் பொருந்திய நாடாகியுள்ளது. காடாகக் கிடந்த நிலங்கள் யாவையும் நின் படை வீரர்கள் தங்கி இருந்த நிலங்களாகின்றன. ஆறலைக் கள்வர்கள் இடையூறுகள் தர இயலாது போயினர். அவர்கள் தங்கி இருந்த இடங்கள் படை வீரர்கள் உறையும்

இடங்களாயின. நெல்,தேன் போன்ற விளைப்பொருள்களை விற்கும் வணிகர் குடிகள் மிகுந்த பாதுகாப்புடன் வாழ வழி வகை செய்துள்ளாய். மழையைக் கூட்டித் தரும் அடையாளமாக வானில் வெள்ளி என்னும் கோள் முளைத்து இருக்கிறது. வானம் தப்பாது மழை பொழியும். மக்கள் நோயும், பசியும், பகையும் இன்றிச் சேரன் ஆட்சியின் கீழ் வாழ்கின்றனர் என்பதாகப் பாடலின் பாடு பொருள் அமைகிறது. இப்பாடலில் புலவன் இருவேறு நாடுகளின் வளங்கள் குறித்தும் அழிவு குறித்தும் பதிவு செய்துள்ளான். நெய்தல் நிலத்தில் அமைந்திருந்த செழிப்புற்ற இரு நாடுகள் இப்பாடலில் காட்டப்படுள்ளன.

"குடி புறத்தரா"
"குடி புறத்தருநர்"
"கரும்பின் பாத்தி பூத்த நெய்தல்"
"விரிபூ கரும்பின் கழனி புல் என"
"ஊரிய நெருஞ்சி நீறு ஆடு பறந்தலை"
"எரு மறுத்த கலி அழி மன்றம்"
"காடே கடவுள் மேன"

என்பன போன்ற பாடல் தொடர்கள் வழியே புலவனால் விவரிக்கப்படும் அழிந்த நாடும் மற்றும் வெற்றி கொண்ட நாடுமான இவ்விரு வகை நாடுகள் பற்றிய செய்திகளைக் கொண்டு ஆய்ந்து பார்க்கும் போது இருநாட்டுத் தலைவர்களும் இனக்குழுச் சமூகத்தலைவர்களாக விளங்குவதை அறியமுடிகிறது.

சங்க காலம் என்பது அரசர்களுக்குள் நூற்றாண்டுக் கணக்கில் நடந்து வந்த ஆட்சி விரிவாக்கம், பொருள் கவர் நடவடிக்கைகள், போர்ச் சூழல் போன்றவை நடந்த காலம் எனலாம். சங்ககால வாழ்க்கை முறை இனக்குழுச் சமூக வாழ்க்கை முறையில் இருந்து தலைமை வாழ்க்கை எனும் நோக்கோடு அரச சமூகத் தலைமை உருவாகி வந்த சூழலை மேற்சுட்டிய பாடலனைய சங்கப்பாடல்கள் வழி நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. குமட்டூர்க் கண்ணனார் 2ஆம் பத்தில் இமயவரம்பனின் வெற்றிச் சிறப்புக் குறித்துப் பாடும் இப்பாடல் 'செந்துறைப்பாடாண் பாட்டு' என்னும் துறையில் அமைந்துள்ளது. ஒழுகு வண்ணத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.சேரலாதனுடைய வீரச் சிறப்புகளை இப்பாடல் விளக்குகிறது. மன்னரின் புகழைப் பாடலாகப் பாடிப் பரிசில் பெற்ற செய்தியை இங்கு அறிய முடிகிறது. இசையோடு

பாடலும் பாடிய செய்தி இங்குக் கவனம் கொள்ளத்தக்கது. (பாலைக் கௌதமனார் பாடிய மூன்றாம் பத்துப்பாடலும் பாடிப் பெற்ற பரிசில் குறித்தும் அதன் பதிகத்தில் பேசப்படுகிறது.) புலவன் பாடும் பாடல் குறித்த பதிவு இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது. "முரசு முழங்கு நெடுநக ரரசுதுயி லியாது". இப்பாடல் வழியே மன்னர்கள் அரண்மனைகளின் முரசு ஒலி வழியாக மக்களுக்குச் செய்திகள் பரிமாறப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. இசைக் கருவிகள், இசை வகைகள், புகழினைக் கூறும் பல வகைப் பாடல்கள் பாணர், கோடியர், விறலியர், துணங்கையர், ஆடல் மகளிர் ஆடு களங்கள் எனும்படியான அரங்கியல் கலைக்கூறுகள் பதிற்றுப்பத்தின் பாடல்கள் தோறும் விளக்கமுற அமைந்திடக் காண்கிறோம்.

வீட்டு முன்றில் அரங்கு ஆதல்

கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்,
ஒலிதெங்கின், இமிழ் மருதின்,
புனல் வாயில், பூம்பொய்கை,
பாடல் சான்ற பயம்கெழு வைப்பின்
நாடு கவின் அழிய, நாமம் தோற்றி

சுற்றிலும் வயற்காடுகள், வயற்காடுகளுக்கு நடுவே மேட்டுப்பகுதி, வயல்களுக்குச் சொந்தக்காரர்களான மக்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளன; தென்னை மரங்கள் சூழ்ந்துள்ளன. பூக்கள் பூத்துக் குலுங்கும் பொய்கைக்குளம் பக்கத்தில் அமைந்துள்ளது; வண்டுகள் பூக்களை மொய்த்து ரீங்காரம் எழுப்பிய வண்ணம் உள்ளன. பறவைகள் உயர்ந்து நிற்கும் தென்னை மரங்களில் அமர்ந்து ஒலிகளை எழுப்பிக் கொண்டுள்ளன. குடியிருப்பில் உள்ள வீடுகளில் கொல்லைப் புறங்களில் ஆநிரைகள் பகற்பொழுதில் உழைத்த களைப்பில் உறங்கிக் கொண்டு இருக்கின்றன. இரவு நேரம் தொடங்கியுள்ளது. அமைதி குடி கொண்டுள்ள குடியிருப்புகளின் நடுவே ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக வட்டமாக அமர்ந்து, எதிர்பார்த்த நிலையில் வீற்றிருக்கின்றனர். பாட்டு ஒலி கேட்கிறது. இசைக்கருவிகள் முழங்குகின்றன. துணங்கை ஆட்டம் ஆடக்கூடிய இளைய மகளிர் பாட்டுக்கேற்ப ஆடுகின்றனர். அழகிய அவ் இளம்பெண்கள் வளையல்கள் அணிந்துள்ளனர். தலைகளில் அழகிய ஆம்பல் மலர்களைச் சூடியுள்ளனர். ஆட்டத்திற்கான தழை ஆடைகளை

உடுத்தியுள்ளனர். மக்களின் இரசனைக்கேற்ப மிகுந்த ஒலி எழுப்பித் துணங்கை ஆட்டம் ஆடல் மகளிரால் ஆடப்படுகிறது. வெகு நேரம் கண்டு இரசித்த மக்கள் துணங்கை ஆட்டம் முடிவுற்றதும் அவரவர் வீடுகளுக்குச் சென்று உறங்கிவிட்டனர். துணங்கை ஆட்டம் ஆடிய மகளிரும், ஆடிய களைப்புத் தீர உறங்கி ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர். அதிகாலை நேரம் உதயமாகிறது. ஆநிரைகள் விடிந்துவிட்டதை உணர்த்தும் வகையில் குரலெழுப்புகின்றன. மரங்களில் ஓய்வெடுத்த பறவைகள் விடியலை வரவேற்கும் முகத்தான் ஒலிகள் செய்து உரையாடிக் கொண்டிருக் கின்றன. இளங்கதிர்களை நீட்டியவாறு கதிரவன் காட்சிக்குப் புலப்படு கிறான். வெகுதொலைவு சென்று தமக்கு உரிய இரையைத் தேட முடியாத முதுமை வாய்ந்த ஆநிரைகள் குடியிருப்பின் மையப்பகுதியில் மணம் வீசிப் பரந்த நிலையில் உதிர்ந்து கிடக்கும் ஆம்பல் மலர்களை மேய்ந்து கொண்டிருக்கின்றன. முந்திய இரவு வேளையில் துணங்கை ஆட்டம் நிகழ்த்திய வட்டவடிவ அரங்கில் உதிர்ந்து கிடந்தவை தான் அந்த ஆம்பல் மலர்கள்.

வண்ண மிகு ஆடைகள் உடுத்தி, வளையல்கள் அணிந்து, தலையிலும் மேனியிலும் ஆம்பல் மலர்களை மாலைகளாக அணிந்து துணங்கை ஆட்டம் ஆடிய பெண்களிடம் இருந்து உதிர்ந்து விழுந்த ஆம்பல் மலர்களைத்தான் வயது முதிர்ந்த அந்த ஆநிரைகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த வண்ணமிகு அரங்கக் கலை நிகழ்வினைப் பதிவு செய்துள்ள இப்பதிற்றுப்பத்துப் பாடலின் பாடு பொருளான புறப்பொருள் குறித்துப் போற்றிப் பேசியோர் இக்கவின்மிகு காட்சியை அரங்கியல் பார்வையில் காணவில்லை. பதிவு செய்து காட்டவில்லை. இதுபோன்ற பல பாடல்களை நாம் கண்டறிய முடியும். Realistic theatre என்றும் Naturalistic theatre என்றும் அரங்கியல் வல்லுநர்கள் கூறும் இயல்பியல் அரங்கு என்றும் இயற்கை சார் அரங்கு என்றும் நவீன நாடகக்காரர்களால் குறிப்பிடப்படும் அரங்கியல் தன்மையுடன் இப்பாடல் காட்டப்படுகிறது.

பாடல் - 14

படைஏர் உழுவ, பாடினி வேந்தே

நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்
அளப்பு அரியையே
நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்,
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை
போர் தலைமிகுத்த ஈர் ஐம்பதின்மரொடு
துப்புத் துறைபோகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனைய கைவண்மையையே
அமர் கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர் பீடு அழித்த செருப்புகல் முன்ப
கூற்று வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றலையே
எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வான் உறை மகளிர் நலன் இகல் கொள்ளும்
வயங்கு இழை கரந்த வண்டு படு கதுப்பின்
ஒடுங்கு ஈர் ஓதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படைஏர் உழவ பாடினி வேந்தே
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பின் இப்பொழில் முழுது ஆண்ட நின்
முன்திணை முதல்வர் போல,நின்று நீ
கெடாஅ நல் இசை நிலைஇத்

தவா அலியரோ இவ் உலகமோடு உடனே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - சான்றோர் மெய்ம்மறை

உரை

மன்னரின் புகழ் அதாவது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் பல குணங்களையும், ஆற்றல்களையும் பதிவு செய்யும் போக்கில் அவன்தன் புகழ் பேசுவதாக இப்பாடல் அமைகிறது. கடலால் சூழப்பட்ட இந்நில உலகம் முழுவதையும் ஆண்ட நின் மரபில் உதித்த முன்னோர்கள் போல நீயும் நிலை பெற்று நின்று நின் கெடாத நல்ல புகழை நிலை பெறச் செய்து தாழ்வின்றி வாழ்வாயாக என மன்னனின் பெரும் புகழ் மற்றும் அவனது பரம்பரையின் புகழ் இப்பாடலில் விதந்தோதப்படுகின்றன. ஞாயிறு, திங்கள், கோள், விசும்பு, நிலம், நீர் போன்ற அழியாத இயற்கைகளோடு மன்னன் புகழ் பொருத்தப்பட்டுப் புகழ்ந்துரைக்கப்படுகிறது. நிலையான புகழுக்குச் சொந்தக்காரர்களாகவே மன்னர்கள் விளங்க வேண்டும் என்ற கருத்தியல் முன் வைக்கப்படுகிறது. போர்க்களத்தில் வீரர்களைப் பாதுகாக்கும் கவசம்போல நின்று உதவுவாய் என்னும் கருத்தும் முன் வைக்கப்படுகிறது. மன்னனின் புகழுக்கு ஆதாரமாக விளங்கக் கூடிய போர்வீரர்களை நிலையற்ற சமூகமாக இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. வீரர்களின் வாழ்க்கையைப் போலவே பாடிப் பரிசில் பெறும் பாடினி படை வீரர் மற்றும் உழவர் வாழ்க்கையும் காட்டப்படுகின்றன.

பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படைஏர் உழவ பாடினி வேந்தே

சில சமூகங்கள் மன்னரைச் சார்ந்தும், மன்னருக்காகவே வாழ்ந்தும், வீழ்ந்தும் படுகின்ற இனங்களாக நாடோடித் தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றன. ஆனால் இந்த இனங்கள் குறித்து எண்ணிச் செயல் படும் மனநிலையில் மன்னன் இல்லை.

கெடாஅநல் இசை நிலைஇத்
தவாஅலியரோ இவ்உலகமோடு உடனே

எனுமாறு மன்னரின் ஏற்றம், புகழ் குறித்த சிந்தனையை முன்வைக்கும் வகுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளவதிலேயே பெருமை கொள்ளும் குடியினராக, விளங்கிட எண்ணம் கொண்டோராக இனக்குழுமக்கள் வாழ்ந்துள்ளனர். பற்பல சமூகங்கள் மன்னரின் புகழுக்குத் துணை செய்வதாக விளங்கின. பல சமூகத்தாரையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு இடையே இணைப்புச் சமூகமாக வினையாற்றி நிலையான சமூகங்களாக ஆக்கி வைத்துக் கொள்வதில் சிற்றரசர்கள் முதல் பேரரசர்கள் வரை ஒரே விதமான குணங்களையே கொண்டுள்ளனர் எனச் சங்க இலக்கியப்பாடல்கள் காட்டும் மன்னர்கள் வழியே அறிந்து கொள்ள முடிகிறது.

நிலையான சமூகத்தில் நாடோடியாக வாழ்ந்த மிதவைச் சமூகத்தாரான பாணன், பாடினி போன்றோர் தங்கள் சிரமங்களையும் பொருட்படுத்தாது தொடர்ந்து பங்காற்றி வந்துள்ளனர். நிலையான சமூகங்களுக்கு இடையில் இடம் விட்டு இடம் பெயரும் தொழிலை வாழ்வின் ஒரு அம்சமாகவே மனம் கொண்டு செய்து வந்துள்ளனர். **இப்பாணர்கள் அக்காலத்து ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த பலவிதமான சமூகங்களின் கலாச்சாரக் கூறுகளை உள்வாங்கிப் பாடிப் பல தரப்பினருக்கும் கொண்டு சென்ற தொடர்பியலாளர்களாவர்.**



பாடல் - 15

முழவு இமிழ் மூதூரும் கலி மகிழ் இயம்பும் முரசும்

யாண்டு தலைப் பெயர வேண்டு புலத்து இறுத்து
முனை எரி பரப்பிய துன் அருஞ் சீற்றமொடு
மழை தவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி
நிரை களிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்து ஆடு கழங்கு அழி மன் மருங்கு அறுப்ப
கொடி விடூஉ குரூஉப் புகைபிசிர கால்பொர
அழல்கவர் மருங்கின் உருஅறக் கெடுத்து
தொல்கவின் அழிந்த கண்அகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்து
பீர் இவர்பு பரந்து நீர் அறு நிறை முதல்
சிவந்த காந்தள் முதல் சிதை மூதில்
புலவு வில் உழவின் புல்லாள் வழங்கும்
புல்இலை வைப்பின் புலம் சிதை அரம்பின்
அறியாமையான் மறந்து துப்பு எதிர்ந்த நின்
பகைவர் நாடும் கண்டு வந்திசினே
கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நல்நாட்டு

விழவு அறுபு அறியா முழவு இமிழ் மூதூர்
கொடி நிழற்பட்ட பொன்னுடை நியமத்து
சீர்பெறு கலிமகிழ் இயம்பும் முரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தார் அணிந்து எழிலிய தொடிசிதை மருப்பின்
போர்வல் யானைச் சேரலாத
நீ வாழியர் இவ் உலகத்தோர்க்கு, என.
உண்டு உரைமாறிய மழலை நாவின்
மென்சொற் கலப்பையர் திரிந்து தொடை வாழ்த்த
வெய் துறவு அறியாது நந்திய வாழ்க்கைச்
செய்த மேவல் அமர்ந்த சுற்றமோடு
ஒன்று மொழிந்து அடங்கிய கொள்கை,என்றும்
பதி பிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர் புகழ் பண்பின்
நீ புறந்தருதலின் நோய் இகந்து ஒரீஇய
யாணர் நல்நாடும் கண்டு மதி மருண்டனென்
மண்ணுடை ஞாலத்து மன் உயிர்க்கு எஞ்சாது
ஈத்துக் கை தண்டாக் கைகடுந்துப்பின்
புரை வயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர் கெழு விழவின்
நெடியோன் அன்ன நல் இசை
ஓடியா மைந்த நின்பண்பு பல நயந்தே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
இப்பாடலுக்கு இவ்வுரையாசிரியர் கூறும் துறை:
ஊர்ப்புறச் செரு கிடைநிலை

வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நிரைய வெள்ளம்

உரை

யாண்டு தலைப் பெயர வேண்டு புலத்து இறுத்து
முனை எரி பரப்பிய துன் அருஞ் சீற்றமொடு
மழை தவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி

என்னும் பாடல் அடிகள் ஒரு புதிய போர் உத்தியைக் காட்டுகின்றன. அது **பகைவரின் புலத்தினில் ஒரு புறத்தே பல நாள்கள் அல்லது பல மாதங்கள் வரை தொடர்ந்து போர்ப்பாசறை அமைத்துக் கொண்டு அப்புலத்துக்கு உரிமைப்பட்ட தலைவனை அல்லது மன்னனை அச்சுறுத்தும் வண்ணம் பகை மூட்டம் கொள்ளச் செய்து தங்கி இருத்தல் ஆகும்.** இம்முறை ஒரு விதப் போர் யுத்தி முறையாகும். செருப்பிடையே புகுந்த சிறு பரல் ஒன்று பாதத்தை உருத்திக் கொண்டே இருப்பது போல் (செருப்பிடைச் சிறுபரல் அன்ன-புறநானூறு 257) அப்புலத்துக்கு உரியவனைப் போர் செய்ய வருக, தவறின் போர்ப்பாசறை அமைத்துத் தங்கியுள்ள மன்னரின் பாதங்களைப் பணிந்து "போர் செய்து என் நாட்டையும் நாட்டு மக்களையும் அழித்திட வேண்டாம்" என வேண்டுகோள் செய்து திறை செலுத்த இப்பகை மன்னன் முன் வர வேண்டும்.

இவ்விதப் போர் முறை குறித்து நம் புறத்திணையானது பதிவு செய்திருக்கவில்லை. புறத்திணை இலக்கணத்திலே "புறத்து இறை" எனும் ஒரு விதப் போர் முறை குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் "புறத்து இறை" என்பது ஆநிரை கவர்ந்திட மேற்கொள்ளும் முறைமையைச் சுட்டுவதாக அமைகிறது. (தொல் புறத்திணை 61).

பதிற்றுப்பத்துச் சுட்டும் மேற்குறிப்பிட்ட போர் முறைமை குறித்து எந்த ஓர் இலக்கணமும் விளக்கம் தராத சூழலில் இந்த உரைகாரர் பின் வருமாறு துறை வகுத்திட முன்மொழிகிறார்.

துறை விளக்கம்

நாட்டில் உள்ள ஓர் ஊர்ப்புறத்தே போர்ப்படை பாசறை அமைத்துத் தங்கி இருக்கும். இம் முறையை ஊர்ப்புறச் செருகிடை நிலை எனச் சுட்டலாம். இது ஊருக்குப் புறத்தே செரு அமைத்து ஆடுகளைக் கிடை அமர்த்துவது போல் போர் வீரர்களைப் பொருதும் பொருட்டுக் கிடையென ஓர் இடத்தே மன்னன் தங்க வைத்து இருக்கும்

நிலையைக் குறிப்பதாகும். இப்படி சுட்டியுள்ள இத்துறை எத்திணையில் பொருத்திடலாம் என எண்ணும் போது **பகைவரை வீழ்த்தும் பொருட்டுக் கொள்ளும் போர் முறை வஞ்சித்திணை என நம் முன்னோர் வகுத்துள்ளமை தக்கதாக அமைவதால் ஊர்ப்புறச் செரு கிடைநிலை எனும் இத் துறை வஞ்சித்திணையில் வைத்து எண்ணத் தக்கதாகும்.**

வெற்றி கொள்ளப்பட்ட பின் அந்நாடு கொண்டிருந்த அவலச்சூழலை ஒரு பாணன் வெற்றி பெற்ற மன்னனிடம் விளக்குவதாக இப்பாடல் அமைகிறது. ஒரு நாட்டின் மீது படை எடுத்துச் சென்று வெற்றி பெற்ற பின் அந்நாட்டுச் செல்வங்கள் பலவற்றையும் தன்னுடன் கொண்டு வந்து சேர்த்திருக்கிறான். அத்தோடு மட்டுமின்றி எதிரி நாடு கொண்டிருந்த கோட்டைகள், கொத்தளங்கள், வீதிகள், விளைநிலங்கள் போன்ற அனைத்து அழகுச் செல்வங்களையும் தீ வைத்துக் கொளுத்திச் சிதை மயப்படுத்தியுள்ளான். பச்சைச் செடி கொடிகள் படர இடம் இன்றிக் கிடந்துள்ள சூழல் விளக்கப்படுகிறது. பாழடைந்து போன கட்டடங்கள், சீரழிந்து போன கடைத் தெருக்கள், விழாக் கொண்டாடிய மருத நிலங்களைக் கொண்ட ஊர்கள் இப்போது சிதிலம் அடைந்து போன அடையாளங்களை, அவலநிலைகளைக் கண்ணுற்றதாகப் புலவன் பாடுகிறான். எதிரி நாட்டு மன்னரோடு சேர்ந்திருக்கக் கூடிய அனைவரையும் விரிவுறத் தன் பாடலில் பதிவு செய்து காட்டிய புலவன் வெற்றி பெற்ற நாட்டின் மகிழ்ச்சிக் காட்சியையும் ஒரு சேரத் தன் பாடல் வழிக்காட்டுகிறான்.

வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தார் அணிந்து எழிலிய தொடிசிதை மருப்பின்
போர் வல் யானைச் சேரலாத
நீ வாழியர் இவ் உலகத்தோர்க்கு, என.. (பாடல் 15 , 21–24)

மகிழ்ச்சி வெள்ளத்தில் கள்ளை உண்டவர்கள், மன்னா நீ வாழ்வாயாக என்று குடிபோதையில் நாத்தள்ளாட வாழ்த்துகின்றனர். நரம்பிசைக் கருவிகளைச் செப்பமுற இழுத்துக்கட்டிக் குரலும், நரம்பும் ஒத்திசைந்த வண்ணத்தில் கலைஞர்கள் யாழினை மீட்டி வாழ்த்திப் பாடுகின்றனர். பாணர்கள், சான்றோர் வாழ்த்துப் பெற்ற இந்நாட்டில் சுற்றத்தாரோடு எந்நாளும் வாழ வேண்டும் என மன்னனின் பாதுகாவல் போற்றிப் பாடப்படுகின்றது.

எப்போதும் மன்னரையும்,மன்னரின் நாட்டையும் வாழ்த்திக் கொண்டிருக்கக் கூடிய பாணர்கள் தங்களுடைய இசைக்கருவிகளான, முழவு, தூம்பு, பதலை, உரடிகை முதலான இசைக்கருவிகளைக் கொண்ட பைகளைத் தூக்கிக் கொண்டு பாடித்திரியும் வாழ்க்கையே வேண்டும் என மனம் மகிழ்ந்து விரும்புகின்றனர். உயிர்களுக்கு ஈகையினையும், வலிமையினையும் தருகின்ற திருமால் உறைந்துள்ள ஆலயங்களுக்கு அணிகலன்களை வழங்கும் பண்பு நலன்களைக் கொண்டுள்ள சேரலாதன் திருமாலுக்கு மட்டுமின்றிப் பாணர்களுக்கும் பரிசு வழங்கி ஆதரிக்கும் ஆண்மையும், வன்மையும், செங்கோன்மையும் பெற்றவனாக விளங்குகின்றான். நரகத்தில் உள்ள நிறையபாலர் என்பவர் நரகத்திற்கு வரும் கொடியவர்களைத் தண்டிப்பவர் ஆவார். இத்தகைய நிறையபாலர் போல எழுந்து வரும் படை வீரர்களை உடையவன் சேரன் எனப் பாணரால் விளக்கப்படுகின்றான்.

சேர மன்னனின் வெற்றிச் சிறப்பும், நாட்டுச் சிறப்பும் சிறப்பித்துக் கூறப்படுவதோடு மட்டும் இன்றி எதிரிநாடு வீழ்ச்சியுற்றுக் கிடந்த அவலக்காட்சிகளும் பாணனால் காட்சிப்படுத்தப்படுகின்றன. எதிரி நாடு வீழ்த்தப்பட்டுள்ளது. தோல்வியுற்ற நாட்டையும் நாட்டு மக்களின் அவல வாழ்க்கை நிலையையும் பாணன் ஒருவன் நேரில் கண்டு சேரனிடம் விரித்துரைத்துப் பாடுகிறான். இதனால் வெற்றிக் களிப்பில் திளைத்துள்ள மன்னனும் மன்னனைச் சார்ந்துள்ளவரும் பெரும் உவகை கொள்கின்றனர். வெற்றி பெற்ற மன்னனின் குடையின் கீழ் உள்ள நிலப்பரப்பில் வாழ்வோர் எத்தகைய அமைதிச் சூழலில் வாழ்கின்றனர் என விவரமாகப் பாணனால் மன்னர் முன்னிலையில் பாட்டின் வழியே இசைபட எடுத்தியம்பப்படுகிறது.

போர்க்களத்தில் கண்ட காட்சிகளைப் பதிவு செய்து அனைவருக்கும் எடுத்துக் கூறும் பொறுப்பினை ஏற்றுள்ளவனாகப் பாணனும் காட்டப்பட்டுள்ளான். அதே வேளையில் சேர மன்னனின் ஆளுமைக்கு உட்பட்ட நிலப்பகுதியில் உள்ள மக்கள் எத்தகைய மகிழ்ச்சியில் உள்ளனர் என்பதும் பாணனால் முன்வைக்கப்படுகின்றது. பாணனின் சமூகப்பணிகள் பலவற்றுள் ஒன்று எதிரியின் நாட்டையும் நாட்டு மக்களையும் படம் பிடித்துக் காட்டுவதாகும். மேலும் மன்னர் குடையின் கீழ் வாழ்வோருடைய நிலையைப் பதிவு செய்துகாட்டுவது என்ற கடமையையும் பாணன் கொண்டுள்ளான். போர்க் காலங்களிலும்,

பிறகாலங்களிலும் மக்களின் நாடித்துடிப்புகளை மன்னருக்குக் காட்டும் சமூகக் கடமைகளில் ஒன்றாக இது பாணனுக்கு அமைகிறது.

பாணன் என்பவன் நாட்டு எல்லைகளைத் தாண்டிப் பயணிக்கும் ஒரு மிதவை வாழ்க்கையைக் கொண்டிருப்பதனாலும் அவன் எந்த நாட்டுக்கும் குடிமகனாக அல்லது குறிப்பிட்ட நாட்டுக் குடியுரிமை பெறாதவனாக இருப்பதனாலும் நிலப்பரப்பு எல்லைகளைக் கடந்த ஒரு சுதந்திரத் தன்மை வாய்ந்தவனாக நாட்டுக்கும் நாட்டு மன்னருக்கும் இடையே ஒரு தொடர்பியல் கலைஞனாகவும் விளங்குகின்றான்.

“வெய் துறவு அறியாது நந்திய வாழ்வு”

வாழ்ந்த துறவியர்களும் கொள்கைக்கு இணங்கச் சுற்றத்தாரோடு அமைதி வாழ்க்கை வாழ்ந்த சான்றோரும் நற்காரியங்களைச் செய்து ஊரினின்று விலகாமல் வாழ்ந்தனர். நோய் இன்றியும் புது வருவாயை உடையதுமான துன்பம் நீங்கிய வாழ்க்கையைப் பலரும் வாழ்ந்தனர். புகழுக்கு உரியோரின் புகழை எடுத்து இயம்பும் பாணர் மற்றும் கூத்தர் போன்றோர் பல நிலைகளில் சமூக அடுக்கு நிலைகளில் வாழ்ந்துவரத் தக்க பலதரப்பட்ட மக்களையும் காக்கும் சேரன் தன் நாட்டில் அடுக்கு நிலை அற்ற சமநிலை பெறத்தக்க வாழ்க்கையை வாழும் மக்களைக் கொண்டு ஆட்சி செய்வது குறித்த சிந்தனை அற்றவனாக இருக்கிறான். பாணர் மற்றும் கூத்தர் போன்றோரின் புகழ் உரைகளையும் வாழ்த்துப் பாடல்களையும் ஊக்கமாகக் கொண்டு ஆட்சி செய்து வருகின்றான் சேரன். புலவர்கள், பாணர்கள் மற்றும் கலைஞர்கள் என்றும் மறுவகையில் எதிலும் நாட்டமற்ற துறவியர்கள் என்றும் அமைதியான வாழ்க்கையை வாழவேண்டும் என்ற நோக்கினை உடைய கல்வி அறிவு கொண்ட சான்றோர்கள் என்றும் மற்றோர் வகையில் கள் உண்டு நிலை தடுமாறி மயங்கிய நிலையில் நாத்தடுமாறி மன்னரை வாழ்த்தும் கூட்டம் என்றும் பல வகையான திணை நிலை மாந்தர்கள் வாழும் நிலப் பகுதிகள் கொண்ட பல தரப்பட்ட சமூகப்படி நிலைகள் கொண்டு விளங்கும் மக்கள் வாழும் நாட்டரசன் சேரன். இவ்வாறு சேரனைக் குறித்துக் கூறியுள்ள பதிவு ஆட்சியாளருடன் நெருங்கிய தொடர்புடையோரும் ஆட்சி குறித்த சிந்தனை அற்றோரும் ஊர், நகர், நாடு, காடு, மலை எனப் பல நிலைகளில் வாழ்பவரும் எனப் பல நிலையினரைத் தழுவிய நிலையில் இயங்குவதே அரசு எனக் காட்டப்படுகிறது. அக்காலச் சமூக

இயக்கத்திற்குள் பிறரைப் போன்று நிலைத்த வாழ்க்கை வாழ்வோர் இன்றி அலைவுறு வாழ்க்கையை மேற்கொண்ட பாணர் மற்றும் கூத்தர்களைச் சேரன் பெற்றிருந்தமையில் அவனது பலமும் பலவீனமும் அமைந்திருக்கின்றன என உய்த்துணர முடிகிறது.

பாடல் - 16

களிறு முழங்கும் பாசறைக்குப் பாணன் கொணர்ந்த செய்தி

கோடு உறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி
நாடு கண்டன்ன கணை துஞ்சு விலங்கல்
துஞ்சுமரக் குழாஅம் துவன்றி புனிற்று மகள்
பூணா ஐயவி தூக்கிய மதில
நல் எழில் நெடும் புதவு முருக்கிக் கொல்லுபு
ஏனம் ஆகிய நுனை முரி மருப்பின்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரம் கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை ஆகலின் காண்கு வந்திசினே
ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும்இனிய கூறும் இன்நகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கின்
சுடர் நுதல் அசைநடை உள்ளலும் உரியள்
பாயல் உய்யுமோ தோன்றல் தாஇன்று
திருமணி பொருத திகழ்விடு பசும் பொன்
வயங்கு கதிர் வயிரமொடு உறழ்ந்து பூண்சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
புரையோர் உண்கண் துயில் இன்பாயல்

பாலும் கொளாலும் வல்லோய் நின்
சாயல் மார்பு நனி அலைத் தன்றே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
இப்பாடலுக்கு இவ்வுரையாசிரியர் இட்ட துறை -
ஊர்ப்புறச் செரு கிடைநிலை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - துயிலின் பாயல்

உரை

கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரம் கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை ஆகலின் காண்கு வந்திசினே

நெடு நாள்கள் பகைப்புலத்தே உள்ள மதிற்புறப் பகுதியில் கடுஞ்சினம் தணியாமல் போர்ப் பாசறை அமைத்துப் படைசூழ மன்னன் தங்கியுள்ளான். பகைப்புல மன்னன் எந்த நேரத்திலும் போரை எதிர் கொள்ளக் கூடிய சூழல் நிலவுகிறது. இச்சூழல் ஊர்ப்புறச் செரு கிடை நிலை எனும் துறையைச் சார்ந்துள்ளது. இத்தகைய காட்சியைப் பாணன் கண்டு உரைப்பதாக அமைந்த மேற்சுட்டிய பாடலில் **தலைவி தலைவனை எதிர் நோக்கி உள்ளவாறு பாசறையில் வேந்தன் பகைப்புல அரசனை எதிர் கொள்ளக் காத்திருந்த ஒப்புமையைப் புலவனின் பாடல் பொருள் வழியே நாம் உய்த்துணர முடிவது புலவனின் புலமைத் திறனுக்குக் கிடைத்த வெற்றியாகவும் அமைகிறது.**

உயர்ந்த கோட்டை, உயர்ந்த மதில் சுவர் கொண்ட இடைப்பட்ட பகுதிகளைக் காணும் போது மதில் சுவர் கதவுகள் தென்படுகின்றன. தரைப்பகுதிகளில் பசுமைச் செடிகள் பரந்து காணப்படுகின்றன. பரந்த நிலப்பரப்பில் பசுந்தரை காணப்படுவதனால் இன்னொரு நாட்டு எல்லைப் பகுதியோ என மருட்கை தோன்றுகிறது. ஆங்காங்கு உள்ள மதில்

சுவர்கள் பெரிய மலைகள் போல் தோற்றமளிக்கினறன . மூன்று வகையான மதில்களைக் கணக்கிட்டுச் சொல்வதன் வழியே அக்கால அரண்மனைகள் குறிப்பிட்ட கட்டுமான வரைவினைக் கொண்ட நிலையில் கட்டப்பட்டுள்ளனவாக இருந்தன என எண்ணத் தோன்றுகிறது.

துஞ்சுமரக் குழாஅம் துவன்றி புனிற்று மகள்
பூணா ஐயவி தூக்கிய மதில

எனச் சுட்டப்படுவதன் வழியே நிறைந்த பாதுகாப்பு கொண்டுள்ள மதில் எனப் பொருள் கொள்ள நேரிடுகிறது. கட்டப்பட்டுள்ள யானை வெறி கொண்டு மதிலை முட்டியதனால் தந்தங்கள் முறிந்து சிறிதாகியுள்ளன. யானை கொண்டிருந்த இச்சிறு முறிவு பன்றியை ஒத்திருந்ததாகக் காட்டப்படுகிறது. இத்தகைய வலிமைமிக்க மதில்கள் உள்ளன. பெருந்தேவி தலைவன் கூற்றுப்படி குறித்த காலத்தில் வந்து சேர்வான் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறாள். யானைகள் முட்டிய போதிலும் திடமான மதில்களைக் கொண்டு அமைந்துள்ள கோட்டை எனக் கூறுவதன் வழியே தலைவி மாசற்ற கற்புக் கொண்டவளாக விளங்குகிறாள் எனச் சொல்ல வந்துள்ளமையை உணரமுடிகிறது.

நெடுந்தூரத்தே போர் செய்யும் பொருட்டு மன்னன் பாசறையில் தங்கியுள்ளான். பாசறையைத் தேடிச் சென்றுள்ள தூதுவன் நீண்ட காலமாகியும் நீ வரவில்லையே எனக் காண வந்துள்ளேன் எனக் குறிப்பிடுகிறான்.வந்துள்ள தூதுவன் பாணனாக இருக்க வாய்ப்புள்ளது. இவன் தலைவியிடம் இருந்து தகவலை தலைவனிடம் சேர்ப்பித்து விட்டு நலம் அறிந்து தலைவியிடம் சென்று சொல்பவனாக இருக்க வேண்டும். பாசறை சென்று வரும் பண்பினன் ஆகப் பாணனை நாம் பல இடங்களில் கண்டுள்ளோம். பல நாடுகளிலும் சுதந்திரமாகப் பயணம் செய்யும் பயணியாக அனுபவம் பெற்றவனாகப் பாணன் விளங்குபவன். போர்க்களத்தே போர் வீரர்களை வாழ்த்திப் பாடிச் செய்யும் சடங்கினை மேற்கொள்ளும் பாணனும் அவர்தம் உறவினரும் விளங்கியுள்ளமை குறித்துச் சங்கஇலக்கியப் பாடல்கள் குறிப்பிட்டமையை இங்கு எண்ணிப் பார்க்க இடம் உள்ளது. இவ்வகைச் சிந்தனையோடு பாசறைக்கு வந்துள்ளவன் பாணன் வகையைச் சார்ந்தவன் என்ற கருத்துக்கு இடம் உள்ளது.

பாடல் - 17

பகைவர் பணிந்து திறை தருதலும் ஆடுநர் பெயர்ந்து பரிசில் பெறுதலும்

புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே
பெரிய தப்புநர் ஆயினும் பகைவர்
பணிந்து திறை பகரக் கொள்ளுநை ஆதலின்
துளங்கு பிசிர் உடைய மாக்கடல் நீக்கி
கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன் பணை
ஆடுநர் பெயர்ந்து வந்து அரும்பலி தூஉய்
கடிப்புக் கண் உறூஉம் தொடித்தோள் இயவர்
அரணம் காணாது மாதிரம் துழைஇய
நனந்தலைப் பைஞ் ஞிலம் வருக இந்நிழல் என
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின்
அமிழ்து திகழ் கருவிய கணமழை தலைஇ
கடுங்கால் கொட்கும் நன் பெரும் பரப்பின்
விசும்பு தோய் வெண்குடை நுவலும்
பசும் பூண் மார்ப பாடினி வேந்தே

துறை - *செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *வலம் படு வியன் பணை*

உரை

கடல் கடந்து சென்று கடம்ப மரத்தினை வெட்டி வீழ்த்தி அவனது காவல் ஒழிந்தது என வெற்றி முரசு கொட்டுகின்ற சேரனின் புகழை முரசறைந்து செய்தி தருவோர் பற்றிய ஒரு கருத்து இங்குக் குறிப்பிடத்தகுந்ததாக அமைகிறது. இந்நில உலகில் உள்ள மக்களே சேரலாதனின் குடை நிழலில் வந்து சேருவீர்.

அரணம் காணாது மாதிரம் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருக இந்நிழல்

எனும் கூற்று வீரர்களால் முன் வைக்கப்படுகிறது. இன்னொரு செய்தியும் முரசறைவோரால் முன்வைக்கப்படுகிறது.

ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின்
அமிழ்து திகழ் கருவிய கணமழை தலைஇ
கடுங்கால் கொட்கும் நன் பெரும் பரப்பின்
விசும்பு தோய் வெண்குடை நுவலும்
பசும் பூண் மார்ப பாடினி வேந்தே

அணிகலன்களை அணிந்த மார்புடையவனே நின்னைப் பாடி வரும் பாடினி முதலான பரிசிலர்க்கு அவர்கள் வேண்டும் பொருளை ஈந்துப் பாதுகாக்கும் வேந்தனே, என முரசறைவோன் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

மன்னர் புகழ் பாடும் வீரர்கள் ஒரு புறம், மன்னரைச் சார்ந்து இரந்து வாழும் பாணர், பாடினி இன்னொரு புறம் என இந்த ஏற்ற இறக்கங்களைக் கொண்டுள்ள சமூகத்தை ஆண்டு வரும் மன்னன் மற்றோர் புறம் என அக்காலச் சமூகக் கட்டமைப்பு காட்டப்பெற்றுள்ளது. **ஏற்றமும் இறக்கமும் உள்ள ஒரு சமூகத்தை ஆண்டு வரும் சேரனிடம் பாணனும் பாடினியும் காலந்தோறும் இரந்தே வாழ வேண்டும் என்னும் அவர்தம் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள இப்பாடல் இடம் விட்டு இடம் சென்று பிழைக்கும் வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள நாடோடிகளான பாணரும், பாடினியும், கூத்தரும், விறலியரும் மன்னருக்கும் மக்களுக்கும் இடையேயான ஒரு இணைப்புச் சமூகமாக இயங்கி வந்த நிலையையும் அழுத்தமுறக் காட்டுகிறது.**

பாடல் - 18

ஆடல் மகளிரின் சமையல் கலை

உண்மின் கள்ளே அடுமின் சோறே
எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப
இருள்வணர் ஒலிவரும் புரிஅவிழ் ஐம்பால்
ஏந்து கோட்டு அல்குல் முகிழ்நகை மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே
பெற்றது உதவுமின் தப்பு இன்று பின்னும்
மன்உயிர் அழிய யாண்டு பல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவு எதிர் கொண்ட
தண் இயல் எழிலி தலையாது மாறி
மாரி பெய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே

துறை - *இயல் மொழி வாழ்த்து*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *கூந்தல் விறலியர்*

உரை

விருந்து அளித்தல் என்பது மன்னர்களின் செயற்பாடுகளில் ஒன்றாக விளங்கி இருக்கிறது. வெற்றி பெற்ற பின்னும் அரண்மனைகளில்

நடைபெறும் பிற நிகழ்ச்சிகளின் போதும் மன்னன் அறை கூவலை ஏற்றுப் பல்வேறு நிலப்பகுதிகளில் இருந்து குறுநில மன்னர் அனைவரும் வந்து குழுமிய போதும் அவர்களுக்கு எல்லாம் விருந்து அளித்துச் சிறப்பிப்பது மன்னர்களின் கடமைகளில் ஒன்றாக விளங்கியது. போர்க்காலங்களில் போர் வீரர்களுக்குச் சமைத்துக் கொடுப்பவர்களாகப் பாணர்களும், கூந்தல் விறலியர்களுமே பங்காற்றியுள்ளனர் என்பதை இப்பாடல் வழி உணர்ந்து கொள்ள முடிகிறது.

கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே
பெற்றது உதவுமின் தப்பு இன்று பின்னும்

சைவம் அசைவம் எனும் இருமுறைச் சமையல் கலைகளிலும் கூந்தல் விறலியர் சிறப்புநிலை எய்தி உள்ளனர் என உணர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது. இப்பாடல் வழியே பாணர்கள் விறலியர்கள் ஒருவித நாடோடி வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்றும் மன்னரின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பகுதி அனைத்திலும் இவர்கள் பரந்து பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தனர் என்றும் அறியமுடிகிறது. மன்னர் மற்றும் மக்களின் இடையே ஓர் ஊடகக்காரர்களாக இவர்கள் இருந்துள்ளனர் என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம். அந்த வகையில் மன்னரை நாடிச் சென்ற புலவர் மற்றும் விறலியர் குழாம் மன்னர் அளித்த விருந்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.

"வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப"

எனுமாறு வந்தோர்க்கும் வர இருப்போர்க்குமான விருந்து உபசரிப்புக் குறித்த பாடுபொருளாக இப்பாடல் அமைந்திருக்கிறது. விருந்தினை ஏற்போர் குடிமக்கள் தவிர நாடோடி வாழ்க்கை மேற்கொண்டுள்ள பாணர் கூத்தர்களையும் மையப்படுத்தியதாக இப்பாடல் விளங்குகிறது. ஒரு பாணன் இன்னோர் பாணனுக்கு ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ள இப்பாடல் வழியே பாணர்கள் மற்றும் விறலியர் போன்றோரே மன்னரின் விருந்துக்கு உரிய முதன்மையர் எனும் அளவிற்கு இப்பாடலை நாம் மனங் கொள்ள முடிகிறது.

மன் உயிர் அழிய யாண்டு பல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவு எதிர் கொண்ட
தண் இயல் எழிலி தலையாது மாறி
மாரி பெய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே

சேரனின் விருந்தோம்பலில் பாணர் இன மக்களோடு அவன் அறுபடாத உறவினைக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. சேரனின் விருந்துக்கு உரிமையான இப்பாணரும் கூத்தரும் இன்ன பிற சமையல் கலை போன்ற கலைத் தொழிலுக்கும் கூட இயைபுடையவர் களாக விளங்குகின்றமை இப்பாடல் வழி அறிய முடிகிறது. கூந்தல் விறலியர் எனத்தொகுப்பாளரால் பெயரிடப்பட்ட இந்தப் பாடலைச் சேரனின் கொடைச் சிறப்பு எனக் கொள்ளுவதை விடப் **பாணர் மற்றும் விறலியருமான கலைஞர் பெருமக்களை ஒரு உறவுப்பாலமாகவும் பலமாகவும் மன்னன் கொண்ட செய்தியைப் புலப்படுத்தும் பாடலாகவே கருத வேண்டும்.** சேரனின் கொடைச் சிறப்பினை இயம்புவது என்பதை விடச் சேரனின் உறவுச் சிறப்பு என்பதே இப்பாடலின் நுவல் பொருள் எனலாம்.

அழகிய கூந்தலை உடைய விறலியர் கலையையே தொழிலாகக் கொண்டு இயங்குவோர் எனச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காண்கிறோம். இந்தப்பாடல் வழியாகக் **கூந்தல் விறலியர் சமையல் கலைத் தொழிலினும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அறிய நேரிடுகிறது.** சேரலாதன் பாணர் மற்றும் விறலியர் சூழ்ந்த இனக் குழுவினரை மதித்துள்ளான் என்றும் பரிசில்கள் வழங்கியுள்ளான் என்றும் அறிவதோடு குழுவாக வந்துள்ள கலைஞர் பெருமக்களுக்கு உணவு அளிக்கும் பொருட்டுப் பருப்பு வகைகள் கொண்ட உணவும், புலால் உணவும், அரிசியும் வழங்கியதோடு அடுப்பையும் வழங்கிச் சமைத்து உண்ணுமாறு கூறியுள்ளமை இங்குக் கவனம் கொள்ளத் தக்கது. உண்மின், அடுமின், ஏற்றுமின் எனப் பன்மையில் விளித்துள்ளதன் மூலம் விறலியர் இனக்குழுவாகவே எங்கும் பயணப்பட்டுள்ளனர் என்றும் இனக்குழு வாழ்க்கையையே மேற் கொண்டிருந்தனர் என்றும் உணரமுடிகிறது.

கலைத் தொழிலுக்கு மட்டும் உரிய இக்கலைஞர் பெருமக்களை மாற்றுத் தொழில் (சமையல் கலை) செய்யச் சொல்வதன் வழியே இக்கலைஞர் பெருமக்கள் அன்பின் பொருட்டும், அரவணைப்பின் பொருட்டும், உறவின் பொருட்டும் மன்னரிட்ட பல தொழில்களையும் செய்தனர் என்றும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

பாணரும், கூத்தரும், விறலியரும் இது போலச் சிற்சில தொழில்களைச் செய்யத் தொடங்கியதன் விளைவே காலப்போக்கில் அவர்களை வெவ்வேறு தொழில்களுக்கு வாழ்க்கை அழைத்துச் சென்றுள்ளது. சிற்றிலக்கியக் காலங்களில் பாணர்கள், கூத்தர்கள், விறலியர்கள் போன்ற கலைஞர் பெருமக்களைப் பற்றிய பதிவுகள் காணப்படவில்லை. விறலிவிடு தூது எனும் இலக்கிய வகை தென்படுகிறது. சேரலாதனின் கொடைச் சிறப்பினைக் கூற வந்துள்ள இப்பாடல் கூந்தல் விறலியரைப் பற்றியே விதந்தோதி அமைகிறது.

இருள்வணர் ஒலி வரும் புரிஅவிழ் ஐம்பால்
ஏந்து கோட்டு அல்குல் முகிழ்நகை மடவரல்

எனும் வரிகள் வழியே அழகிய ஆடல் மகளிர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது தெரிகிறது. மன்னர் அவைக்களங்களில் பாணர் கிளையினர்க்கு உணவு உண்ண வேண்டிய பொருள்களை அளித்துள்ளான் எனும் செய்தி வழியே போர்க்களங்களில் அதாவது போர்ப்பாசறைகளில் போர் வீரர்களுக்கும் மன்னர் சார்ந்த பிறருக்கும் உணவு சமைத்துக் கொடுக்கும் பணியை இப்பாணர் கிளையினரே செய்திருக்கின்றனர் என உய்த்துணர முடிகிறது. வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப என வருவதால் விருந்தினராகப்பட்டவர்கள் பாணன் கிளையினரே ஆவர் என்றும் மனங் கொள்ள முடிகிறது.

பாடல் - 19

கொள்ளை கவர்ந்திடும் கொற்றவனும் கற்பு காத்திடும் தலைவியும்

கொள்ளை வல்சிக் கவர் காற் கூளியர்
கல்லுடை நெடு நெறி போழ்ந்து சுரன் அறுப்ப
ஒண்பொறிக் கழற்கால் மாறா வயவர்
திண்பிணி எஃகம் புலி உறை கழிப்பச்
செங்கள விருப்பொடு கூலம் முற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித் தோள் ஓச்ச
வம்பு களைவு அறியாச் சுற்றமோடு அம்பு தெரிந்து
அவ்வினைமேவலை ஆகலின்
எல்லு நனி இருந்து எல்லிப் பெற்ற
அரிது பெறு பாயற் சிறு மகிழானும்
கனவினுள் உறையும் பெருஞ்சால்பு ஒடுங்கிய
நாணு மலி யாக்கை வாள் நுதல் அரிவைக்கு
யார் கொல் அளியை
இனம் தோடு அகல ஊருடன் எழுந்து
நிலம் கண் வாட நாஞ்சில் கடிந்து நீ
வாழ்தலீயா வளன் அறு பைதிரம்

அன்ன ஆயின பழனம் தோறும்
அழல் மலி தாமரை ஆம்பலொடு மலர்ந்து
நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப
அரிநர் கொய்வாள் மடங்க அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்று ஓர் காலை
நல்லமன் அளிய தாம் எனச் சொல்லி
காணுநர் கை புடைத்துஇரங்க
மாணா மாட்சிய மாண்டன பலவே

துறை	-	*பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வளன் அறு பைதிரம்*

உரை

போர்க்களத்தையும் இல்லத்தரசி சேரமாதேவியின் காத்திருத்தல் சிறப்பையும் பேசக் கூடிய பாடலாக இப்பாடல் அமைகிறது. பாணன் கூற்றாக இப்பாடல் விளங்குகிறது. **அகமும் புறமும் எனத் தனித்தும், இணைந்தும் பார்த்த பார்வையை இப்பாடலில் காணலாகிறது.** அகமும் புறமும் கலந்த ஒன்றாகவே இப்பாடலைக் கவனிக்க முடிகிறது. போர்ச் செய்தியும் இல்லத்தரசியின் காதல் செய்தியும் கலந்து சொல்லப்படும் இப்பாடலைப் போலப் பதிற்றுப்பத்தில் குறிப்பாக இரண்டாம் பத்தில் அடிக்கடி காணநேரிடுகிறது. **அகம், புறம் என இலக்கண வாதிகள் தனித் தனி இலக்கணம் வகுத்துச் சொன்னாலும் அதனை மீறிய ஒரு புதிய கலப்புத் தன்மையினை அகத்தில் புறமும் புறத்தில் அகமும் எனத் தனித்துப் பார்க்கத் தக்க வகையில் இப்பாடல் அமைகிறது.**

> *பொருள் இலக்கணத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரிப்பதிலுள்ள நுட்பம் குறித்து உரையாசிரியர்கள் முதற்கொண்டு இன்றைய அறிஞர்கள் வரை*

> *நிறையவே பேசியிருக்கிறார்கள். இத்தகைய பிரிவினையை நாம் போற்றத்தான் வேண்டும். ஆனால் இது போதாது. அகம் இல்லாமல் புறமோ புறம் இல்லாமல் அகமோ தனி இயக்கம் கொள்வதில்லை. என்னதான் இவை ஒவ்வொன்றிற்கும் உரிய தனிக் கூறுகள் பற்றி நாம் பேச முனைந்தாலும் இவை ஒன்றோடொன்று ஊடாடுவது குறித்தே நாம் அதிகம் கவனிக்க முடியும்.*[1]

சேரமன்னன் பகைப்புலத்தில் வழிப்பறி செய்து கொள்ளையடித்துப் பெற்ற பொருள்களைத் தன் படை வீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாரி வழங்கக் கூடியவன். கழல் அணிந்த காலினை உடைய வீரர்கள் புலித்தோலால் செய்யப்பட்ட உறைகளில் இருந்து வேல்களை எடுத்துப் போர் செய்யக் கூடிய வல்லவர்கள். வேற்று நாட்டவர்களை வெல்லும் பொருட்டு அடர்ந்த காடுகளை அழித்துப் போர்ப்படைகள் முன்னேற வழி செய்யும் வல்லமை கொண்ட வீரர்களைக் கொண்ட தலைவன் சேரனாவான்.

சேரன் சிவந்த குருதியைத் தூவிப் பண்டங்களை வைத்துக் கடவுளுக்குப் பலிசெய்து சிறந்த கோல்களைக் கொண்டு முரசுகள் ஒலித்துக் கடவுள் வழிபாடு செய்யக் கூடியவன். எப்பொழுதும் போர் செய்ய உள்ள ஆர்வத்தைத் தணித்துக் கொள்ளாதவன். இவ்வாறு புறம் குறித்துப் பதிவு செய்கிற பாடலின் முற்பகுதியைத் தொடரும் பிற்பகுதியின் பாடலில் போரின் பொருட்டுத் தலைவன் தலைவியை விடுத்துப் பிரிந்துள்ள அக்காலச் செய்தி சுட்டப்பட்டுள்ளது. பகல் பொழுதில் ஒருவாறு ஆற்றி இருந்த தலைவி இரவுப் பொழுதில் நெடுநேரம் தூக்கம் இன்றி வருந்தி இருந்து பின் அரிதான தூக்கத்தில் தலைவனின் நினைவுகளைக் கனவில் பெறுகிறாள். தலைவியின் இத்தகைய பிரிவுத் துயரினைப் போக்க வராமல் போர்க்களத்தின் பாசறையில் வீற்றிருக்கும் தலைவனாக விளங்குகிறான் இந்த மன்னன். பல ஊரில் உள்ள குடிகளை வீழ்த்தியுள்ளான். சிற்றூர்களின் தலைவர்களாக விளங்கிய இனக் குழுக்களை அவர்தம் வளங்கள் அற்றுப் போகும்படி பூத்துக் குலுங்கிய வயல்களை அழித்துள்ளான். நெல் தாள்கள் பருமையின்

1. தமிழ்ச் செவ்வியல் இலக்கியம். மார்க்சிய ஆய்வுகள் என்ற தலைப்பில் முனைவர் க.பஞ்சாங்கம் தேசியக் கருத்தரங்கில் வாசித்த கட்டுரை, நாள் 25-02-2010, 26-02-2010.

காரணமாகக் கதிர்களைத் தாங்க முடியாமல் சாய்ந்துள்ளன. கரும்புகளை வெட்டிச் சாறினைப் பிழிந்ததனால் ஏற்படும் நல்ல மணத்தைக் காற்று அள்ளி வீசுகிறது. கரும்புத்தோட்டங்களைப் போரிட்டு அழித்துள்ளான். சேரலாதனின் போர் நிலைக்கு அஞ்சிப் பகைவர் ஊர்களில் உள்ள உழும் கலைப்பைகளை இழந்துள்ளனர். வாழ்விழந்த அந்தச் சீறூர் மக்களையும், தலைவர்களையும் கொள்ளளையடித்த பின், பொருள்களை அபகரித்த பின் எஞ்சிய வாழ்க்கையை வாழ்ந்து விட்டுப் போகட்டும் என வாழ்வளித்ததனால் பெயர் பெற்று வாழ்த்தப் பெற்றான் எனுமாறு எடுத்தோதப்படுகிறது.

பாசறையில் இது போன்ற ஒரு போரினைச் செய்யக் கூடிய தலைவனைக் கண்டு தலைவியின் நிலைப்பாட்டினைக் கூறி விரைந்து நாடு சேர்வாயாக எனப் பாணனின் இப்பாடல் கூறுகிறது. மேற்குறிப்பிட்ட பாடல்செய்திகள் வழிப் பெறலாகும் கருத்துக்களைக் கீழ்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம். புலித்தோல் உறையில் வேல்கள் கொண்டுள்ள வீரர்களைக் கொண்டுள்ள இம்மன்னன் பகைவர் நாட்டில் உள்ள எல்லா ஊர்களிலும் வாழ்ந்த இனக்குழுமக்களைப் போரிட்டு வென்றதனால் அவ்வூரில் உள்ள மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். முன்பு போலவே அவர் அவர் நிலங்களுக்குச் சென்று குடியேறுவீர்களாக என்று மன்னன் கூறுவதன் வழியே இனக் குழுவினரைத் தம் ஆளுகைக்குக் கீழ்க்கொண்டு வரும் மன்னர்தம் ஆளுகை உத்தி அறியப்படுகிறது. விளைந்த பொழுதுகளில் எல்லாம் இம்மன்னனால் விளைபொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எதிர்த்த இனக் குழுவினரை இரத்தம் சிந்த வைத்துள்ள வழக்கத்தினை அடிக்கடி செய்தவனாக இவனை அறிய முடிகிறது. சேரலாதனைச்சுற்றியுள்ள ஊர்களையும் ஊர்வாழ் மக்களையும் வென்று கோலோச்சும் மன்னனாகக் காட்டப்படுகிறதன் வழியே இனக் குழுத் தலைவர்களிடையே முகிழ்த்து வளர்ந்த ஒரு மன்னனாகவே இவனை நாம் காணநேர்கிறது. பாணன் என்பவன் தூதுவனாக அமைந்துள்ளான். பாணனை மையப்படுத்திய மன்னர் சார்ந்த சமூகம் இருந்தது என்பதை நாம் உணரமுடிகிறது.

பாடல் - 20

வயிரியர் : நும் கோ யார்?
கண்ணுளர் : எம் கோ.....

நும் கோ யார் என வினவின் எம் கோ
இருமுந்நீர் துருத்தியுள்
முரணியோர் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன்... வாழ்க அவன் கண்ணி
வாய்ப்பு அறியலனே வெயில் துகள் அனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே
கண்ணின் உவந்து நெஞ்சு அவிழ்பு அறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பு அறியலனே
கனவினும் ஒன்னார் தேய ஓங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி இரட்டும்
கடாஅ யானைக் கண நிரை அலற
வியல் இரும் பரப்பின் மாநிலம் கடந்து
புலவர்ஏத்த ஓங்கு புகழ் நிறீஇ
விரிஉளை மாவும் களிறும் தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசி
கடிமிளை குண்டு கிடங்கின்
நெடுமதில் நிலை ஞாயில்

அம்புடைஆர் எயில் உள் அழித்து உண்ட
அடாஅ அடுபகை அட்டு மலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவர் ஆயினும்
பரிசில் மாக்கள் வல்லா ஆயினும்
கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்உயிர் அழிய யாண்டு பல மாறி
தண்இயல் எழிலி தலையாது ஆயினும்
வயிறு பசி கூர ஈயலன்
வயிறு மாசு இலீயர் அவன் ஈன்ற தாயே

துறை - இயல் மொழி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - அட்டு மலர் மார்பன்

உரை

மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பகுதிகளில் பல இனத்தவர் வாழ்கின்றனர். வயிரியர், கண்ணுளர் போன்ற இசையை நிகழ்த்திப் பாடி ஆடுவோர் கூத்து மரபைச் சார்ந்தோராக அறியப் படுகின்றனர். இவர்களும் மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப் பகுதிகளில் நாடோடி வாழ்க்கையைக் கொண்டவராக இருந்திருக் கின்றனர். புலவர்கள் மன்னனைப் புகழ்ந்து பாடும் வாழ்க்கையைக் கொண்டோராக, மன்னனைச் சார்ந்து வாழ்வோராக விளங்குகின்றனர். மன்னரைச் சார்ந்த வாழ்க்கை என்பது போருக்கு முன், பின் என அமைகிறது. வாய்மொழிப் பாடல் பாடிப் பரிசில் பெற்றுத் திரிந்த பாணர்கள் வழிவந்தவர்களாகச் சில புலவர்கள் அறியப்படுகின்றனர். முறையான கல்வி அறிவு பெற்ற ஒரு சில பாணர்களுக்கு இது போன்ற வாய்ப்பு கிட்டி உள்ளது. அப்பாணர் வழி வந்தோராகவே கல்வி அறிவு பெற்று மன்னரைச் சார்ந்து வாழும் புலவர்களாக அறியப்படுகின்றனர். வாய்மொழி வழிவந்த புலவன் எனும் நிலையில் அதாவது பாணன் என்பவன் இனத்தில் இருந்து மன்னரைச் சார்ந்து பாடும் திறன் பெற்ற புலவர் இனம் தோன்றியுள்ளது. எனினும்

பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் குறித்த ஆய்வு இங்குக் கணக்கில் கொள்ளத்தக்கதாக உள்ளது. பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஒருவரால் எழுதப்பட்டவை அல்ல என்றும் பாடல்கள் நெடும் பாடல்களில் இருந்து எடுக்கப்பட்ட சுருங்கிய வடிவமாக இருக்கலாம் என்றும் திரும்பவரல் முறை, இயற்கை வருணனை முறை வாய்பாட்டு வரிமுறை போன்ற கூறுகளைக்கொண்டுள்ள பதிற்றுப்பத்துப் பாடல்கள் வாய்மொழிப் பாடல் மரபை ஒத்துள்ளன. என்றும் கூறுவார்தம் கூற்று உற்றுக் கவனிக்கத்தக்கதாக உள்ள.

பதிற்றுப்பத்தில் சேர்க்கப்பட்டுள்ள சில பாடல்கள் வேறுபட்ட மூலங்களை உடையன. அவை நெடும் பாடல்களின் பகுதிகளாக இருக்கக் கூடும். கிடைக்கும் எண்பது பாடல்களின் உள்ளிருக்கும் ஒத்திசைவும் ஒருமையும் தற்காலத் திறனாய்வாளர் சிலர் எட்டுப் பத்துகளையும் புலவர் எண்மர் இயற்றினர் எனக் கருதும் மரபு வழிக் கருத்தை ஐயப்படும் அளவு குறிக்கத்தக்கனவாக உள்ளன. வாய்மொழி இலக்கியம் புலவர்கள் பயின்று வளர்ந்த மரபுத்தன்மை மிக்க மொழியில் பாடப் பெறுவது. வாய்மொழிப் பாட்டில் தனி மனிதரின் நடைக்கு மிகக்குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்பெறும். இப்பாடல்களின் வாய்மொழித் தன்மையைக் கருதாமல் இப்பாடல்களுக்கு ஒருவரையே ஆசிரியராகக் கற்பிப்பதற்கு உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் அமைந்த கருத்துக்கள் தனியாக நோக்கத்தக்கன.[1]

வயிறு பசி கூர ஈயலன்
வயிறு மாசு இலியர், அவன் ஈன்ற தாயே

வயிறு பசி, வயிறு மாசு எனும் தொடர்கள் வாய்பாடுகளை அனிச்சைச் செயலாகத் திரும்ப வரும் சொல்லாகப் பதிவீடு செய்யும் முறையாக அமையும் முறைமைகளைக் கொண்டு வாய்மொழி மரபு கொண்ட இலக்கணக்கூறுகள் சிலவாக (பக்–238,239).

அமைவதாகப் பேராசிரியர் க.கைலாசபதி விளக்குவார், அவர் வழி நின்று அவதானிக்கும் போது நாம் மேற்சுட்டியுள்ள வயிறு எனும் சொல் இடம் பெறும் தன்மையை அறியும் போது இப்பாடலைப் பாடிய புலவன் வாய்மொழி மரபில் இருந்து மன்னரைப் புகழ்ந்துரைக்கும்

1. தமிழ் வீரநிலைக்கவிதை, க.கைலாசபதி, தமிழில் கு.வெ.பாலசுப்பிரமணியன். வெளியீடு குமரன் புத்தக இல்லம், ஆண்டு 2006, பக் -47,48.

பாடகனாகப் புலவனாக உருவானவன் என மனங் கொள்ள முடிகிறது. மேலும்,

நும் கோ யார் என வினவின் எம் கோ
இருமுந்நீர் துருத்தியுள்
முரணியோர் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன்...

எனத் தொடங்கும் பாடல் அடியைக் கவனிக்கும் போது கூத்தர் இருவர் பார்வையாளர் முன் நின்று கலை நிகழ்ச்சி நடத்தும் போது பார்வையாளரிடம் ஒருவித எதிர்பார்ப்பைத் தூண்டும் வகையில் அடுத்து என்ன நிகழப் போகிறது? அடுத்து எப்படி நிகழ்த்தப்படப் போகிறது என்னும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதாவது நாடகத் தன்மை பெறும் வகையில் கேள்விக்குப் பதில் எனும் முறைமையைக் கையாண்டு பாடல் தொடங்குவதன் வழியே பாட்டை இயற்றிய புலவன் பாணர் மற்றும் கூத்தர் வகை மரபினன் என்பது தெளிவு.

எமர்க்கும் பிறர்க்கும் யாவர் ஆயினும்
பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்

எனும் பாடல் அடிவழியே உணரும் போது பாடல் பாடும் புலவனாகிய தனக்கும் தன்னைப் போன்ற பிறர்க்கும் அதாவது பாணர் இனத்தார்க்கும் பரிசில் வழங்கும் வல்லார் எனக் குறிப்பிடுவதில் இருந்து பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தும் பாங்கு உடையவராக அக்காலச்சமூக அமைப்பில் பாணர் மற்றும் கூத்தர் சமூகம் விளங்கியுள்ளது. எனவே எமர்க்கும் எனும் சொல் பரிசில் பெறும் நிலை கொண்ட பாணர் மற்றும் அவர்தம் உறவினர்க்கும் உரியது என்பதையே உறுதிப்படுத்துகிறது. இதன் வழியே பாணர் சமூகவழி வந்த வாய்மொழி மரபுக்குச் சொந்தக்காரர்களுள் ஒருவன் இப்புலவன் என அறியமுடிகிறது. எனவே வாய்மொழி மரபுப் பாடல் சார்ந்ததாகவே அதாவது பாணன் மரபில் தோன்றிய ஒரு பாடல் மரபாகவே பதிற்றுப்பத்துப் பாடல்கள் தோன்றின என்பதையும் மனங் கொள்ளலாம்.

இரண்டாம் பத்து - பதிகம்

தமிழகம் பிணித்த ஆரியரும் யவனரும்

மன்னிய பெரும்புகழ் மறுஇல் வாய்மொழி
இன்இசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேர் இசை மரபின் ஆரியர் வணக்கி
நயன் இல் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கை பின் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறல் மூதூர்த் தந்து பிறர்க்கு உதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்தாள்
இமையவரம்பன் நெடுஞ்சேர லாதனைக்
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு.

பெயர்கள்

புண் உமிழ் குருதி, மறம் வீங்கு பல்புகழ், பூத்த நெய்தல், சான்றோர் மெய்ம்மறை, நிரைய வெள்ளம், துயிலின் பாயல்,வலம் படு வியன் பணை ,கூந்தல் விறலியர், வளன் அறு பைதிரம், அட்டு மலர் மார்பன்.

உரை

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குறித்துக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய இந்தப் பத்தின் பதிகம் வழியே தமிழரின் வரலாறு இடம் பெறுதல் காணமுடிகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பாடலைப் பாராட்டிப் பரிசிலாக 500 ஊர்கள் "பிரம்மதேயம்" என வழங்கப் பெற்றுள்ளன. 38 ஆண்டுகள் அவ்வூர்களில் விளையும் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட பகுதியைத் தவறாது மன்னனுக்குத் திறையாகச் செலுத்த வேண்டும் எனப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் இவ்வாறு புலவர்களுக்கும் பிற இனக்குழுத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்ட நிலக்கொடை பல்லவர் காலத்தில் பட்டயங்களில் பதிவு செய்தல் எனும் நிலை பெற்றுள்ளமையை வரலாற்று நோக்கில் கண்டு நினைவு கொள்ள முடிகிறது.

வேண்மாள் எனும் வேளிர் குலமகள் எனப் பொறித்தும் செதுக்கியும் வைத்ததன் வழியே வேளிர் எனும் ஒருவகை இனத்தார் மன்னனின் நிலங்களைப் பெற்று விளை நிலங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற பொருளைத் திறையாகச் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

"நயன்இல் வன்சொல் யவனர்ப் பிணித்து"

எனும் தொடர் வழியே யவனர்கள் என்போர் கடல் கடந்து பிற நாடுகளில் இருந்து பொன்னும் பொருளும் போன்ற விலை மதிப்பில்லாப் பொருள்களை எல்லாம் அளித்து மன்னனின் ஆதரவு பெற்ற வேற்று மொழி பேசும் அதாவது தமிழ் மொழி அல்லாத பிற மொழி பேசும் மக்களாக விளங்கியுள்ளனர். விளங்காத மொழியைப் பேசும் இவர்கள் 'வன்சொல் யவனர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர் .

"பேர் இசை மரபின் ஆரியர் வணக்கி"

எனும் தொடர் **தமிழ் மொழி அற்ற வட நாட்டுப் பகுதியில் இருந்த வேத மரபு சார் வைதீக சமய உணர்வு கொண்ட ஆரியர்கள் இம்மன்னனை வணங்கி, அவன் மதிப்பைப் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர்** என்பதை உணர்த்துகிறது.

ஆரிய மன்னர்களை வணங்கச் செய்தவன், யவனர்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி அவர்கள் விடுவிக்கப் பெற அவர்களிடமிருந்து விலை உயர்ந்த வைரங்களையும் பொன்னால் ஆன மணிகளையும் பல்வேறு பொருள்களையும் பெற்றுக் கொண்டவன்.

வேளிர் மக்களுக்கு நிலங்களை வழங்கி முறையே திறை பெற்றுக் கொண்டவன். தமிழ் மன்னனான சேரன் மேற்கூறிய பலதரபட்ட மக்களையும் தன்வயப்படுத்திப் பாணர்களுக்கும் புலவர்களுக்கும் கூத்தர்களுக்கும் பரிசுகள் அளித்து அவர்களிடம் தன் புகழ்பாடச் செய்தவன் என அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழகம் எனத் தனித்த ஒரு மரபினைக் கொண்ட நிலப்பகுதி சங்கப் பாடல் வழியே தனித்துவமாகப் பொருள் கொள்ள இடம் தந்துள்ளது. **தமிழ், தமிழர், தமிழகம் எனும் தனித்த நிலை கருத்தியல் சங்க காலத்திலேயே பிறமொழி பேசும் ஆரியர், யவனர் போன்றோர் வருகையின் போதே புலவர்களாலும் மக்களாலும் மன்னர்களாலும் முன் நிறுத்தப்பட்ட கருத்தியல் என அறிய முடிகிறது.**



பாலைக் கௌதமனார்

இயற்றிய

மூன்றாம் பத்து

பாடல் - 21

எவ்வம் சூழாது விளங்கிய
சமண நெறிகள் ஐந்து

சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று
ஐந்துடன் போற்றி அவை துணையாக
எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை
காலை அன்ன சீர் சால் வாய்மொழி
உரு கெழு மரபின் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடர் எழுதோறும்
விரும்பு மெய் பரந்த பெரும் பெயர் ஆவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண்மாறாது உணீஇய பாசவர்
ஊனத்து அழித்த வால் நிணக் கொழுங் குறை
குய் இடுதோறும் ஆனாது ஆர்ப்ப
கடல் ஒலி கொண்டு செழு நகர் வரைப்பின்
நடுவண் எழுந்த அடு நெய் ஆவுதி
இரண்டுடன் கமழும் நாற்றமொடு வானத்து
நிலை பெறு கடவுளும் விழைதகப் பேணி
ஆர் வளம் பழுனிய ஐயம் தீர் சிறப்பின்
மாரிஅம் கள்ளின் போர் வல் யானை
போர்ப்பு உறு முரசம் கறங்க ஆர்ப்புச் சிறந்து

நன் கலம் தரூஉம் மண் படு மார்ப
முல்லைக் கண்ணிப் பல் ஆன் கோவலர்
புல்லுடை வியன் புலம் பல் ஆ பரப்பி
கல் உயர் கடத்திடைக் கதிர் மணி பெறூஉம்
மிதி அல் செருப்பின் பூழியர் கோவே
குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை
பல் பயம் தழீஇய பயம் கெழு நெடுங் கோட்டு
நீர் அறல் மருங்கு வழிப்படா பாகுடிப்
பார்வல் கொக்கின் பரிவேட்பு அஞ்சா
சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேர் உயர் நெடு வரை அயிரைப் பொருந
யாண்டு பிழைப்பு அறியாது பய மழை சுரந்து
நோய் இல் மாந்தர்க்கு ஊழி ஆக
மண்ணாவாயின் மணம் கமழ் கொண்டு
கார் மலர் கமழும் தாழ் இருங்கூந்தல்
ஒரீஇயின போல இரவு மலர் நின்று
திரு முகத்து அலமரும் பெரு மதர் மழைக்கண்
அலங்கிய காந்தள் இலங்கு நீர் அழுவத்து
வேய் உறழ் பணைத் தோள் இவளோடு
ஆயிரம் வெள்ளம் வாழிய பலவே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - அடுநெய் ஆவுதி
இப்பாடலுக்கு இவ்வுரையாசிரியர் இட்ட பெயர் ஐந்தலைத் துணை

உரை

சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று
ஐந்துடன் போற்றி அவை துணையாக
எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை

என்னும் அடிகளுள் சொல்லப்பெறும் ஐந்து நெறிப்பட்ட கொள்கை என்பது, சமண சமயத்தார் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகளுள் முதன்மையானதாகும். சமண முனிவர்களுக்கு ஐம்பொறி அடக்கக் கொள்கை மிக முக்கியமானதாகும்.

ஆரியர்கள் கலந்த சங்ககாலச் சமூகம் பல்வேறு சமய நெறிமுறைகளையும் அடையாளம் காட்டியுள்ளது. எட்டுத் தொகை எனச் சொல்லப்படும் இலக்கியத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பதிற்றுப்பத்தில் ஆரியரின் சமயநெறிகள் குறித்துப் பேசப்பட்டுள்ளன. இதுபோல் அக்காலக்கட்டத்தில் நிலவியுள்ள சமயநெறியாம் சமணர் தம் கொள்கைகள் குறித்தும் ஒரு சில பாடல்கள் பதிவு செய்துள்ளன. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தில் 21, 22 பாடல்களில் மேற்குறிப்பிட்ட சமண நெறிகள் சுட்டப்பட்டுள்ள விதங்கள் குறித்து ஆராய்வது இங்கு நோக்கமாக அமைகிறது.

சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று
ஐந்துடன் போற்றி அவை துணையாக
எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து புலன்கள் வழியே போற்றப்படும் ஒழுக்க நெறிகளைத் துணைகொண்டு பிறவிப்பெருங்கடல் நீந்தும் முறைமையை விளக்கி அமைகிறது.

பதிற்றுப்பத்திற்கு உரை செய்ய வந்த உரையாசிரியப் பெருமக்களான உ.வே.சா., ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, முனைவர் அ. ஆலிஸ் ஆகியோர் கூறும் உரைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

உ.வே.சா. உரை

(ப-ரை) 1. சொல். - சொல்லிலக்கணஞ் சொல்லும் நூல் (இலக்கணம்). பெயர் - பொருளிலக்கணஞ் சொல்லும் நூல்; "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" (பதிற். 90: 23) என இத்தொகையுள் மேலே வந்தமையால், பெயரென்பது பொருளாம். நாட்டம் - சோதிட நூல். கேள்வி - வேதம். நெஞ்ச மென்றது இந்திரியங்களின் வழியோடாது உடங்கிய (உள்ளே அடங்கிய) தூய நெஞ்சினை. 3. எவ்வம் சூழாமை -

உயிர்வருத்தம் சூழாமை; சூழாமலெனத் திரிக்க. 4. காலை(ஆகுபெயர்) அன்ன வாய்மொழி - ஆதித்தனைப்போல எஞ்ஞான்றும் தப்பாதாகிய மெய்ம்மொழி; மொழியானென ஆனுருபு விரிக்க; ஒடு விரிப்பினும் அமையும். துணையாகக் (2) கொண்டு (6) என முடிக்க.[1]

ஔவை சு.து.உரை:

எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை - பிற வுயிர்கட்குத் தீங்கு நினையாமல் விளக்கமுற்ற கொள்கையாலும்; காலை யன்ன சீர்சால் வாய்மொழி - ஞாயிறு போலத் தப்பாத வாய்மை யுரையாலும்; உரு கெழு மரபின் கடவுள் பேணியர் - உட்குப் பொருந்திய முறைமையினையுடைய முனிவர்களைப் பரவுதற்காக; சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்ற ஐந்துடன் போற்றி - சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் சோதிடமும் வேதமும் ஆகமமும் என்ற ஐந்தினையும் ஒருங்கே கற்று; அவை துணையாக - அவற்றா லெய்திய புலமையைத் துணையாகக்கொண்டு; கொண்ட தீயின் சுடர் எழுதோறும் - எடுத்த வேள்வித் தீயின்கண் சுடர் எழுந்தோறும்; விரும்பு மெய் பரந்த - உள்ளத்தெழுந்த விருப்பம் மெய்யின்கண் பரந்து வெளிப்படுதற்குக் காரணமான; பெரும் பெயர் ஆவுதி - பெரிய பொருளைப் பயக்கும் ஆவுதிப் புகையும் உறுநோய் தாங்கல், பிற உயிர்கட்குத் தீங்கு நினையாமை எனத் தவத்திற் குருவென்று கூறிய இரண்டனுள், பிறவுயிர்க்குத் தீங்கு நினையாமை யுளதாகியவழி உறு நோய் தாங்கலாகிய ஏனையது தானே கைகூடுதலின், "எவ்வஞ் சூழாமை" யொன்றையே எடுத்தோதினார். எவ்வுயிர்க்கும் எவ்வம் நினையாதாரை, மன்னுயிரெல்லாம் கைகூப்பித் தொழு மென்ப வாகலின், அத் தொழுதகு ஒழுக்கத்தை "விளங்கிய கொள்கை" யென்றார்.[2]

---

1. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர், எட்டாம் பதிப்பு, 1994, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு, பெசன்ட் நகர், சென்னை - 90, ப. 38.

2. ஔவை துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், கழக வெளியீடு, மறுபதிப்பு, மே, 1958, ப. 168

அ.ஆலிஸ் உரை:

> சொல் இலக்கணம், சொல்லும் நூல், பொருளிலக்கணம் சொல்லும் நூல், சோதிட நூல், வேதம், புலன்வழிச் செல்லாது உள்ளே அடங்கிய தூய மனம் என்று சொல்லப்படும் ஐந்தையும் ஒருங்கே போற்றி அவற்றின் துணையோடு எவ்வுயிருக்கும் துன்பம் செய்ய நினையாமல் விளக்கமுற்ற கொள்கைகளுடன் கதிரவனைப் போல எப்போதும் தப்பாதாகிய நன்மையமைந்த வேதத்தினால் அச்சந்தரத்தக்க முறைமை யினையுடைய கடவுளைப் பேணும் பொருட்டு, செய்யத் தொடங்கிய வேள்வித்தீயின் சுடர் ஓங்கி எழுந்தோறும் உள்ளத்து விருப்பம் மெய்யின்கண் பரந்து காணப்படுதற்குக் காரணமான பெரும் புகழினையுடைய ஆவுதிப் புகையும்[3]

உரையாசிரியப் பெருமக்கள் யாரும் இப்பாடலில் குறிப்பிட்ட ஐந்து நெறிமுறைகளும் சமணம் கண்ட அறநெறிக் கருத்துகள் என அவதானிக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஐந்தும் எவ்வகையில் சமண நெறிமுறை சார்ந்தவை என இனி காணலாம்

வள்ளுவர் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் ஐந்து நெறி குறித்துப் பேசுகிறார்.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து

(*குறள்:* நீத்தார் பெருமை, 24)

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி

(குறள்: நீத்தார் பெருமை, 25)

துறவறக் கோட்பாடுகளையும் இல்லறக் கோட்பாடுகளையும் இணைத்தே பேசுவது சமணக் கொள்கையாகும். துறவறத்தை விட இல்லறத்தின் வழிநின்று கடமையாற்றுவதைச் சமணம் முதன்மைப் படுத்துகிறது. இல்லற தருமத்தைச் சமணம் 'சிராவத் தருமம்' என்கிறது. இல்லறக் கோட்பாடுகள் குறித்துப் பேசும் சமணம் மூன்று விதக் கோட்பாடுகளை முன்னிறுத்துகிறது.

---

3. அ. ஆலிஸ், பதிற்றுப் பத்து உரை

1. அணுவிரதம்
2. குணவிரதம்
3. சிகிச்சை விரதம்

அணுவிரதம் எனும் முதன்மைக் கோட்பாட்டில் மேற்சுட்டப் பட்டுள்ள ஐந்து கொள்கைகளும் இடம்பெறுகின்றன. சமண முனிவர்களுக்கு ஐம்பொறி அடக்கக் கொள்கை மிக முக்கியமானதாகும்.

மதுரை மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகள் சமணரால் எழுதப்பட்டுள்ளன என்றும் அவை கி.மு. 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ளன என்றும் தன் சமணமும் தமிழும் நூலில் (ப. 12) மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் கூறுவார்.

மெய்வாய் கண்மூக்குச் செவி எனப் பேர்பெற்ற
ஐவாய் வேட்கை அவாவினை – கைவாய்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும் (நாலடி நானூறு. 50)

என்று கூறும் சமண இலக்கியமான நாலடியார் குறிப்பிடும் ஐவகைக் கொள்கை,

ஐவகை நின்ற அழுத்தானத்து
சந்தி ஐந்தும் தம்முடன் கூடி

எனும் சிலம்பு வரிகள் (15-29) சமணத் தத்துவத்தைக் கூறுகின்றன என்பது இங்குக் கருத்தில் கொண்டு பார்க்கையில் ஐந்துடன் போற்றி அவை துணையாக எனும் வரிகள் சமணக் கொள்கையை விளக்கி அமைந்தவை என உணர முடிகின்றது.

சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று

ஐந்துடன் போற்றி அவை துணையாக
எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை

என ஐந்து வகை சமணக் கொள்கைகளை இங்குப் பதிற்றுப்பத்தில் பாலைக் கௌதமனார் குறிப்பிட்டு எழுதுவது குறித்து எண்ணுதற் குரியதாகும்.

உருகெழு மரபின் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடர் எழுதோறும்
விரும்பு மெய் பரந்த பெரும் பெயர் ஆவுதி

எனத் தொடர்ந்து எழுதப்பட்ட பாடல் அடிகளும் இங்குக் கவனங்கொள்ளத் தக்கன. 'தீயின் சுடர் எழுதோறும்' எனும் தொடர் வழியே தினமும் எழும் கதிரவன் என்பதாம். 'உருகெழு மரபின் கடவுட் பேணிய' என்பது கடவுள் வணக்கமாக வழிபடுவது கதிரவனையே எனக் கூட்டிப் பொருள் கொள்ள முடிகிறது.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

எனச் சிலம்பு சுட்டும். இந்த உலகு கடவுளால் படைக்கப்பட்டதல்ல. அது என்றும் இயற்கையானது என்பது சமண சமயக் கொள்கையாகும்.

திங்கள் மூன்றடுக்கிய திருமுக்குடைக் கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதை தாழ் பிண்டிக் கொழு நிழல் இருந்த
ஆதியில் தோற்றத்து அறிவனை வணங்கி (சிலம்பு 1–4)

இயற்கையை வாழ்த்திவிட்டுப் பிற பணிகளைச் செய்வது சமணக் கொள்கைகளுள் முதன்மையானதாகும். தப்பாது தினமும் குற்றமற்ற கதிர்களைத் தந்து உயிர்களுக்குத் துணை செய்யும் அறக்கொள்கையைக் கதிரவன் செய்கிறவன். அதுபோலத் தலைவன் நீ இருக்கிறாய் எனப் பாராட்ட இப்பாடல் அடிகள் உள்ளன.

சொல் என்பது சொற்களால் கட்டமைத்து வெளிப்படுத்தக்கூடிய தத்துவத்தை வெளிப்படுத்தும் வாய்.

பெயர் என்பது உடம்பும் உயிரும் ஆகிய ஒரு மனிதனை மெய்ம்மைப்படுத்துவது அல்லது மெய்ப்படுத்துவது பெயராகும்.

நாட்டம் என்பது விருப்பம் என்பதாகும். அதாவது விரும்பிய போக்கினை உணர்த்துவது நாட்டம். பார்வைதான் அதாவது கண்கள் தான் நாட்டம் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

கேள்வி என்பது கேட்டறிவது. கேட்டறிவது செவியின் செயலாகும். அனைத்தையும் அறிதலுக்குப் பயனாக அமைவது செவி.

நெஞ்சம் என்பது நுகர்தலும், உணர்தலும் குறித்ததாகும். உணரத் துணையாக இருப்பது மூக்கு. நெஞ்சகம் எண்ணிட நுகர்தல் வழி உணர்தலே அடித்தளமாக அமைகிறது.

சமண அறநெறிக் கொள்கையில் "விருந்தோம்பல்" என்பது முதன்மையாக அமைகிறது. பெண்கள் துறவறம் கொள்வதற்கு முன்பாக இல்லற வாழ்க்கை மேற்கொண்டு அதன்வழி விருந்தோம்பல் செய்து, அறம் செய்த பின்பே சமணத் துறவியாக ஆவது நன்று என முன்வைக்கிறது சமணம். இல்லறக் கோட்பாடுகளையே முதன்மைப்படுத்தும் சமணம். இல்லறக் கோட்பாட்டிலும் விருந்தோம்பலையே முதன்மை அறமாக முன்னிறுத்துகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி விருந்தோம்பல் செய்ய முடியாத நிலை குறித்துச் சொல்லப்படுவது இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். தொடர்ந்து பதிற்றுப்பத்து 22இல் இடம்பெறும் இவ்வரிகள் குறித்து எண்ணுவது நன்று.

வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண்மாறாது உணீஇய பாசவர்

'வருநர் வரையார் வார வேண்டி' - தம்பால் வருவோர் வரை வின்றி யுண்ண வேண்டி, 'விருந்து கண்மாறாது உணீஇய பாசவர்' - விருந்தோம்பற் இன்றியமையாத அன்பு மாறாதே உண்பித்த ஆட்டு வாணிகர்.

என்று சு. துரைசாமிப்பிள்ளை விளக்கம் தருகிறார். ஏனெனில் சமண முனிவரான வள்ளுவரும் விருந்தோம்பலுக்கு என்று தனி அதிகாரமே வகுத்துள்ளார். விருந்தோம்பல் என்பது சமண நெறிகளுள் மிக முக்கியமானதாகும்.

ஆட்டு வாணிகர் இறைச்சியைக் கட்டையின் மீது வைத்துக் கொத்தி நெய்யுடன் கலந்து சமைத்துத் தம் நாட்டுக்கும், வணிகம் தொடர்பாக வந்து செல்வோர் அனைவருக்கும் தொடர்ந்து கமழுகின்ற மணம் நிறைந்த உணவினைப் பூழி நாட்டுக் கோவேந்தன் அளிக்கிறான். முல்லை நிலப் பசும் புற்களை மேய்ந்த ஆநிரைகளைப் போரில் பொருதிச் சிறைப்படுத்திய பகைவர்களுக்கு அளித்துப் பகைவர் மனம் குளிரச் செய்த மாண்பினை உடையவனாகச் சேரன் காட்டப்படுகிறான். இவ்வாறு பகைவர்களுக்கும் விருந்தோம்பல் செய்யும் தகைமையால் முல்லை நிலத்தைக் கொண்ட கோவலர் வழி வந்த பூழியர் கோ எனப் போற்றப்படுகிறான்.

பகைவர்கள் அதாவது பூழி நாட்டு மக்கள் சேரனால் வெற்றி கொள்ளப்படும் நாள் வரை உணவு முறைக் கலாச்சாரம் என்பது உயிர்க்கொலை செய்து கறி உண்ணும் கலாச்சாரத்தைக் கொண்டமைந்துள்ளது. இவ்வித உணவு முறைக் கலாச்சாரம் கொண்ட பூழி நாட்டை வென்ற பின் அவர்களின் உணவுமுறைப்படி ஆட்டிறைச்சியை நெய்யுடன் கலந்து எல்லோருக்கும் கொடுக்கும் விருந்தோம்பலையே இம்மன்னனும் பின்பற்றுகிறான். இந்தப் புலவன் அக்காலச் சமூக அமைப்பின் அனைத்து வகை சமய அறிவுகளையும் பெற்றவனாக விளங்குவதால் வைதீக மதம் சார்ந்த அறிவையும், அவைதீக மதம் சார்ந்த சமண அறிவையும் பெற்றவனாக விளங்குகிறான். சமண அறநெறிகள் உயர்ந்து மதிக்கப்பட்டதாக அக்காலக் கட்டம் விளங்கியமையால் உயர்ந்த அறநெறிகளான சமய அறநெறிகளைப் பின்பற்றுபவனாக மன்னன் இல்லாதபோதும் அந்த உயரிய கருத்துக்கேற்றவன் எனப் புலவனால் ஏற்றிச் சொல்லிப் பெருமை பாராட்டப்படுவதை இங்கு நாம் உணரமுடிகிறது. மேற்குறிப்பிட்ட ஐந்தும் ஐம்புலன்களைக் குறித்து அமைகின்றன. ஐந்து புலன்களையும் அடக்கி ஆள்வதன் துணைகொண்டு பிறவியை நீந்துவதற்குத் துணையான கொள்கை ஆகும் எனப் பொருள் அமைகிறது.

விரும்பு மெய் பரந்த பெரும் பெயர் ஆவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண்மாறாது உணீஇய பாசவர்
ஊனத்து அழித்த வால் நிணக் கொழுங் குறை

எனக் குறிப்பிடுவதன் வழியே சமணம் விருந்தோம்பல் குறித்து முன் வைக்கும் கோட்பாடுகளில் மிகச் சிறந்த ஒன்றாக அமைகிறது. சமணர்கள் வணிகத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டு இயங்கியவர் ஆவர். மாசாத்து வாணிகன்(சிலம்பு-மங்கலவாழ்த்துப் பாடல் 34) எனச் சிலம்பில் குறிப்பிடப் படுவதும் விருந்தோம்பல் செய்ய முடியாமல் போகுமோ எனக் கண்ணகி வருந்துவதும் எனச் சிலம்பும் சரி, அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை(குறள்-49) என்று பேசும் வள்ளுவமும் சரி இரண்டும் சமண இலக்கியங்களும் இல்லறம் குறித்து முதன்மைபடுத்திக் கூறும் சமணச் சிந்தனையை இங்குப் பொருத்திப் பார்க்க இடம் உண்டு.

பூழி நாட்டுக் கோவலர்கள் முல்லை நிலப் பசும் புற்களை மேய்த்து எண்ணிறந்த ஆநிரைகளைப் போரில் பொருதியதனால்

சிறைப்படுத்தப்பட்டன. அவற்றைத் திறை செலுத்த ஏற்பாடு செய்ததன் பொருட்டு மீளப் பகைவர்களுக்கு அளித்துப் பகைவர் மனம் குளிரச் செய்த மாண்பினை உடையவனாகச் சேரன் காட்டப்படுகிறான்.

இவ்வாறு பகைவர்களுக்கும் விருந்தோம்பல் செய்தும் இழந்த பொருள்களைத் திரும்ப அளித்தும் தகைமை பெற்றவன். முல்லை நிலத்தைக் கொண்டவன். கோவலர் வழி வந்த பூழியர் கோ எனப் போற்றப்படுகிறான். பூழியர் கோவின் நாடு இயற்கையாகவே அயிரை மலையை எல்லையாகவும் அரணாகவும் கொண்டு விளங்குவதால் மேகங்களைத் தடுத்து நிறுத்தித் தவறாது மழையை இந்நாட்டுக்குத் தந்து கொண்டிருக்கிறது. இல்லத்தரசியான தேவியுடன் பகைவர் வழியே எந்த அச்சுறுத்தலும் இன்றிப் புற வாழ்க்கையையும் அகவாழ்க்கையையும் சிறப்புற வாழ்ந்து கொண்டிருப்பவனாக விளங்குகின்றான். எதிரிகளிடம் கைப்பற்றிய குவியல் போன்ற பொருள்கள் யாவற்றையும் தம் நாட்டு மக்களுக்குக் குறைவு இன்றி வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவனாக விளங்குகின்றான். செல்வம் மிக்க இம்மன்னனின் வீட்டின் கண்ணே சமைத்தலின் பொருட்டு அடுப்பின் புகை மேல் எழுப்பிக் கொண்டிருப்பது இயல்பாக அமைகிறது. நெய் உணவில் இட்டுச் சுவைக்கும் பொருட்டு அடுப்பிலும் நெய் வார்த்த குறிப்பும் காண முடிகிறது.

தீயில் நெய் ஊற்றி யாகம் செய்யும் வழக்கம் என்பது இம்மன்னன் காலத்தே பழக்கமில்லாத ஒன்றாக உள்ளது. ஆனால் பாடல் தொகுத்தோனின் பற்றின் காரணமாய் அடு நெய் ஆவுதி எனும் வேள்விப் புகையை ஒப்பாகச் சொல்லி இருப்பது என்பது இங்குப் பொருத்த முறவில்லை.

இப்பாடலின் அழுத்தப்பாட்டினை மனங் கொண்டு ஐந்தவைத் துணை எனப் பெயரிடுவதே சரியாகும்.

கோவலர் பாசவர் எனும் வாணிகர் இவ்விரு மக்கள் குறித்த பதிவுகள் இப்பாடலில் குறிக்கப் பட்டு விளக்கப் படுவதால் வணிகச் சமூகத்துக்கும் கோவலர் சமூகத்திற்கும் உள்ள இணக்கப்பாட்டினை மனங்கொள்ள முடிகிறது.

ஆகாத் தோம்பி யாப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலள் முதுமகள் செவ்விய ளளியள்

மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின னாகி[1] (சிலம்பு: மதுரைக்காண்டம்– அடைக்கலக் காதை– 120–24)

கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் மாதரியிடம் ஒப்படைக்கும் போது கோவலர் வாழ்க்கையைப் பற்றிச் சொல்வது இங்கு எண்ணிப்பார்க்கத்தக்கது. பிற உயிர்களுக்குத் தீங்கு இழைக்காத கொள்கையைக் கொண்டது கோவலர் வாழ்க்கை ஆகும்.

சீர் சால் வாய்மொழி என்பதன் வழியே குற்றமற்ற ஞாயிற்றின் ஒளி போல் தப்பாத வாய்மை எனும் கொள்கையைக் கொண்டதாகும். உருகெழு மரபின் என்னும் தொடர் வழியே சமணத்தின் ஒழுகலாறுகளில் ஒன்று சமண முனிவர்களைத் தொழுதேற்றுதல் எனும் பொருள்படப் பாடல் அடிகள் விளங்கி நிற்பதால் சமணக் கொள்கை வழி ஆட்சி செய்தவனாக இவன் அறியப்படுகிறான். இந்தப் பாடல் பதிற்றுப்பத்தில் காணலாகும் பாடல்களில் மிக முக்கியமானதாக விளங்குகிறது.இதன் கண் சமண மதம் கொண்டுள்ள கொள்கைகள் கோட்பாடுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. விருந்தோம்பல் குறித்தும் இல்லறம் குறித்த குறிப்பும் ஈகை குறித்தும் ஆன குறிப்புகள் சமணக் கொள்கையைச் சுட்டுவனவாகவே உள்ளன.

இப்பாடலுக்கு உரை எழுதிய உரையாசிரியர் பெருமக்கள் சமணர் கொள்கை குறித்த எந்த ஒரு பதிவினையும் சிந்திக்காமல் உரை எழுதி இருப்பது வியப்புக்கு உரியதாக அமைகிறது. நமது விளக்கத்தின் படி சமணர் கொள்கையை ஏற்றுள்ள மன்னன் பூழி நாட்டு மக்கள் தலைவன் ஆவான். பகைவருக்கு ஆட்டிறைச்சியை நெய்யுடன் சமைத்து வழங்கி யுள்ளான் எனக் குறிப்பு அமைகிறது. சமணர் தம் கொள்கைகளைக் கடைபிடித்து வாழும் முறைமைக்கு அதாவது சமணத்தை ஏற்றுக் கொண்ட வாழ்க்கையை அறிமுக நிலையில் பெற்றவனாக விளங்குகிறான் என எண்ணத் தோன்றுகிறது. அடு நெய் ஆவுதி எனும் சொல் வழியே விருந்தோம்பல் கொண்ட சமணக் கொள்கைக்கு ஏற்ப வாழும் ஒருவன் பகைவர்க்கும் அவர்தம் சுற்றத்தார்க்கும் இவ்வாறு நெய்

1. பக். 393 இளங்கோவடிகளருளிச் செய்த சிலப்பதிகாரம் மூலமும் அரும்பத வுரையும் அடியார்க்கு நல்லாருரையும், டாக்டர் உ.வே.சா., டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.

கலந்த ஆட்டிறைச்சியை உணவாக அளிப்பது என்பது சமணக் கொள்கைக்கு முரணான வாழ்வியல் ஆகும்.

இச்செயலினைக் கொண்டு எண்ணிப் பார்க்கும் போது சமண அறநெறி கொண்டு அரசாட்சி செய்யும் தொடக்க நிலைக் கோட்பாட்டாளனாக இம்மன்னவன் விளங்குகிறான் என உறுதி கொள்ள முடிகிறது. கூடுதலாக நாம் இப்பாடல் குறித்து விளங்கிக் கொள்ள இப்பாடலைப் புனைந்த புலவன் குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்புலவன் சமணம் தமிழ் மண்ணில் தழைத் தோங்க முற்பட்ட காலத்தில் அவர்தம் கொள்கை வழிவந்த அறிவு சால் புலவனாக விளங்கியவனாக அமைந்திருக்க வேண்டும் என எண்ணிக் கொள்ள முடிகிறது. சங்க இலக்கியக் காலத்தின் போது ஆரியர் கலந்த ஒரு சமூக அமைப்பாக இருந்துள்ளது என நாம் ஏற்கெனவே கண்டுள்ளோம்.

மகாவீரரின் சீடர்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவர் பத்திரபாகு ஆவார். இவரும் சிறந்த ஞானியே. இவரே மௌரியப் பேரரசைத் தோற்றுவித்த சந்திரகுப்த மௌரியனுக்கு அரசியல் மற்றும் சமய குருவாக இருந்தவர்.மகத நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பெரும் பஞ்சம் ஏற்படப் போவதைத் தனது முக்கால ஞானத்தால் அறிந்த பத்திரபாகு முனிவர் தனது சீடரான சந்திரகுப்தனிடம் தெரிவித்து அவனுடைய ஆலோசனையின் பேரில் (சமயப் பெரியோர்களைக் காக்கும் பொருட்டு) தனது பன்னீராயிரம் சமயப் பெரியோர்களையும் அழைத்துக் கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது' என்ற செய்தி வழியே தீர்த்தங்கரர்கள் ஆன சமணமதப் பரப்பாளர்கள் பலரும் பல்லாயிரக் கணக்கான சமண முனிவர்களை அழைத்துக் கொண்டு வடதிசையில் இருந்து தென்திசை நோக்கி வந்த காலத்தையும் அவர்கள் தமிழ் மக்களுடன் உறவாடிக் கலந்து மன்னர்களைச் சார்ந்து வாழ்ந்திருந்த வரலாற்றுப் பதிவுகளையும் இப்பாடல் வழியே தடங்காண முடிகிறது.

---

1. பக். 27. சமணத்தின் குரல், ச.சந்திரசேகரன், பிறை வெளியீடு, மதுரை, ஆண்டு 2004.

பாடல் - 22

சமண நெறிச் சிந்தனைப் பதிவுகள்

*சினனே காமம் கழி கண்ணோட்டம்
அச்சம் பொய்ச் சொல் அன்பு மிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவும் இவ் உலகத்து
அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும்
தீது சேண் இகந்து நன்று மிகப் புரிந்து
கடலும் கானமும் பல பயம் உதவ
பிறர் பிறர் நலியாது வேற்றுப் பொருள் வெஃகாது
மை இல் அறிவினர் செவ்விதின் நடந்து தம்
அமர் துணைப் பிரியாது பாத்து உண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணி இன்று கழிய
ஊழி உய்த்த உரவோர் உம்பல்
பொன் செய் கணிச்சித் திண் பிணி உடைத்து
சிரறு சில ஊறிய நீர் வாய்ப் பத்தல்
கயிறு குறு முகவை மூயின மொய்க்கும்
ஆ கெழு கொங்கர் நாடு அகப்படுத்த
வேல் கெழு தானை வெருவரு தோன்றல்
உளைப் பொலிந்த மா
இழைப் பொலிந்த களிறு
வம்பு பரந்த தேர்
அமர்க்கு எதிர்ந்த புகல் மறவரொடு*

துஞ்சுமரம் துவன்றிய மலர் அகன் பறந்தலை
ஓங்கு நிலை வாயில் தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச் சீர் ஐயவி
கடி மிளைக் குண்டு கிடங்கின்
நெடு மதில் நிரைப் பதணத்து
அண்ணல் அம் பெருங் கோட்டு அகப்பா எறிந்த
பொன் புனை உழிஞை வெல் போர்க் குட்டுவ
போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்
நீர்த்தரு பூசலின் அம்பு அழிக்குநரும்
ஒலித் தலை விழவின் மலியும் யாணர்
நாடு கெழு தண் பணை சீறினை ஆதலின்
குடதிசை மாய்ந்து குணமுதல் தோன்றி
பாய் இருள் அகற்றும் பயம் கெழு பண்பின்
ஞாயிறு கோடா நன் பகல் அமயத்து
கவலை வெண் நரி கூஉம் முறை பயிற்றி
கழல்கண் கூகைக் குழறு குரற் பாணிக்
கருங் கட் பேய்மகள் வழங்கும்
பெரும் பாழ் ஆகுமன் அளிய தாமே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - கயிறு குறு முகவை

உரை

இனி, சமண நெறிக் கொள்கை சார்ந்த கருத்துகள் கொண்ட பாடலாக அடுத்த பாடலும் விளங்குகிறது என விளக்கக் காணலாம்.

சினனே, காமம், கழி கண்ணோட்டம்,
அச்சம், பொய்ச் சொல், அன்பு மிக உடைமை
தெறல் கடுமையொடு, பிறவும், இவ்உலகத்து
அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும்

அறம் குறித்த கொள்கைகள் முறையே இப்பாடலில் விளக்கப்படுகின்றன. இப்பாடல் அடிகள் குறித்துள்ளவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

சினம்
காமம்
கழி கண்ணோட்டம்
அச்சம்
பொய்ச்சொல்
அன்பு
உடைமை

மேற்குறிப்பிட்ட யாவும் மிகுந்த நிலையில் கைக்கொள்ளப்படும்போது குற்றம் என ஆகின்றன. அதாவது மிகு சினம், மிகு காமம், மிகு விருப்பம், மிகுந்த கழி கண்ணோட்டம், மிகுந்த அச்சம், மிகுந்த பொய்ச்சொல் எனுமாறு மிகுந்த நிலையில் கைக்கொள்ளப்படும் போது இவை யாவும் அறச்செயல்கள் ஆகா என விளக்கப்படுகின்றன.

சினம் கொள்வது சமண மதக் கோட்பாட்டின்படி கடுங்குற்றமாகும். அதுபோன்றே மிகுந்த காமம், மிகுந்த இன்பம், மிகுந்த அச்சம், மிகுந்த பொய்ச்சொல், தெறல் கடுமை என்பவை கடுமையான குற்றம் பொருந்தியவை எனச் சொல்லப்படுகின்றன.

கூடுதலான அன்பு எனும் நிலை கூடாது என்றும் உயிர்கள் அனைத்திடமும் அன்புநிலைப் பாராட்டுவது என்பது ஒருபடித் தன்மையாக அமையவேண்டும் என்றும் சமணக் கொள்கை கூறுகிறது.

திகிரி என்பது தலைமை எனப் பொருள்படும். சில இடங்களில் திகிரி என்பதற்குக் கதிரவன் எனும் பொருளும் அமைகிறது. மேற்குறிப்பிட்ட அறநெறிக் கொள்கைகள் பொருந்திய தலைமை சான்றவன் என இம்மன்னனை இப்புலவன் பாராட்டுவதாக இப்பாடலின் பொருள் அமைகிறது.

தொடக்கத்தில் சமணக் கருத்துக்களை முன் வைத்திருக்கக்கூடிய இப்பாடலை முடிக்கும் முன்பதாகத் தவிர்க்க முடியாமல் சமணச் சிந்தனை கொண்ட அடிகள் இப்புலவனால் முன்வைக்கப்பெற்றிருப்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

குடதிசை மாய்ந்து, குணமுதல் தோன்றி
பாய்இருள் அகற்றும், பயம் கெழு பண்பின்
ஞாயிறு கோடா நன்பகல் அமயத்து (பதிற்று. 22: 33–34)

எனக் குறிப்பிடுவதன் வழியே குற்றமற்ற கதிரவனை வணங்குதல் என்பது சமணர் கொள்கைகளுள் ஒன்று. இந்தப் பாட்டுடைத் தலைவன் குற்றமற்ற கதிரவனுக்கு ஒப்பானவன் என்று சொல்லுவது இயற்கையை முதன்மையாக வணங்கி வாழும் கொள்கையைக் கொண்ட சமணர் தம் கொள்கையை நினைவு கொள்வதாக விளங்குகிறது.

சமண சமயத்தின் வளர்ச்சி என்பது தமிழ்ச் சூழலில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே அமைந்துள்ளது. பாணர்களும், புலவர்களும், மன்னர்களும், அறச்சிந்தனைகளை உள்வாங்கிய நிலையில் பாடல்களின் வழியாகப் பதிவு செய்திருந்தமை கவனம் கொள்ளத்தக்கது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் சமணக் கருத்துகள் பலவாறு பாத்திரங்கள் வழியாகவும், ஆசிரியர் கூற்று வழியாகவும், கதைப்போக்கின் வழியாகவும் சமண மதக் கருத்துகள் சொல்லப்பட்டுள்ளன. சங்க காலத்தில் சமண அறக் கொள்கைகள் ஊடாடி உள்ளன எனும் கருத்து நம் தமிழறிஞர் பெருமக்களால் முன்வைக்கப்பட வில்லை.

சமணம் மற்றும் பௌத்த சிந்தனைகள் குறித்த பதிவுகளை நம் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் கண்டறியும் முயற்சியைத் தொடர்ந்து மயிலை சீனி. வேங்கடசாமி, தெ.பொ.மீ. போன்றோர் தொடர்ந்து முன் வைக்கப்பட்டு வருவது கவனம் கொள்ளத்தக்கது. இந்தப் பின்புலத்தில் பதிற்றுப்பத்தில் காணலாகும் பாலை கௌதமனாரால் பாடப்பட்ட இவ்விரு பாடல்களிலும் சமணர் கொள்கைகள் இழையோடி இருக்கக் கண்டறியப்பட்டுள்ளன. சமணத்தின் குரல்கள் இவ்விரு பாடல்களிலும் ஒலிப்பதனைத் தமிழறிஞர்கள், தமிழ் ஆய்வாளர்கள் சீர்தூக்கிப் பார்த்து இவை போன்ற சமணக் கருத்துகள் சங்க இலக்கியங்கள் பிறவற்றில் எங்கேனும் காணக்கிடக்கின்றனவா எனும் ஆய்வுகள் தொடருமானால் அதுவே பழந்தமிழ் ஆய்வு குறித்த சிறந்த சிந்தனைக்கு வழிவகுக்கும்.

மிகுந்த சினம், மிகுந்த காமம். மிகுந்த கணணோட்டம் பகைவர்க்கு ஆஞ்சுதலும் பொய் கூறுதலும் பொருள்களின் பால் அளவுக்கு மிஞ்சிய பற்று வைத்தலும் அளவுக்கு அதிகமான தண்டனை

அளித்தலும் என்பதான அனைத்தும் அறத்தின் பால் ஆட்சி செய்யும் அரசனுக்கு உகந்தவை அல்ல.

மேற் கூறிய பாடல் கருத்துக்கள் யாவையும் சமணரின் கொள்கைகளை ஒட்டியவையாக அமைகின்றன. மேற்குறித்த செயற்பாடுகள் கூடாது என்று கூறிய புலவன் மன்னர் எவற்றைச் செய்யலாம் என்பதையும் தன் பாடல் வழியே முன்வைக்கின்றான்.

அவை கீழ் வருமாறு அமைகின்றன.

1)தீமைகளை எல்லாம் தமை நெருங்காதவாறு நீங்கி நன்மை பயக்குவனவற்றை மட்டுமே செய்ய வேண்டும்.

2) தன் குடிமக்கள் பிறரை வறுத்தும் படியான செயல்கள் செய்யாத வண்ணம் காத்தருள வேண்டும். பிறர் பொருளை விரும்பாமல் குற்றமற்ற அறிவு கொண்டவராய்ச் செந்நெறியில் ஒழுகத் தக்கவராக விளங்க வேண்டும்.

3) பிறன் மனை நாடாது வாழ வேண்டும். தன் மனைவியரைப் பிரியாது இல்லற வாழ்க்கை நடத்தும் போது தம்மை நாடி வருவோரை ஆதரித்து விருந்தோம்பல் செய்ய வேண்டும்.

4) குடிமக்கள் முதுமை காணாமல் நோய், நொடி கொள்ளாத நல் உடல் பேணி நெடுநாள் வாழும் தகைமையராக வாழ வேண்டும்.

மேல் குறிப்பிட்ட வகையில் தன் முன்னோர் வழியே ஆட்சி செய்யக் கூடிய வேந்தனாக வீற்றிருக்கிறான் இம்மன்னன்.

பாறையினை உடைத்து நீர் ஊற்று உண்டாக்கி இரும்பினால் செய்த குந்தாளியில் கயிறு கட்டி ஊற்று நீரை முகந்து எடுக்கும் போது தாகம் கொண்ட பசுக்கள் அவ்வூற்றினைச் சுற்றி நெருக்கமாகக் கூடி நிற்கும். அத்தகைய பசுக்கள் நிறைந்துள்ள கொங்கு நாட்டினை வென்று ஆட்சி எல்லைக்குள் வேற்படையால் பிறர் அஞ்சத்தக்க வாறு சேனைகள் கொண்டு ஆட்சி செய்கின்றவன் என நீ விளங்குகின்றாய். எப்போதும் தலையாட்டிக் கொண்டு நிற்கும் குதிரைப் படையோடும் அணிகலனை அணிந்த யானைப் படையோடும் கொடிகளைக் கொண்ட தேர்களைக் கொண்டும் போரை எதிர் நோக்கி உள்ள வீரர்களோடும் ஆன

நால்வகைப் படையோடும் படை எடுத்துச் செல்லக் கூடியவன் நீ. நின் படைகள் கனைய மரத்தைக் கடைந்து மதில் வாயில்கள் அமைக்கப் பெற்ற பெரிய மதில்களைக் கொண்டும் வில் விசைகள் பொருத்திய நிலையில் அம்பு கட்டுகள் குத்தப்பட்டுக் காவல் கொண்டு அமைந்துள்ள கோட்டை ஆழமானதும் இடையில் மேடை கொண்ட மதில்களுடன் அமைந்திருந்த எதிரியின் நாட்டினைப் பொன்னால் செய்யப் பட்ட உழிஞை மாலைகளைக் கொண்டு போர் செய்யக் கூடிய குட்டுவன் நீ.

புது வெள்ளம் வரும் போது தோளால் அழுத்திக் கட்டப் பட்ட பறை ஓசையை எழுப்பி எல்லாவற்றையும் கூட்டிப் பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தை வீரர்களைக் கொண்டு அடக்குபவன். அம்பினால் செய்யும் போர் அழியச் செய்யுமாறு நீர் விளையாடும் வீரர்களைக் கொண்டு விளங்கும் மருத நில நாட்டு அரசனைப் போரிட்டு விளை நிலங்களைப் பாழ் நிலங்களாக்கிச் சிறை பிடித்தவன் குட்டுவன் ஆவான். மக்கள் நடமாடிய பாதைகளைக் கெடச் செய்தவன். பாழ் நிலங்களை மக்கள் பயன்படுத்தாது செய்தமையால் நரிகளும் கோட்டான்களும் பேய் எனச் சொல்லத் தக்கவாறான ஆவிகள் குடியிருக்கத் தக்க பயன்படாத நிலங்களாக ஆக்கியவன் நீ.

பாறைகளை உடைத்து ஊற்றுகள் ஏற்படுத்திக் கிணற்றுப் பாசனம் செய்து ஆண்டு கொண்டிருந்த கொங்கு நாட்டு மன்னன் வீழ்த்தப்பட்டான். வெள்ளம் பாய்ந்து வளம் தரத்தக்க மருத நிலத்தை ஆட்சி செய்திருந்தவனை வென்றவன் என இரு நாட்டு அதாவது முல்லை நில மன்னனையும் மருத நில மன்னனையும் வெற்றி கொண்ட சிறப்புக்கு உரியவன் நீ.

இரு நாடுகளையும் தன்னகத்தே வெற்றி கொண்டு முன்னர்க் கூறப்பட்ட அறத்தின் வழி நின்று ஆட்சி செய்யும் மன்னவன் நீ எனுமாறு இப்பாடல் விளக்கம் தருகிறது. சமணர் தம் சமயக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அறத்தின் வழி நின்று ஆட்சி செய்யக் கூடிய இவ்வேந்தன் தன் முன்னோர் வழியே ஆட்சி செலுத்தக் கூடியவன் என்று கூறப்படுகிறது.

நாடு கவர்தல் பிற நாட்டாரோடு போரிடுதல் என்பன போன்ற செயற்பாடுகள் சமண நெறியின் பால் முரணானவை ஆகும். இப்பாடலில் கொங்கு நாட்டையும் மருத நில மன்னனின் நாட்டையும் வென்றவன் என்ற குறிப்பு வருகிறதே அன்றிப் போர் செய்கின்றவன் என்ற பதிவுகள்

காணப்படவில்லை. சமண மதக் கோட்பாடுகள் வழிப் பெற்ற அறத்தின் வழியே ஆட்சி செய்பவன் என்றும் இப்பாடல் பதிவு செய்கிறது. போர் செய்து வெகுகாலம் ஆகிவிட்டது என்ற செய்தியைக் கொங்கு நாட்டையும் மருத நாட்டையும் குகைகளும் நரிகளும் பேய்களும் ஆள்வதன் வழியே அறிய முடிகிறது. அறவழிச் சிந்தனையாளனாக அதாவது சமண நெறிக்கோட்பாட்டை ஏற்றவனாக இம்மன்னன் விளங்குவதால் போர் செய்த காலம் குறித்த பதிவு கடந்த காலத்தைச் சுட்டி நிற்பதாக அமைகிறது.

கழல்கண் கூகைக் குழறு குரற் பாணிக்
கருங் கட் பேய்மகள் வழங்கும்
பெரும் பாழ் ஆகும்மன் அளிய தாமே

குட்டுவன் சமண நெறிகளை உள்வாங்கி ஆட்சி செய்பவனாக விளங்குகிறான் என்று புலவனால் முன் நிறுத்தப் படுவதால் சமண அறத்திற்கு முரணாகப் போர் செய்தல் என்பது எப்போதோ நடந்த வரலாறாகவே புலவனால் பதிவு செய்யப் படுகிறது.

பாடல் - 23

கலைஞர் மன்றும் காட்சி விவரணங்களும்

அலந்தலை உன்னத்து அம் கவடு பொருந்திச்
சிதடி கரைய, பெரு வறம் கூர்ந்து,
நிலம் பைது அற்ற புலம் கெடு காலையும்,
வாங்குபு தகைத்த கலப் பையர் ஆங்கண்
மன்றம் போந்து, மறுகு சிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க,
பொன் செய் புனை இழை ஒலிப்ப, பெரிது உவந்து,
நெஞ்சு மலி உவகையர் உண்டு மலிந்து ஆட,
சிறு மகிழானும் பெருங் கலம் வீசும்
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!
நின் நயந்து வருவேம் கண்டனம் புல் மிக்கு
வழங்குநர் அற்றென மருங்கு கெடத் தூர்ந்து
பெருங்கவின் அழிந்த ஆற்ற ஏறு புணர்ந்து
அண்ணல் மரையா அமர்ந்து இனிது உறையும்
விண் உயர் வைப்பின காடு ஆயின -நின்
மைந்து மலி பெரும் புகழ் அறியா மலைந்த
போர் எதிர் வேந்தர் தார் அழிந்து ஒராலின்
மருது இமிழ்ந்து ஓங்கிய நளி இரும் பரப்பின்
மணல் மலி பெந்துறைத் ததைந்த காஞ்சியொடு

முருக்குத் தாழ்பு எழிலிய நெருப்பு உறழ் அடைகரை
நந்து நாரையொடு செவ்வரி உகளும்
கழனி வாயிற் பழனப் படப்பை
அழல் மருள் பூவின் தாமரை வளை மகள்
குறா அது மலர்ந்த ஆம்பல்
அறாஅ யாணர் அவர் அகன் தலை நாடே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ததைந்த காஞ்சி

உரை

ஊர்மன்றமும் தெரு மருங்கும்

அலந்தலை உன்னத்து அம்கவடு பொருந்திச்
சிதடி கரைய, பெரு வறம் கூர்ந்து,
நிலம் பைது அற்ற புலம் கெடு காலையும்,
வாங்குபு தகைத்த கலப்பையர் ஆங்கண்
மன்றம் போந்து, மறுகு சிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க,
பொன் செய் புனை இழை ஒலிப்ப, பெரிது உவந்து,
நெஞ்சு மலி உவகையர் உண்டு மலிந்து ஆட,
சிறு மகிழானும் பெருங் கலம் வீசும்
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!

கொடிய வெப்பம் தாங்காது கிளைகளையும், இலைகளையும் உதிர்த்த நிலையில் வறண்டு போன இரு கிளைகளை மட்டும்கொண்டு இயல்பு நிலை வண்ணம் குலைந்து காய்ந்து நிற்கும் ஒரு மரம் போலக் கொடிய வறுமையினால் உடல்நலம் குன்றி மெலிந்த நிலையில் வயிரியர் என்னும் கலைஞர்கள் வாடியுள்ளனர்.

மருத மரங்கள் பெரிய கிளைகளைக் கொண்டு பெரும் பரப்பினை உட்கொண்டு ஓங்கி வளர்ந்துள்ளன. அம்மரக் கிளைகளில் பறவைகள் தங்கிடப் பயந்து வேறு நாட்டிற்குப் பறந்து சென்றுவிட்டன. குளிர்ந்த பொய்கை அருகே காஞ்சி மரங்கள் முள்முருங்கை

மரங்களுடன் சேர்ந்து வளர்ந்துள்ளன. பொய்கைக் கரையில் செங்கால் நாரைகள், மீன்கள் உணவுக்குக் கிடைக்காமல் ஏங்கி நிற்கின்றன. பொய்கைக் கரையில் மணல் திட்டுக்கள் வெயில் பட்டுக் காய்ந்துள்ளன. நெருப்பை ஒத்த தாமரைப் பூக்கள் பொய்கையில் படர்ந்து கிடக்கின்றன. வளையல் அணிந்த மகளிரால் பறிக்கப் பெறாத அல்லிப் பூக்கள் மலர்ந்துள்ளன.

மக்கள் நடமாட்டம் இல்லாமல் மருத நிலங்கள் பாழ்பட்டுக் கிடப்பதனால் நாடும் கலையிழந்து காணப்படுகிறது. வளமிகுந்த நாட்டைப் போர் செய்து வென்று சென்றவன் சேர மன்னன். பழம் நிறைந்த மரங்களைத் தேடிப் பறவைகள் பறந்து செல்வதைப் போல வளம் நிறைந்த நாட்டைப் போரில் வென்று வாகை சூடிய மன்னனைத் தேடி வயிரியர் என்று சொல்லப்படும் கலைஞர் பெருமக்கள் ஆடிப்பாடி இசைக் கருவிகள் மீட்டி இசைத்துச் சேரனிடம் பரிசுகள் பெற்றனர்.

கலைஞர் தம் வயிறு நிறைந்தது; பொருள்கள் பெற்றதனால் நெஞ்சு நிறைந்தது; மன்னன் வறட்சியிலும் கிடைத்த சிறிதளவு கள்ளையும், கறியையும் அளித்துக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பில் ஆழ்கிறான். கூத்தரும், பாணரும் மன்னரிடம் பெற்ற ஆடைகள் ஆபரணங்கள் ஆகியவற்றை அணிந்து தம் தோல் பைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த இசைக் கருவிகளை வெளியில் எடுத்து மனமகிழ்வோடு கலைஞர்கள் தங்குவதற்கான ஊர் மன்றத்தருகே ஆடிப்பாடித் தெருவின் இரு மருங்கினும் மக்கள் கண்டு இரசிக்கத் தக்க வகையிலே கலை நிகழ்ச்சிகளைக் கலைஞர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். அக்கலை நிகழ்ச்சிகளை மன்னன் கண்டு மக்களோடு மக்களாகச் சேர்ந்து அமர்ந்து இரசித்துக் கொண்டிருக்கிறான். வெற்றிச் சிறப்பானது சேரனின் கலை இரசனையோடும் கலைஞர்களோடும் மக்களோடும் கலந்துறவாடிய நிலையில் அமைகிறது. ஒழுகு வண்ணத்திலும் செந்தூக்கு நடையிலும் பாடாண் பாட்டு கலைஞர்களின் கலை நிகழ்ச்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு என்னும் துறையில் அமைந்த இப்பாடலின் பிற் பகுதி அடிகள் குட்டுவனுடைய பகையரசன் பற்றியும் அவன் தன் நாட்டைப் பற்றியும் கூறுகின்றன.

பகைவர் நாடு, வளமான நிலமாக இருந்ததனால் வெப்பத்தால் துன்பப்பட்ட பறவை இனங்கள் குளிர்ந்த மணல் துறைகளைத் தேடியும் மருதம், காஞ்சி மற்றும் மரங்களையும் நாடி வந்து தங்கும். அத்தகைய நாட்டில் வெண்சங்கு போல இருக்கும் நாரைகள் திரியும்,வயல் மற்றும் தோட்டங்களில் தாமரையும்,ஆம்பல் மலரும் இன்று பூத்தவை எனக் காட்சி அளிக்கக் கூடியவையாக விளங்கின.

அத்தகைய வளம் இருந்தும் குட்டுவனே உன் வலிமை அறியாமல் உன்னை எதிர்த்ததனால் அவர்களின் வளமான நாடு வளம் இழந்தது.அதோடு மட்டுமில்லாமல் அவர்களின் படைகளும் உனக்கு அஞ்சி ஓடின . அதனை நாங்கள் கண்டு வந்தோம் என்று வயிரிய மாக்களான பாணர் கூட்டத்தினர் மக்கள் மன்றுகளில் தங்கி கூறிவிட்டு மன்னனை நாடி வந்தனர். இப்பாடல் கலைஞர்களுக்கும் மக்களுக்குமான உறவை முதல் பகுதியிலும் கலைஞர்களுக்கும் மன்னனுக்குமான உறவை இறுதிப் பகுதியிலும் எடுத்து இயம்புகிறது.

பாடல் - 24

அந்தணர் அறமும் அரசன் ஆட்சியும்

நெடுவயின் ஒளிறு மின்னுப் பரந்தாங்கு
புலி உறை கழித்த புலவு வாய் எஃகம்
ஏவல் ஆடவர் வலன் உயர்த்து ஏந்தி
ஆர் அரண் கடந்த தார் அருந் தகைப்பின்
பீடு கொள் மாலைப் பெரும் படைத் தலைவ
ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்து ஒழுகும்
அறம் புரி அந்தணர் வழி மொழிந்து ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுக பாடல் சான்று
நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைத்
திருந்திய இயல் மொழித் திருந்திழை கணவ
குலை இழிபு அறியாச் சாபத்து வயவர்
அம்பு களைவு அறியாத் தூங்கு துளங்கு இருக்கை
இடாஅ ஏணி இயல் அறைக் குருசில்
நீர் நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும்
அளந்து கடை அறியினும் அளப்பு அருங் குரையை நின்
வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டிகுமே
உண்மரும் தின்மரும்வரைகோள் அறியாது
குரைத்தொடி மழுகிய உலக்கை வயின்தோறு

அடைச் சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்
எஃகு உறச் சிவந்த ஊனத்து யாவரும்
கண்டு மதி மருளும் வாடாச் சொன்றி
வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர
வறிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி
பயம் கெழு பொழுதோடு ஆநியம் நிற்ப
கலிழும் கருவியொடு கை உற வணங்கி
மன் உயிர் புரைஇய வலன் ஏர்பு இரங்கும்
கொண்டல் தண் தளிக் கமஞ் சூல் மா மழை
கார் எதிர் பருவம் மறப்பினும்
பேரா யாணர்த்தால் வாழ்க நின் வளனே

துறை - இயல் மொழி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - சீர் சால் வெள்ளி

உரை

அறம் புரி அந்தணர் வழி மொழிந்து ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுக பாடல் சான்று

என அந்தணர் உரைத்த ஒழுகலாறுகள் வழியே தப்பாது ஆட்சி புரிகின்ற நல்ல மொழிகளை அதாவது மறை மொழிகளைப் பேசுகின்ற மனைவியைப் பெற்ற கணவனாக இத்தலைவன் விளங்குகின்றான். அறம் புரிந்த அந்தணர் வழி மொழிந்தவை யாவை என இனி நாம் அறியலாம்.

ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்து ஒழுகும்

என ஆறு ஒழுக்கங்களைத் தவறாது கடைப்பிடித்து வரும் வளனரசு இவன். இந்த ஆறு நெறிகளும் அந்தணர் முன்மொழிந்த அறங்களாகும். ஆரியர் வழிவந்த அந்தணர் உரைத்த அறநெறிகளாக இவை அமைகின்றன. வேதங்களில் சொல்லப்பட்ட அறநெறிகளாக இவை அமைகின்றன. அந்தணர்களின் வழி நடக்கும் இம்மன்னன்

அந்தணரைத் தவிர வேறு எவரையும் பணிந்தொழுகாதவன். இவனது ஆணையின் கீழ் அடங்கி நடக்கும் புலவர்கள் பாடும் பாடல்களில் புகழ்பெற்று விளங்குபவனாகத் திகழ்பவன். இவனது புகழ் நாடு முழுவதும் பரவியுள்ளது. இந்த வளனரசன் ஆணை பெற்ற மறுகணமே படை வீரர்கள் பகைவர்களை வென்று வீழ்த்தக் கூடிய பெருமைக்கு உரியவர்கள். வலப்பக்கத்தே உள்ள எப்போதும் புலித் தோல் உறையில் இருந்து உருவி எடுக்கப்பட்ட வாள்களை ஆயத்தமான நிலையில் வைத்து இருக்கும் வீரர்களை உடையவன். இன்ன பொழுது போர் உண்டாகும் என அறிய இயலாது நாண் இயற்றப் பெற்ற நிலையிலே வில்லினைப் பூட்டி ஆயத்த நிலையில் உள்ள வீரர்கள் மதில்களில் ஆங்காங்கே போரை எதிர் கொள்ளும் நோக்கில் இருப்பர்.

நீர் நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும்
அளந்து கடை அறியினும் அளப்பு அருங் குரையை நின்

என ஐந்திணையும் அளந்து முடிவினைக் கண்டறிந்தாலும் நின் பெருமையை அளந்தறிய முடியாதவாறு வல்லமை மிக்க பெரிய நலத்தினைக் கொண்டவனாக நீ விளங்குகிறாய். கதிர்கள் வானத்தில் எங்கும் ஒளிவிடும் வேளையில் வடக்குத் திசையில் சிறிது சாய்ந்துள்ளவாறு வானில் வெள்ளிக் கோளானது பிற கோள்களோடு தோற்றமளிக்கிறது. இத்தோற்றமானது வானவியல் சாத்திரப்படி மழை பொழிந்து வளம் கொழிக்கத் தக்க சூழலை உருவாக்கி உயிர்கள் அனைத்தும் செழிப்புற்று விளங்கும் எனும் நம்பிக்கையைக் குறியீடாகத் தந்து நிற்கும்.

பலரும் உண்டு மகிழ்ந்த இடமாக உலக்கைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட பந்தலில் சாமை எனும் அரிசி வகையைச் சார்ந்த தானியத்தைச் சோறாகச் சமைத்து இறைச்சியை மணக்கத்தக்கவாறு அரிவாளால் கொத்தப்பட்டதால் இரத்தத்தால் சிவந்து தோற்றமளிக்கும் இறைச்சியைப் பெரிய பாத்திரங்களில் கலந்து உணவாக்கிப் பலரும் மகிழ்ந்து உண்பதைக் கண்டு இன்புறத்தக்கவன் என மேலே குறிப்பிட்ட செய்திகளைத் தாங்கியுள்ள இப்பாடல் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் எனும் கருத்திற்கு இணங்க அறுவகைப் பட்ட வேத நெறிகளைக் கடைப்பிடிக்கக் கூடியவனும் எந்நேரத்திலும் பகைவரை வெல்லத்தக்க வீரம் செறிந்த வீரர்களைக் கொண்டிருப்பவனும் அப்போர்வீரர்களுக்கு

உணவு தரும் பொருட்டுப் பெரிய மிடாக்களில் வரகு சாமை ஆகிய தானியங்களைக் கொண்டு சோறு சமைத்து இறைச்சியைக் கலந்து உணவாக்கி வழங்கக் கூடியவனும் என இவ் வளனரசனை வாழ்த்திப் பாடும் இப்புலவன் ஆரிய வழித் தோன்றியவன் என அறிந்து கொள்ள முடிகிறது. வான சாத்திரத்தை அறிந்துரைக்கும் வல்லமை கொண்ட அறிவுசார் புலவனாகவும் இவன் காட்டப்படுவது கவனத்திற்கு உரியதாகும். அறுவகைப்பட்ட வேத மரபுகளைக் கொண்டவனாக அறத்தின் வழி நடப்பவனாக இப்புலவனால் காட்டப்படுகிறான். போர் குறித்த சிந்தனையுடன் சினம் கொண்ட வேல்படை வில் படை கொண்டு எப்போதும் பிற நாட்டவருடன் போரிடும் உணர்வைப் பெற்று விளங்குபவனாகக் காட்டப்படுகிறான்.

இடைவிடாத போர்களின் விளைவில்தான் சங்ககாலச் சமூக வளர்ச்சியும் பிணைந்துள்ளது என்பதை நாம் மனங் கொள்ள வேண்டியதாக அமைகிறது. எனினும் பிற்காலச் சமய வளர்ச்சிக்கு இவ்வகை மன்னர்களே ஆரியரிடம் பெற்ற அற நெறிகளை உள் வாங்கியதன் பொருட்டுக் கோவில்சார் கலாச்சாரங்கள் பக்தி இலக்கியங்கள் சமயவாதிகளால் பாடப்பெற்ற தலங்கள் மற்றும் புராணங்கள் என விளங்குவதற்குக் காரணமாயின எனும் கருத்தினைப் பெற முடிகிறது.

பாடல் - 25

மன்னன் கொண்ட புலம்

மா ஆடிய புலன் நாஞ்சில் ஆடா
கடா அம் சென்னிய கடுங்கண் யானை
இனம் பரந்த புலம் வளம் பரப்பு அறியா
நின் படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி
நீ உடன்றோர் மன் எயில் தோட்டி வையா
கடுங்கால் ஒற்றலின் சுடர் சிறந்து உருத்து
பசும் பிசிர் ஒள் அழல் ஆடிய மருங்கின்
ஆண்டலை வழங்கும் கான் உணங்கு கடு நெறி
முனை அகன் பெரும் பாழ் ஆக மன்னிய
உரும் உறழ்பு இரங்கு முரசின் பெரு மலை
வரை இழி அருவியின் ஒளிறு கொடி நுடங்க
கடும் பரிக் கதழ் சிறகு அகைப்ப நீ
நெடுந் தேர் ஓட்டிய பிறர் அகன் தலை நாடே

துறை	-	*வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்*
தூக்கு	-	*செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்*
பெயர்	-	*கான் உணங்கு கடு நெறி*

உரை

வளம் பொருந்திய நாட்டில் பரந்து பட்ட நிலையில் விளை நிலங்கள் உள்ளன. புஞ்சை நிலக் காடுகள் அதாவது மழை பெய்தாலும் உழைப்புக்கு ஏற்ப விளை பொருட்களைப் பெறும் வகையில் வரகு, கொள் போன்ற பயிர்கள் உழுது பயிரிடப் பட்டுள்ளன. காலாட் படையில் உள்ள போர் வீரர்கள் போரை நிகழ்த்தி முடித்ததனால் விளை நிலங்கள் பாழ்பட்டுக் கிடக்கின்றன. சேரனின் குதிரைப் படைகள் விளை நிலங்களில் போரின் பொருட்டு அடிபட்ட வடுக்கள் உள்ளன. வயல்களில் கலப்பைகள் உழமுடியாத நிலைகள் பெற்றுள்ளன.

யானைப் படையில் உள்ள மதம் பிடித்த யானைக் கூட்டம் பரந்து போர் செய்ததனால் விளைந்து வளம் தரத்தக்க பயிர்கள் நாசமாகி அழிந்துள்ளன. பகை மன்னர்கள் சிறை பிடிக்கப்பட்டதால் அவர்தம் நிலங்கள் கலை இழந்து காணப்படுகின்றன. நாடு அழிந்துபடும் நோக்கில் தோற்றோர் நாட்டில் வென்றோர் தீவைத்து நாசமாக்குதல் என்பது ஒரு போர் உத்தி முறையாக இருந்துள்ளமையால் காட்டுத் தீ எங்கும் பரவிப் பாழ் இடங்களாக நிலை பெற்றன.

தீப் பட்ட இடங்களில் எரிந்து பட்ட உயிரினங்களைக் கவ்வி இறை கொள்ளும் நோக்கில் ஆண்டலை எனும் ஒரு வகை பறவை இனங்கள் பாழ் இடங்களை மையமிட்டுப் பறந்து திரிகின்றன. தேரில் பயணம் செய்து போர் புரிந்த சேரனின் படைபலம், வெற்றிச் சிறப்புக் குறித்து இப்பாடல் பதிவுசெய்துள்ளது. சேரனின் தேர் பகை மன்னர்களின் நாடுகளில் சுதந்திரமாக ஓடியதன் வழி வெற்றி பரவியது.

"நெடுந் தேர் ஓட்டிய பிறர் அகன் தலை நாடே"

மலைப் பகுதியும் விளைநிலப் பகுதியும் எனப் பல்வேறு இடங்களும் கள்வர்கள் வாழும் பகுதிகளாகியுள்ளன. கழுதைகள் விளை நிலங்களில் சென்று பாழ்பட்ட இடங்களில் மேய்கின்றன என்று குறிப்பிடுவதன் வழியே நாஞ்சில் கொண்டு அதாவது கலப்பை கொண்டு உழுது பயிர் செய்து விளைவித்து உண்ணக் கூடிய சிறு கோட்டைகளைக் கொண்ட சிற்றரசனின் நாடு சீர் கெட்டது என்பது உணரலாகிறது.

இப்பாடலில் இனக்குழு மக்களின் தலைவனை வீழ்த்திய இன்னொரு பலம் பொருந்திய வேந்தனைக் காணமுடிகிறது. இன்னும் சொல்லப்போனால் ஓர் இனக் குழுவேந்தன் இன்னோரு இனக்குழு வேந்தனைப் போரில் வென்ற நிகழ்வு என்பது இப்பாடலின் செய்தியாக அறிய முடிகிறது. இனக்குழுச் சமூகம் அழிந்த நிலையில் அடுத்த நிலை வளர்ச்சி கொண்ட அரசுத் தோற்றத்தின் தொடக்கக் காலத்தை நாம் இப்பாடல் சொல்லும் செய்திகள் வழியே அறிந்து கொள்ள நேர்கிறது.



பாடல் - 26

கலையிழந்த புலம்

தேளர் பரந்த புலம் ஏளர் பரவா
களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா
மத்து உரறிய மனை இன்இயம் இமிழா
ஆங்கு பண்டு நற்கு அறியுநர் செழு வளம்
நினைப்பின்
நோகோ யானே , நோதக வருமே
பெயல் மழை புரவு இன்று ஆகி வெய்துற்று
வலம் இன்று அம்ம காலையது பண்பு என
கண் பனி மலிர் நிறை தாங்கி கைபுடையூ
மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூர
பீர் இவர் வேலிப் பாழ் மனை நெருஞ்சிக்
காடுறு கடு நெறி ஆக மன்னிய
முருகு உடன்று கறுத்த கலி அழி மூதூர்
உரும்பு இல் கூற்றத்து அன்ன நின்
திருந்து தொழில் வயவர் சீறிய நாடே

துறை - *வஞ்சித்துறைப்பாடாண் பாட்டு*
வண்ணம் - *ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்*
தூக்கு - *செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்*
பெயர் - *காடுறு கடு நெறி*

உரை

மத்து உரறிய மனை இன்இயம் இமிழா
ஆங்கு பண்டு நற்கு அறியுநர் செழு வளம் நினைப்பின்
நோகோ யானே , நோதக வருமே

இன்னியம் இமிழா எனும் இத் தொடரில் பல்வேறு இசைக் கருவிகளில் இனிய இசை முழக்கம் அல்லது இனிய இசைக்கோர்வை நிகழ்த்தப்படாத குறிப்பு சுட்டப்படுகிறது. இன்னியம் ஒலிக்கப்படும் சூழல் மக்கள் மகிழ்ச்சியான காலங்களில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

மத்து உரறிய மனை என்று குறிப்பிடுவதன் வழியே வீடுகளில் தயிரை மத்துக் கொண்டு கடைந்து மக்கள் செழிப்போடு வாழும் காலத்தே இன்னியம் முழக்கிக் கொண்டாடக் கூடிய நிகழ்வு நடந்திருப்பதாக அறிய முடிகிறது. செழிப்பற்ற காலங்களில் இன்னியம் முழாங்குவதோ கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுவதோ இல்லை என நாம் இப்பாடல் வழி அறிய முடிகிறது.

இன்றளவும் அறுவடைக் காலங்களில் நாடு முழுவதும் விழாக்கள் கொண்டாடப்படுவதும் அதன் தொடர் நிகழ்வாகக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும் அறிய முடிகிறது. மக்கள் மகிழ்ச்சிக்கும் கலைநிகழ்ச்சிக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டும் இப்பாடல் வழியே நாம் மேற்கூறிய கருத்தினை உய்த்துணர முடிகிறது. செழிப்பற்ற அல்லது வறட்சி ஏற்பட்ட நிலப்பகுதிகளில் இருந்து பாணர்களும் கூத்தர்களும் விலகிப் பயணப்பட்டு வேறு ஊர் அடைந்துள்ளனர்.

இந்தப் பாடலில் போர் நடந்தமையால் செயற்கை முறையில் வளம் இழந்த மூதூர் காட்டப்படுகிறது. மேலும் ஏர் பூட்டி உழமுடியாத விளைநிலங்களைக் கொண்டுள்ள நிலம் எனக் காட்டப்படுவதன் வழியே இயற்கை முறையிலும் மழை அற்று நிலம் வறண்டு போய் உள்ளது எனக்காட்டப்படுகிறது. வயவர் சீறிய நாடு எனப்பாடல் அடி காட்டப்படுவதன் வழியே வெற்றி கொள்ளப்பட்ட இந்த மூதூர் சிறிய நாடுகளுள் ஒன்று என அறிய நேரிடுகிறது. செழுமையான வளமையான நிலமாக இருந்த போது இசைக்கப்பட்ட இன்னியம் வளமற்றுப் போய்ப் பருவம் தப்பாது பெய்யும் மழை, பெய்யாது

ஒழிந்தமையால் மூதூரில் வாழ்ந்த மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

காடுறு கடு நெறி ஆக மன்னிய
முருகு உடன்று கறுத்த கலி அழி மூதூர்

காடுறு கடு நெறி ஆகிய மூதூரின் வீடுகள் பீர்க்கைக் கொடிகளால் படர்ந்து காணப்படுகின்றன நெருஞ்சி முள் செடிகள் வழி எங்கும் படர்ந்து கிடக்கின்றன. மக்கள் குடியற்ற மூதூரில் மங்கலத்தின் அடையாளமாக விளங்கும் இன்னியம் முழங்காது இருந்தது. இப்பாடலில் இன்னியம் இமிழா என வரும் தொடர் இன்னியம் இசைத்தல் மங்கலக் குறியீடாகவும், இன்னியம் இசையாதிருத்தல் அமங்கலத்தின் குறியீடாகவும் கொண்டிருந்த அக்கால மக்களின் நம்பிக்கையைச் சுட்டுகிறது எனக் கொண்டால் சங்க கால மக்கள் வாழ்வியலில் இசை கொண்டிருந்த இடம் இதன்கண் புலப்படும். ஆக இசையும் அவ்விசையை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த கலைஞர்களும் சங்க காலச் சமூகக் கட்டமைப்பில் பிரிக்க ஒண்ணாப் பிணைப்புக் கொண்டிருந்தனர் என்னும் கருத்து மேற்பாடல் வழி அறிய முடிகிறது.



பாடல் - 27

ஆடற் கலையும் ஆட்சி முறையும்

சிதைந்தது மன்ற நீ சிவந்தனை நோக்கலின்
தொடர்ந்த குவளைத் தூ நெறி அடைச்சி
அலர்ந்த ஆம்பல் அக மடிவையர்
சுரியல்அம் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரியல் ஆர்கையர் இனிது கூடு இயவர்
துறை நணி மருதம் ஏறி தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்
பழனக் காவில் பசு மயில் ஆலும் ..
பொய்கை வாயிற் புனல் பொரு புதவின்
நெய்தல் மரபின் நிரை கள்செறுவின்
வல் வாய் உருளி கதுமென மண்ட
அள்ளல் பட்டு துள்ளுபு துரப்ப
நல் எருது முயலும் அளறுபோகு விழுமத்துச்
சாகாட்டாளர் கம்பலை அல்லது
பூசல் அறியா நல் நாட்டு
யாணர் அறாஅக் காமரு கவினே

துறை - *செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *தொடர்ந்த குவளை*

உரை

முறையான சுதியுடன் இசையை ஒத்ததாக வண்டின் ரீங்காரம் ஒலித்துக் கொண்டிருக்கிறது . அது போன்றே முன் சுட்டப்பட்ட சுதியை மீறாது மகளிர் பறவைகளை ஓட்டும் ஓசையானது இசையுடன் புணர்ந்து அமைகின்றது. இசைக் கருவிகளை மீட்டுவதில் இருந்து எழும் சுதியை ஒத்தவாறு பறவைகளை ஓட்டும் ஓசை இசையுடன் அமைகிறது. வளைக் கரங்களைக் கொண்ட இளம் பெண்களின் பறவை ஓட்டும் கையசைவில் தாளம் அமைகிறது . வளைக் கர ஓசை பறவை ஓட்டும் சோ... சோ... இடைச் சொல் எனும் சொல் மருத மரம் ஒட்டி அமைந்த நீர்த்துறை அருகே இருப்பதால் ஒலி பெருக்கி போல இசை ஒலியும் இசை இடைச் சொற்களும் இயைந்து ஒலிக்கின்றன.

இந்தத் தாளம் அமைந்த இசையைக் கேட்டவாறு ஒரு ஆட்டமங்கை உடை ஒப்பனை அணிந்து ஆடுகிறாள். உடை ஒப்பனை எவ்வாறு அணிந்திருக்கிறாள் அம்மங்கை எனச் சுட்டும் போது குவளைப் பூக்களைக் கொண்டையில் சூடியுள்ளாள்; ஆம்பல் மலர்களின் இதழ்களை ஒன்றிணைத்துத் தைத்துப் பொருத்தித் தழையை வண்ணமிகு ஆடை என ஆட்டமங்கை அணிந்து ஆடுகின்றாள். இக்காட்சி மலர்களில் மொய்த்துள்ள வண்டுகளின் ரீங்காரம் இசை எனக் கேட்கும்படி இசைக்கான தாளம் என வளைக்கரங்களில் இருந்து எழும் சுதி ஓசையோடு பறவையை ஓட்டும் சோ சோ எனும் தாளமும் மிகுந்த இசை இடைச் சொற்களும் எனப் பாடல் அமைகின்றது. இது கேட்டமயில் அகவிக் கொண்டே தன் தோகையை விரித்து ஆடுகின்றது. ஆட்டமங்கையை ஒத்து ஆடும் மயில் என விளக்கி அமைத்திருப்பது ஓர் ஆட்டக் கலை நிகழ்ச்சியை நம் மனத்திரையில் ஓட்டிக் காட்டுவதாக இப்பாடல் அமைகின்றது. கீழ்வரும் பாடலைக் கவனித்தால் முற்பகுதியில் ஆட்ட மங்கையையும் இசையையும் தாளத்தையும் பாடல் போல அமைந்த இசை இடைச் சொல்லும் என இவை எல்லாம் இணைந்து ஓர் ஆடல் கலைக் காட்சியை நம் முன் காட்டுகின்றன.

சிதைந்தது மன்ற நீ சிவந்தனை நோக்கலின்
தொடர்ந்த குவளைத் தூ நெறி அடைச்சி
அலர்ந்த ஆம்பல் அக மடிவையர்
சுரியல்அம் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரியல் ஆர்கையர் இனிது கூடு இயவர்

துறை நுணி மருதம் ஏறி தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்
பழனக் காவில் பசு மயில் ஆலும்.

இப்பாடலின் தொடர்ச்சியாக வரும் பிற்பகுதி சேர மன்னன் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகிறது .

பொய்கை வாயிற் புனல் பொரு புதவின்
நெய்தல் மரபின் நிரை கள்செறுவின்
வல் வாய் உருளி கதுமென மண்ட
அள்ளல் பட்டு துள்ளுபு துரப்ப
நல் எருது முயலும் அளறுபோகு விழுமத்துச்
சாகாட்டாளர் கம்பலை அல்லது
பூசல் அறியா நல் நாட்டு
யாணர் அறாஅக் காமரு கவினே...

ஆட்டக் கலை நிகழ்ச்சியை கண்முன்னே கொண்டு வந்து காட்டும் இந்தப் பாடலின் முற்பகுதிப் பாடலை நீக்கி விட்டால் பாடலின் கலைச் சுவை ததும்பும் கவித்துவம் அமையாது வெற்று உரையாய் வீணே நிற்கும்.

சேரனின் வெற்றிச் சிறப்புக் குறித்து இப்பாடல் பேசுகிறது என்று உரை ஆசிரியர்கள் சொன்னாலும் அவ்வெற்றிச் சிறப்பை முதன்மைப்படுத்த கலையே தேவைப்பட்டுள்ளது. போர் இன்றி அமைதியான சூழலில் கலையைக் கண்டு இரசிக்கும் மக்களையும், மக்கள் சார்ந்த நாடுகளையும் சேர மன்னன் தன் குடையின் கீழ் கொண்டுள்ளான் என இப்பாடல் பொருள் கொண்டு அமைகிறது. இன்னும் சொல்லப்போனால் அமைதி கொண்ட சேரனின் நாடு என்பதை விடக் கலை இன்பம் துய்க்கும் சேரனின் நாடு என்று சொல்லும் அளவுக்குக் கலையே அக்காலத்தில் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது.

பாடல் - 28

போரும் நாடும்

திரு உடைத்து அம்ம- பெரு விறற் பகைவர்
பைங் கண் யானைப் புணர் நிரை துமிய
உரம் துரந்து எறிந்த கறை அடி கழற் கால்
கடு மா மறவர் கதழ் தொடை மறப்ப
இளை இனிது தந்து விளைவு முட்டுறாது
புலம்பா உறையுள் நீ தொழில் ஆற்றலின்
விடு நிலக் கரம்பை விடர் அளை நிறைய
கோடை நீட குன்றம் புல்லென
அருவி அற்ற பெரு வறற் காலையும்
நிவந்த கரை இழிதரும் நனந் தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன் புலம்- வாய் பரந்து மிகீஇயர்
உவலை சூடி உருத்து வரு மலிர் நிறைச்
செந் நீர்ப் பூசல் அல்லது
வெம்மை அரிது நின் அகன் தலை நாடே

துறை - *நாட்டு வாழ்த்து*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *உருத்து வரு மலிர் நிறை*

உரை

போரும் வாழ்க்கையும் குறித்த பதிவுகளைப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பல பதிவு செய்துள்ளன. போர்தான் வாழ்க்கை எனும் ஒருவித வாழ்க்கை முறை சமூகத்தில் தொடர்ந்து இயங்கியுள்ளது. போர்க்களத்தைப் பாடும் புலவன் காதலையும் இல்லற வாழ்க்கையையும் பாடியுள்ளான். இந்தப் பாடல் போரையும் உற்பத்திச் சமூகத்திற்கு அடிப்படையாக அமைந்த நில வாழ்வையும் அடிப்படைகளாகக் கொண்டு பேசுகிறது. இப்பாடலைக் கவனிக்கும் போது வைகைப் புதுப்புனலில் பலதரப்பட்ட மக்களும் நீராடி விளையாடி மகிழ்ந்த பரிபாடல் காட்சிகளை நினைவு படுத்துவதாக உள்ளது. வைகை ஆறு இலைதழைகள் நுரைகள் கொண்டு புதுப் புனலாய்ப் புறப்பட்டு வருகிறது.

இக்காட்சி போர் வீரர்களுக்கு ஒப்பாகக் காட்டப்படுகிறது. பேரியாறு சேரநாட்டில் உதயமாகிப் புதுப்புனலென இலை தழைகளுடன் வருவது போர்வீரர்கள் ஆயுதங்களுடன் பொருத வருவது போன்று காட்சியளிக்கிறது. அதாவது இலை தழைகளை நீர்ப்பருக்கின் மேலே போர்த்திய நிலையில் வெள்ளமானது புறப்பட்டு வரும் தோற்றம் போர் வேட்கையுடன் போர் வீரர்கள் அணி வகுத்து வருவதாக உருவகம் செய்து பாடப்பட்டுள்ளது.

நிலங்களில் பாய்ந்து பேரியாற்று நீர் வளங்களைத் தர வாய்ப்பு ஏற்படுத்தியதனால் குடிமக்கள் அனைவரும் பகை மறந்து பசி இன்றிப் பிணி இன்றித் துன்பமற்ற வாழ்க்கையை வாழ்ந்தனர். எக்காரணத் திற்காகவும் குடிகள் இடம்பெயராத வண்ணம் நில வளம் சிறப்பளித்துக் காத்தருளியதனால் வேலினை எறிந்த இரத்தக் கறை உடைய அணி வகுப்பு இல்லை. போர் வலிமைகளைப் போர் வீரர்கள் மறக்கும் நிலை கொண்டனர். நிலம் வெப்பத்தால் வறட்சி கொண்டிருந்த காலங்கள் காணாது போயின. போர்ச் சூழல் மறைந்து பயிர்ச் சூழல் விளைந்த காலமானது. இத்தகைய போர் மேகமற்ற சூழல் தொடர்ந்து தக்கவைப்பதன் வழியேதான் மக்களின் வாழ்வியல் பண்பாடுகள் கலை இலக்கிய வளர்ச்சிகள் தோன்றலாயின. நாட்டு வளம் காக்கும் நாடன் எத்தனைக் காலம் போர் அற்ற வளம் மிகுந்த நாட்டைக் கொண்டிருந்தான் என்பதைக் கணக்கிட முடியவில்லை. தான் பிற

நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் எனும் எண்ணமற்ற ஓர் ஆட்சிமுறை உருவாகும் போது நாட்டு வளம் மக்கள் வளம் குறித்த பதிவுகளைப் பாடல்களில் நிரம்பக் காணமுடிகிறது. அதுபோல் தன்னைச் சுற்றியுள்ள பிற நாடுகளும் போர்ச் சூழலை வெறுக்கும் தன்மையுள்ள நாடாக அமைய வேண்டும் என்பதற்காக அறம் குறித்த சிந்தனை பிரச்சாரமாக அமைய வேண்டிய தேவைகளும் ஏற்பட்டன. போர் அற்ற நில வாழ்க்கை குறித்த பதிவு கொண்ட இப்பாடலில் பாணர் மற்றும் ஏனைய கலைஞர் பெருமக்கள் பற்றிய பதிவுகள் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை.



பாடல் - 29

வயிரியர் பண்ணிசையும் மன்றுசூழ் மக்கள் நிலையும்

அவல் எறி உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக் கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த
தடந்தாள் நாரை இரிய அயிரைக்
கொழு மீன் ஆர்கைய மரம் தொறும் குழாஅலின்
வெண்கை மகளிர் வெண் குருகு ஓப்பும்
அழியா விழவின் இழியாத் திவவின்
வயிரிய மாக்கள் பண் அமைத்து எழீஇ
மன்றம் நண்ணி மறுகு சிறை பாடும்
அகன் கண் வைப்பின் நாடு மன் அளிய
விரவு வேறு கூலமொடு குருதி வேட்ட
மயிர் புதை மாக் கண் கடிய கழற
அமர் கோள் நேர் இகந்து ஆர் எயில் கடக்கும்
பெரும் பல் யானைக் குட்டுவன்
வரம்பு இல் தானை பரவா ஊங்கே....

துறை	-	*வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வெண்கை மகளிர்*

உரை

திருவிழாக் காலங்களில் இடைவிடாது சுதி இறங்காத நரம்புகளைக் கொண்ட யாழினைக் கூத்தர்கள் இசைத்துப் பாடி ஆடுவர். இரவு வேளைகளில் திருவிழாத் தொடர்பான கூத்தர்களான வயிரியர்களின் யாழும் பண்ணும் அமைந்த ஆட்டங்கள் இடை விடாது நிகழ்ந்து மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். பகல் வேளைகளில் வயல்கள் அருகே அமைந்துள்ள குடில்களில் நெல்லை உரலில் இட்டு உலக்கை கொண்டு குத்தி அரிசி ஆக்குகின்றனர் பெண்கள். வள்ளைப் பாட்டுப் பாடிக் கொண்டே எப்போதும் பாடலை இசைத்த பெண்கள் ஓய்வு பெற வேண்டியும், வள்ளைப் பூக்களைப் பறிப்பதற்கும் அருகாமையில் அமைந்திருக்கும் வாழை மரங்களில் தங்கள் உலக்கைகளை நின்ற நிலையில் சாத்தி வைத்து விட்டு வாய்க்கால்களில் வளையல் அணிந்திராத தங்கள் கைகளால் தம் முகங்களையும் வயிலில் உழைத்த அடையாளங்கள் நீங்கிட வேண்டித்தம் உடல்களையும் கழுவிச் சுத்தப்படுத்துகின்றனர்.

நீரை எத்தியும் இரைத்தும் ஓசை எழுப்புகின்ற கைகளைக் கழுவுகின்ற பெண்களின் ஓசை கேட்டு நீரில் கிடக்கும் அயிரை மீன்கள் பயந்து போய்த் துள்ளிக் குதித்து ஓடுகின்றன. ஆகப் பகல் வேளைகளில் வயிரியர் மற்றும் கூத்தர்கள் விழாக் கொண்டாடும் நோக்கில் கலைநிகழ்ச்சி கொண்டாடுகின்றனர்.

இரவென்றும் பகலென்றும் இனிமையாகக் கழிந்த நாடுகளில் போர் நிகழ்த்தி வெற்றி கொண்டமையால் அம்மக்கள் தங்கள் கலை நிலையை இழந்து இழிவு நிலையைப் பெற்றுள்ளனர். இக்கருத்தினைச் சொல்ல வந்த இப்பாடல் கலையுடன் இயைந்த நாட்டிலும் நாட்டு மக்களிடையேயும் வயிரியர் மற்றும் கூத்தர்களால் கலை நிலை கொண்டாடப்பட்ட நிலை காணாமல் போய்விட்டது எனக் கலையையும் கலைஞர்களையும் முன் நிறுத்தி விளக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

அக்காலச் சமூக அமைப்பானது கலை, கலைஞர், வளம், நாடு, மக்கள், மன்னர் எனும் தளங்களில் இயைந்து சுழன்றமை குறித்து

நமக்கு எடுத்துக்காட்டியுள்ளது. மன்னர்களின் சிறப்புகள் என்பதே கலைஞர்களால் எடுத்துக் கலை வழியே கூறும்போது தான் சிறக்கிறது என்னும் கருத்தியல் மேற்பாடல் வழி உணர முடிகிறது. கலையும், சமூகமும் இரண்டறக் கலந்ததாக அக்காலக்கட்ட வாழ்க்கை முறை அமைந்துள்ளது.



பாடல் - 30

மென் புலமும் புன்புலமும் பத்து அறநெறியும்

இணர் ததை ஞாழல் கரை கெழு பெருந்துறை
மணிக்கலந்தன்ன மா இதழ் நெய்தற்
பாசடைப் பனிக் கழி துழைஇ புன்னை
வால் இணர்ப் படு சினைக் குருகு இறை கொள்ளும்
அல்குறு கானல் ஓங்கு மணல் அடைகரை
தாழ் அடும்பு மலைந்த புணரி வளை ஞரல
இலங்கு நீர் முத்தமொடு வார் துகிர் எடுக்கும்
தண் கடற் படப்பை மென்பாலனவும்
காந்தள் அம் கண்ணி கொலை வில் வேட்டுவர்
செங் கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண் கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழி நொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்
காலம் அன்றியும் கரும்பு அறுத்து ஒழியாது
அரிகால் அவித்து பல பூ விழவின்
தேம்பாய் மருதம் முதல் படக் கொன்று
வெண் தலைச் செம் புனல் பரந்து வாய் மிகுக்கும்
பல சூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்

சிறை கொள் பூசலின் புகன்ற ஆயம்
முழவு இமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
செழும் பல் வைப்பின் பழனப் பாலும்
ஏனல் உழவர் வரகு மீது இட்ட
கான் மிகு குளவிய வன்பு சேர் இருக்கை
மென் தினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலம் தழீஇய புறவு அணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடு பயம் மாறி
அரக்கத்தன்ன நுண் மணற் கோடு கொண்டு
ஒண் நுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண் உயர்ந்து ஓங்கிய கடற்றவும் பிறவும்
பணை கெழு வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து
கடலவும் காட்டவும் அரண் வலியார் நடுங்க
முரண் மிகு கடுங் குரல் விசும்பு அடைபு அதிர
கடுஞ்சினம் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும் பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கை புடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறை மகிழ் இரும் பலி
எறும்பும் மூசா இறும்பூது மரபின்
கருங்கட் காக்கையொடு பருந்து இருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழல்கால்
பெருஞ் சமம் ததைந்த செருப்புகல் மறவர்
உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு கொளை புணர்ந்து
பெருஞ்சோறு உகுத்தற்கு எறியும்
கடுஞ்சின வேந்தே நின் தழங்கு குரல் முரசே

துறை	-	*பெருஞ் சோற்று நிலை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*புகன்ற ஆயம்*

உரை

44 அடி வரையறை கொண்டு பாடப் பெற்றுள்ள இந்தப் பாடல் வண்ணமும் தூக்குமான சிறந்த தாளத்தையும் மகிழத்தக்க இசையையும் கொண்டமைந்து பாடுதற்கு இனிய பாடலாக அமைந்துள்ளது. பிற பதிற்றுப்பத்துப் பாடல்களைப் போல இதுவும் தாளத்தில் அமைந்த நல்ல இசைப்பாடலாக அமைகிறது. பதிற்றுப்பத்துப் பாடல்களில் அமைந்துள்ள **இந்தப்பாடல் ஐவகை நிலங்களை முறையே ஒரு பாடலில் விளக்கி அமைவது இதன் தனிச் சிறப்பாகும்.** நெய்தல் நிலத்தின் இயல்பு குறித்து விளக்கப்படும் பாங்கினை முதலில் காட்டி, பாலை நிலம், மருத நிலம், குறிஞ்சி நிலம், முல்லை நிலம் என முறையே பாடல் விளக்கி அமைந்துள்ளது.

சேரன் சிறப்புக் குறித்துச் சொல்ல வந்த இந்தப் பாடல், பல்யானைச் செல் கெழு குட்டுவன் எனும் சேர மன்னன் விரிந்த எல்லைகளை வெற்றி கொண்ட தனது ஆட்சிப் பரப்பாக ஆக்கிக் கொண்ட வீரச் சிறப்பினை எடுத்து இயம்புவதாக அமைகிறது. சேரனின் நாடு என்பது மலைசார்ந்த நிலப்பரப்பினைப் பெரும்பாலும் கொண்டதாக அறிகிறோம். எனினும் இவன் மலைசார்ந்த இடத்தை அடித்தளமாகக் கொண்டதோடு நெய்தல் நிலம், முல்லை நிலம், பாலை நிலம், மருத நிலம், குறிஞ்சி நிலம் எனப் பலவகை நிலங்களையும் அந்நிலப் பகுதிகளில் ஆட்சி செய்த குறுநில மன்னர்களையும் சீறூர் அரசர்களையும் வெற்றி கொண்டு பேரரசன் எனும் நிலையை எட்டுவதற்கு எண்ணம் கொண்டு போரிட்ட பதிவுகளைக் கொண்டதாக இப்பாடல் அமைகிறது.

நெய்தல் நிலமானது முதலாவதாக விளக்கப்படுகிறது.

நீர்த்துறைகள் ஆங்காங்கு உள்ளன. ஞாழல் மரங்கள் கடற்கரை யோரம் பூங்கொத்துக்களை நிலத்தில் உதிர்த்து நிற்கின்றன. ஞாழல் மரத்தின் பூங்கொத்துக்கள் நீல மணியாற் செய்த பாத்திரத்தைப் போலக் கரிய இதழைக் கொண்டுள்ளன. பச்சை இலையையும் குளிர்ச்சியை யுடைய கழிகளையும் அது கொண்டுள்ளது. பக்கத்தில் உள்ள புன்னைமரம் வெளிரிய பூங்கொத்துக்கள் வளைந்து நீரிலே படுமாறு கிளைகளைத் தாழ்த்தியுள்ளது.

மணலிலும் கடல் அலையிலும் அடப்பங்கொடி தொட்டணைத்த வாறு கிடக்கின்றது. கடல் அலைகளிலே அடித்து வரப்பட்டுச் சங்குகள், முத்துகள், பவளங்கள் கடற்கரையோரங்களிலே நிறைந்துள்ளன. அவற்றை நெய்தல் நில மக்கள் பொறுக்கி எடுத்துக் கொள்கின்றனர்.

வேட்டுவ இன மக்களைக் கொண்ட வறண்ட காடுகள் நிறைந்த பாலைநிலம் காந்தள் பூக்களைக் கொண்ட நிலப்பகுதியாக விரிந்து கிடக்கிறது. காட்டிலுள்ள யானைகளின் வெள்ளிய கொம்புகளை எடுத்துக் கொண்டு பாலை நில வேட்டுவ மக்கள் நகரத்தில் உள்ள கடைத் தெருவுக்குச் சென்று பண்ட மாற்றுச் செய்து பொன்னை வாரித்தரினும் உண்ணும் கள்ளே போதும் என மன நிறைவு கொண்டோராக விளங்குகின்றனர். சிலர் கடைத் தெருவில் வாழும் செல்வந்தர் களிடையே தாம் வேட்டையாடிக் கொண்டு வந்துள்ள இறைச்சியை அளித்துக் கள்ளை வாங்கி உண்கின்றனர்.

மருத நிலத்தில் நீர்வளம் மிக்க விளைநிலங்களில் கரும்பு முற்றி விளையாத பருவமாயினும் அறுவடை செய்கின்றனர்.அருகில் உள்ள நெல் வயல்களில் நெல் கதிர்களை அறுத்துக் குவித்து வைத்துள்ளனர். மருத நிலத்தில் கிடைத்துள்ள பலவிதமான பூக்களை எடுத்து வந்து விளை நிலங்களில் சடங்குகள் செய்து கடவுளைப் போற்றி வழிபடுகின்றனர்.வெள்ளம் வரும் காலம் இது என உணர்ந்த மருதநிலமக்கள் வெள்ளம் பாய்ந்து வயல்களில் தேவையான நீர் பெருகிய உடன் அவ்வெள்ளத்தினைத் தடுத்து நீர்த்தேக்கம் செய்யும் பொருட்டு வைக்கோல் புரிகள் சூழ்ந்த மணற் கோட்டைகளை அமைத்துள்ளனர். வெள்ளம் கட்டுப்படுத்த முடியவில்லை எனில் மக்கள் ஆரவாரம் செய்து முழவினை ஒலித்தவாறு மீண்டும் அணைகட்டும் முயற்சியினை மேற் கொண்டு எண்ணியவாறு முடிக்கின்றனர். பழைய ஊர்களில் அறுவடைக்காலத்தே நிகழும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து விட்டுத் தத்தம் புது ஊர்களை வந்தடைகின்றனர். குறிஞ்சி நில மக்கள் வரகு,சாமை போன்ற வானம் பார்த்த பயிர்களைச் செய்ய வேண்டி நிலங்களை உழவு செய்கின்றனர். வரகின் வைக்கோல் கொண்டு தங்கள் குடி இருப்புகளுக்குக் கூரை வேய்ந்துள்ளனர். தினை மாவினைக் கொண்டு தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களைச் சிறப்புச் செய்யும் பொருட்டு அவர்களுக்கு உணவு அளித்துப் பகுத்து உண்கின்றனர். ஆங்காங்குக் காடு சூழ்ந்துள்ள மலைப் பகுதிகளில்

மலை நாட்டுக்கு உரிய ஊர்கள் மக்களைக் கொண்டு அமைந்து விளங்குகின்றன. காட்டு மல்லிகைக் கொடிகள் வரகுப் பயிர்களின் வைக்கோல் வேய்ந்த கூரைகளில் படர்ந்து உள்ளன.

முல்லை நில மக்கள் கால்களில் செருப்பு அணிந்தும் கழல்கள் அணிந்தும் காணப்படுகின்றனர். கழற்சிக் காய்களுடன் மகளிர் அங்கும், இங்கும் திரிந்து கொண்டு இருக்கின்றனர். பனை மட்டை, மரப்பட்டை, மாட்டுத் தோல் ஆகியவற்றைக் கொண்டு செருப்புகள் உண்டாக்கிக் கொண்டு குக்கிராமங்களின் காடுகரைகளில் மக்கள் அணிந்து திரிவதை இன்றும் வழக்கில் காண முடியும். மகளிர் ஆடுமாடுகளைக் காடுகளில் பொழுது சாயும் வரை மேய்க்கும் தொழிலை மேற்கொண்ட போது கழற்சிக் காய்களை அமர்ந்த நிலையில் தூக்கிப் போட்டு விளையாடு கின்றனர். மகளிர் நல்ல நெற்றிகளைக் கொண்டு விளங்குகின்றனர். காடுகளில் பல பூக்கள் ஆங்காங்கு மணல் குன்றுகள் என மரங்களிலும், செடிகளிலும் பூத்த நிலையில் விளங்குகின்றன.

எயினர், வேட்டுவர், கோவலர் போன்ற அந்தந்த நிலத்துக்குரிய மக்களைக் கொண்டு அவ்வின மக்கள் தலைவன் ஆட்சி செலுத்தி வந்த நிலப்பகுதிகளை அதாவது முடியுடை வேந்தர், குறுநில வேந்தர்களாகவும் முறையே அவரவர்தம் நிலப் பகுதிகளை ஆட்சி செலுத்தி வந்தவர்களை குட்டுவன் அந்நிலப் பகுதிகளை மக்களை அவ்வினக் குழு மக்களின் தலைவர்களைப் போரிட்டு அழித்து தன் குடையின் கீழ் ஆட்சி செலுத்த வேண்டும் எனும் ஒரே நோக்கோடு வஞ்சினம் கூறி முரசறைந்து தாம் வணங்கும் கடவுளர்க்கு வழிபாடு செய்து அதாவது பிண்டம் எனப் பிடித்து வைத்த உணவினைக் கள்ளோடும் இரத்தம் சொறியும் இறைச்சியோடும் படையல் செய்கின்றான். கழலை அணிந்த கால்களை உடைய வீரர்கள் பகைவர்க்குப் புறம் கொடுத்து ஓடாத கொள்கை கொண்டோர் போர் செய்தலையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு ஆரவாரம் செய்கின்றனர். இது இடி போல நிலத்தையே அதிரச் செய்கிறது. போர் வீரர்களின் ஆரவாரத்தோடு பாணர்களும், விறலியர்களும் யாழ் இசையைப் பாட்டுடன் முழுக்குகின்றனர். படையலை எறும்பும் அசுத்த ஆவிகளும் உண்ணுதலை எதிர்பார்க்கவில்லை. மாறாக காக்கைகளும், கழுகுகளும் உண்ண வருமேல் போர் செய்திட அதுவே நல்ல சகுனம் என வேந்தனும் அவர்தம் வீரர்களும் நம்பிக்கை கொண்டு எதிர்பார்த்துள்ளனர். போர் பொருதும் முன்பு பெரும் சோற்றை உணவாக

மன்னன் தன் போர் சார் வீரர்களுக்கு வழங்குவது என்பது ஒருவிதச் சடங்கு முறையாகும்.அச்சடங்கினை மரபுப் படி குட்டுவன் செய்வதாகப் பாடலில் காட்டப்படுகிறது.)

பலதரப்பட்ட நிலங்களையும் வளங்களையும் காட்டி இறுதியில் போர் மூளும் குறியீட்டினை உணர்த்திப் பெரும் சோறு புகட்டும் மன்னனின் செயல் குறித்து இப்பாடல் வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இனக்குழுக்களைத் தொடர்ந்து போரிட்டு வீழ்த்துவதும் பிறநாட்டு வளங்களை அபகரிப்பதும் ஆக்கிரமிப்புச் செய்வதும் சங்ககால அரசுகளுக்குள் பல்நூற்றாண்டுக் கணக்கில் போர்ச் சூழல் நிறைந்த வாழ்க்கை முறை அக்காலச் சமூக நடவடிக்கைகளில் இருந்துள்ளது. போர் நெறியோடு ஒருங்கிணைந்த நாடுகள் என எல்லையை விரித்துச் செயலாற்றி வந்ததன் விளைவில் இனக்குழு சமூகத்தலைமை முறை என்பது அரசச் சமூகத் தலைமை என உருப்பெற்ற காலமாகச் சங்ககாலம் அமைந்திருந்தது. அரசு என்பது பிற அரசுகளுக்குள் எல்லை விரிவாக்கும் நோக்கினைக் கொண்டு போர்ச் சூழல் நிரம்பிய சங்ககால வாழ்க்கை முறையாகவே இருந்துள்ளது. **இப்போர் மயவாழ்க்கை காலப்போக்கில் கசப்பை உருவாக்கியதனால் போர் நெறியோடு வைதீக நெறியும் ஒருங்கிணைந்து செயலாற்றி வந்தது. போர் மறுப்பும் சங்காலப் போக்கிற்கான மாற்று நெறியை முன்வைக்கப் புதிய தேடல்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டிய சூழல் எற்பட்டது. சங்க கால வாழ்நிலை புதிய அறங்களை உட்கொண்ட நெறிமுறைகளுடன் முன் வைக்கப்பட்ட சமூக மாற்றங்களைப் பெறத் தொடர் முயற்சிகளுடன் வினையாற்றிய நிலை என்பது இப்பாடல் வழிப் புலனாகிறது.**



மூன்றாம் பத்து - பதிகம்

அறநெறிகளும் ஆட்சிமுறைகளும்

இமையவரம்பன் தம்பி அமைவர
உம்பற்காட்டைத் தன் கோல் நிறீஇ
அகப்பா எறித்து பகல் தீ வேட்டு
மதி உறழ் மரபின் முதியரைத் தழீஇ
கண் அகன் வைப்பின் மண் வகுத்து ஈத்துக்
கருங் களிற்று யானைப் புணர் நிரை நீட்டி
இரு கடல் நீரும் ஒரு பகல் ஆடி
அயிரை பரைஇ ஆற்றல் சால் முன்போடு
ஒடுங்கா நல்இசை உயர்ந்த கேள்வி
நெடும் பாரதாயனார் முந்துற காடு போந்த
பல் யானைச் செல்கெழு குட்டுவனைப்
பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப் பாட்டு

மூன்றாம் பத்துப் பாடல்களின் பெயர்கள்

அடுநெய் ஆவுதி, கயிறு குறு முகவை,ததைந்த காஞ்சி, சீர் சால் வெள்ளி,கான் உணங்கு கடு நெறி,காடுறு கடு நெறி,தொடர்ந்த குவளை,உருத்து வரு மலிர் நிறை,வெண்கை மகளிர்,புகன்ற ஆயம்,

உரை

பதிகம் சுட்டும் கருத்து மேற்குறிப்பிட்ட பத்துப் பாடல்களிலும் காணப்படவில்லை. ஆனால் மூன்றாம் பத்தின் பத்துப் பாடல்களும் வேள்வி குறித்தும் அந்தணர் குறித்தும் நீதி நெறிகள் குறித்தும்

குறிப்பிடுகின்றன. இப்பத்துப் பாடல்களில் இருவகை அறம் சார்ந்த நெறிமுறைகளைக் கவனிக்க முடிகிறது.

1)ஆரியர் வழி அறநெறிகள்
2)சமணர் வழி அறநெறிகள்

ஆரியர் மற்றும் சமணராகிய இந்த இரு மரபுச் சிந்தனைகள் கலந்த தமிழ் மரபாகச் சங்ககாலம் இருந்துள்ளது என இப்பதிகம் வழி உணர முடிகிறது.

காப்பியாற்றுக் காப்பியனார்

இயற்றிய

நான்காம் பத்து

பாடல் - 31

போர்க்கடன்

குன்று தலை மணந்து குழூஉக் கடல் உடுத்த
மண் கெழு ஞாலத்து மாந்தர் ஓராங்குக்
கை சுமந்து அலறும் பூசல் மாதிரத்து
நால் வேறு நனந் தலை ஒருங்கு எழுந்து ஒலிப்ப
தெள் உயர் வடிமணி எறியுநர் கல்லென
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டு ஊது பொலி தார் திரு ஞெமர் அகலத்து
கண்பொரு திகிரிக் கமழ் குரல் துழாஅய்
அலங்கல் செல்வன் சேவடி பரவி
நெஞ்சு மலி உவகையர் துஞ்சு பதிப் பெயர
மணி நிற மை இருள் அகல நிலா விரிபு
கோடு கூடு மதியம் இயலுற்றாங்குத்
துளங்கு குடி விழுத் திணை திருத்தி முரசு கொண்டு
ஆண் கடன் நிறுத்த நின் பூண் கிளர் வியல் மார்பு
கருவி வானம் தண் தளி தலைஇய
வட தெற்கு விலங்கி விலகு தலைத்து எழிலிய
பனி வார் விண்டு விறல் வரையற்றே
கடவுள் அஞ்சி வானத்து இழைத்த
தூங்கு எயிற் கதவம் காவல் கொண்ட

எழூஉ நிவந்தன்ன பரேர் எறுழ் முழவுத் தோள்
வெண் திரை முந்நீர் வளைஇய உலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்டன் அனையைமன் நீயே வண்டுபட
ஒலிந்த கூந்தல் அறம் சால் கற்பின்
குழைக்கு விளக்கு ஆகிய ஒல் நுதல் பொன்னின்
இழைக்கு விளக்கு ஆகிய அவ்வாங்கு உந்தி
விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள் நின் தொல் நகர்ச் செல்வி
நிலன் அதிர்பு இரங்கல் ஆகி வலன் ஏர்பு
வியன் பணை முழங்கும் வேல் மூசு அழுவத்து
அடங்கிய புடையல் பொலங் கழல் நோன் தாள்
ஒடுங்காத் தெவ்வர் ஊக்கு அறக் கடைஇ
புறக்கொடை எறியார் நின் மறப் படை கொள்ளுநர்
நகைவர்க்கு அரணம் ஆகிப் பகைவர்க்குச்
சூர் நிகழ்ந்தற்று நின் தானை
போர் மிகு குருசில் நீ மாண்டனை பலவே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - கமழ் குரல் துழாய்

உரை

குன்றுகள் சூழ்ந்த கடற்பகுதியாக அமைந்துள்ளது இந்த உலகம். மக்கள் ஒன்று கூடி நீராடிவிட்டுச் செல்வனின் திருப்பெயரைக் கூறிக் கைகூப்பி நீர்த்துறையில் நீராடி வணங்குவது என்பது அன்றைக்கே இருந்த வழக்கமாக நாம் அறிய முடிகிறது. பூங் கொத்துக்களை உடைய மாலையை மார்பில் அணிந்து கொண்டு விளங்கும் திருமாலினை வணங்கும் போது நோன்பு இருக்கும் பழக்கத்தை மக்கள் கொண்டிருந்தனர் என நாம் அறிய முடிகிறது. குறிப்பிட்ட நாளின் போது குறிப்பிட்ட மக்கள் ஒன்று சேர்ந்து மக்கள் நீர்த்துறையில் நீராடும் போது

மணியோசை செய்து எழுப்பித் திருமாலின் பெயரைச் சொல்லி வணங்கிக் கொள்வது அன்றைய வழக்காக இருந்துள்ளது.

திருமால் குறித்த வேத மரபுசார் புனைவுகள் ஆரியர் வருகைக்குப் பின் பரவலாகவும் பலமாகவும் இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் மக்கள் மனங்களிலும் பதிவாகியுள்ளன. 'செல்வன் சேவடி' பரவுதல் எனும் நிலையில் அதாவது உரையாசிரியர்கள் சொல்வது போல மலரணி மார்பன் திருமாலை வணங்குவதாக அமைகிறது. சமணர்களும், பௌத்தர்களும் தமிழ் நிலப் பகுதிக்கு வந்து சேர்வதற்கு முன்பதாக இம்மண்ணில் மக்கள் தொழுதேற்றிய ஏராளமான கடவுளர்களில் மன்னன் சார்ந்த மக்கள் ஒழுகலாறுகள் வேறாகவும் வேட்டுவர் ஆயர் எயினர் போன்ற தொல்குடி மக்கள் வணங்கிய இயற்கை சார்ந்த கடவுளர்களும் கடவுள் சார் நம்பிக்கைகளும் வேறாகவும் இருந்துள்ளன.தொல் தமிழ் மக்கள் கொண்டுள்ள கடவுள் தொழுகை குறித்த பதிவாகச் சேரனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியில் ஒரு சாரார் பற்றிய குறிப்பாக நாம் இப்பதிவினால் உணர முடிகிறது.போர் செய்து வெற்றி பெற்றுத் திரும்பிய படை வீரர்கள் அனைவர்க்கும் ஆண் கடன் எனும் பெயரில் வேந்தன் சிறப்புச் செய்து அவர்தம் ஊர்களுக்குத் திருப்பி அனுப்பிவைப்பது என்பது ஒரு வழக்கமாக இருந்துள்ளளது என நாம் அறிய முடிகிறது. அந்த நாளை ஒரு கொண்டாட்ட நாளாக மன்னனும் மக்களும் நீராடி இறைவனுக்கு வணக்கம் செலுத்திச் சடங்கு செய்யும் ஒரு நிகழ்வாக இருந்துள்ளதாக நாம் எண்ணிப் பார்க்க இப்பாடல் வழி செய்கிறது.

குறிப்பிட்ட நாளில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நீராடுதலின் வளர்ச்சி நிலை குறித்த இலக்கியப் பதிவாகவும் காதல் வயப்பட்ட களவு நிலை வாழ்க்கை என்பது சமூக அங்கீகாரம் பெறத்தக்க கற்பு மணம் நோக்கிய பயணத்தின் தமிழ்ச் சமூக இயக்கத்தின் பதிவாகவும் பரிபாடலின் நீராடல் குறித்த பல விவரணங்களை நாம் இங்கு இணைத்துப் பார்த்தல் அவசியம்.

சிறந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் பிறிதொரு நாட்டு மன்னரின் போரினால் அடிமைப்பட்டுத் தம் முந்தைய வாழ்க்கையை இழந்து வறுமைக்குள்ளாயினர். பின்னர் மீண்டும் அவர் சிறந்திருந்த வாழ்க்கையை வாழ வழிசெய்து மகிழ்வித்தவன் இவன்.

வளம் பொருந்திய குடிகளையும் குடிகளில் வீற்றிருந்த மன்னனையும் தனக்குரிய நாடாகவும் தனக்குரிய மக்களாகவும் ஆக்கியவனாக இம்மன்னவன் அறியப்படுகிறான் . அவ்வாறு ஆண்கடன் செய்ததனால் வெள்ளிய அலைகளை உடைய கடலில் இருந்து பெறப்பட்ட மேகங்களைத் தரும் வள்ளல் போன்றவன் இச்சேரன் என ஒப்புமை சொல்லப்படுகின்றது. தேவருக்குப் பயந்து ஆகாயத்திலே அவுணர் என்போன் தொங்குகின்ற நிலையில் உடைய ஒரு கதவு எனக் கணைய மரம் போல ஆகாயத்திலே அமைத்து வலிமையுடைய முழவினை ஒத்த தோள்களையுடையவன் தேவர்களுக்குப் பயந்து ஒளிந்து கொண்டான். அவனைக் கண்டுணர்ந்து அழித்தவன் ஒரு தேவன்.அந்தத் தேவர் குலத்தவன் பெயர் வண்டன்.அந்த வண்டன் என்னும் வள்ளலுக்கு நிகரானவன் இந்த மன்னன் என உவமை சொல்லப்படுகிறது.

தலைவனே உனது தலைவியாகப் பட்டவள் தென்னகர் செல்வி என்று புலவன் போற்றுகிறான். அத்தென்னகர் செல்வியைப் பற்றிக் குறிப்பிடக் கூடிய ஒரு தொல் கதையாவது: ஆகாயத்திலே விண்மீன் வடிவிலே பல தேவமகளிர் திரிகின்றனர்.அவ்விண்மீன் கூட்டத்திலே செம்மீன் வடிவிலே இருப்பவள் நல்ல கூந்தலினையும் கற்பினையும் உடையவள் தென்னகர் செல்வியானவள்,அவளுக்கு ஈடாக நின் மனைவி வண்டுகள் ஒலிக்கும் படியான கூந்தலினையும் அறம் வாய்ந்த கற்பினையும் நெற்றியினையும் உடைய சிறப்புக்கு உரியவளாக இருக்கின்றாள்.தென்னகர் செல்வி என்பதுதான் தமிழ்ச் செல்வி என்பதாகும்.

மறப்படை கொள்ளுநர் புறக்கொடை எறியார் எனபதன் வழியே மறத்தால் தோற்கடிக்கப்பட்டவர்கள் புறமுதுகு காட்டி ஓடும் போது அவர்களைக் கொல்லுதல் போர் அறம் அன்று என்பதான நெறிமுறையைக் கொண்டவனாகவும் விளங்குகின்றான் மன்னவன்.

இப்பாடலில் சேரன் வான் உலகைத்துத் தேவருடனும் (வண்டன்)இவனது மனைவி தேவர் குலப் பெண்களில் (தென்னகர் செல்வி) ஒருத்தியாக உயர்த்திக் காட்டப்படுகின்றனர். போர் அறம் பற்றி இங்குச் சுட்டப்படுகிறதே அன்றி ஆரியர் கற்பித்த வைதீக அறம் சார்ந்த செய்திகள் இப்பாடலில் காணப்பட வில்லை. மக்கள் குழும நிலையில்

எண் 12136
நூலகம்

நீராடுதல் என்பதற்கும் குறிப்பிட்ட அச்சம் நீங்கி மனமகிழ்ச்சி கொண்டதன் விழைவின் வெளிப்பாடாக அமைந்திருக்க வேண்டும்.

போரில் வெற்றிக்குக் காரணமான ஆண்கடன் என்பது படைவீரர்களுக்கு மன்னன் அளிக்கும் பரிசினையும் பாராட்டினையும் பெறும் முன் வீரர்களுக்கும் படையில் பக்கபலமாக இருந்தவர்களுக்கும் நீராடி விட்டு மன்னரிடம் பெற்றுக் கொள்ள வரும் ஒரு முறைமை என எண்ணிட இடம் உண்டு. போர் முடிந்த மனநிலையைப் போற்றும் ஒருவிதச் சடங்கு முறையோ எனவும் கருத இடமுண்டு. மன்னன் முன்னின்று நடத்தும் இச்சடங்கு முறைக்கு ஆண்கடன் எனப் பெயர். தேவர், அசுரர் என்றும் நீராடிச் செல்வனின் சேவடி வணங்குதல் என்றும் குறிப்பிடுவதன் வழியே வைதீக சித்தாந்தம் இம்மண்ணில் ஆரியர் வருகைக்குப் பின் வந்த தொன்மக்கருத்துக்கள் ஆகும். எனவே வடமொழிக் கருத்தியலும், பூர்வீகத் தமிழர்களின் கருத்தியலும் இரண்டறக் கலந்த சமூக அமைப்பாகச் சங்க காலச் சமூக அமைப்பு இருந்தது என அறிய இடமுண்டு.

பாடல் - 32

போர்க்களத்தில் பாணன் பெருங்கிளை உறவும் விளைநிலத்தில் மன்னன் பெரும்படை உறவும்

மாண்டனை பலவே போர் மிகு குருசில் நீ
மாதிரம் விளக்கும் சால்பும் செம்மையும்
முத்துடை மருப்பின் மழ களிறு பிளிற
மிக்கு எழு கடுந்தார் துய்த்தலைச் சென்று
துப்புத் துவர் போகப் பெருங்கிளை உவப்ப
ஈத்து ஆன்று ஆனா இடனுடை வளனும்
துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும்
எல்லாம் எண்ணின் இடு கழங்கு தபுந
கொன் ஒன்று மருண்டனென் அடு போர்க் கொற்றவ
நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெரு மலை யானையொடு புலம் கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்து இரை கவரும்
முடந்தை நெல்லின் கழை அமல் கழனி
பிழையா விளையுள் நாடு அகப்படுத்து
வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத்து ஆயினும்
சினவாய் ஆகுதல் இறும் பூதால் பெரிதே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - கழை அமல் கழனி

உரை

போர்மிகு குரிசில் ஆனவனே! போரில் மேம்பட்டு விளங்கும் தலைவனே! தூசிப்படை, யானைப் படை எனப் பல்வேறு படைகளைத் தன்னகத்தே கொண்டு கடும் சினத்தோடு போரிட்டுப் பெற்ற பொருட்களைத் தன் குடி மேம்பட ஈந்தவன் நீ.

ஈத்து ஆன்று ஆனா இடனுடை வளனும்
துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும்

என்பதன் வழியே தன் குடி தாழ்வுற்ற போது அதாவது வறுமை சூழ்ந்த போது அல்லது மழை இன்றி நாடு பஞ்சம் எதிர் கொண்ட போது குடிகள் முன்போல் அன்றி நலிவு பெற்று இருக்கும் சூழலின் போது குடி மேம்பாடு கொள்ளப் பிற நாடுகளுடன் சினந்து போர் செய்துள்ள தேவை கொற்றவனுக்கு ஏற்பட்டுள்ளது என இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

மிக்கு எழு கடுந்தார் துய்த்தலைச் சென்று
துப்புத் துவர் போக பெருங்கிளை உவப்ப

என்று குறிப்பிடுவதன் வழியே பாணர் முதலியோர் தம் பெரும் சுற்றத்தாரோடு போர்க்களத்தில் அதாவது போர்ப் பாசறையில் தங்கியுள்ள மன்னனை நெருங்கி எப்போதும் வீற்றிருந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. பாணனையும், பாடக் கூடியவர்கள், ஆடக்கூடியவர்கள், இசைக் கருவிகளை இசைக்கக் கூடியவர்கள் எனக் கலை நிகழ்ச்சியை நிகழ்த்தக் கூடிய பெரும் கலைக்குழுக் கூட்டத்தார் அனைவரையும் மனம் மகிழும்படி போரில் பெற்ற செல்வத்தை அவர்களுக்கு அள்ளி வழங்கிய பெருமைக்கு உரியவன் என இவ்வரசன் போற்றப்படுகிறான். தன் குடி மேம்படச் செய்தது வியப்பல்ல. பாணனும் அவன்தம் சுற்றத்தாரும் மகிழச் செல்வத்தைக் கொடுத்தது வியப்பல்ல. நார் முடிச் சேரலாதனே, உனது குணங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது அனைத்துக்கும்

மேலாக ஒரு சிறப்பு மட்டும் வியப்பிலும் வியப்பாக அமைகிறது. அதாவது, அஞ்சி என்பவன் கொடிய வலிமையோடு போரிட்டான். உன் யானைப் படையோடு பகைவர் நாடு கெடும் படி அவன் எல்லைக்குப் புறத்தே சென்று பாசறை கொண்டாய், அது ஒரு நெல்விளைச்சல் மிகுந்த கதிர் காலம் ஆகும். விளைந்திருந்த வயற்களங்கள் அனைத்தையும் பெறத்தக்க வகையில் அந்நாட்டினைக் கைப்பற்றினாய். அத்தோடு உன்சினம் தணிந்து கொடிய வறுமை பெற்றுப் போராடிய அஞ்சி எனும் பகை அரசனையும் அவன் நாட்டையும் நாட்டு மக்களையும் சினம் பாராட்டாமல் மன்னித்த தன்மை என்பது வியப்பிலும் வியப்பாக அமைந்த குணங்களில் ஒன்றாகும்.

நெல்லின் கழை அமல் கழனி
பிழையா விளையுள் நாடு அகப்படுத்து
வையா மாலையர் வசையுநர்க் கறுத்த

விளை நிலங்களை விளைச்சல் நேரம் பார்த்து அவர்தம் நாட்டினை அகப்படுத்திக் கொண்ட போர் உத்தி முறை குறித்தும் தம் நாட்டு மக்களுக்குப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்த்து வளப்படுத்தியதும் அடுபோர்க் கொற்றவனின் சிறப்பாகப் புலப்படவில்லை. மாறாகப் பகைவனுக்கு அருளியதே இப்புலவனுக்குப் பெரிதாகப் படுகிறது. நேரம் பார்த்துக் கொள்ளையடிப்பது என்பதெல்லாம் புலவன் பார்வைக்குப் பெரிதாகப் படவில்லை.

பாடல் - 33

புலம் கெட நிற்கும் வீரம்

இரும்பூதால் பெரிதே கொடித் தேர் அண்ணல்
வடி மணி அணைத்த பணைமருள் நோன் தாள்
கடி மரத்தான் களிறு அணைத்து
நெடு நீர துறை கலங்க
மூழ்த்து இறுத்த வியன் தானையொடு
புலம் கெட நெரிதரும் வரம்பு இல் வெள்ளம்
வாள் மதிலாக வேல் மிளை உயர்த்து
வில் விசை உமிழ்ந்த வைம்முள் அம்பின்
செவ்வாய் எஃகம் வளைஇய அகழின்
கார் இடி உருமின் உரறு முரசின்
கால் வழங்கு ஆர் எயில் கருதின்
போர் எதிர் வேந்தர் ஒரூஉப நின்னே

துறை	-	*வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்*
பெயர்	-	*வரம்பு இல் வெள்ளம்*

உரை

நாட்டின் எல்லையைக் குறிக்கக் காவல் மரங்களை நட்டு வைத்திருப்பது என்பது அக்கால மரபுகளில் ஒன்றாகக் காண முடிகிறது.

அந்தக் காவல் மரங்களே நாட்டின் எல்லைக் குறியீடாக இருந்துள்ளன என்று நாம் ஏலவே கண்டுள்ளோம். காவல் மரத்தை வெட்டி வீழ்த்தினால் நாடு பிடிபட்டு விட்டது எனப் பொருளாகும். இப்பாடல் குறிப்பிடுவதன் வழியே காவல் மரத்தில் களிறு கொண்டு கட்டி விடுவது என்பதும் நாடு வீழ்த்தப்பட்டு விட்டது என்பதன் குறியீடாக அமைவதை அறிய முடிகிறது. வரம்பில் வெள்ளம் என இப்புலவர் குறிப்பிட்டுள்ள தொடர் வழியே வாட்படை வீரர்கள் மதிலாக அமைகின்றனர் என்பதாகும்.

வேல்படை வீரர்கள் காவல் காடு என நாட்டைச் சுற்றி வளைத்து உள்ளனர். வில் அம்பு கொண்ட வீரர்கள் அகழி போல் உருவம் கொள்ளத்தக்கவாறு யாரும் எளிதில் தப்பிக்கவோ கடந்து செல்லவோ முடியாதவாறு அரண் என அமைந்துள்ளனர். காலாட் படையினர் கரையில்லாத வெள்ளம் எனுமாறு நாட்டுக்குள் ஊடுருவுகின்றனர். இத்தகைய போர்ப்படைகளைக் கொண்டுள்ள மன்னன் முன் எதிர்ப்பட்ட மன்னர்கள் நிற்க மாட்டாது புறங்கொடுத்து ஓடியுள்ளனர் எனப் பாட்டின் பொருள் அமைகிறது.

வில், வேல், அம்பு, காலாட்படை எனப் படைபலம் குறித்துப் புலவன் காட்டும் போர்ப்படை வீரர்கள் வழியே இத்தகைய போர் செய்துள்ள அரசன் தேரினைக் கொண்டுள்ளான் என்பது கவனத்துக்குரியது. போர் எதிர் வேந்தர் எனக் குறிப்பிடுவதன் வழியே போர் செய்யும் வேந்தனும் போருக்குப் பயந்து ஓடிய பிற வீரர்களும் கொண்டிருந்த பிற நாடுகள் சிறு குடிகளைக் கொண்டமைந்த சீறூர்களின் மக்களும் அவர்தம் விளை நிலப்பகுதிகளும் ஆகும் என நாம் உய்த்துணர முடிகிறது.



பாடல் - 34

முரசுடை அரசு

ஒரூஉப நின்னை ஒரு பெரு வேந்தே
ஓடாப் பூட்கை ஒண் பொறிக் கழற் கால்
இரு நிலம் தோயும் விரி நூல் அறுவையர்
செவ் உளைய மா ஊர்ந்து
நெடுங் கொடிய தேர்மிசையும்
ஓடை விளங்கும் உருகெழு புகர் நுதல்
பொன் அணி யானை முரண் சேர் எருத்தினும்
மன் நிலத்து அமைந்த.........
மாறா மைந்தர் மாறு நிலை தேய
முரைசுடைப் பெருஞ் சமம் ததைய ஆர்ப்பு எழ
அரைசு படக் கடக்கும் ஆற்றல்
புரை சால் மைந்த நீ ஓம்பல் மாறே

துறை	-	*தும்பை அரவம்*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்*
பெயர்	-	*ஒண் பொறிக் கழற் கால்*

உரை

வீரர்களின் கால்களையும் தோள்களையும் புறப்பாடல்கள் பலவும் அடிக்கடி குறிப்பிடுவது கவனம் கொள்ளத் தக்கதாகும். வீரர்களின்

இவ்விரு உறுப்புகளும் பிற உறுப்புக்களை விட வீரத்தை வெளிப்படுத்தும் மையக் கூறுகளாக விளங்குகின்றன. கழற்கால் ஒண்பொறிக் கழற்கால் போர்ச் சிறப்புக்கள் குறிக்கப்பட்டுள்ள கால்களுக்குச் சொந்தக்காரர்கள் போர் வீரர்கள். குதிரைகள் மீதும் யானைகள் மீதும் வீரர்கள் ஏறிச்சென்று போரிடும் வல்லமை கொண்டவர்கள். முரசங்களை எழுப்பிய நிலையில் போர்வீரர்கள் ஆர்ப்பரித்த குரல்களுடன் போர் வெறி கொண்டு பகைவர்களைத் தாக்கி வெற்றி கொள்ளக் கூடியவர்கள். யானைகளும், குதிரைகளும் போர்க்களங்களுக்குப் போர்வீரர்களை நடத்திச் செல்லும் அவற்றின் நெற்றிகளில் பொன்னால் செய்த அணிகலன்களை அணிவித்து இருந்தனர். இவ்வித அணிகலன்களை நெற்றி மாலைகளாக யானைகளுக்கும் குதிரைகளுக்கும் அணிவித்த மாத்திரத்திலேயே போர்க்களங்களுக்குச் செல்லுமாறு அவற்றைப் பழக்கப்படுத்தி வைத்திருந்தனர்.

இவைகளைப் போர்க்களத்திற்குப் பயன்படுத்தும் போது நாட்டு மன்னனின் கொடியினைத் தாங்கிச் செல்லுமாறும் அமைத்திருந்தனர். இப்பாடலில் மன்னனின் சிறப்பை முன்நிறுத்தாது போர்வீரர்களையும் போர்க்களங்களில் பயன்படுத்தப்படும் யானைகளையும் குதிரைகளையும் முன்நிலைப்படுத்தி இருப்பது சிறப்புக் குரியதாகப்படுகிறது. **ஒண் பொறிக்கழற்கால் என இப்பாடலுக்குப் பெயர் சூட்டி இருப்பதும் போர் வீரர்களை மட்டும் முதன்மைபடுத்திய விதம் சிறப்புக்குரியது**. கால்கள் தோள்கள் போர் வீரர்களுக்குச் சிறப்புடையவை, வலிமைசேர்ப்பவை. கால்களில் சின்னம் பொறித்த கழல்களை அணிந்திருப்பதன் வழியே போர் வீரர்கள் குறிப்பிட்ட மன்னனுக்கு உரியோர் என அடையாளப்படுத்தும் நோக்கமாக இருந்துள்ளது. இதுபோலக் குதிரை யானைகளுக்கும் நெற்றி மணி மாலை மற்றும் கொடிகள் கொண்டு அடையாளப்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

பாடல் - 35

போர்ப் பாட்டு

புரை சால் மைந்த நீ ஓம்பல் மாறே
உரைசான்றனவால் பெருமை நின் வென்றி
இருங் களிற்று யானை இலங்கு வால் மருப்பொடு
நெடுந் தேர்த் திகிரி தாய வியன் களத்து
அளகுடைச் சேவற் கிளை புகா ஆரத்
தலை துமிந்து எஞ்சிய மெய் ஆடு பறந்தலை
அந்தி மாலை விசும்பு கண்டன்ன
செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்து
பேஎய் ஆடும் வெல்போர்
வீயா யாணர் நின் வயினானே

துறை	-	*வாகைத் துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*மெய் ஆடு பறந்தலை*

உரை

போர்க்களத்தின் உட்பகுதியில் அந்தி மாலையில் காணப்படும் சிவந்த வானைப் போலத் தோன்றுகின்ற செவ்வொளி பொருந்திய இரத்தம் பாய்ந்து பரவி இருந்தது. அத்தகைய குருதி மன்றத்தில் பேய்கள்

ஆடின. பாணர் சார் உறவினர்களாகத் துணங்கையர், விறலியர், பாடினியர் இம் மூன்று வகைக் கலைஞர்களும் போர்ப் பாசறையில் இணைந்தே விளங்குகின்றனர். பாணர் மற்றும் அவர் சார்ந்த உறவினர் போர்க்களத்தே காயப்பட்ட வீரர்களை அப்புறப்படுத்துவதும் அவர்களுக்கு மருத்துவச் சேவை செய்வதும் ஆன பணியைச் செய்துள்ளனர் என உணர முடிகிறது. இறந்துபட்ட வீரர்களுக்கு ஈமச்சடங்கு நிகழ்த்துவோராகவும் இருந்துள்ளனர் என எண்ண முடிகிறது.

சிதறுண்ட உடல்களை அப்புறப்படுத்தும் பணியைச் செய்யும் போது காயப்பட்ட உடல்களுக்கு உடனடி மருத்துவச் சேவையும் செய்வோராகப் பாணர்கள் இருந்திருக்க வேண்டும். ஏன் எனில் மதுரை நாயக்கனின் படையில் போர் வீரர்களாக இருந்தவர்கள் பாலமு கொண்ட வம்சத்தினர் இவர்களின் வீரவரலாற்றைக் குலப் பாடகன் தாசரி (பிற்காலப் பாணர் சமூகம்) எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பாடுவான்.

இந்தக் குலப் பாடகன் தாசரி வீரர்களுடன் போர்க்களத்திற்குக் கூடவே சென்று போருக்கு முன் வீரர்களுக்கு உணர்ச்சியூட்டுவான். போர்க் களத்தில் இறப்பவர்களை அடக்கம் செய்யும் போதும் பாடுவான்.[1]

இச்செய்திவழியே பாணர் மற்றும் பாடினி சமூகம் மன்னரைப் பாடுவது மட்டுமின்றி வீரர்களையும் பாடியுள்ளது. இப்பாடலில் **போர்க்களத்தில் உணர்ச்சி வயப்பட்டு இறந்த வீரனைப் புகழ்ந்தோ பாடி ஆடி ஈமச்சடங்கு செய்யும் பாணர்களது உறவுக்காரப் பெண்களை இங்குப் பேய்மகள் எனச் சுட்டியிருப்பது** எண்ணுதற்குரியதாகும்.

1. பாணர் மரபுப் பழங்குடிப் பாணர், வீரயுகப் பாணர், பிற்காலப் பாணர்கள், திராவிட இனவரையறை நோக்கு.முனைவர் பக்தவச்சலபாரதி.18/11/2009 கலாநிதி கைலாசபதி நினைவுப் பேருரை.

பாடல் - 36

கூளியர் போர் நடனம்

வீயா யாணர் நின் வயினானே
தாவாதாகும் மலி பெறு வயவே
மல்லல் உள்ளமொடு வம்பு அமர்க் கடந்து
செரு மிகு முன்பின் மறவரொடு தலைச் சென்று
பனை தடி புனத்தின் கை தடிபு பல உடன்
யானை பட்ட வாள் மயங்கு கடுந் தார்
மாவும் மாக்களும் படு பிணம் உணீஇயர்
பொறித்த போலும் புள்ளி எருத்தின்
புன்புற எருவைப் பெடை புணர் சேவல்
குடுமி எழாலொடு கொண்டு கிழக்கு இழிய
நிலம் இழி நிவப்பின் நீள் நிரை பல சுமந்து
உரு எழு கூளியர் உண்டு மகிழ்ந்து ஆட
குருதிச் செம் புனல் ஒழுகச்
செருப் பல செய்குவை வாழ்க நின் வளனே

துறை - களவழி
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வாள் மயங்கு கடுந் தார்

உரை

இந்தப் பாடல் அடிகள் இப்பாடலைக் கலையியல் நோக்கில் சொல்ல முற்படவைக்கின்றன. இப்பாடலில் இதுவரை கண்டுள்ளவாறு பாணனோ அவன் சார்ந்த சுற்றத்தாரோ பதிவு பெற்றிருக்கவில்லை. பாணர் பாடக் கூத்தர்கள் ஆடச் சேரனின் புகழ், வீரம், சிறப்பு, நாடு, மக்கள், செல்வம், வணிகம், நிலவளம், வறுமை கொண்டிருந்த சேரிகள் எனச் சொல்லப்பட்டிருந்த நிலைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டிருந்த போர்க்களக் காட்சி மட்டும் மையப்படுத்திக் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கிறது.

வெட்டுண்டு கிடக்கும் யானையின் துதிக்கைகள், பனை மரங்கள் எனச் சாய்ந்து கிடக்கின்றன. போரில் பயன்படுத்தப்பட்ட குதிரைகளும் களிறுகளும் இறந்துபட்டுக்கிடக்கும் சடலங்களின் ஊடாக வெட்டப்பட்ட உடல்களாக இறந்து கிடக்கின்றன. வீரர்களின் சடலங்கள் குருதி வெள்ளத்தில் மிதக்கின்றன. நல்ல விருந்தெனக் கழுகுகள் மேய்ந்து பறந்து திரிகின்றன. கூளியர் எனும் பேய்மகளிர் மகிழ்ந்து ஆடித்திரிகின்றனர் எனப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பேய்மகளிர் யார்? பேய் மகளிர் ஆட்டம் எத்தன்மை வாய்ந்தது எனக் குறிப்பிடுவதனால் அதுகுறித்து விவாதிக்க வேண்டியுள்ளது. இந்தப் பாடலுக்கான துறை களவழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது .களவழிக்கான விளக்கம் மிகுதியாகக் கட்டுரைப்பதால் நம்பகத் தன்மைக்கு உகந்த செய்திகள் இல்லாதவை எனப் பொருள் கொள்ள முடிகிறது. அதாவது உயர்வு நவிற்சியாய் இவற்றை எண்ண இடம் இருக்கிறது. எனினும் பேய் மகளிர் குறித்த செய்திகள் நம் பழந்தமிழ் இலக்கியத்தில் பரவலாகச் சொல்லப்பட்டிருப்பதன் வழியே நாம் ஆராய்ந்து பார்க்கும் போது ஒரு சில உண்மைகளின் அடிநிலைகளில் எழுப்பப்பட்ட காட்சிகள் என மனங்கொள்ளவும் இடம் அளிக்கிறது. போர்க்களக் காட்சிகள் நம்பப் படுபவையாகச் சித்திரிக்கப் படுகின்றன. நிலப்பகுதியின் ஒரு பகுதி பிணங்களின் குவிப்பால் தாழ்ந்து போய் உள்ளது என்பதால் அவை நம்புவதற்கு இல்லை. பேய் பிடித்து ஆடும் பெண்களைக் குக்கிராமங்களில் இன்னும் நாம் காண முடிகிறது. இரத்தக் காட்டேரி என்றும் வழக்கில் இன்றளவும் கூறப்படுவதைக் கவனிக்க முடிகிறது. தமிழகத்தின் எண்ணற்ற கிராமங்களில் இன்றைக்கும் சடங்குகள்

செய்யும் பூசாரிகள் கோழி, ஆடு, மாடு, பன்றி போன்றவற்றைப் பலி செய்து அவற்றின் இரத்தங்களைக் குடித்துப் பூசை செய்யும் நிகழ்ச்சிகள் குல தெய்வங்களின் சடங்குகளில் இன்றளவும் நாம் காணக்கிடக்கும் நிகழ்ச்சிகளாக உள்ளன.

குருதி சிந்திய அல்லது குருதி பிசைந்த சோறு அல்லது தானியம் போன்றவற்றை உண்ணும் பூசாரிகளை நாம் இன்றும் நாட்டுப் புறங்களில் காண முடிகிறது. மசானக் கொள்ளை என்றும் மயானக் கொள்ளை என்றும் திருவிழாக்களில் நிகழ்த்தப்படும் குருதி சிந்திய உடல்களை மேனிகளில் அணிந்து ஆடுகின்ற காட்சிகளை ஆண்டு தோறும் தமிழகத்தின் பல இடங்களில் காண நேரிடுகிறது. வடநாட்டில் ஆகோரிகள் என்று சொல்லத்தக்கவர்கள் எரியும் பிணங்களைத் தின்பவர்களாக இன்றளவும் நாம் ஊடகங்களின் வழி அறிய நேரிடுகிறது. மேற்சுட்டிய நடைமுறை நிகழ்வுகளை வைத்து எண்ணிப் பார்க்கும் போது **உணர்ச்சி வெறியால் உந்தப்பட்டு இரத்தம் சிந்திய பிணங்களோடு உறவாடிய பாணர் மகளிர் தொல்குடிச் சமூகத்தில் விளங்கி உள்ளனர் எனக் கணிக்க முடிகிறது.**

பேய்மகளின் துணங்கைக் கூத்து

உலறிய கதுப்பின் பிறழ பல பேழ் வாய்
சுழல் விழிப் பசுங் கண் சூர்த்த நோக்கின
கழல் கண்கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெரு முலை அலைக்கும் காதின பிணர் மோட்டு
உரு கெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல்
கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந் தலை
ஒண் தொடித் தடக் கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறற் களம் பாடி தோள் பெயரா
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க

(திருமுருகு: 47–56)

அசுரரை அழித்த போர்க்களத்தில் பேய்மகள் துணங்கையாடும் காட்சி திருமுருகாற்றுப் படையில் சொல்லோவியமாக்கப்பட்டுள்ளது.

நிணம் வாய்ப் பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்

(மதுரைக் காஞ்சி: 25–26)

பிணங்கள் குவிந்த களத்தில் பேய்மகள் எனத் துணங்கையாடும் துணங்கையர் அதாவது பாணர் மகளிர் துணங்கையாடும் காட்சி மதுரைக் காஞ்சியில் கூறப்பட்டுள்ளது.

நம்புதற்குரிய பேய்மகளிர் என ஒருநிலையில் வைத்து எண்ணத் தக்கவாறு காட்சிகள் பல பதிற்றுப்பத்தின் பல இடங்களில் நாம்காண நேரிட்டாலும் பல்வேறு இடங்களில் நம்புதற்கு அற்ற பேய் மகளிர் குறித்த காட்சிகள் பலவும் பதிற்றுப்பத்தில் பல பாடல்களில் பதிவு பெற்றிருப்பதை நாம் மனங் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கவைத் தலைப் பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க
(பதிற்றுப்பத்து : 13 – 15)

மேற்குறிப்பிட்ட பாடல் அடி வழியே பல பேய்கள் போர்க்களத்தில் திரிந்தன என்றும் ஒரு பேயை மற்றோர் பேய் தூக்கிச் சென்றது என்றும் காட்டப்படுகிறது. இந்தப் பாடல் அடிகளுக்கு உரை எழுத வந்த உரையாசியர் நச்சினார்க்கினியர் கழுது என்பது பேய் என்றும் பேயில் இது ஒரு சாதி என்றும் விளக்கம் தருகிறார். பேய்கள் குறித்து இவரும் மற்றும் பலரும் பேய்கள் குறித்த நம்பிக்கையின் அடிப்படையில் பொருள் தருகின்றனர். பேய் என்பது ஒன்று இல்லை எனப் பகுத்தறிவுச் சிந்தனையோடு எண்ணிப்பார்ப்பவருக்கும் நம்புதற்கும் ஏற்றதாக அமையாது. கலிங்கத்துப் பரணி போன்ற சிற்றிலக்கியங்களில் பேய் குறித்த பல விவரணங்கள் தரப்படுகின்றன. இந்த விவரணங்கள் நம்பிக்கை கொள்வதற்கு ஏற்புடையனவாக இல்லை.

இவ்வாறு சங்க இலக்கியப் பாடல் பிற அடிகளைத் துணங்கையரோடு பொருத்தி எண்ணிப் பார்க்கும் போது **தொல்குடிச் சமூகத்தில் பேய்மகளிர் எனக் கருதும் பாணர் சுற்றத்தார் துணங்கையர் போன்ற ஆட்டமாடும் கலைஞர்கள் ஈமச்சடங்கு செய்யும் முகத்தான் பிணக்குவியல் நிறைந்த போர்க்களங்களில் திரிந்தமை உயர்வு நவிற்சியாகப் புலவர்களால் கூறப்பட்டுள்ளது.**

பாடல் - 37

வாய்மொழிப் பாட்டு

வாழ்க நின் வளனே நின்னுடை வாழ்க்கை
வாய்மொழி வாயர் நின் புகழ் ஏத்த
பகைவர் ஆரப் பழங்கண் அருளி
நகைவர் ஆர நன் கலம் சிதறி
ஆன்று அவிந்து அடங்கிய செயிர் தீர் செம்மல்
வான் தோய் நல் இசை உலகமொடு உயிர்ப்பத்
துளங்கு குடி திருத்திய வலம் படு வென்றியும்
மாஇரும் புடையல், மாக்கழல், புனைந்து
மன் எயில் எறிந்து மறவர்த் தரீஇ
தொல் நிலைச் சிறப்பின் நின் நிழல் வாழ்நர்க்குக்
கோடு அற வைத்த கோடாக் கொள்கையும்
நன்று பெரிது உடையையால் நீயே
வெந்திறல் வேந்தே இவ் உலகத்தோர்க்கே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வலம் படு வென்றி

உரை

வாய்மை போற்றுகின்ற சான்றோர் புகழ்வதற்கு உரிய மன்னன் பகைவர்க்குத் துன்பத்தைத் தந்தும் பாணர் போன்றோர்க்கு நல்ல

ஆபரணங்களைத் தந்து மகிழ்வித்தும் ஆட்சி செலுத்தக் கூடிய தலைவன் பகை மன்னர்களை அடிபணியச் செய்து அவர்தம் மதில்களை அழித்து எதிரியின் படைகளைச் சிறைபடுத்தித் தன் கீழ் வாழும் மக்களுக்கு ஆதரவளித்து வளமான வாழ்க்கை வாழச் செய்கின்ற வேந்தன் எனுமாறு பாணனின் பாட்டின் வழியே புகழப்படுகிறான். வளங்களையும் வீரச் செறிவுகளையும் பகைவர் வீழ்ச்சியைப் பற்றி எல்லாம் பதிவு செய்துள்ள பாணனின் பாடலில் வறுமையால் வாடுகின்ற குடிகளையும் கொண்டுள்ள வேந்தன் எனவும் பாணன் இரந்துண்ணும் வாழ்க்கையை மேற்கொள்பவனாக உள்ளான் எனவும் வறுமையில் வாடும் குடிகளும் மன்னனை எதிர்நோக்கி உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளமை இங்கு நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. உலகம் அழியும் வரை உன்புகழ் வாழும் எனும் வாழ்த்துடன் பாணன் பாடல் முடிகிறது.

நன்று பெரிது உடையையால் நீயே
வெந்திறல் வேந்தே இவ் உலகத்தோர்க்கே

பாணன் வாழ்த்திப் பாடும் பண்பினை உடையவனாக விளங்குகின்றான். பாணனுடைய பாடல்களிலே காணலாகும் பொதுப் பண்புகளை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. நிலவாழ்த்து, மன்னன் வாழ்த்து, மக்கள் வாழ்த்து என்பன போன்ற வாழ்த்துக்கள் பாணனின் பாடல்களில் பரவலாக விரவிக் கிடப்பதைக் குறிப்பாகப் பாடாண் திணைப் பாடல்களில் தவிர்க்க இயலாத பொதுப் பண்புகளாகக் காணமுடிகிறது. வறுமையைச் சந்திக்கும் குடிகளைப் பெற்றிருந்த போதிலும்கூடச் செல்வங்கள் பலவற்றுக்கும் புகழ் அனைத்திற்கும் சொந்தக்காரனாக மன்னனை வாழ்த்திப் பாடுவது பாணனின் பண்பு நிலையை எடுத்துக் காட்டுகிறது. செந்துறைப் பாடாண்பாட்டு, இயன் மொழி வாழ்த்து, வஞ்சித்துறைப் பாட்டு, நாட்டு வாழ்த்து, தும்பையரவம், வாகைத்துறைப் பாடாண்பாட்டு, களவழி, வாகை, காட்சி வாழ்த்து, பரிசில் துறைப் பாடாண்பாட்டு, காவன் முல்லை போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த பாடல்கள் அனைத்தும் தலைவனைப் போற்றிப்பாடுதல் எனும் பொதுப் பண்புகள் கொண்டு விளங்குவதைப் பதிற்றுப்பத்தில் காணலாகும் எண்பது பாடல்களிலும் உய்த்துணர முடியும் .

பாணனின் பாடலில் பனை ஓலையால் செய்யப்பட்ட காதணிஅணிந்துள்ள வேந்தன் எனப்பதிவு செய்திருக்கக் காணமுடிகிறது. மேலும் பெரிய வீரக்கழலையும் அணிந்துள்ளான் .

"மாஇரும் புடையல், மாக்கழல்,புனைந்து"

பாணருக்கு ஆபரணங்களை வழங்கக் கூடியவனாகப் பாடலில் சொல்லக்காண்கிறோம்.

"நகைவர் ஆர நன் கலம் சிதறி"

குறிப்பிட்ட சில நிலப்பகுதி வாழ்நிலப் பகுதிகளைக் கொண்டு ஆட்சி நடத்தும் குறுநில மன்னனாகவே இவ்வேந்தனை நாம் காண நேர்கிறது. பனந்தோடு அணிந்த வேந்தன் ஆபரணங்களைப் பெறும் பாணன் எனும் முரண்கள் இயல்பு நிலையை உணர்த்தத் தக்கதாக அமைகின்றன. பாணருக்குத் தரும் பரிசில்கள் விதந்தோதப்படுவது பலபாடல்களில் காணமுடிகிறது. யானை, ஆபரணங்கள், பொன்மணிகள் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் பரிசிலாகக் கொடுக்கப்படுகின்றன என்ற செய்தி பாணன் பாடலில் பதிவு செய்யப்படினும் வாழ்த்தின் உச்சத்தில் உதிரும் வார்த்தையாகவே நாம் பொருள் கொள்ள நேர்கிறது.

பாடல் - 38

தருக என விழையாத தகைமை

உலகத்தோரே பலர்மன் செல்வர்
எல்லாருள்ளும் நின் நல் இசை மிகுமே
வளம் தலைமயங்கிய பைதிரம் திருத்திய
களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல்
எயில் முகம் சிதையத் தோட்டி ஏவலின்
தோட்டி தந்த தொடி மருப்பு யானைச்
செவ் உளைக் கலிமா ஈகைவான்கழல்
செயல் அமைகண்ணிச் சேரலர் வேந்தே
பரிசிலர் வெறுக்கை பாணர் நாள் அவை
வாணுதல் கணவ மள்ளர் ஏறே
மை அற விளங்கிய வடு வாழ் மார்பின்
வசை இல் செல்வ வானவரம்ப
இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருக என விழையாத் தா இல் நெஞ்சத்து
பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கு என வாழ்தி நீ ஆகன் மாறே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - பரிசிலர் வெறுக்கை

உரை

குறுநில மன்னனாக அறியப்படும் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் தன் பெயருக்கு ஏற்பக் களங்காய்களால் ஆன தலைக் கவசம் பனை மற்றும் செடிகொடிகளில் இருந்து எடுக்கப்பட்டவைகளினால் செய்யப்பட்ட கீரிடம் எனும் முடி தரித்துள்ளான். இவனுடைய அவைக்களத்தில் அனைத்து நிலப் பகுதிகளுக்கும் நடைப் பயணம் மேற்கொண்ட பாணன் வீற்று இருக்கின்றான் .

களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல்
எயில் முகம் சிதையத் தோட்டி ஏவலின்
தோட்டி தந்த தொடி மருப்பு யானை
செவ் உளைக் கலிமா ஈகைவான்கழல்
செயல் அமைகண்ணிச் சேரலர் வேந்தே
பரிசிலர் வெறுக்கை பாணர் நாள் அவை

மக்களைப் பசி இன்றி வாழ்விக்கத் துணை நிற்க வேண்டும் எனப் பாணன் மன்னனை வேண்டிக் கொள்கிறான். மன்னன் தரும் பொருளைப் பாணர் இனத்தார் தத்தம் தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து உண்டு வாழ்ந்து கொள்ள முடியும் எனப் பாணனின் கூற்று அமைகிறது. மன்னனின் தலையாய பண்பு என்பதே இல்லாதவர்க்கு வாரி வாரி வழங்குவது ஆகும். மன்னரின் ஈகைக் குணத்தைப் போற்றிப் பாடிப் பாடி வளர்க்கும் பண்பினைப் பாணன் தொடர்ந்து மன்னன் அருகில் இருந்தவாறு உளவியல் ரீதியில் மன்னனைப் பக்குவப்படுத்திக் கொண்டு இருக்கிறான். பாணன் சமூகம் மன்னன் குடையின் கீழ் அண்டிப் பிழைக்கும் பல்வேறு சமூகப்பிரிவுகளில் ஒன்றாகவே விளங்குவதை நாம் உணர்கிறோம் .

பாடல் - 39

கவினுறு மணிமகுடம்

பிறர்க்கு என வாழ்தி நீ ஆகன் மாறே
எமக்கு இல் எனனார் நின் மறம் கூறு குழாத்தார்
துப்புத் துறைபோகிய வெப்புடைத் தும்பை
கறுத்த தெவ்வர் கடி முனை அலற
எடுத்து எறிந்து இரங்கும் ஏவல் வியன் பணை
உரும் எனஅதிர்பட்டு முழங்கி செரு மிக்கு
அடங்கார் ஆர் அரண் வாடச் செல்லும்
காலன் அனைய கடுஞ்சின முன்ப
வாலிதின் நூலின் இழையா நுண் மயிர் இழைய
பொறித்த போலும் புள்ளி எருத்தின்
புன் புறப் புறவின் கண நிரை அலற
அலந்தலை வேலத்து உலவைஅம் சினைச்
சிலம்பி கோலிய அலங்கற் போர்வையின்
இலங்கு மணி மிடைந்த பசும் பொன் படலத்து
அவிர் இழை தைஇ மின் உமிழ்பு இலங்கச்
சீர் மிகு முத்தம் தைஇய
நார்முடிச் சேரல் நின் போர் நிழல் புகன்றே

துறை - வாகை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ஏவல் வியன் பனை

உரை

நார்முடிச் சேரலின் போர் முறை குறித்தும் போர் முடிந்த பின்னரும் தொடர்ந்து வெவ்வேறு நாடுகளுடன் போர் செய்யும் ஆயத்த தன்மையைக் குறித்தும் சிறப்பித்துக் கூறும் பாடலாக இது அமைகிறது.ஏவல் வியன் பனை என்பதன் வழியே மேன்மேலும் படைகளைப் போர் முனைக்கு அனுப்பியவன்.தொடர்ந்து போர் முரசினைத் தன்குறுந்தடியால் அடித்துப் போர் வீரர்களுக்கு ஆணை செய்து கொண்டே திகழும் நார் முடிச் சேரனிடத்தே வந்துள்ள ஒரு பாணன் பாடிப் பரிசில் பெறும் நோக்கில் அமைந்துள்ள இப்பாடலில் மிக நுட்பமான கலையியல் பார்வையும் அமைந்துள்ளமை கவனிக்கத் தகுந்தது.

பொறித்தது போன்ற புள்ளிகளையுடைய கழுத்தினை-யுடையதும் முதுகினையுடையதுமான புறாக் கூட்டங்களை வரிசையாக வலைப்படுத்த வேண்டிச் செய்துள்ள வலையில் அகப்பட்டுக் கொண்ட புறாக்கள் அலறும். அவைகளைப் போலத் தும்பைப் பூவைச் சூடிப் போரிடும் போது அகப்பட்ட வீரர்களின் கூக்குரல் ஒப்புமையானது. நார் முடிச் சேரன் அணிந்திருந்த முடி குறித்து விளக்கியுள்ள பாங்கு இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

சிதைந்து போன கிளையைக் கொண்ட வேலமரம் தன் இலைகளை உதிர்த்து நிற்கிறது. அவ்வேல மரத்தின் சிறிய கிளையில் சிலந்தி வலை கட்டியுள்ளது. அவ்வலைக் குறித்து

அலந்தலை வேலத்து உலவைஅம் சினை
சிலம்பி கோலிய அலங்கற் போர்வையின்

எனப் பாடல் குறிக்கிறது. வெண்மையான நூலால் இழைக்காமல் நுண்ணியமயிரைப் போல இழைகளால் பின்னிய வலையாக அமைந்து மென்மையானபோர்வை போல் விளங்குகிறது

முடி. அம்முடியில் நூலிலே கோர்த்த ஒளியை உமிழும்படியான முத்துகள் - சேரன் அணிந்துள்ள மணிமுடியானது, மென்மையானதும், அழகியதும், மணிகள் கோர்வை செய்து தொங்கவிடப்பட்டதுமான, நிலையில் அமைந்துள்ளது. இப்பாடலில் மன்னனின் வன்மை குறித்து, போர்த் தொடர்புடைய செய்திகள், தும்பை, முரசு, குறுந்தடி, பகைமன்னர்களின் அழிந்து பட்ட அரண்கள், துப்புத்துறைத் தெவ்வன், வலிமை கருதிப் போர் புரியும் மன்னர், போர், கடி எனும் அச்சம், என்பன போன்ற சொற்கள் அமைந்த பாடல் அடிகள் உணர்த்தும் அதே வேளையில் புள்ளிகள் கொண்ட புறாக்கூட்டம், சிலந்தி மென்மையான நூல் நுண்ணிய மயிர் பின்னிய அசைந்தாடும் வலை என்பன போன்ற மென்மை பயக்கும் புனைவுச் சொற்களும் கொண்டு வன்மையும் மென்மையும் கொண்ட குணத்திற்குச் சொந்தக்காரன் என நார் முடிச் சேரனது வாய்மொழிப் பாடகன் பாடிய சிறப்பு பெருமைக்கு உரியதாகும்.



பாடல் - 40

நார்முடிச் சேரலும், சில் வளை விறலியும்

போர் நிழல் புகன்ற சுற்றமொடு ஊர்முகத்து
இறா அலியரோ பெரும நின் தானை
இன் இசை இமிழ் முரசு இயம்பக் கடிப்பு இகூஉ
புண் தோள் ஆடவர் போர் முகத்து இறுப்ப
காய்த்த கரந்தை மாக் கொடி விளை வயல்
வந்து இறை கொண்டன்று தானை அந்தில்
களைநர் யார் இனிப் பிறர் ? எனப் பேணி
மன் எயில் மறவர் ஒலி அவிந்து அடங்க
ஒன்னார் தேயப் பூ மலைந்து உரைஇ
வெண் தோடு நிரைஇய வேந்துடை அருஞ் சமம்
கொன்று புறம் பெற்று மன்பதை நிரப்பி
வென்றி ஆடிய தொடித் தோல் மீ கை
எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்துப்
பொன்அம் கண்ணிப் பொலந் தேர் நன்னன்
சுடர் வீ வாகைக் கடி முதல் தடிந்த
தார் மிகு மைந்தின் நார் முடிச் சேரல்
புன் கால் உன்னம் சாயத் தெண் கண்
வறிது கூட்டு அரியல் இரவலர்த் தடுப்பத்
தான் தர உண்ட நனை நறவு மகிழ்ந்து

நீர் இமிழ் சிலம்பின் நேரியோனே
செல்லாயோதில் சில் வளை விறலி
மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து
மெல் இயல் மகளிர் எழில் நலம் சிறப்பப்
பாணர் பைம் பூமலைய இளையர்
இன் களிவழாஅ மென் சொல் அமர்ந்து
நெஞ்சு மலி உவகையர் வியன் களம் வாழ்த்தத்
தோட்டி நீவாது தொடி சேர்பு நின்று
பாகர் ஏவலின் ஒண் பொறி பிசிரக்
காடு தலைக் கொண்ட நாடு காண் அவிர் சுடர்
அழல் விடுபு மரீஇய மைந்தின்
தொழில் புகல் யானை நல்குவன் பலவே

துறை	-	*விறலியாற்றுப்படை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*நாடு காண் அவிர் சுடர்*

உரை

விறலியாற்றுப்படை எனும் துறையில் அமைந்த இப்பாடலின் 32 வரிகளில் முதல் 20 வரிகளில் சேர நாடு கொண்டுள்ள வளம், செல்வம், வீரர்கள், நன்னன் மற்றும் நார்முடிச்சேரல் போன்றோரின் செய்திகள் இடம் பெறுகின்றன. கடைசி 12 வரிகள் விறலியர் குறித்தும் பாணர் குறித்தும் பேசப்படுபவையாக அமைகின்றன.

பதிற்றுப்பத்தில் காணலாகும் அனைத்துப் பாடல்களிலும் சேரரின் பெருமைகளை எடுத்துக் கூற முன்வருவோர் பாணர், விறலியர், கோடியர், வயிரியர் போன்ற கலைஞர் பெருமக்களே எனும் கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்ய இப்பாடலும் துணை செய்கிறது. ஒரு பாணன் தன் சக இனத்தார்க்கு அதாவது பிற பாணர்களுக்கும் பிற விறலியருக்கும் சேரனின் புகழினை எடுத்துரைப்பதாகவும் அமைகிறது.

செல்லாயோதில் சில் வளை விறலி
மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து

மெல் இயல் மகளிர் எழில் நலம் சிறப்பப்
பாணர் பைம் பூமலைய இளையர்
இன் களிவழாஅ மென் சொல் அமர்ந்து

'செல்லாயோதில் சில் வளை விறலி' எனத் தொடங்கும் இந்தப் பாடலடியில் சில வளையல்கள் அணிந்துள்ள விறலியே சேரமன்னனிடம் சென்று அவன் புகழ் பாடினால் வேங்கை மர வண்ணத்தை ஒத்த சிறப்பு வாய்ந்ததும் மதிப்பு வாய்ந்ததுமான பல அணிகலன்களைப் பெறலாம் என ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது.

நெஞ்சு மலி உவகையர் வியன் களம் வாழ்த்தத்
தோட்டி நீவாது தொடி சேர்பு நின்று
பாகர் ஏவலின் ஒண் பொறி பிசிரக்
காடு தலைக் கொண்ட நாடு காண் அவிர் சுடர்
அழல் விடுபு மரீஇய மைந்தின்
தொழில் புகல் யானை நல்குவன் பலவே

மேலும் பாடும் வல்லமை கொண்ட பாணர்கள் சேரனின் வெற்றிச் சிறப்புக்களை மற்றும் வெற்றிவாகையைப் பெற்றதனால் உற்ற உவகையை அளித்த போர்க்களத்தை விவரித்து வெற்றிச் சிறப்பினை விதந்தோதினதால் தீப்பொறிக்கு ஒத்த கோபக் கனல்களைக் கண்களில் தாங்கியுள்ள யானைகளைப் பரிசளிப்பான். ஆகவே பாணர்களே நன்னனுக்கும் நார்முடிச் சேரலுக்கும் இடையே நடந்த போரினையும் நார்முடிச்சேரல் பெற்ற வெற்றிச் சிறப்புக்களையும் பாடி இசைத்து விறலியர் துணைகொண்டு ஆட்டம் ஆடிக் கலைநிகழ்ச்சி நடத்திக் காட்டினால் போற்றுதற்குரிய அணிகலன்களும் யானைகளும் பரிசில்களாகப் பெறலாம் என ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

பாணர்களும் விறலியர்களும் ஓர் இனமாக அல்லது ஓர் இனக்குழுவாக வாழ்ந்துள்ளனர் என உணர முடிகிறது. இவர்கள் மன்னர்களைச் சார்ந்து பாடியும் ஆடியும் கலைநிகழ்ச்சிகள் நடத்தி மன்னர்களிடம் பரிசில் பெற்று அப்பரிசில்களை ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தினர் என்றும் அறிய முடிகிறது. மன்னர்களே அன்றிப் பிறரைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை வாழ்ந்துள்ள பதிவுகள் நமக்குப் பெரிதும் கிடைக்கவில்லை. மாறாக, மன்னர்களின் புகழையும் வெற்றிச்

சிறப்புகளையும் பாடி ஆடிக் கலைநிகழ்ச்சிகள் நடத்தும் இக்கலைஞர்கள் மன்னர்களிடம் பெற்ற பரிசில்களோடு இருந்துவிடாமல் மன்னர்களின் வெற்றிச் சிறப்புக்களை மக்களிடமும் எடுத்து விளக்கிச் சொல்லும் ஊடகக்காரர்களாகவே உள்ளனர் என்பதனை உணர முடிகிறது. இன்னும் சொல்லப் போனால் மக்களின் பிரச்சினைகளை மன்னனுக்கும் மன்னனின் ஆளும் திறனை மக்களுக்கும் கொண்டு செல்லும் பாலமாகக் கலைஞர்களான பாணர்களும் விறலியர்களும் இருந்தமை தெள்ளத் தெளிவு.

பாணர்கள் மற்றும் விறலியர்கள் அவைக்களங்களில் பாடி ஆடி வாழ்த்தியும் பாராட்டியும், சிறப்புக்களை விதந்தோதியும் மன்னர் முன் அதாவது மன்னனை முன்னிலைப் படுத்திய பலர் சூழ்ந்த அவைக்களத்தில் பாடி ஆடிக் கலைநிகழ்ச்சி நிகழ்த்துவது என்பது ஒருவிதச் சடங்கு நிறைவேற்றுதல் முறையாக இருந்துள்ளமையால் தவிர்க்க இயலாமல் பாணர் மற்றும் விறலியர் குறித்த பதிவுகள் புலவனின் பாடலில் பதிவுக்குள்ளாக்கப்படுகின்றன.



நான்காம் பத்து - பதிகம்

செருப்பல செய்த நார்முடிச் சேரலாதன்

ஆராத் திருவின் சேரலாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன் முனை
பனிப்பப் பிறந்து பல் புகழ் வளர்த்து
ஊழின் ஆகிய உயர் பெருஞ் சிறப்பின்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள் பூங்கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து அவன்
பொன் படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம் புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்கு குடி திருத்திய வலம் படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக்
காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார் பத்துப்பாட்டு.

பெயர்கள்

கமழ் குரல் துழாய், கழை அமல் கழனி, வரம்பு இல் வெள்ளம், ஒண் பொறிக் கழற் கால், மெய் ஆடு பறந்தலை, வாள் மயங்கு கடுந் தார், வலம் படு வென்றி, பரிசிலர் வெறுக்கை, ஏவல் வியன் பனை, நாடு காண் அவிர் சுடர்

உரை

பூழி நாட்டின் மீது படை எடுத்து அந்நாட்டைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டவனாகவும் நன்னனின் நாட்டையும் தன் போரின் வலிமையால் அழித்து அவனது காவல் மரத்தினை வெட்டித் தன்வயப்படுத்தியவனாகவும்,பல போர்களைச் செய்தவனும் பல

வேள்விகளைச் செய்தவனுமாகவும் நார்முடிச் சேரல் காட்டப்படும் அதே நேரத்தில் மக்கள் தாங்கள் உழைப்பைச் செலுத்தி வயற்களங்களில் நெல்விளைய வைத்து விளைந்த பொருட்களைத் துய்க்கும் தருணத்தில் பகைவரது நாட்டைத் தன்வயப்படுத்தி அவ்விளை பொருட்களைக் கொள்ளையடித்துத் தன் நாட்டு வளங்களை மேம்பாடு அடையச் செய்தவனாயும் காட்டப்படுகிறான்.

களவேள்வியைச் செய்தவன் என அறியப்படுவதில் இருந்து ஆரியச் செல்வாக்கினை மெல்ல உள்வாங்கியவன் என்றும் நாம் அறிய முடிகிறது. பூழி நாட்டு மன்னனையும் நன்னன் நாட்டையும் பல சிற்றரசர்களையும் வென்றவனாகவும் காட்டப்படுகிறான்.

பத்துப்பாட்டின் தலைப்புகளையும் வைத்துப் பாடல் பொருளை அறிவோமாயின் வைதீக மரபு கொண்ட கூறுகள் பதிவு செய்யப்பட்ட பாடல்கள் ஒருசில இப்பத்துப் பாடல்களில் காணப்படுகின்றமை புலனாகும். ஆடு பறந்தலை, சில்வளை விறலியின் பாடலுக்கு உகந்த நாயகன் அமைதியான சூழலில் இருந்து விடுபட்ட நிலையில் எப்போதும் கடுஞ்சினத்துடன் இருப்பவன் என்னும் அடை மொழிக்கு இணங்கத் தும்பைத் தெவ்வராக எப்போதும் போரை எதிர் நோக்கிய வாழ்க்கை நடத்தியவனாக, வாய்மொழி வாயர் புகழ்ந்து பாடும் பாடலுக்கு உகந்தவனும் ஆன தன்மைகளைக் கொண்டு காணும் போது சிறு குடி வேந்தர்களைப் போரிட்டுத் தன் வயப்படுத்தித் தன் நாட்டையும் தன் நாட்டின் எல்லைகளையும் விரிவாக்கும் நோக்கோடு போரிட்ட சிறுகுடி மரபின் கூறுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குபவனாகவும் அறியப்படுகிறான். இரு திறம் அதாவது ஆரிய வழி அறம் சார் வாழ்க்கை மற்றும் சிறுகுடி வழிவந்த மரபு சார் வாழ்க்கை என இருதிறங்களும் இப்பத்துப் பாடல்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளமையைக் காண முடிகிறது. பொதுவாகக் காணும்போது இப்பத்துப் பாடல்களும் ஓர் இயல்புத் தன்மை கொண்டனவாக இல்லை. வெவ்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த சேரர் குடியினர் வழிவந்த வெவ்வேறு வேந்தர்களின் பதிவுகளைப் காப்பியாற்றுக் காப்பியன் வெவ்வேறு காலக்கட்ட மன்னர்களை அவர்தம் சிறப்பியல்புகளை ஒரு காலக்கட்டத்து வேந்தனாக வியப்புக்குரியதாகக் காட்டி இருப்பதாக அறிய முடிகிறது.பதிகம் பாடியவரும் இதே கருத்தைக் கொண்டு பதிவு செய்திருப்பதும் நம்மால் உணர முடிகிறது.

பரணர்

இயற்றிய

ஐந்தாம் பத்து

பாடல் - 41

வசை இல் நெடுந்தகையைக் காணவந்த இசைப்பாடகன்

புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல்யாழ் இளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண் அறுத்து இயற்றிய தூம் பொடு சுருக்கி
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுள் பழிச்ச
மறப்புலிக் குழூஉக் குரல் செத்து வயக் களிறு
வரை சேர்பு எழுந்த சுடர் வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ் சினை வாங்கிப் பிளந்து தன்
மா இருஞ்சென்னி அணிபெற மிலைச்சிச்
சேஎர் உற்ற செல்படை மறவர்
தண்டுவடை வலத்தர் போர் எதிர்ந்தாங்கு
வழை அமல் வியன் காடு சிலம்பப் பிளிறும்
மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம்
ஒன்று இரண்டு அல பல கழிந்து திண் தேர்
வசை இல் நெடுந்தகை காண்கு வந்திசினே
தாவல் உய்யுமோ மற்றே தாவாது
வஞ்சினம் முடித்த ஒன்று மொழி மறவர்

முரசுடைப் பெருஞ் சமத்து அரசு படக் கடந்து
வெவ்வர் ஓச்சம் பெருகத் தெவ்வர்
மிளகு எறி உலக்கையின் இருந்தலை இடித்து
வைகு ஆர்ப்பு எழுந்த மை படு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்புடை வியன்கண்
வலம் படு சீர்த்தி ஒருங்குடன் இயைந்து
கால் உளைக் கடும் பிசிர் உடைய வால் உளைக்
கடும் பரிப் புரவி ஊர்ந்த நின்
படும் திரைப் பனிக்கடல் உழந்த தாளே

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - சுடர் வீ வேங்கை

உரை

பரணர் பாடியுள்ள ஐந்தாம் பத்தின் முதல் பாடல் சேரன் செங்குட்டுவனைச் சிறப்பித்துப் பாடுவதாக அமைகிறது. பாடலின் தொடக்க வரிகள் பாணர்களையும் அவர்தம் இனத்தாரையும் அவர்கள் கொண்டிருந்த பல்வேறு வகை இசைக் கருவிகளையும் விளக்கி அமைகின்றன. இசைக் கருவிகளை மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு பயணிக்கும் பாணர் குழாம் காடு மலைகளைக் கடந்து நடந்து வரும் போது தெய்வம் துணை நிற்க வேண்டும் என ஒருமித்த குரலில் அமைதியான சூழலில் பாடுகின்றனர்.

புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல்யாழ் இளையர் பொறுப்ப
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண் அறுத்து இயற்றிய தூம் பொடு சுருக்கி
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுள் பழிச்ச
மறப்புலிக் குழூஉக் குரல் செத்து வயக் களிறு

பாடல் இசையைக் கவனித்த யானைக்குப் புலி உறுமல் போலக் கேட்டுள்ளமையால் சினங் கொண்டு காடு அதிரப்பிளிறுகிறது. மழை

பொழியாது இருந்தமையால் காட்டு மரங்களின் இலைகள் உதிர்ந்து சருகுகளாகிக் கிடக்கின்றன. மூங்கில் காட்டில் முள்படர்ந்த காடுகள் காய்ந்து கிடக்கின்றன. ஒரு வழி இருவழி எனப் பல வழிகளைக் கண்டறிந்து நடைப் பயணம் மேற்கொண்டு மிகுந்த களைப்பால் மன்னரைப் பாணர் குழாம் காணும் காட்சி பாடல் வழிக் காட்டப்படுகிறது.

கடலில் உள்ள ஒரு தீவில் வாழ்ந்து வந்த கொள்ளைக் கூட்டத்தைத் தன் கடற்படை வலிமை கொண்டு ஏலவே சினந்து கூறிய சபதத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒடுக்கி அவர்களை வெற்றி கொண்டு வாகை சூடி வந்தவன் சேரன் செங்குட்டுவன் ஆவான். கடற்போரை அறிவிக்கும் பொருட்டு எழுப்பிய முரசொலி மிளகுகளை உரலில் போட்டுக் குத்தும் போது ஏற்படுகின்ற ஓசை போன்று இருந்தது என இப்பாடல் பதிவு செய்கின்றது.பரணருடைய இந்தப் பாடல் பாணர்கள் கடந்து வந்த மலைப் பாதைக் காட்சிகளைத் திறம்பட விளக்குகிறது. மலைப்பாதையின் பல வழிகளைப் பரணர் நமக்குக் காட்சிப் படுத்துகின்றார். மழை இன்றி மலைக்காடு காய்ந்து போய் உள்ளது எனவும் பதிவு செய்துள்ளார்.

நாடு வறட்சிக்குள்ளாகி உள்ளது என உணர்த்தப்படுகிறது. வளமற்ற காலத்தில் கடல் தீவில் படை எடுத்துச் சென்று கடல் தீவு வாழ் மக்களின் பொருட்களை அள்ளி வந்து சேர்த்துள்ளான். இந்தக் காட்சிப் பின் புலத்தில் நாம் கண்டுணர்வதாவது பாணர்கள் மன்னரைக் காண வரும் சூழல் குறித்து நாம் இங்கு எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. வளமான நாட்டுக்குப் பாணர்கள் பயணிப்பதும் வெற்றி கொண்ட நாட்டுக்குப் பாணர்கள் மன்னர்களை நாடிப் பாடி ஆடிக் கலைநிகழ்ச்சி நடத்தி வாழ்த்துப் பாடி பரிசில் பெறுகின்றனர் என்பதும் பொதுவாக நாம் உணரக் கூடியதாக அமைகிறது. போரின் போது பெறப்படும் பொருள்களைப் பரிசில்களாகப் பெறும் தேவைக்கும் நல்ல வளம் கொண்டுள்ள சூழலில் மன்னரிடம் பரிசில் பெறும் சூழலிலும் பாணர்களின் பயணங்கள் உறுதிப்படுகின்றன. மன்னரிடம் பரிசில் வாங்கத்தக்க வகையில் நல்ல சூழல் அமைந்துள்ளது என உணர்ந்து பாணர்கள் நம்பி மன்னர்களை நாடி வருகின்றனர். மன்னருக்கும் பாணருக்குமான உறவு நிலையை நாம் இந்தப் பின்னணியிலே உணர்ந்து கொள்ள இந்தப் பாடல் நமக்கு வழி அமைக்கிறது. இப்பாடல் வழியே காணலாகும் இன்னொரு கருத்தானது பரணர் எனும் புலவர்

இப்பாடலில் காட்சி விவரணங்களை மிகத் துல்லியமாகத் தந்துள்ளார். கூடுதலாகப் பாணர் இனம் தன் கிளையுடன் தன் சுற்றத்தாருடன் பல்வேறு விதமான தோலிசைக் கருவிகள், துளை இசைக் கருவிகள் போன்ற பல்வேறு இசைக் கருவிகள் கொண்ட பைகளுடன் பயணிப்பதை விரிவாக விவரிப்பதன் வழியே பரணர் எனும் புலவர் பாணர் எனும் குடி மரபைச் சார்ந்ததவராகவே விளக்குகிறார் என எண்ணத் தோன்றுகிறது.

பாணர்களில் ஒரு சிலர் தூதுவராக,ஒற்றராக,ஏவல் பணிசெய்வோராக அரண்மனைகளில் வாய்ப்புப் பெற்று அமர்ந்துள்ளனர். அவ்வழியே பாடல் பாடும் வாய்மொழிப் பாடகரான பாணர்களுள் ஒரு சிலர் கல்வி அறிவு பெற வாய்ப்புப் பெற்றுப் புலவர் மரபினராக உருப்பெற்றுள்ளனர். வடமொழி மரபு வழி வந்த புலவர் போலப் பாணர் மரபு வழி வந்த மரபிசைப் புலவனாக ஒரு சிலர் உருவாகியுள்ளனர். இப்புலவன் வாய்மொழி மரபுசார் வழிவந்த புலவன் என உணர முடிகிறது.

பாடல் - 42

கோடியர் பெருங்கிளை வாழ்த்து

இரும் பனம் புடையல் ஈகை வான் கழல்
மீன் தேர் கொட்பின் பனிக் கயம் மூழ்கிச்
சிரல் பெயர்ந்தன்ன நெடு வெள் ஊசி
நெடு வசி பரந்த வடு வாழ் மார்பின்
அம்பு சேர் உடம்பினர்ச் சேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும நன்னுதல் கணவ
அண்ணல் யானை அடுபோர்க் குட்டுவ
மைந்துடை நல் அமர்க் கடந்து வலம் தரீஇ
இஞ்சி வீ விராய பைந் தார் சூட்டி
சாந்து புறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கை
தீம் சேறு விளைந்த மணி நிற மட்டம்
ஓம்பா ஈகையின் வண் மகிழ் சுரந்து
கோடியர் பெருங் கிளை வாழ ஆடு இயல்
உளை அவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்
மன்பதை மருள அரசு படக் கடந்து
முந்து வினை எதிர் வரப் பெறுதல் காணியர்
ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்த நின்

தேரொடு சுற்றம் உலகு உடன் மூய
மா இருந் தெண் கடல் மலி திரைப் பௌவத்து
வெண் தலைக் குரூஉப் பிசிர் உடையத்
தண் பல வரூஉம் புணரியின் பலவே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - தசும்பு துளங்கு இருக்கை

உரை

போர் வீரர்களுடன் சேரமாதேவியின் கணவனான செங்குட்டுவன் வீற்றிருக்கிறான். வீரர்கள் பனந்தோடு அணிந்தும் பொன்னால் அணிந்த கழல்களை அணிந்தும் காணப்படுகின்றனர். தரமான எதிரியோடு மட்டுமே தும்பைப் பூச் சூடிப் போரிடுவர். தத்தம் மார்பினில் போரின் போது ஏந்திய வடுக்களைக் கொண்டு விளங்குகின்றனர். போரில் யானைகளைக் கொல்லும் திறன் மிக்க வீரம்படைத்தவனாகச் செங்குட்டுவன் போற்றப்படுகிறான் .

இஞ்சிப் பூ வாடாத மாலையினையும் கள் சுமந்த பானைகளில் அணிவித்துள்ளனர். குளிர்ச்சியூட்டத்தக்க வகையில் பானையில் சந்தனத்தைப் பூசியுள்ளனர். போர்வீரர்களுக்கும் பாணர் மற்றும் கூத்தர் குடும்பத்தினருக்கும் குதிரைகள் தலையாட்டம் போடுவதைப் போல ஆடி மகிழத்தக்கவாறு கள்ளை விருந்தாகத் தந்து மகிழ்ந்து அவர்களுடன் சேர்ந்து ஆடும் இயல்பினைப் பெற்றவனாக மன்னன் விளங்குகின்றான். மக்கள் போற்றும் வகையில் போரில் யானை மீது ஏறிப் போரில் வெற்றிகாண்பவனாகச் செங்குட்டுவன் காட்டப்படுகின்றான் .

இவ்வாறு வெற்றி பெற்ற பின் பாணர் இனத்தோடும் வீரர்களோடும் சேர்ந்து கள் குடித்து ஆட்டம் ஆடும் காட்சி இப்பாடலில் காட்டப்படுகிறது. பாணர்களை அவர்களின் சுற்றத்தாருடன் அரவணைத்துக் கொண்டு ஆடும் மன்னன் குறுநில மன்னனாகக்

காட்டப்படுவதால் பாணரின் பாட்டும் கூத்தும் நிகழ்த்தப்படுகின்றன என இவ்வடிகள் மூலம் உய்த்துணர முடிகிறது.

தீம் சேறு விளைந்த மணி நிற மட்டம்
ஓம்பா ஈகையின் வண் மகிழ் சுரந்து
கோடியர் பெருங் கிளை வாழ ஆடு இயல்
உளை அவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்
மன்பதை மருள அரசு படக் கடந்து
முந்து வினை எதிர் வரப் பெறுதல் காணியர்

போரின் போது வீரர்கள் எவ்வளவு முதன்மைப் படுத்தப்படுகிறார்களோ அந்த அளவுக்குப் பாணர்களும் அவர்தம் சுற்றத்தாரும் மன்னனால் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர் எனும் கருத்து இதன் வழியே புலப்படுகிறது. போருக்கு ஆயத்தப்படுவதும் உற்சாகப் படுத்தப்படக் கூடியவர்களுமாக, உணர்வூட்டக் கூடியவர்களுமாகப் பாணர் முதலியோர் விளங்குகின்றனர். வாழ்த்துப்பாடுவது என்பது அக்காலச் சடங்கு முறைகளுள் ஒன்றாக இருக்க முடியும். போருக்கு முந்தைய நிலையில் வாழ்த்துவதும் போர்க்களத்தை வாழ்த்துவதும் போர்முடிந்த பின் வெற்றி பெற்ற மன்னனையும் வீரர்களையும் வாழ்த்துவதும் போர்க்களத்தில் இறந்த வீரர்களை அவர்களது ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்று சடங்கு முறையில் வாழ்த்துவதுமாக இப்பாடல் அமைந்துள்ளது. வாழ்த்துவதும் சிறப்புக் குறித்து எடுத்து இயம்புவதும் வாழ்த்துப் பாட்டின் அடிப்படைக் கூறுகளாக இருந்துள்ளன. பாணர்கள் மற்றும் விறலியர் வாழ்த்துவது தவிர்க்க முடியாத ஒரு சடங்கு முறையாக இருந்துள்ளது. பாணர்கள் மன்னரை வாழ்த்துவது என்பது மன்னர் முன்னே செய்யப்படும் சடங்காக இடம்பெறும்.பாணர்களின் பாடல் பெரும்பாலும் பாடாண்திணையிலேயே அல்லது அது சார்ந்த திணையிலேயே விளக்கக் காண்கிறோம்.

பாடல் - 43

வடதிசைக் குறிப்பும் தென் திசை வனப்பும்

கவரி முச்சிக் கார் விரி கூந்தல்
ஊசல் மேவல் சேயிழை மகளிர்
உரல் போல் பெருங்கால் இலங்கு வாள் மருப்பின்
பெருங் கை மதமாப் புகுதரின் அவற்றுள்
விருந்தின் வீழ் பிடி எண்ணு முறை பெறா அக்
கடவுள் நிலைஇய கல் ஓங்கு நெடு வரை
வட திசை எல்லை இமயம் ஆகத்
தென் அம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ் சமம் ததைய ஆர்ப்பு எழ
சொல் பல நாட்டைத் தொல் கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
இரும் பணை திரங்கப் பெரும் பெயல் ஒளிப்பக்
குன்று வறம் கூரச் சுடர்சினம் திகழ
அருவி அற்ற பெருவறல் காலையும்
அருஞ் செலற்பேர் ஆற்று இருங்கரை உடைத்து
கடி ஏர் பூட்டுநர் கடுக்கை மலைய
வரைவு இல் அதிர்சிலை முழங்கிப் பெயல் சிறந்து
ஆர் கலி வானம் தளி சொரிந் தா அங்கு
உறுவர் ஆர ஓம்பாது உண்டு

நகைவர் ஆர நன்கலம் சிதறி
ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன் குரற்
பாடு விறலியர் பல் பிடி பெறுக
துய் வீ வாகை நுண் கொடி உழிஞை
வென்றி மேவல் உரு கெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல் களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகு சிறைப் புக்குக்
கண்டி நுண் கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல் வினை மேவலை ஆகலின் பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்கு கொளை முழவின்
தொலையாக் கற்ப நின் நிலை கண்டிகுமே
நிணம் சுடு புகையொடு கனல் சினம் தவிராது
நிரம்பு அகல்பு அறியா ஏறா ஏணி
நிறைந்து நெடிது இராத் தசும்பின் வயிரியர்
உண்டெனத் தவாஅக் கள்ளின்
வண் கை வேந்தே நின் கலி மகிழானே

துறை - இயல்மொழி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ஏறா ஏணி

உரை

வடதிசையில் இமய மலையை எல்லையாகக் கொண்டும் தென் திசையில் குமரியை எல்லையாகக் கொண்டும் விரிந்த எல்லையை உடைய பெரும் நிலப்பரப்பிடையே அமைந்துள்ள நாடுகள் பல. இவற்றுள் கரிய மேகங்களை அதாவது மகளிரின் கூந்தலை ஒத்த மேகங்களைத் தொட்டுள்ள உயர்ந்த மலைகளைக் கொண்டுள்ளது மலை நாடு. இம்மலை நாட்டில் யானைகள் தம் பிடியோடு வாழ்கின்ற நிலையை மகளிர் ஆடவரோடு வாழ்கின்ற தன்மை ஒப்புமைப்படுத்திச் சுட்டப்படுகின்றது.

ஆரியர் துவன்றிய, பேர் இசை இமயம் தென்அம்
குமரியொடு ஆயிடை

ஆரியர் தந்த கவனத்தில் இமயம் குறித்த சிந்தனை புலவனின் கவனத்திற்கு வருகிறது. ஆக, **சங்க காலத்திலேயே ஆரியக் கலப்பு இருந்த சமூகம் தமிழ்ச் சமூகம் என நாம் மனங்கொள்ள நேர்கிறது.** போர் நெறி என்று பிறநாட்டு மன்னர்களையும் அவர் தம் நாட்டினையும் வீழ்த்துதல் என்பதாக அமைகிறது. உழிஞை மாலை அணிந்ததனால் போரில் எப்போதும் வெற்றியை விரும்பும் விருப்பத்தையும் பகைவர்க்கு எப்போதும் அச்சத்தையும் தோல்வியையும் தரத்தக்கவன் ஆகிறான். கின்னரப் பறவையை ஒத்த சிறகுகளைப் போன்ற நரம்புகள் பின்னப்பட்ட யாழினைக் கொண்டு இசையினை எழுப்பி நல்ல குரலில் பாடுகின்ற விறலியருக்கு வேந்தன் பிடிகளை(யானை)ப் பரிசில்களாகவும் பாணர்களுக்கு ஆண் யானைகளைப் பரிசில்களாகவும் வழங்குகின்றான். போர்க்களத்திலே பாசறையிலே நுண்ணிய கோலினைக் கையில் கொண்டு பாடுகின்ற பாணரின் பாடலுக்கு ஈடாகப் போர்க்களத்திலே போரிட நிற்கும் குதிரைகளைப் பரிசிலாக அளித்த செய்தியை இப்பாடல் பதிவு செய்கிறது.

உழிஞை வாகை என்பன போன்று இயற்கை சார்ந்த பூக்களை அடையாளப்படுத்திய நிலையில் வேந்தர்கள் காட்டப்படுவதன் வழியே இயற்கையோடு வாழ்ந்த இனக்குழு மரபின் எச்சங்களாகவே இவ்வித அடையாளங்களை உணர முடிகிறது. அனைவரோடும் சேர்ந்து உண்டமை குறித்தும் அணிகன்கள் வழங்கக் கூடியவனாக மன்னன் இருந்தது குறித்தும் பாடல் பதிவு செய்வதனால் வீரர்களோடு அந்நியப்படாமல் வாழும் வாழ்க்கையை வேந்தன் கொண்டிருந்தான் என அறியமுடிகிறது. எனவே மரபு வழிப்பட்ட வாழ்க்கையில் இருந்து அதாவது இனக்குழுச் சமூக வாழ்க்கையில் இருந்து பெரிதும் மாறுபட வில்லை என அறியமுடிகிறது. இமயம் குறித்த சிந்தனை புலவனுக்கு இருந்துள்ள அளவுக்குப் பாடலில் சுட்டப்படும் இச்சேர மன்னனுக்கு இமயம், ஆரியம், வைதீக மரபு போன்றவை எட்டப்படுள்ளதாகத் தெரியவில்லை.

இப்பாடலில் கூத்தர்களையும், பாணர்களையும் அவர்தம் கலை நிகழ்ச்சிகளையும் காட்டுவது முதன்மைப்படுத்தப்படுகிறது. கலைஞர்கள் கள்ளும் உணவும் உண்டு மகிழ்ந்து, ஆடிப் பாடுவதையும் கலைஞர்களுக்குக் கொடை கொடுத்ததையும் மன்னன் சேரனும்

மகிழ்ந்து இரசிக்கிறான். மக்களும் கலைஞர்கள் தங்கும் மன்றத்து வீதியின் இருமருங்குகளிலும் அவரவர் தம் வாசல்களில் நின்றபடி வயிரியர் நிகழ்த்தும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு இரசித்துக் கொண்டிருந்தனர். கலைஞர்களுக்கு எனத் தங்குவதற்கு ஒரு மன்றம் கட்டி வைக்கப்பட்டுள்ளது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. **வீதியில் நிகழ்த்தும் வயிரியரின் கலை நிகழ்ச்சி அசைவரங்கு அல்லது நகர்வரங்கு என்று அரங்கியல் துறையாளர் குறிப்பிடும் அரங்கினை ஒத்திருக்கிறது என்பது தமிழ் அறிஞர்களுடைய கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக அமைகிறது.** மேலும்,

உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி,
ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன் குரல்,
பாடு விறலியர் பல் பிடி பெறுக!

மன்றம் படர்ந்து, மறுகு சிறைப் புக்கு,
கண்டி நுண் கோல்கொண்டு, களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக, மாவே! என்றும்
இகல் வினை மேவலை ஆகலின், பகைவரும்
தாங்காது. புகழ்ந்த, தூங்கு கொளை முழவின்,

நிறைந்து நெடிது இராத் தசும்பின், வயிரியர்
உண்டெனத் தவா அக் கள்ளின்
வண் கை வேந்தே! நின் கலி மகிழானே

வறண்டு கிடக்கும் நிலங்களில் உடைப்பெடுத்த ஏரித் தண்ணீர் பாய்ந்து நிலங்கள் குளிர்ச்சி பெறுகின்றன. அதுபோலப் பெரிய பாணர்களுக்கும் வயிரியர்களுக்கும் கூத்தர்களுக்கும் பரிசுகளை வாரி வழங்கி அவர்களின் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் பெற்று அவர்களோடும் அவர்களது கலைநிகழ்ச்சிகளைக் கண்டு இரசிக்கும் மக்களோடும் சேர்ந்து ஆடி மகிழ்ந்து பரிசில் பெற்ற கலைஞர்களின் வாழ்த்துக்களைப் பெறுவது மன்னனின் பெருவிழைவாக இருந்தது. வெற்றி பெற்ற மன்னன் கலைஞர்களின் வாழ்த்துகளைப் பெறுவது என்பதே மன்னனின் கடனாகவும், தேடலாகவும், வாழ்க்கைப் பயனாகவும் அமைந்திருந்தது.

தொல்குடி கலைமக்கள் நாயகனாக மன்னன் இருந்தான்; அம்மக்களின் வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாகக் கலையும், கலைஞர்களும் இருந்துள்ளனர். கலைஞர்களுக்கும் மன்னர்களுக்குமான உறவு என்பது மிகவும் நெருக்கமாகவும், உருக்கமாகவும் இருந்துள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை, வாழ்வின் நெறிமுறைகளை மன்னனுக்குப் பாடல் வழியே எடுத்துக்காட்டி உணர்த்துவது பாணர்கள், கூத்தர்கள், வயிரியர்கள், கோடியர்கள் போன்ற கலைஞர்களின் தலையாய பணியாக இருந்துள்ளது. மன்னனுக்குப் பல நிலைகளில் புலவர்கள் ஆலோசனைகளை வழங்கிய பாடல்களைப் பரவலாக நாம் சங்கப்பாடல்களில் காண முடியும். மன்னர்கள் கோலோச்சிட, புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள், பொருநர்கள் போன்றவர்கள் வழியே தகவல்களையும் ஆலோசனைகளையும் செய்யதுள்ளனர். ஆக மன்னர்களுக்குக் கலைஞர்களும், கலைஞர்களுக்கு மன்னர்களும் உறவு கொண்டு இரத்தமும் சதையுமாக இருந்த சமூக அமைப்பு இருந்தமையை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.



பாடல் - 44

மன்னர் மறைத்த தாழி

நிலம் புடைப்பன்ன ஆர்ப்பொடு விசும்பு துடையூ
வான்தோய் வெல் கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய ஆயினும் அமர் கடந்து பெற்ற
அரிய என்னாது ஓம்பாது வீசிக்
கலம் செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைக என அறியாக் கசடு இல் நெஞ்சத்து
ஆடு நடை அண்ணல் நிற் பாடு மகள் காணியர்
காணிலியரோ-நிற் புகழ்ந்த யாக்கை
முழு வலி துஞ்சம் நோய் தபு நோன் தொடை
நுண் கொடி உழிஞை வெல் போர் அறுகை
சேணன் ஆயினும் கேள் என மொழிந்து
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண்கடா உறீஇ அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடு மொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து
முரசு செய முரச்சிக் களிறு பல பூட்டி
ஒழுகை உய்த்தோய் கொழு இல்பைந் துணி
வைத்தலை மறந்த துய்த் தலைக் கூகை
கவலை கவற்றும் குரால் அம் பறந்தலை

முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டித்
துளங்கு நீர் வியலகம் ஆண்டு இனிது கழிந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே

துறை - *செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *நோய் தபு நோன் தொடை*

உரை

தேரின் மீது கொடிகள் கட்டி அதன்வழியே இக்கொடியுடை வேந்தனின் அடையாளமும் அவனது நாட்டையும் குறியீடாகக் குறிப்பதாக அமைத்திருந்த வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. தேர் ஓட்டிச் சென்று போர் செய்த மன்னன் இனக் குழு மன்னர்களிடம் இருந்து. வளர்ச்சி பெற்ற, செல்வாக்கு மிகுந்த, படைபலம் பொருந்திய மன்னவனாகத் திகழ்ந்துள்ளான். போரில் பெறப்பட்ட பொருள்களை அரியன என்று கருதித் தனக்கு மட்டும் உரியதாக்கிக் கொள்ளாது , மன்னன் புகழைச் சிறப்பித்துப் பாடக்கூடிய பாணன் மற்றும் பாடினியருக்கும் புகழ்ந்துரைக்கின்ற வீரர்களுக்கும் அளிக்கின்ற ஈதல் குணமுடையவன். மெய் வலியோடு நோய் வலி இன்றி முது மக்களை வைத்துப் புதைக்கும் தாழியுள் பிணங்களைப் புதைக்கும் காடு வன்னி மரங்களால் நிறைந்துள்ளது. உற்றார் உறவினர் மற்றும் பிறரும் ஆக அனைவரும் இடுகாட்டில் இணைந்து வந்து பிணம் புதைக்கும் இடம் மன்றம் எனும் சுடுகாட்டுப் பகுதியாகும். இவ்வாறு விளக்கப்பட்டுள்ள இடத்திற்குப் பயணப்படாத யாக்கையைப் பெற்று நீண்ட காலம் வாழவேண்டும் என அனைவராலும் வாழ்த்துப் பெற்ற வாழ்க்கையைக் கொண்டு விளங்கும் மன்னனாகத் திகழ வேண்டும். அத்தகைய சிறப்பிற்கு உரியவன் சேரனாவான்.

சேரனுக்கு நண்பன் எனப்பட்ட ஒருவன் பலம் பொருந்திய மோகூர் மன்னனுக்கு அஞ்சி ஒளிந்து கொண்டான். இச்செய்தி அறிந்த சேரன் மோகூர் மன்னனைத் தன் நண்பனின் வருத்தம் களையுமாறு அவனது அரண்மனைகளைச் சூழ்ந்து கைப்பற்றினான். மோகூர்

மன்னனான பழையனின் ஊரைக் கைப்பற்றிக் கொண்டு அவனது வீர மொழிகளைக் குறையச் செய்து அவனது காவல் மரமான வேம்பின் அடிமரத்தை வெட்டி முரசு செய்வதற்கு அதனைத் துண்டு துண்டுகளாகச் செய்து, ஆண்யானைகளைப் பயன்படுத்தி அவற்றைத் தன் நாட்டுக்குக் கொண்டு வந்தான். பகைவர் அரணைச் சூழ்தல் உழிஞைத் திணையாகும். நீண்ட தொலைவுடைய நாட்டின் எல்லைகளைக் கொண்டு ஆட்சி செய்தவன் இச்சேர மன்னன். சிறு சிறு நிலப்பகுதிகளைக் குறு நிலமன்னர்கள் ஆண்டு வந்துள்ளனர் என்றும் குறுநில மன்னர்களைத் தன் குடையின் கீழ் ஆட்சிக்குட்படுத்தியவன் வேந்தன் என்றும் அறிய முடிகிறது. குறுநில மன்னர்கள் பலம் வாய்ந்த மன்னர்கள் பலரைத் தம் நாடு நலமுற நட்புப் பாராட்டி உறவு கொண்டு அரசு செலுத்தி வந்த முறைமை இங்குப் புலப்படுகிறது. நண்பனுக்கு ஊறு விளைவிக்கும் குறுநில மன்னர்களைப் போர் செய்து தம் ஆட்சிக்கு உட்படுத்துவது என்பது ஒரு வழக்கமாக இருந்துள்ளது. வெவ்வேறு நிலப்பகுதிகளில் இனக் குழுக்களாகத் தலைவர்களாக ஆண்டு வந்த முறைமை என்பது பலம் பொருந்திய வேந்தர்களால் வீழ்த்தப்பட்ட விளைவுகளின் பயனாகவே வேந்தர்களும். பெருவேந்தர்களும் வளர்ச்சியுற்றுள்ளனர் என நாம் இப்பாடல் காட்டும் செய்தி வழியே உணர்ந்து கொள்ள முடிகிறது.

மலையையும் மலை சார்ந்த பகுதிகளையும் ஆண்டு வந்த பல்வேறு குறுநில மன்னர்கள் அனைவரும் சேரன் எனப் பொதுப் பெயர் பெற்றிருந்தமை அறிய முடிகிறது. சேரர் சோழர் பாண்டியர் எனும் பேரரசுகள் முளைத்தெழுந்துள்ளன. மன்னன் பேரூர் வேந்தன் எனும் படிநிலைகள் குறித்து உணர்ந்து கொள்ள முடிகிறது. சேரர், சோழர், பாண்டியர் எனும் மூவேந்தர்கள் சட்டென முகிழ்த்தவர்கள் அல்லர் என்றும் மேற்குறிப்பிட்ட படிநிலைகள் மூவேந்தர்களின் வளர்ச்சிக்கு அடித்தளமான வரலாறுகளைக் கொண்டிருந்தன என்றும் உணர்ந்து கொள்ள முடிகிறது. வன்னி மன்றம் என்பது வன்னி மரங்களால் சூழப்பட்ட ஓர் இடம் என்றும் இடுகாடு என்பது அக்காலத்தே வன்னி மரங்களால் சூழப்பட்டிருந்தது என்றும் வயது முதிர்ந்தவர்களை மண்ணால் சமைக்கப்பட்ட தாழிகளில் புதைக்கப்பட்ட இடமாகவும் அவ்விடத்தே அனைவரும் கூடிஇருந்து புதைக்கும் நடவடிக்கையைச் செய்துள்ளனர் என்றும் வன்னி மன்றம் இந்நிகழ்வைச் செய்ய அமைக்கப்பட்டிருந்தது என்றும் உணர முடிகிறது .

பிணங்களை எரிப்பது என்பது தமிழர்களின் முந்தைய வழக்கம் அன்று என்றும் தாழிகளில் வைத்துப் புதைத்தல் என்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் உணரமுடிகிறது. பிணங்களை எரிப்பது என்பதெல்லாம் சங்ககால மன்னர்களோடு ஆரியர்கள் கலந்தபின் ஏற்பட்டது என்றும் உணர முடிகிறது. மோகூர் மன்னன் பழையன், அவனை எதிர்த்த சேரன் போன்றோர் அனைவரும் தமிழ் வழி வந்த தமிழ்க் குடியினர் என்பதும் பிணத்தைத் தாழியில் வைத்துப் புதைக்கப்பட்டதன் வழி அறிய முடிகிறது. இடுகாடு என்பது ஊருக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்த பகுதி என்றும் மனிதர்கள் அடிக்கடி நடமாடாத கூகை(கோட்டான்)வாழும் மரங்கள் கொண்ட தனித்த பகுதி என்றும் உணர முடிகிறது.

சீறூர் மன்னர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறும் வழக்கம் கொண்ட பாணர்களோடு மகளிரும் சேர்ந்து விளங்கினர் எனும் பொருள் இப்பாடல் வழியே புலப்படுகிறது. சீறூர்த் தலைவர்கள் உருவான போதே பாடிப் பரிசில் பெறும் பாணர் மரபினரும் உருவாகி இருக்க வேண்டும். அவர்களைப் போற்றிப் பாடி அவர்கள் தரும் பொருளைப் பெறும் வகையில் பாடிப் பரிசில் பெறும் பாணர் மரபினரும் தோன்றினர் என உணர முடிகிறது.

வேம்பு மரம் வெட்டியதன் வழி நாடு வீழ்ச்சியுற்றது அல்லது போரில் வெற்றி பெற்றவனுக்கு ஆட்பட்டது என்ற கருத்தும் நடைமுறையில் இருந்து உள்ளது. கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தியதன் வழியே போரில் வெற்றி பெற்றவனுக்கு நாடு ஆட்பட்டது என்ற கருத்து என்பதும் நமது சங்கப் பாடல் வழியே அறிய முடிகிறது. வேம்பு மரக் குறியீடும், கடம்ப மரக் குறியீடும் காலத்தால் வளர்ச்சி பெற்ற குறியீடாகியிருக்கலாம் என்பது ஆய்வுக்கு உரியது.

பாடல் - 45

துணங்கை ஆடிய இன்ப நிலை

பொலம் பூத் தும்பை பொறி கிளர் தூணிப்
புற்று அடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்
ஒசிவுடை வில்லின் ஒசியா நெஞ்சின்
களிறு எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்
விழுமியோர் துவன்றிய அகன் கண் நாட்பின்,
எழுமுடி மார்பின் எய்திய சேரல்
குண்டு கண் அகழிய மதில் பல கடந்து
பண்டும் பண்டும் தாம் உள் அழித்து உண்ட
நாடு கெழு தாயத்து நனந் தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணை எழு அன்ன
நிலம் பெறு திணி தோள் உயர ஓச்சிப்
பிணம் பிறங்கு அழுவத்துத் துணங்கை ஆடி
சோறு வேறு என்னா ஊன் துவை அடிசில்
ஓடாப் பீடர் உள்வழி இறுத்த
முள் இடுபு அறியா ஏணித் தெவ்வர்
சிலை விசை அடக்கிய மூரி வெண் தோல்
அனைய பண்பின் தானை மன்னர்
இனி யார் உளரோ நின் முன்னும் இல்லை
மழை கொளக் குறையாது புனல் புக நிறையாது

விலங்கு வளி கடவும் துளங்கு இருங்கமஞ் சூல்
வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு
முழங்கு திரைப் பனிக் கடல் மறுத்திசினோரே?

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ஊன் துவை அடிசில்

உரை

நிலம் பெறு திணி தோள் உயர ஓச்சி
பிணம் பிறங்கு அழுவத்துத் துணங்கை ஆடி

இப்பாடல் வழியே கைகளை உயரே தூக்கி நின்றாடும் ஆட்டமாகவும் வெற்றி பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் நிலையில் குதித்தாடும் ஆட்டமாகவும் போர்க்களத்தில் இறந்து கிடக்கும் பிணங்களைத்தாண்டிச் சுழன்றாடும் ஆட்டமாகவும் துணங்கைக் கூத்து ஆடப்பட்டுள்ளது என்பது அறியப்படுகிறது. வீரர்களும் மன்னர்களும் இணைந்தே ஆடியதனால் துணங்கைக் கூத்து என்பது குழும நிலை ஆட்டத்தன்மை கொண்டதாக விளங்குகிறது.

இசைக்கருவி இசைப்புக்களோ பாடல்களோ இன்றி வெற்றிக்களிப்பில் வெளிப்படும் ஓசைகளை எழுப்பியவாறு துள்ளியாடிய ஆட்டமாகத் துணங்கைக்கூத்து ஆடப்பட்டதாக நாம் அறிகிறோம். மன்னரும் போர் வீரர்களும் இணைந்தாடிய ஆட்டமாகக் காட்டப்படுவதனால் மன்னன் என்பவன் இனக் குழுத் தலைவனாகவே இருக்கிறான் என நாம் மனங்கொள்ள நேரிடுகிறது. துவையலோடு கறியும் அரிசி உணவும் போர்க்களத்தில் பாடிகள் அமைத்துச் சமைத்து உண்ட காட்சி காட்டப்படுவதன் வழியே இனக்குழுத் தலைவன் இவன் என்பதை உறுதிபடக் கூற முடிகிறது .

இப்பாடலில் இடம் பெற்றுள்ள எழுமுடி மார்பின் எய்திய சேரல் என்றுசொல்லப்படுவதன் வழியே இவனுடைய எதிரி நாட்டவர் இவனைப் போன்றே ஏழு இனக்குழுத்தலைவர்களை வென்றவர் என்ற பொருள் கொள்ள முடிகிறது.

களிறு எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்
விழுமியோ துவன்றிய அகன் கண் நாட்பின் ,
சிலை விசை அடக்கிய முரி வெண் தோல்
அனைய பண்பின் தானை மன்னர்

வில், வேல் போன்ற போர்க்கருவிகளைச் சுட்டுவதன் வழியே நாம் ஏலவே கொண்டுள்ள இனக்குழுத் தலைவரின் போர் வீரர்கள் பயன்படுத்திய கருவிகள் வழியேயும் இவன் இனக்குழுத் தலைவனே என உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. மரத்தால் ஆன கதவுகள் எனக் குறிப்பிடுவதன் வழியேயும் முள்வேலி இடப்படாத எல்லை எனக் குறிப்பிடுவதன் வழியேயும் சேர மன்னர்களுள் இவன் மன்னன் எனக் குறிப்பிட்டிருந்தாலும் கூட இவனை இனக்குழுத்தலைவனாகவே நாம் கருத முடிகிறது.ஆக மேற் குறிப்பிட்ட செய்திகள் வழியே காணும் போது இனக் குழுத் தலைவனான இவன் பாணர்களுடைய துணையுடனோ ஏனைய கூத்தர்களுடைய துணையுடனோ துணங்கைக் கூத்து ஆடியுள்ளான் என அறிய முடிகிறது. இதுபோல் மன்னன் எனும் பெயரில் துணங்கைக் கூத்து ஆடியுள்ள பதிவுகள் வழியே அவர்கள் அனைவரும் இனக்குழுத் தலைவர்களே எனக் கருதமுடிகிறது. போர்ப் பாசறைகளில் உணவு சமைத்துப் போர் வீரர்களுக்கு அளிக்கும் பணியைப் பாணர் தம் கிளையினர் செய்துள்ளனர் எனவும் நம்ப முடிகிறது.

மேலும் போர்க்களத்திலே முரசுகள் ஒலிக்கச் செய்கின்ற விறலியர் போன்ற கலைஞர்கள் போர்ப் பாசறையில் வீற்றிருக்கும் மன்னனையும் மன்னன் சார்ந்த போர் வீரர்களையும் வாழ்த்திப் பாடுதல் எனும் சடங்கினை நிகழ்த்துவோராக விளங்கியுள்ளனர்.

கிரேக்க ஹரீஸ் சமூகத்தில்

1 மந்திர வித்தையும் சடங்கும் செய்யும் பாடகர்
2 பாணர்
3 புலவர்
4 மெய்யறிவாளரும், சமய ஆசிரியர்களும்.

எனும் படிநிலைகளைக் காண முடிகிறது.[1]

---

1. பக். 165, தமிழ் வீரநிலைக் கவிதை, க.கைலாசபதி, குமரன் புத்தக இல்லம், சென்னை, ஆண்டு 2006.

முதல் நிலையில் மந்திர வித்தையும் சடங்கும் சார்ந்த பாடகர் என்ற பிரிவினர் குறித்துச் சொல்லப்படுகின்றது. பாணரை அடுத்துப் புலவர் என்ற படிநிலை நம் பழம் தமிழ்ச்சமூகத்தில் காணமுடிகிறது. மந்திர வித்தை செய்து சடங்கு நிறைவேற்றும் பாடகர் என்ற முதல் நிலை சமூகத்தார் பாணர் சமூகத்தவராகவே இருந்துள்ளனர் எனக்காட்டப் படுவதற்கு மாறாகப் தமிழ்ச் சமூகத்தில் பாணர் எனும் சமூகம் முதல் நிலை என்பதை நாம் அறிகிறோம்.

மானுடவியலாளர் வழியே அல்லது சமூகவியலாளர் வழியே கவனிக்கும் போது ஆடுதல், பாடுதல், மந்திரம் செய்வித்தல், சடங்கு செய்வித்தல் எனும் இந்த மரபுநிலை கொண்ட தொல்குடிச் சமூகம் வரலாற்றில் இடம்பெற்றிருப்பதைக் கவனிக்க முடிகிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலே மந்திர வித்தையும் சடங்கும் செய்யும் பாடகர் என்ற படிநிலையைக் குறிப்பிடாமல் இருந்தாலும் பாணர்களே முதல் படிநிலை சமூகத்தார் மேற்கொண்ட இடத்தை வகித்துள்ளனர் என்பதை மனங்கொள்ள வாய்ப்புள்ளது. சடங்கு நிறைவேற்றும்படி ஆடுதல் என்ற நிலையினைப் பாணர்,விறலியர் மற்றும் இவர்களைச் சார்ந்த உறவினர் அவைக்களங்களிலும் போர்க்களங்களிலும் விழாக்காலங்களிலும் நிறைவேற்றியுள்ளனர் என உறுதி கொள்ள முடிகிறது. விழாக்களின் போது பாணர் குழாம் பாடி ஆடுவதன் வழியே நம்பிக்கை சார்ந்த சடங்கு இவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது எனச் சான்று காண முடிகிறது.

விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர்,ஆடல்
வல்லவன் அல்லன் வாழ்க அவன் கண்ணி

பொதுவாகப் பாணர் காலச் சமூக அமைப்பில் சடங்குகளை நிறைவேற்றும் பொறுப்பினை நிகழ்த்தியுள்ளனர் என்பதற்கு ஆதாரமாகப் பொருநர் ஆற்றுப்படை வழியே உறுதி படக் கூற முடியும்.

பாடின பாணிக்கு ஏற்ப நாள்தொறும்
களிறு வழங்கு அதர்க்கானத்து அல்கி
இலைஇல் மராஅத்த எவ்வம் தாங்கி
வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை

(பொருநராற்றுப்படை: 48–52)

பாடினி பாட, பாடினி சார் குழுவினர் இசைக் கருவிகளை இசைக்க, விறலியர் போன்றோர் பாட்டிற்கு இசைந்தவாறு ஆட்டம் நிகழ்த்தினர். இவர்கள் தங்கிய இடங்களில் தற்காலிகக் குடில் அமைத்துக் கொண்டு தங்கியுள்ளனர். பாடினி குழுமத்தார் தங்கி இருந்த தற்காலிகக் குடில் ஒருவிதமான காட்டுப் பகுதியை ஒட்டி அமைந்திருந்தமையால் காடுறை தெய்வங்கள் காத்தருள வேண்டிக் காடுறை தெய்வங்கள் மனமகிழும் படி இறை நம்பிக்கையுடன் கூடிய ஒரு விதச் சடங்கினை நிறைவேற்றி இருப்பதாக அறிகிறோம்.

இவ்வகைச் சான்று வழியே, பாணர் மற்றும் கூத்தர்கள் பாடி வாழ்த்தும், சடங்கு முறை நிறைவேற்றும் கலைஞர்களாக விளங்கியுள்ளமை தெளிவாகும். இயற்கை சார் இறை நம்பிக்கையோடு வாழ்த்திப்பாடல் பாடுவதன் வழியே, ஆடுவதன் வழியே மக்களை அல்லது மன்னனை மன ஆறுதல் படுத்தும் வாழ்த்துப் பாடல்களையே கொண்டிருந்தனர். மந்திரம் மற்றும் வித்தைகள் போன்றவற்றில் நம்பிக்கை கொள்ளாதவர்களாக விளங்கியுள்ளனர். அக்காலச் சமூக அமைப்பில் பாணர்களின் பங்கு என்பது சமூகக் கட்டமைப்பில் பிரிக்க முடியாத உறவுநிலை என்றே மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர் என எண்ணிக் கொள்ள முடிகிறது.

இப்பாடலில் விறலியர் மறம் போற்றும் அதாவது வீர உணர்வினைப் போற்றிப்பாடும் பாடல் என்பது நம்பிக்கை சார்ந்த பாடலாக அதாவது சடங்கினை நிறைவேற்றும் பாடலாக அமைகிறது.

பனந்தோடு அணிந்த தலைவனின் படை வீரர்களும், பனந்தோடு அணிந்து குவளைப் பூக்களைச் சூடியவாறு சூழ்ந்திருக்க நாட்டை யாளும் கிழவோன் எதிரி நாட்டை வெல்லும் பொருட்டு அவனது கோட்டைகளை முற்றுகையிட்டு வெற்றி சமைப்போன் என வஞ்சின மொழி கூறுகிறான். பல போர்களைச் சந்தித்து வெற்றி கொண்ட வீரர்கள் எனப் புலப்படுமாறு பல தழும்புகளைப் பெற்றுள்ள வீரர்களின் கவசமாக நாட்டுத்தலைவன் சூள் உரைப்பதாக இப்பாடல் பொருள் கொண்டுள்ளது.

நாட்டுத் தலைவனின் புகழையும் சிறப்பையும் விளக்கிப்பாடவும் பாட்டுக்கு ஏற்ப விறலியர் ஆடவும் சூள் உரைத்த தலைவனின் வெற்றி

வாழ்த்துப் பாடலாகப் பாணன் ஒருவன் தன் சக பாணனுக்கும் விறலியருக்கும் எடுத்துச் சொல்லி வாழ்த்துப்பா பாடினால் தலைவன் தரும் பரிசினைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆற்றுப்படுத்துவதாகவும் இப்பாடல் அமைகிறது.

பாடல் - 46

ஊர் பாட்டு

இழையர் குழையர் நறுந் தண் மாலையர்
சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை
திறல் விடு திருமணி இலங்கு மார்பின்
வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்
தொடை படு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட
இனிது புறந்தந்து ,அவர்க்கு இன்மகிழ் சுரத்தலின்
சுரம் பல கடவும் கரை வாய்ப் பருதி
ஊர்பாட்டு எண் இல் பைந் தலை துமியப்
பல் செருக் கடந்த கொல் களிற்று யானைக்.
கோடு நரல் பெளவம் கலங்க வேல் இட்டு
உடை திரைப் பரப்பின் படு கடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவற் கண்டோர்-
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே

துறை - *செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *கரை வாய்ப் பருதி*

உரை

பாணர்களும் விறலியர்களும் மன்னர் வாழ்வில் இரண்டறக் கலந்த வாழ்க்கை வாழ்ந்தவராகச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

செந்துறைப் பாடாண்பாட்டு என்பது தலைவனுடைய வலிமை, புகழ், தோற்றம் ஆகியவற்றைப் போற்றும் பாடலாக அமைகிறது.

இயன்மொழி வாழ்த்து என்பது முன்னோர்களின் வாழ்த்தாக அமைகிறது.

நாட்டு வாழ்த்து என்பது நாட்டை வாழ்த்துதல், செல்வம், வீரனின் திறம், நிலவளம் ஆகியன புகழ்தல் ஆகும் .

தும்பையரவம் என்பது போர் ஆரவார வெற்றிக்குப் பின் அரசன் தன்படைக்குப் பரிசுகளும் விருதுகளும் வழங்குதலைக் கூறுவது.

வாகைத் துறைப் பாடாண் பாட்டு என்பது வெற்றி பெற்ற தலைவனைப் போற்றல் வெற்றிபெற்றவர் வாகை மாலையையணிந்து வெற்றி கொள்ளப் பெற்றவரின் மேம்பட்டுக் களித்தல் ஆகும்.

களவழி என்பது போரில் வெற்றி பெற்ற அரசன் செய்த அழிவுகளைப் புகழ்ந்து பாடும் பாணனின் துறை ஆகும் . வாகை என்பது வெற்றி பெற்றவரைப் புகழ்தல் ஈகைக்கு வழிகோலும் வெற்றியைப் புலவர் போற்றுதல்.

விறலியாற்றுப்படை என்பது விறலியை ஆற்றுப்படுத்துதல். கொடையாளியிடம் விறலியை வழி கூறிஅனுப்புதல் ஆகும்.

பாணாற்றுப் படை என்பது பாணரை வழிச் செலுத்துதல், பாணர் ஒருவர் மற்றொருவரைக் கொடையாளியின் பால் அனுப்புதல்.

உழிஞையரவம் என்பது முற்றுகை ஆரவாரம் ஆகும். உழிஞைப் பூக்களைத் தலையில் சூடிய வீரர்கள் கோட்டையை முற்றுகையிடுதல்.[1]

1, தமிழ் வீரநிலைக்கவிதை, க.கைலாசபதி, தமிழில் கு.வெ.பாலசுப்பிரமணியன், வெளியீடு: குமரன் புத்தக இல்லம், ஆண்டு 2006, பக்.-271.

போர்முற்றுகையைச் சிறப்புறப்பாடுவது உழிஞை ஆகும்.

செந்துறைப் பாடாண்பாட்டு
இயன்மொழி வாழ்த்து
வஞ்சித்துறைப் பாட்டு
நாட்டு வாழ்த்து
தும்பையரவம்
வாகைத் துறைப் பாடாண் பாட்டு
களவழி
வாகை
விறலியாற்றுப்படை
பாணாற்றுப்படை
உழிஞையரவம்

நாடு போர் குறித்த சூழலைப் பின்புலமாகக் கொண்டு இயங்குவதாகவும் இந்த இயங்கு தளங்களுக்குப் பாணர்கள் பாடி ஊக்கப்படுத்துவதாகவும் நமக்குப் பலப்பல பாடல்கள் புலப்படுத்துகின்றன. ஆகப் பாணர்களும் விறலியர்களும் மக்கள் மன்றுகளிலும் மன்னர் அவைகளிலும் தங்கள் பங்களிப்பைச் செய்தவர்களாக மட்டும் அமையாமல் போர்க்களங்களிலும் பலநிலைப் பாடலைப் பாடித் தங்கள் சமூகப்பங்களிப்பைச் செய்துள்ளனர். போர்க்களங்களில் மன்னர்களை வாழ்த்துவதும் வீரர்களைப் புகழ்வதும் இறந்துபட்டோரின் புகழினை ஏற்றிப் பாடுவதும் எனப் பணிகளைச் செய்துள்ளனர் என்பதை உணர முடிகிறது. பாணர்கள் போர்க் களங்களில் தொடர்புடையவர்களாக இருந்தமையைப் பல புறப்பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. போர்க்களத்தில் இறந்துபட்டோரின் புகழினைப் பாடுவதன் வழியே இறந்து பட்டோருக்குச் செய்ய வேண்டிய அக்காலக் கட்ட வாழ்க்கைச் சடங்குகளை முறையே முன் நின்று நடத்தியவர்களாகத் கூடக் கலைஞர்களை நாம் உணர நேர்கிறது என ஏலவே நாம் கண்டுள்ளோம்.

வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்
தொடை படு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட
இனிது புறந்தந்து ,அவர்க்கு இன்மகிழ் சுரத்தலின்
சுரம் பல கடவும் கரை வாய்ப் பருதி
ஊர்பாட்டு எண் இல் பைந் தலை துமிய
பல் செருக் கடந்த கொல் களிற்று யானை.

பாணர்களோடு சேர்ந்து விறலியர் எனும் மகளிரும் பாணர்கள் இசைத்த பேரியாழ்களை இசைத்துப் பாடிப் பங்காற்றி உள்ளனர். உழிஞையை மேற்கொள்ள விறலியர் வீரருக்கு வெற்றியுண்டாக வேண்டிப் பாலைப் பண் இசைத்து உழிஞையைப் பாடியுள்ளனர் எனப் பதிவாகியுள்ளது. போர் வீரர்களை இன்மகிழ் சுரத்தலின் என்றவாறு அரசனின் முக மலர்ச்சி மேற்கொள்ளும் உணர்வைத் தூண்டித் தன் பங்களிப்பை முறையே செய்து போர்க்களத்தில் தேர் செலுத்துதற்கு உரிய உணர்ச்சி ஓட்டத்தினைப் பாடிப் பெருக்கித் தந்ததன் வழியே மன்னரால் பாணரும் விறலியரும் போற்றப்படுகின்றனர்.

இப்பாடல் வழியே ஆடல் மகளிர் பேரியாழ் கொண்ட பாணர் ஆகிய இவர்கள் வெறுமனே ஆன கலைஞர்கள் மட்டுமல்ல மாறாகப் போரிலும் சாவிலும் வாழ்விலும் பெரும் பங்காற்றியுள்ள பெருமை மிகு கலைஞர்களாகவே நாம் மதிப்பிட முடிகிறது.

பாடல் - 47

பாண்டில் விளக்கொளியில் விறலியர் ஆட்டம்

அட்டு ஆனானே குட்டுவன் அடுதொறும்
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே
வரை மிசை இழிதரும் அருவியின் மாடத்து '
வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,
சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல,
நல் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே

துறை	-	செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம்	-	ஒழுகு வண்ணம்
தூக்கு	-	செந்தூக்கு
பெயர்	-	நல்நுதல் விறலியர்

உரை

அரங்கக் கலையில் ஒளிக்கலை என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். காட்சி மொழி குறித்துப் பேசும்போது விளக்கொளி என்பது முதன்மை இடம் பெறுகிறது. இரவு வேளைகளில் பார்வையாளர் முன் ஆட்டக்கலையை நிகழ்த்தும்பொழுது விளக்கொளியானது

பார்வையாளரின் இரசனைக்கு ஏற்பக் காட்சி மொழிக்கு விருந்தாக அமைகிறது. வெளிப்புற அரங்கு, உட்புற அரங்கு என இருவேறுபட்ட அரங்குகளிலும் இரவு வேளையில் கலைஞர்கள் ஆடும்போதும் அல்லது கலை நிகழ்ச்சிகள் நடத்தும்போதும் காட்சிக்கு விருந்தாக ஒளிக்கலை அமைகிறது.

விளக்கொளி துணையோடு ஆட்டக்கலைஞர் ஆட்டத்தை நிகழ்த்தும்போது நிழல் ஏற்படுவதனால் காட்சி மொழியானது விளங்காமல் போய்விடும். ஒரு புறம் விளக்கொளி படும்போது மறுபுறம் நிழல்படிய நேரிடும். உருவத்தின் எப்புறத்திலும் நிழல் படியாதபடி ஒளிக்கலை நிகழ்த்தப்பட வேண்டும். இது போன்ற நிகழ்த்து கலை குறித்த அறிவினை நம் தமிழர்கள் சங்க காலத்திலேயே கொண்டிருந்தனர் என்பதை எண்ணும் போது வியப்பாக இருக்கிறது. பதிற்றுப்பத்தில் காட்சிக்கலை குறித்த பதிவுகள் ஏராளம். ஒளிக்கலையுடன் ஆட்டக்கலை நிகழ்வினைப் பொருத்திக் காட்டி அமைந்துள்ள இப்பாடல் குறிப்பிடத்தகுந்தது.

ஒளி என்பது கண்களால் பார்த்து உணரக்கூடிய ஒன்று. முற்காலப் பழைய நகரங்களில் தெரு விளக்குகள் ஒளி உமிழ்வதை நம் தமிழ் இலக்கியம் சுட்டுகிறது. வீதிகளில் முச்சந்திகளில் விறலியர் ஆடியுள்ளனர் என்றும் இரவில் ஆடிய அந்த ஆட்டத்தைப் பகலில் பார்த்து இரசிப்பது போல ஒளி வெளிச்சம் அமைந்திருந்தது. விறலியர் தம் நெற்றியில் அணிந்திருந்த அழகிய அணிகலன் இயல்பான நெற்றியை அழகுபடுத்தி இருப்பதாகப் பொருள் கொள்ளும் அளவுக்குப் பார்வைக்கு அதாவது காட்சி மொழிக்கு விருந்தாக அமைந்திருக்கிறது. 'நல் நுதல் விறலியர்' என்றது அழகிய அணிகலன் அணிந்த நெற்றி எனப் பொருள் கொள்ள முடிகிறது.

... மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,
சொரி கரை கவரும் நெய் வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஉச் சுடல் அழல,
நல் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே ()

என்னும் பாடலடிகளில் ஒளியின் சுடரானது வீதி எங்கும் வீசுகிறது. அவ்வீதியில் மன்னனைப் புகழ்ந்து பாடி ஆடிக் கொண்டு இருக்கிற

விறலியின் மீதும் விறலியின் நெற்றியின் மீதும் ஒளியின் சுடர் வீசுகிறது. இவ்வாறு பதிற்றுப்பத்தில் காணலாகும் காட்சி அரங்கியல் ஒளிக்கலை குறித்த அறிவினை நம் தமிழர்கள் சங்க காலத்திலேயே கொண்டிருந்தனர் என்னும் செய்தியை நாம் அறிய முடிகிறது.

மன்னனது புகழ் பாடி ஆடிய விறலியர்க்கும் அவர்தம் உறவினர்க்கும் களிறினைப் பரிசாக வழங்கினான் மன்னன். விறலியர், பாணர், துணங்கையர், வயிரியர் போன்ற கலைஞர் பெருமக்களைச் சுட்டாது பதிற்றுப்பத்துப் பாடல்கள் இல்லை எனுமளவுக்கு அமைகின்றன. இப்பாடல் விறலியர் கலைநிகழ்ச்சி நடத்திய அரங்கம் பற்றிய பதிவாக அமைகிறது.

பாடல் - 48

பாணர் பாட்டும் விறலியர் ஆட்டமும் சுற்றமொடு கொண்டாட்டமும்

பைம் பொற்தாமரை பாணர்ச் சூட்டி
ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டிக்
கெடல் அரும் பல் புகழ் நிலைஇ நீர் புக்குக்
கடலொடு உழந்த பனித் துறைப் பரதவ
ஆண்டு நீர்ப் பெற்ற தாரம் ஈண்டு இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதினின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன் எனத் தத்தம்
கை வல் இளையர் நேர் கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
முனை சுடு கனை எரி எரித்தலின் பெரிதும்
இதழ் கவின் அழிந்த மாலையொடு சாந்து புலர்
பல் பொறி மார்ப நின் பெயர் வாழியரோ
நின் மலைப் பிறந்து நின் கடல் மண்டும்
மலி புனல் நிகழ்தரும் தீம்நீர்விழவின்
பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை
மேவரு சுற்றமொடு உண்டு இனிது நுகரும்
தீம் புனல் ஆயம் ஆடும்
காஞ்சிஅம் பெருந் துறை மணலினும் பலவே.

துறை - இயல்மொழி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - பேர் எழில் வாழ்க்கை

உரை

பைம் பொற்தாமரை பாணர்ச் சூட்டி
ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி

எனத் தொடங்கும் இப்பாடல் சேரனைப் புகழ்ந்து பாடும் பாணரின் பாடல்களுள் ஒன்று. மக்கள் முன்னிலையில் புடைசூழ வீற்றிருக்கும் மன்னனை அவன்தன் புகழ் கூறுமுகத்தான் பாணரும் விறலியரும் குழுவாக இணைந்து பாடும் பொருண்மையில் இப்பாடல் பாடப்பட்டுள்ளது.பாணன் பாடும் இப்பாடலில் சேரனின் புகழ் அனைத்தும் பாடி முடிக்கப்படவில்லை. மனாங் கொள்ளாப் பாடல் என்பதன் வழியே புகழ் அனைத்தும் கூறி முடிக்கப்படாத பாடல் எனப் பொருளாகிறது. பலர் முன்னிலையில் புகழ் பாடும் பாங்கு பாணனுடையதாகும். பாணனுக்கு பரிசில் கொடுக்கும் முறையில் மட்டும்தான் மன்னனின் ஈகை உணர்வு மக்களுக்குத் தெரியப் படுத்தப்படுகிறது. தாமரை மலரைப் பாணர்க்குச் சூட்டியும், பொன்னெரி மாலைகளை விறலியர்க்குச் சூட்டியும் பாட ஊக்கப்படுத்தியதோடு பாணர் மற்றும் விறலியரின் இளைய தலைமுறையினருக்கும் சேரனின் புகழை எடுத்துச் சொல்ல, அவர்களையும் பாடி ஆடவைக்க வேண்டும் எனும் மன்னனின் உள்ளக் கிடக்கையையும் நாம் இப்பாடல் வழி அறிய முடிகிறது. புகழ் எடுத்துரைக்கும் போது அதிலும் பிறர் முன்னிலையில் புகழ்ந்துரைக்கும் போது ஒருவன் மனம் நெகிழ்வதென்பது மானுடர் பண்புகளுள் ஒன்று. பாணர்கள், விறலியர்கள் நிலத்திற்கு உரிய வேந்தனைப் போற்றிப் பாடுவதன் வழியாகக் குறிப்பிட்ட மன்னனின் குடையின் கீழ் உள்ள அனைத்து நிலப்பரப்பிலும் பாணரும், விறலியரும் சுதந்திரமாக இயங்க முடியும் எனும் நம்பிக்கை கிடைக்கின்றது. அதாவது கடல் தொட்டு மலை வரையிலுமான சேரனின் நிலப் பகுதி அனைத்திலும் பாணரும் விறலியரும் மன்னனின் புகழ் உணர்ந்து பாடி வாழ்க்கை நடத்திட மன்னன் தரும் அங்கீகாரம் இங்கு உறுதிப் படுத்தப்படுகிறது. தாமரையும் பொன் மாலையும் அளித்து நாடு முழுவதும் இப்பாணர், விறலியர் குழு தடையின்றிப் பயணித்திடவும், வாழ்ந்திடவும் புகழ் பாடிடவும் மன்னர் தரும் அங்கீகாரக் குறியீடாக இதை நாம் உணர முடிகிறது

கை வல் இளையர் நேர் கை நிரப்ப

கடல் கடந்து சென்று போரிட்டுப் பெற்ற வளங்களுக்குச் சொந்தக்காரனான சேரமன்னனின் புகழினைப் பாணனின் இளைய சமூகம் வரை பாடிப் பரப்புதற்கு அங்கீகாரம் வழங்கியதாக இப்பாடல் நமக்கு உணர்த்துகிறது. இந்தப் பாடல் சேரனின் புகழைப் பகைவர் ஆட்சி புரிந்த இடத்திலும் தனது ஆளுமையின் கீழ் விளங்குகின்ற நிலப்பகுதியில் உள்ள மக்களிடத்தும் சேர மன்னனின் புகழ் மற்றும் அவனது ஆளுமைச் சிறப்பு, கொடைச் சிறப்பு, வீரத்தின் சிறப்புப் போன்ற பல செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லப் பணித்தமை என உணர முடிகிறது. அல்லது மன்னனின் செய்திகளைப் பரப்பிடப் பாணனுக்கும், விறலியருக்கும் பரிசில்கள் கொடுத்து ஒரு விதமான பணியாளணையினை அதிகாரத்தின் வழியன்றி அன்பால் அளித்த பரிசில் வழியே ஆசிகூறி அனுப்புவதாகக் கூட நாம் பொருள் கொள்ள முடிகிறது.

பாடல் - 49

விறலியர் நெறிப்படுத்தும் முறைமை

யாமும் சேறுகம் நீயிரும் வம்மின்
துயிலும் கோதைத் துளங்கு இயல் விறலியர்
கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர்
களிறு பரந்து இயல கடு மா தாங்க
ஒளிறு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப
எஃகு துரந்து எழுதரும் கை கவர் கடுந்தார்
வெல் போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து
மொய் வளம் செருக்கி மொசிந்து வரு மோகூர்
வலம் படு குழூஉ நிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங் கை மறவர்
நிறம் படு குருதி நிலம் படர்ந்து ஓடி
மழை நாட் புனலின் அவல் பரந்து ஒழுகப்
படு பிணம் பிறங்கப் பாழ் பல செய்து
படு கண் முரசம் நடுவண் சிலைப்ப
வளன் அற நிகழ்ந்து வாழுநர் பலர் படக்
கருஞ்சினை விறல் வேம்பு அறுத்த
பெருஞ் சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே

துறை - விறலியாற்றுப்படை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - செங்கை மறவர்

உரை

இந்த விறலியாற்றுப்படைப் பாடல் 15 அடிகளைக் கொண்டு விளங்குகிறது. முதல் மூன்று அடிகள் விறலியர் பற்றியதாக அமைகின்றன. பிற அடிகளில் மோகூர் மன்னனை வெற்றி கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. அதாவது மோகூரினை ஆண்டு வந்த பழையன் என்பவன் ஒரு சிற்றரசன். அவன் இன்னொரு முடியரசனோடு சேர்ந்து கொண்டு செங்குட்டுவனோடு போரிட வந்தான். சேரன் சேங்குட்டுவன் அவர்களைப் போர்க்களத்தில் வென்றான். போர்க்களத்தில் எதிரிகளின் ஆயுதங்களைத் தமக்குரியவைகளாகக் கைப்பற்றுவது என்பது ஒரு போர் உத்தி முறை. இந்த உத்தி முறையைப் பயன்படுத்தி இறந்து பட்ட வீரர்களின் உடலில் தைத்திருந்த வில் அம்பு கத்தி போன்ற ஆயுதங்களைச் செங்குட்டுவன் படை வீரர்கள் கைப்பற்றினர். அப்போது பீறிட்டு வெளிப்பட்ட செங்குருதி உடல்களைக் கண்டு நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் எனப் புலவரால் குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய வீரத்திற்குப் பெயர் பெற்ற செங்குட்டுவன் எதிரியின் நாட்டை அழித்து அவர்களின் செல்வத்தைத் தன் வயப்படுத்திக் கொண்டான். அத்தகைய செல்வம் படைத்தவனிடம் இசைப்பாட்டில் அவனின் புகழைப்பாடி அவனிடம் செல்வத்தைப் பெறப் போகிறேன், நீரும் வருக என்பதாக இந்தப்பாட்டின் பொருள் அமைகிறது. மன்னனைத் தெரிந்த ஒரு விறலி தன் இனத்து வேறு ஒரு விறலிக்கு ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது. இப்பாடலின் வழியே விறலி பாடும் பாடலாக இதனை நாம் உணரலாம். விறலியர் பாடிய இசைப்பாட்டு இது என உணர முடிகிறது. விறலியர் இவ்வாறான பாடலைப் புனைந்திருப்பதன் வழி விறலியர் பாட்டினை இட்டுக் கட்டும் திறன் படைத்தோராக விளங்குகின்றார் என்பதை உணர முடிகிறது. துளங்கு இயல் என்பதனால் இசைப்பாடல் செய்து இருக்கக் காண முடிகிறது. துணங்கையர், விறலியர் மற்றும் பாடினி ஆகியோர் பாணர்களின் உறவுக்காரர்களாக விளங்குகின்றனர். பாணர்கள் பாடும் வாய்மொழிப்

பாடலினை விறலியர்,மற்றும் துணங்கையர் போன்ற பாணர்மகளிரும் பாடியுள்ளனர்.பாடுவதோடு ஆடியுள்ளனர் அதாவது பாடிக் கொண்டே ஆடிக் கலைநிகழ்ச்சி நடத்தும் திறன் கொண்டவர்களாக உள்ளனர்.

பின்னர்த் தோன்றியுள்ள ஆற்றுப்படை இலக்கிய வகைக்குப் பதிற்றுப்பத்தில் காணும் விறலியாற்றுப்படை மற்றும் பாணாற்றுப்படைப் பாடல்கள் அடி ஆதாரங்களாக அமைந்துள்ளன எனும் தெளிவுக்கு நாம் வர முடிகிறது. எழுதப்பட்ட பிரதி என்பது ஆய்வுக்கு உரிய நிலையில் விறலியர், பாணர் ஆற்றுப்படைப் பாடல்கள் கொண்டுள்ள மொழியற்ற இசை மொழியான இசைத் தன்மை குறித்த ஆய்வுகளும் இங்கு நிகழ்த்தப்பெற வேண்டியுள்ளன.

பாடல் - 50

நல் இசை நனந்தலையும் பகைவெம்மைப் பாசறையும்

மா மலை முழக்கின் மான் கணம் பனிப்பக்
கால் மயங்கு கதழ் உறை ஆலியொடு சிதறிக்
கரும்பு அமல்கழனிய நாடு வளம் பொழிய
வளம் கெழு சிறப்பின் உலகம் புரைஇச்
செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர் நிறைக்
காவிரி யன்றியும் பூ விரி புனல் ஒரு
மூன்று உடன் கூடிய கூடல் அனையை
கொல் களிற்று உரவுத் திரை பிறழ அவ்வில் பிசிரப்
புரை தோல் வரைப்பின் எஃகு மீன் அவிர்வர
விரவுப் பணை முழங்கு ஒலி வெரீஇய வேந்தர்க்கு
அரணம் ஆகிய வெருவரு புனல் தார்
கல் மிசையவ்வும் கடலவும் பிறவும்
அருப்பம் அமைஇய அமர் கடந்து உருத்த
ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்து
நல் இசை நனந்தலை இரிய ஒன்னார்
உருப்பு அற நிரப்பினை ஆதலின் சாந்து புலர்பு
வண்ணம் நீவி வகை வனப்புற்ற
வரி ஞிமிறு இமிரும் மார்பு பிணி மகளிர்
விரி மென் கூந்தல் மெல் அணை வதிந்து

கொல் பிணி திருகிய மார்பு கவர் முயக்கத்துப்
பொழுது கொள் மரபின் மென் பிணி அவிழ
எவன் பல கழியுமோ - பெரும பல் நாள்
பகை வெம்மையின் பாசறை மரீஇப்
பாடு அரிது இயைந்த சிறு துயில் இயலாது
கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்
பீடு கெழு செல்வம் மரீஇய கண்ணே?

துறை - வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வெருவரு புனல் தார்

இப்பாடல் புறச் செய்தியை அதாவது போர்ச் செய்தியை விரிவுறப் பேசுகிறது. காவிரியின் பிறப்பிடமான குடகுமலையில் தொடங்கிக் காவிரி, ஆன்பொருநை, குடவன் ஆறு எனும் மூன்று பிரிவுகள் ஒன்று சேரும் முக்கூடல் எனும் இடம் முரசொலி போன்று ஒலி எழுப்பத்தக்கதான களங்கள் நீர்ப் பெருக்கு என வருணிக்கத் தக்க பகுதியைத் தன் நாட்டு எல்லை எனக்குறிப்பிட்டு இருக்கக் காணமுடிகிறது. குடகு மலையில் பிறந்த காவேரி நேர் கிழக்கே பாய்ந்து வரும் நிலப்பகுதிகளில் கரும்பும் இன்ன பிற விளைச்சல்களும் விளைந்து வளம் தரத்தக்கதான பகுதியை உடைய வேந்தனாக இம்மன்னவன் காட்டப்படுகிறான்.

காவிரி பாயும் பகுதிகளை ஒட்டிய வளம் மிகுந்த பிற வளமான நிலப் பகுதிகளைக் கொண்டுள்ள பிற நாட்டு அரசர்களை அவர்தம் இடங்களில் சென்று பொருது அவர் நாட்டைக் கைப்பற்றிய திறனும் ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்துதல் என்று குறிப்பிடத் தக்கவாறு பகைவரின் சினங்களை அழித்துக் குட்டுவன் ஆங்காங்குத் தன் அரண்மனைகளை அமைத்துத் தொடர்ந்து பிற நாட்டு அரசர்களோடு பொருத எண்ணிப் பாசறையில் வீற்றிருக்கக் கூடியவன் என்னும் குட்டுவன் பண்பும் கூறி அவன் புகழினைச் சுட்டி இப்பாடல் அமைகிறது. புறச் செய்தியும் அகச்செய்தியும் கலந்து அமையக்கூடிய பாடலாக இப்பாடல் அமைகிறது. 'சாந்து புலர்பு' எனுமாறு மார்பில் சந்தனம் பூசி வண்ணம்

நீவி மகளிர் முலையினும் தோளினும் பூசப்பட்ட வண்ணம் புணர்ச்சியைத் தூண்டத்தக்கதாக அமையும். அரண்மனையில் மகளிர் மார்பை விரும்பி மயக்கம் கொள்ளும் கண்கள் நெடுநேரம் உறங்கும் தன்மை கொண்டவை. அரண்மனையில் மகளிரோடு புணர்ச்சியில் கொண்ட காலம் பெரிது. ஆனால் போர்ப்பாசறையில் எதிரிகளைப் பொருதும் பொருட்டு ஆயத்தமாக உள்ள வீரர்கள் புடைசூழ உள்ள இடத்தில் நீ துயிலக் கண்கள் எடுத்துக் கொள்ளும் காலம் மிகச் சிறிது எனுமாறு குட்டுவனின் போர்த்திறத்தையும் மகளிரோடு சேர்ந்திருந்த அகம் குறித்த செய்தியையும் ஒருங்கே காட்டுவதாய் இப்பாடல் அமைகிறது. குடகு மலையில் கோட்டை கட்டி அந்த அரண்மனையில் இருந்து காவிரி கிழக்கு நோக்கிச் செல்லும் பகுதிகளில் உள்ள வளமான நிலப் பகுதிகளைத் தனது ஆளுமைக்கு உட்படுத்த முயற்சி மேற்கொண்டவன்.

இப்பாடலின் வழியே இரண்டு கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளமுடிகிறது. ஒன்று ஆங்காங்குச் சிறு சிறு நிலப்பகுதிகளை ஆண்டு கொண்டிருந்த இனக்குழு மக்களையும் அவர்தம் குடிகளையும் சீறூர் மன்னர்களையும் அவர்தம் செல்வங்களையும் போர் செய்து அவர்களை அடிமையாக்கியதோடு அவர்தம் நிலப்பகுதிகளைத் தன் குடையின் கீழ்க் கையகப்படுத்தி அகலப்படுத்திய வரலாற்றுச் செய்தி பதிவாகியுள்ளது. இப்பாடலில் காணும் பிறிதொரு செய்தியாவது: சீறூர் மன்னர்களை வென்று கொள்ளையடித்த பொருள்களைத் தம் வயப்படுத்திக் கோட்டைகட்டி வைத்துக் கொண்டு ஆட்சி செய்த செங்குட்டுவன் காம உணர்வுகளைத் தணித்துக் கொள்ளும் பொருட்டு மகளிரோடு புணர்ந்தும் விளையாடியும் பொழுது கழித்து இன்புற்றிருந்த செய்திகளும் இப்பாடல் வழிப் பதிவாகியுள்ளன.

பதிற்றுப்பத்தில் காணலாகும் இது போன்ற பலபாடல்கள் போரையும் காமத்தையும் புகழ்ந்து கூறும் பாங்கினைக் கொண்டே அமைந்துள்ளன. வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு என்று புலவன் பாடிய பாட்டினைப் புகழ்ந்துரைத்த பகுப்பும் பகுப்பு முறையும் தொகுத்த முறையும் விளக்கியுள்ள முறையும் நாம் அறிய நேரினும் **போர் காமம் எனும் இருபொருள் குறித்த ஒரு பாடல் அகத்தையும் புறத்தையும் ஒருங்கே பதிவு செய்துள்ளது என்பது இங்குக் கவனங் கொள்ளத் தக்கது.**

ஐந்தாம் பத்து - பதிகம்

பாணர் விறலியர் கலைகளும் சேரன் சிறப்புகளும்

வடவர் உட்கும் வான் தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கான் நவில் கானம் கணையின் போகி
ஆரிய அண்ணலை வீட்டி பேர் இசை
இன் பல் அருவிக் கங்கை மண்ணி
இனம் தெரி பல் ஆன் கன்றொடு கொண்டு
மாறா வல்வில் இடும்பிற் புறத்து இறுத்து
உறு புலி அன்ன வயவர் வீழச்
சிறு குரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
பழையன் காக்கும் கருஞ் சினை வேம்பின்
முழாரை முழு முதல் துமியப் பண்ணி
வால் இழை கழித்த நறும் பல் பெண்டிர்
பல் இருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவின் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயில் புறத்து இறுத்து
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்துக்
கெடல் அருந்தானையொடு
கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனை
கரணம் அமைந்த காசு அறு செய்யுட்
பரணர் பாடினார் பத்துப் பாட்டு

பெயர்கள்

சுடர் வீ வேங்கை, தசும்பு துளங்கு இருக்கை, ஏறாஏணி, நோய் தபு நோன் தொடை, ஊன் துவை அடிசில், கரை வாய்ப் பருதி, நல்நுதல் விறலியர், பேர் எழில் வாழ்க்கை, செங்கை மறவர், வெருவரு புனல் தார்.

உரை

ஐந்தாம் பத்தின் பதிகம் வடவர் குறித்தும் குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் மணக்கிள்ளி ஈன்ற செங்குட்டுவன் குறித்தும் பேசுகிறது. பத்தினிக் கடவுள் கண்ணகிக்குக் கற்கோயில் வேண்டிக் காட்டு வழியே பயணித்த போது ஆரிய மன்னருடன் போர் செய்து அவர்களைத் தோல்வியுறச் செய்து இமய மலையில் எடுத்த கல்லைக் கங்கையில் நீராட்டிப் பசுக்களையும் அவற்றின் கன்றுகளையும் கொண்டு வந்து இடும்பாவனம் எனும் இடத்தில் சேரன் தங்கினமை குறித்தும் இப்பதிகம் பேசுகிறது.

நெய்தல் கொடி கொண்ட மோகூர் குறுநில மன்னன் பழையனை அழித்து அவன் கொண்டிருந்த வேம்பு மரத்தை வெட்டி வீழ்த்திய செய்தி வருகிறது. பழையனின் மனைவியர் பலர். பல பெண்கள் கணவன் இறந்ததால் தாங்கள் அணிந்திருந்த முத்தாரத்தை நீக்கினர். அப் பெண்களின் கூந்தலைத் திருத்திக் கயிறு உண்டாக்கி யானைகளை இழுக்கும் கயிறு என வண்டியில் பூட்டினான். சோழ அரசர் குடியில் பிறந்த 9 சிற்றரசர்களைப் போரில் வீழ்த்திச் சேனைகளுடன் முன்னேறிச் சென்று பகைவர்களை அழித்த செய்தி பதிகத்தில் கூறப்பட்டுள்ளது. இப்பதிகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவும், பதிற்றுப்பத்துப் பாடல்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகளுடன் வேறுபட்டனவாக அமைகின்றன. மேற்குறிப்பிட்ட பதிகச் செய்திகள் பத்துப் பாடல்களின் பாடு பொருள்களுடன் ஒத்திசைந்து வரவில்லை. சோழனுக்கும் சேரனுக்குமான உறவு நிலையைச் சுட்டுவதோடு சேரனின் வட நாட்டுப் போர் குறித்தும் கண்ணகிக்குக் கல் எடுத்த செய்தியும் பதிவாகியுள்ளன. பதிகம் கூறும் செய்திக்கும் பாடல் கூறும் செய்திக்கும் தொடர்பற்றுக் காணப்படுகிறது. சோழனுக்கும் சேரனுக்குமான பேரரசுகளின் இணைப்பு முயற்சி பதிகம் பாடியவரால் செய்யப்பட்டுள்ளது என உணர முடிகிறது. பதிகம் 5ஆம் பத்தில் இருந்து விலகி அமைந்துள்ளமை தனித்துத் தெரிகிறது .

காக்கைபாடினியார் நச்செள்ளையார்

இயற்றிய

ஆறாம் பத்து

பாடல் - 51

பனஞ்சோலை அரங்கியல் கலையாதல்

துளங்கு நீர் வியலகம் கலங்கக் கால் பொரா
விளங்கு இரும் புணரி உரும் என முழங்கும்
கடல் சேர் கானற் குட புலம் முன்னிக்
கூவல் துழந்த தடந் தாள் நாரை
குவி இணர் ஞாழல் மாச் சினைச் சேக்கும்
வண்டு இறைகொண்ட, தண் கடற் பரப்பின்
அடும்பு அமல் அடைகரை அலவன் ஆடிய
வடு அடு நுண் அயிர் ஊதை உஞற்றும்,
தூ இரும் போந்தைப் பொழில், அணிப்
பொலிதந்து,
இயலினள், ஒல்கினாள், ஆடும் மட மகள்
வெறி உறு நுடக்கம் போலத் தோன்றி,
பெரு மலை, வயின் வயின் விலங்கும் அருமணி
அர வழங்கும், பெருந் தெய்வத்து,
வளை ஞரலு பனிப் பௌவத்துக்
குண குட கடலோடு ஆயிடை மணந்த
பந்தர் அந்தரம் வேய்ந்து,

வண் பிணி அவிழ்ந்த கண்போல் நெய்தல்
நனை உறு நறவின் நாடுடன் கமழ,
சுடர் நுதல், மட நோக்கின்,
வாள் நகை, இலங்கு எயிற்று,
அமிழ்து பொதி துவர் வாய், அசை நடை விறலியர்
பாடல் சான்று நீடினை உறைதலின்,
'வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்!' என
உள்ளுவர் கொல்லோ நின் உணரா தோரே
மழை தவழும் பெருங் குன்றத்துச்
செயிருடைய அரவு எறிந்து
கடுஞ் சினத்த மிடல் தபுக்கும்
பெருஞ்சினப் புயல் ஏறு அனையை
தாங்குநர் தடக்கை யானைத் தொடிக் கோடு துமிக்கும்
எஃகுடை வலத்தர் நின் படை வழி வாழ்நர்
மறம் கெழு போந்தை வெண் தோடு புனைந்து
நிறம் பெயர் கண்ணிப் பருந்து ஊறு அளப்ப
தூக் கணை கிழித்த மாக் கண் தண்ணுமை
கை வல் இளையர் கை அலை அழுங்க
மாற்று அருஞ் சீற்றத்து மா இருங் கூற்றம்
வலை விரித்தன்ன நோக்கலை
கடியையால் நெடுந்தகை செருவத் தானே

துறை - வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - வடு அடு நுண் அயிர்

உரை

பனங்காடு ஆடுகளமாதல்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியுள்ள ஆறாம் பத்து ஆட்டக் கலை குறித்த விளக்கம் அமைத்திருப்பது அறிய முடிகிறது.

நெய்தல் நிலமான கடற்கரையின் அருகே பனஞ்சோலை அமைந்துள்ளது. மணல் திட்டுக்கள் சூழ்ந்த அந்தப் பகுதி சிறு சிறு பள்ளங்களைக் கொண்டு விளங்குகிறது. அப்பள்ளங்களில் தங்கியுள்ள நீர்ப் பகுதியில் இரை தேடும் பொருட்டு நாரைகள் காத்துக் கிடக்கின்றன. ஞாழல் மரங்கள் சூழ்ந்துள்ளன. அம்மரத்தின் கிளைகளில் பூக்கள் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றன. மலர்களில் உள்ள தேனை உண்ணவந்த வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. கடற்கரை மணல் திட்டுக்களில் நண்டுகள் ஓடியும் ஒளிந்தும் திரிவதால் உண்டான சுவடுகள் தென்படுகின்றன. அவற்றை அலைகள் அழித்த வண்ணம் உள்ளன.

கடலில் உண்டாகும் அலையினால் ஓசை உண்டாகின்றது. அலைக் காற்றின் தாக்கத்தில் மணல் துகள்கள் பறந்து சென்று அலவன் ஆடிய வடுக்களை மெல்ல மறைக்கின்றன. காட்சியின் பின்புலம் அரங்கியல் நோக்கில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அலவன் ஆடிய வடு என்பதில் அமைந்துள்ள சொல் வழியே ஆடல் மகளிரின் ஆட்டத்தை விளக்க முனைந்த கலை உணர்வின் வெளிப்பாட்டை நாம் உணரமுடிகிறது. அதாவது ஆட்டம் நிகழப்போகிறது என்கிற எதிர்பார்ப்பினை உண்டாக்குகிறது. பனைகள் வட்டமுற அமைந்து இயற்கையாக ஓர் ஆடுகளத்தை அமைத்துத் தந்துள்ளன. வட்டக்களறி மூடிய கூரை வேய்ந்திருப்பது போலப் பனைமரக் கொண்டைகள் மூடிப் படர்ந்துள்ளன.

பனைமரக் கொண்டைகளில் நெய்தல் மற்றும் நரவம் பூக்கள் கொடியெனப் படர்ந்து மலர்ந்து மணம் வீசுகின்றன. பனைமரங்களின் அருகருகே மன்னர் புடைசூழப் பலர் அமர்ந்து பார்வையாளர்களாக விளங்குகின்றனர். வட்டக்களறியில் ஆடுமகள் ஆன விறலி பீடுநடை போட்டு வலம் வருகிறாள்; பாடுகிறாள்; இசைக் கருவிகளின் வாசிப்பு நிகழ்கிறது. சுற்றிலும் அமர்ந்துள்ள மன்னர் உள்ளிட்ட பார்வையாளர்களை வணங்கிக் கொள்கிறாள். பாடிக் கொண்டே ஆடுகிறாள். சின்ன நடை என நடனமிடுகிறாள். குறுக்கும் நெடுக்குமாக நடந்து, அசைந்து அசைந்து ஆடுகிறாள். பாம்பு அசைந்தாடுவது போல் உடை ஒப்பனை செய்து கொண்ட ஆடுமடமகள் வயின் வயின் என வரும் இடந்தோறும் குதித்துக் குதித்து ஆடுகிறாள். கிழக்கும் மேற்கும் இடையிலும் என ஆடுகளத்தைப் பயன்படுத்திக் கைகளைக் குவித்துச்

சேவித்தவாறு கண்களை இடப்புறமும் வலப்புறமும் அசைத்தவாறு கால்மணி குலுங்க ஆடுகிறாள். மலர்ந்த நெய்தல் மலர் போன்ற கண்களால் மன்னரையும் பிறரையும் கண்டவாறு புன்முறுவலுடன் அமர்ந்தும், குதித்தும் ஆடுகிறாள். நின்றாடல், அமர்ந்தாடல், குதித்தாடல், சுழன்றாடல், வீழ்ந்தாடல், உருண்டாடல் போன்ற ஆடல்முறைகளை எல்லாம் அவள் ஆடுவதைப் பாம்பின் நடனத்துடன் சுட்டி விளக்கியிருப்பது இங்கு இரசிக்கத் தகுந்தது.

வண்டு இறைகொண்ட, தண் கடற் பரப்பின்
அடும்பு அமல் அடைகரை அலவன் ஆடிய
வடு அடு நுண் அயிர் ஊதை உஞற்றும்,
தூ இரும் போந்தைப் பொழில், அணிப் பொலிதந்து,
இயலினள், ஒல்கினாள், ஆடும் மட மகள்
வெறி உறு நுடக்கம் போலத் தோன்றி,
பெரு மலை, வயின் வயின் விலங்கும் அருமணி
அர வழங்கும், பெருந் தெய்வத்து,
வளை ஞரலும பனிப் பௌவத்து
குண குட கடலோடு ஆயிடை மணந்த
பந்தர் அந்தரம் வேய்ந்து,
வண் பிணி அவிழ்ந்த கண்போல நெய்தல்
நனை உறு நறவின் நாடுடன் கமழ,
சுடர் நுதல், மட நோக்கின்,
வாள் நகை, இலங்கு எயிற்று,
அமிழ்து பொதி துவர் வாய், அசை நடை விறலியர்
பாடல் சான்று நீடினை உறைதலின்,
'வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்!'

ஆடிக் கொண்டிருந்த ஆடுமகள் உச்ச நிலை கொள்கிறாள். இறை உணர்வு உட்கொண்டவளாய்த் தன்னை மறந்து பாடல் பாடி ஆடியவாறு பார்வையாளர்களைத் தன் வயப்படுத்திய நிலையில் உறைகிறாள். குறிப்பிட்ட நேரம் வரை பார்வையாளர், அரங்கில் ஆடும் ஆடல் மகள் என்ற இருநிலைப் பட்டோரும் ஒரு நிலைப்பட்டு ஆட்டக்கலை இன்பத்தில் தோய்ந்தனர்.

பாடல் - 52

ஆடுமகள் - அரசன் - அரசி ஊடல் கலை

கொடி நுடங்கு நிலைய கொல் களிறு மிடைந்து
வடி மணி நெடுந் தேர் வேறு புலம் பரப்பி
அருங் கலம் தரீஇயர் நீர் மிசை நிவக்கும்
பெருங் கலி வங்கம் திசை திரிந்தாங்கு
மை அணிந்து எழுதரு மா இரும் பல் தோல்
மெய் புதை அரணம் எண்ணாது எஃகு சுமந்து
முன் சமத்து எழுதரும்வன்கண் ஆடவர்
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
உயர்நிலை உலகம் எய்தினர் பலர் பட
நல் அமர்க் கடந்த நின் செல் உறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய
மலர்பு அறியா எனக் கேட்டிகும் இனியே
சுடரும் பாண்டில் திரு நாறு விளக்கத்து
முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணை ஆக
சிலைப்பு வல் ஏற்றின் தலைக் கை தந்து நீ
நளிந்தனை வருதல் உடன் றனள் ஆகி
உயலும் கோதை ஊரல்அம் தித்தி
ஈர் இதழ் மழைக்கண் பேர் இயல் அரிவை
ஒள் இதழ் அவிழ் அகம் கடுக்கும் சீறடிப்

பல் சில கிண்கிணி சிறு பரடு அலைப்பக்
கொல் புனல் தளிரின் நடுங்குவனள் நின்று நின்
எறியர் ஓக்கிய சிறு செங் குவளை
ஈ என இரப்பவும் ஒல்லாள் நீ எமக்கு
யாரையோ? எனப் பெயர் வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமொடு அது நீ
பா அல் வல்லாய் ஆயினை பாஅல்
யாங்கு வல்லுநையோ வாழ்க நின் கண்ணி
அகல் இரு விசும்பில் பகல் இடம் தரீஇயர்
தெறு கதிர் திகழ்தரும் உரு கெழு ஞாயிற்று
உருபு கிளர் வண்ணம் கொண்ட
வான் தோய் வெண்குடை வேந்தர் தம் எயிலே.

துறை - குரவை நிலை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - சிறு செங் குவளை

உரை

போரில் வெற்றி பெற்ற மன்னன் மகிழ்ச்சியோடு கலைநிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கின்றான் . இரவு நேரம் (துணங்கை) ஆட்டமும் பாட்டமும் நிகழ்கின்றன. குறைவற்ற வெளிச்சத்தைத் தரக்கூடிய பாண்டில் என்னும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. விளக்கொளி வெளிச்சத்தில் இசைக் கருவியாளர்கள் ஒரு புறம் அமர்ந்து கிண்கிணி, முழுவு போன்ற இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டிருந்தனர். இசைக்கருவிகளின் வாசிப்புக்கு ஏற்பத் துணங்கை ஆட்டத்தைப் பெண் ஆட்டக் கலைஞர் ஆடிக் கொண்டிருக்கின்றாள். துணங்கையரின் ஆட்டத்திற்கு மெருகூட்டித் தாளத்திற்கு இசைய ஆட்டக் கலைஞருடன் இயைந்து தலைவன் ஆடுகிறான்.

விளக்கு வெளிச்சத்தில் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிற பலரும் இரசித்து ஆட்டத்தோடு ஒன்று இணைந்து மகிழ்ந்து கொண்டு இருக்கின்றனர். பார்வையாளர்களில் முதன்மை இடம் பெற்றிருந்த

மன்னன் தன் துணைவியரை விடுத்து ஆட்டப் பெண்மணியின் ஆட்டத்தை உச்சத்திற்குக் கொண்டு வர எண்ணித் துணங்கையரின் கைப்பிடித்துச் சிறு காலடி வைப்பு முறையை எடுத்து வைத்து அவளுடன் இயைந்து ஆடுகிறான். இசைக் கருவியாளர் ஆட்டக் கலைஞர் ஆகிய கலைஞர் பெருமக்களைக் கவனித்து இரசிப்பதற்கு ஒளி வெளிச்சம் தங்குதடை இன்றித் துணை செய்து கொண்டிருக்கிறது.

தலைவன் தன் இருக்கையை விட்டு ஆட்டம் ஆடும் துணங்கையரோடு தோள்களையும் கைகளையும் தழுவிக்கொண்டு ஆட்டக் கலைஞர்களுடன் இயைந்து தன்னை மறந்து ஆடிக் கொண்டு இருக்கக் கூடிய இக் காட்சியைக் கவனித்துத் தலைவி வருந்துகிறாள். தலைவி வருந்துவதை ஆடிக் கொண்டிருக்கும் தலைவன் உய்த்துணர்கிறான். உடனே ஆட்டக் கலைஞர் அணிந்து இருந்த மலர்களில் செங்குவளைப் பூ ஒன்றை எடுத்து வருத்தம் தோய்ந்த தன் தலைவியை அணுகி அன்பின் காணிக்கையாக அளித்து "இக்குவளைப் பூவினைப் பெற்றுக் கொள்வாயாக" என்று சொல்லாமல் சொல்லிப் பார்வையிலேயே வேண்டிக்கொள்கிறான். தலைவியோ "நீ எமக்கு யாரையோ? ஆட்டக்காரியோடு சேர்ந்து ஆடிக்கொள், வாழ்க நின் கண்ணி, வாழ்க நின் இளமையும், இரசனையும், இன்பமும்" எனச்சொல்லிச் செங்கதிர்களை ஒத்த சூரியனைப் போல முகம் சிவந்து கடுஞ்சினம் கொண்டு ஊடல் கொண்டாள்.

நாடகத்துக்கு ஐந்து படி நிலைகளைப் பரத முனி குறிப்பிடுவார். அவை,

1. தொடக்கம்
2. வளர்ச்சி
3. முரண்
4. வீழ்ச்சி
5. முடிவு

மேகத்தை ஒத்த கரிய பெரிய யானைகள் பரிவாரம் கொள்ள முரசுகள் ஒலித்திடப் போர் புரிந்து வெற்றியையும் வெற்றிப் பொருட்களையும் கடல் அலைகள் சீறியவாறு ஆரவாரங்களுடன் ஆபரணங்களையும், மணிகளையும் கப்பல்களின் மூலமாக எடுத்துக்

கொண்டு வந்து பலருக்கும் பரிசில்களாக வழங்கும் பெருமையையுடைய வள்ளல் தன்மையுடைய மன்னன் புகழ் வாழ்க எனத் துணங்கையரின் பாட்டு ஒலிக்க, இசைக் கருவிகளின் ஒத்திசைவு அமைய, மகளிர் தோள்களை ஒருவருக்கொருவர் தழுவி வட்டமிட்டு ஆடுகின்றனர்.

கொடி நுடங்கு நிலைய கொல் களிறு மிடைந்து
வடி மணி நெடுந் தேர் வேறு புலம் பரப்பி
அருங் தலம் தரீஇயர் நீர் மிசை நிவக்கும்
பெருங் கலி வங்கம் திசை திரிந்தாங்கு
மை அணிந்து எழுதரு மா இரும் பல் தோல்
மெய் புதை அரணம் எண்ணாது எஃகு சுமந்து
முன் சமத்து எழுதரும்வன்கண் ஆடவர்
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
உயர்நிலை உலகம் எய்தினர் பலர் பட
நல் அமர்க் கடந்த நின் செல் உறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய

இந்தக் காட்சியே தொடக்கமாகிறது. உச்சகட்ட ஆட்டக்கலை நிகழ்ந்து கொண்டிருப்பதை இரசித்த தலைவன் மகிழ்ந்து தன் இடத்தை விட்டுத் துணங்கையருடன் இயைந்து ஆடுகிறான்.

சுடரும் பாண்டில் திரு நாறு விளக்கத்து
முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணை ஆக
சிலைப்பு வல்ல ஏற்றின் தலைக் கை தந்து நீ

இந்தக் காட்சி வளர்ச்சியாகும். துணங்கையருடன் இயைந்து ஆடும் தலைவன் தன்னை மறந்து ஆட்டப் பெண்மணியுடன் இணைந்து தன்னோடு அமர்ந்திருந்த தலைவியை மறந்து ஆடுகளம் சென்று ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறான் .

நளிந்தனை வருதல் உடன் றனள் ஆகி
உயலும் கோதை ஊரல்அம் தித்தி
ஈர் இதழ் அவிழகம் கடுக்கும் சீறடிப்
பல் சில கிண்கிணி சிறு பரடு அலைப்பக்

இக்காட்சி முரண் என்ற படி நிலையை அடைகிறது.வருந்தும் தலைவியைக் கண்டுணர்ந்து அவளை அமைதிப்படுத்தும் நோக்கில் ஆட்டப் பெண்மணிகள் அணிந்து இருந்த மலர்களில் ஒன்றான செங்குவளை மலரினை எடுத்துச் செங்கதிரினை ஒத்த கடுஞ்சினம்

கொண்ட தலைவியின் முகத்தில் மலர்ச்சி ஏற்படுத்தக் கூடிய நோக்கில் தலைவியிடம் அளிக்கிறான் தலைவன் .

கொல் புனல் தளிரின் நடுங்குவனள் நின்று நின்
எறியர் ஓக்கிய சிறு செங் குவளை
ஈ என இரப்பவும் ஒல்லாள்.

என இவ்வரிகளில் அமைந்துள்ள காட்சி வீழ்ச்சியாகும்.

நீ எமக்கு யாரையோ?
எனப் பெயர் வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமொடு அது நீ
பா அல் வல்லாய் ஆயினை பாஅல்
யாங்கு வல்லுநையோ வாழ்க நின் கண்ணி
அகல் இரு விசும்பில் பகல் இடம் தரீஇயர்
தெறு கதிர் திகழ்தரும் உரு கெழு ஞாயிற்று
உருபு கிளர் வண்ணம் கொண்ட
வான் தோய் வெண்குடை வேந்தர் தம் எயிலே.

என இப்பாடல் அடிகளில், நீ எமக்கு என்ன உறவு முறை கொண்டவனோ நீயும் உன் காம இரசனையும் வாழட்டும் எனத் தலைவனுக்கு மட்டும் கேட்கும்படி முணங்கி ஊடல் கொள்கிறாள் தலைவி. இக்காட்சி நிகழ்த்து கலையின் வடிவத்தில் முடிவினைக் கொண்ட படிநிலையினை அடைகிறது.

பாடல் - 53

விளைநிலம் பாழ் நிலமாதலும் சங்க காலச் சமூக நிலை அறிதலும்

வென்று கலம் தரீஇயர் வேண்டு புலத்து இறுத்து அவர்
வாடா யாணர் நாடு திறை கொடுப்ப
நல்கினை ஆகுமதி எம் என்று அருளிக்
கல் பிறங்கு வைப்பின் கடறு அரை யாத்த நின்
தொல் புகழ் மூதூர்ச் செல்குவை ஆயின்
செம்பொறிச் சிலம்பொடு அணித் தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள் வல் முதலைய குண்டு கண் அகழி
வான் உற ஓங்கிய வளைந்து செய் புரிசை
ஒன்னாத் தெவ்வர் முனை கெட விலங்கி
நின்னின் தந்த மன் எயில் அல்லது
முன்னும் பின்னும் நின் முன்னோர் ஓம்பிய
எயில் முகப்படுத்தல் யாவது? வளையினும்
பிறிது ஆறுசென்மதி சினம் கெழு குருசில்
எழூஉப் புறந்தரீஇ ப்பொன் பிணிப் பலகைக்
குழூஉ நிலைப் புதவின் கதவு மெய் காணின்
தேம் பாய் கடாத்தொடு காழ் கை நீவி
வேங்கை வென்ற பொறிகிளர் புகர் நுதல்

ஏந்து கை சுருட்டி த்தோட்டி நீவி
மேம்படு வெல் கொடி நுடங்கக்
தாங்கல் ஆகா ஆங்கு நின் களிறே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - குண்டு கண் அகழி

உரை

அமைதியாக ஆண்டு கொண்டிருக்கக் கூடிய நாட்டில் தன் படைகளைக் கொண்டு போய் நிறுத்திப் பாசறை அமைத்துத் தங்கி இருக்கும் மன்னனின் செயற்பாட்டை அவனால் முற்றுகை இடப்பெற்ற நாட்டின் மன்னன் அறிகிறான்.

பாசறையின் கண் வீற்றிருப்பவன் எந்த நேரமும் தன் நாட்டைத் தாக்கி அழிவை ஏற்படுத்துவான் என்ற அச்சத்தில் பணிந்து திறைசெலுத்தி வரும் முறைமைக்கு உட்பட்டு விடுகிறான். போர் முறையில் இம்முறை என்பது போரின் உத்தி முறைகளில் ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்டவாறு நாடுகளைத் தன் ஆளுமையின் கீழ் அடி பணிய வைத்ததன் விளைவாகப் பலதரப்பட்ட செல்வங்களைக் கொண்டு தன் நாட்டின் அரண்மனையை மிகப் பலமாகக் கட்டமைத்துள்ளான். எதிரிகள் கோட்டையை எளிதில் நெருங்கிடாத வண்ணம் கோட்டையைச் சுற்றி அகழி உள்ளது. அந்த அகழியில் முதலைகளை வளர்க்கும் அளவுக்குக் கோட்டை மதில் வளைந்து வளைந்து செல்லத்தக்க நீட்டம் கொண்டதாக அமைந்துள்ளது. இவ்வாறு மன்னனின் கோட்டைச் சிறப்புக் குறித்துச் சொல்லப்படுகிறது. இதன் வழியே தொடர்ந்து சொல்லப்படுவதாவது: தன் முன்னோர் கட்டிய கோட்டை மதில் இவனுக்குப் பின்னும் இந்நாட்டை ஆளக்கூடிய மன்னர்களுக்கும் சிறப்புத் தரத் தக்கதான உயர்ந்த வடிவம் பெற்ற சக்தி வாய்ந்த மதில்கள் என்று சொல்லப்படுவதன் வழியே ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் முந்தைய பரம்பரையினரும் இது போன்ற போர்த் தந்திரத்தைக் கையாண்டு பல குடிகளின் தலைவர்களை ஆளுகைக்கு

உட்படுத்தியுள்ளனர் எனவும் உணர முடிகிறது. கொள்ளையடித்தல் அச்சுறுத்துதல், அடிமைப்படுத்துதல், அபகரித்தல், கள்ளுண்ணுதல், புலால் உண்ணுதல், அடிமைப்பட்ட நாடுகளின் பெண்களைப் பாலியல் உணர்வுக்கு ஆளாக்கிப் பணிப் பெண்களாக்குதல் போன்றவைதான் வேந்தர்கள் மற்றும் பெரு வேந்தர்களின் போர் நெறிமுறைகளாகச் சங்க காலச் சமூக அமைப்பில் இருந்துள்ளன.

இம்மன்னர்கள் ஆங்காங்குப் பல்வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்திருந்த இனக்குழுக்களையும் அவர்தம் குடிகளையும் அவர்கள் பண்படுத்தி விளைவித்து வந்த நிலப்பகுதிகளையும் அவர்தம் வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்பட்ட ஆநிரைகளையும் தம்வயம்படுத்தித் தம் ஆட்சிக்கு உட்படுத்தி ஆண்டு வந்துள்ளனர். தம் ஆளுகைக்கு உட்படுத்திய வீரர்களின் கால்களில் விலங்குகள் இட்டும் படைவீரர்களாகிட வேண்டி உடைகள் அளித்தும் அவர்களுடைய இனத்தை அடையாளப் படுத்திக் கொள்ள இழைகளையும், சிலம்புகளையும் அணிவித்துள்ளனர். அடிமைப்படுத்தப்பட்ட அவர்களிடம் பெற்ற வில் வேல் போன்றவற்றைத் தம் வயப்படுத்திக் கொண்டும் அடிமைப்படுத்தப்பட்ட வீரர்களைத் தங்களுக்காகப் போரிடக் கூடிய வீரர்களாக்கி ஆண்டு வந்துள்ளனர். போர் நிரம்பிய சங்ககால வாழ்க்கை முறை சமூகத்திற்குள் ஒருவிதமான வெறுப்புணர்வை உருவாக்கியது. அந்தப் பின்புலத்தில் மக்களிடையே அறம் குறித்த சிந்தனையையும் விதைக்க வேண்டிய தேவைகளினால் சங்ககாலப் புலவர்களிடம் ஆங்காங்கே அறம் குறித்த சிந்தனை கொண்ட பாடல் அடிகளும் இடம்பெறக் காணமுடிகிறது.

செந்துறைப் பாடாண்பாட்டு எனும் துறையைப் பெற்றுள்ள இந்தப் பாட்டு மன்னனின் புகழ் வலி தோற்றம் ஆகியவற்றைப் போற்றிப் பாடும் பாட்டாக அமையும் எனச் சொல்லியுள்ள இலக்கணப்படி பார்க்கும் போது இந்தப் பாட்டைப் பாடிய புலவன் மன்னனைப் புகழ்ந்துரைத்துப் பரிசில் பெற்றுள்ளான். இப்புலவன் மன்னனைப் புகழ்ந்திருக்கக் கூடிய பாட்டின் ஊடாக இப்பாடல் பெற்றுள்ள இசை குறித்த திறம் நம்மால் அறிய முடியவில்லை. புகழ்ந்துரைத்த செய்திகளின் வழியே தொல் புகழ் மூதூர் செல்குவையாயின், மலைப்பகுதியைக் கொண்டுள்ள சேர மன்னனின் கோட்டை இயல்பாகவே கற்களால் அமைக்கப்பட்ட உயர்ந்த சக்தி வாய்ந்த மதில் எனச் சொல்லியுள்ளதில் வியப்பேதும் இல்லை.

"..........................மூதூர்ச் செல்குவை ஆயின்
செம்பொறிச் சிலம்பொடு அணித் தழை தூங்கும்"

பல்வேறு ஊர்களையும் அவ்வூர்களில் வாழ்ந்தவர்களை அடிமைப் படுத்தியுள்ள செய்தியையும் மற்றும் போர்குறித்த செய்திகளையும் கூடுதலாக அறிய வாய்ப்பேற்படுகிறது.

இப்புலவன் பாடியுள்ள இந்தப் பாடல் வழியே சங்க கால மன்னர்களின் போர் அறம் குறித்த செய்திகள் மன்னனைப் புகழ்ந்துரைத்துச் சொல்லப்பட்டிருப்பினும் புலவன் பாடியுள்ள பாட்டின் வழியாகச் சங்ககாலச் சமூக அமைப்பு நிலைகளைக் கண்டறியவும் இடம் தந்திருக்கிறது. பலபுலவர்களது பாடல்கள் வெவ்வேறு சூழல்களில் எழுதப்பட்டிருப்பினும் செந்துறைப் பாடாண் பாட்டு எனும் துறை சார்ந்த இப்பாடல் மன்னன் முன் இசைக்கப்பட்ட புலவனின் பாடலாக விளங்குகிறது.

மன்னன் குறித்துப் புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் யாவும் வண்ணங்களோடும் தூக்குகளோடும் அதாவது பலவகைச் சந்தங்களோடும் தாளங்களோடும் இசைக்கப்பட்டுள்ளன. மன்னர் அவைகளில் இசைக்கப்பட்ட பதிற்றுப்பத்துப் பாடல்கள் யாவும் இசையோடும் இசைக்கருவிகளின் துணையோடும் விறலியர் துணங்கையர் போன்ற ஆட்டமகளிரின் ஆட்ட நிகழ்வுகளோடும் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும் (performance).

பாடல் - 54

விறலியர் தரும் ஊக்கநிலை

வள்ளியை என்றலின் காண்கு வந்திசினே
உள்ளியது முடித்தி வாழ்க நின் கண்ணி
வீங்க இறைத் தடைஇய அமை மருள் பணைத் தோள்
ஏந்து எழில் மழைக்கண் வனைந்து வரல் இள முலை
பூந்துகில் அல்குல் தேம் பாய் கூந்தல்
மின் இழை விறலியர் நின் மறம் பாட
இரவலர் புன்கண் தீர நாள்தொறும்
உரை சால் நன் கலம் வரைவு இல வீசி
அனையை ஆகன் மாறே எனைய தூஉம்
உயர் நிலை உலகத்துச் செல்லாது இவண் நின்று
இரு நில மருங்கின் நெடிது மன்னியரோ
நிலம் தப இடூஉம் ஏணிப் புலம் படர்ந்து
படு கண் முரசம் நடு வண்சிலைப்பத்
தோமர வலத்தர் நாமம் செய்ம்மார்
ஏவல் வியங்கொண்டு இளையரொடு எழுதரும்
ஒல்லார் யானை காணின்
நில்லாத் தானை இறை கிழவோயே

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நில்லாத் தானை

உரை

மக்கள் அனைவரும் வன்மையுடைய வீரன் என்று புகழ்வதற்கு ஏற்றவாறு பகைவர்களைக் காலாட் படை கொண்டும் யானைப் படை கொண்டும் போரிட்ட தன்மையுடையவன். நிலப்பசி கொண்டு பல நாட்டு மன்னர்களை வென்று அவர்தம் நாடுகளைக் கைப்பற்றக் கூடியவன். போர்ப் பாசறை கொண்டுள்ள நிலமானது குறுகியது என்றாலும் பல்வேறு புலங்களை வென்று பரந்துபட்ட எல்லைகளுக்கு அரசனாக உள்ளவன். "உள்ளியது முடித்தி" என்னும் தொடர் வழியே எண்ணியதை முடிக்கக் கூடியவன் என நேரடியாகப் பொருள் கொள்ள முடிகிறது. எனினும் விறலியர் உன் வீரத்தைப் போற்றிப் பாடக் கூடிய புகழைப் பெற்ற நீ நீண்ட காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்திப்பாடுகின்ற இப்புலவனின் உள்ளக் கிடக்கையையும் கணித்து நிறைவேற்றக் கூடியவன் எனப் பொருள் கொள்ள முடிகிறது. அதாவது பரிசில் பெற உள்ள விருப்பத்தையும் உணர்ந்து செயற்படக் கூடியவன் ஆவான்.

எதிரிகளிடம் பெற்ற பொன்னையும் பொருளையும் தனக்கின்றி வாரி வழங்கக் கூடிய வள்ளல் தன்மை உடைய உனது காலம் இப்புவியில் நெடுங்காலம் அமைய வேண்டும் எனப் பாராட்டுப் பெறுகிறான். நிலம் தப இடூஉவும் ஏணிப் புலம் என்ற பாடலின் தொடர் கவித்துவம் கொண்டது. போர்ப் பாசறை கொண்டுள்ள நிலப்பகுதி சிறிது எனினும் எல்லையற்ற பல நாட்டு நிலப்பகுதிகளை வெற்றி கொண்டு தமது எல்லையை விரித்துக் கொள்ளும் பாங்கு கொண்டவன் எனும் பொருளும் தொக்கி நிற்கிறது.

ஏவல் வியங்கொண்டு இளையரொடு எழுதரும்

என்று சொல்லுவதன் வழியே தன் படைக்களத்தில் இளைஞர்களை நிறைந்த அளவில் கொண்டு தன் கட்டளைக்கு இணங்கி நடக்கக் கூடிய படை வீரர்களைக் கொண்ட தலைவன் என்ற பொருள் அமைகிறது. ஆணையிட்டதற்கு மேல் ஒருபடி கூடுதலாகச் சென்று கூடுதல்

வெற்றியைக் குவித்துப் பெருமை சேர்க்கும் சிறப்பான படை வீரர்களைக் கொண்டவன் என்ற பொருள் அமைகிறது.

நின் மறம் பாட என்றும் காண்கு வந்திசினே என்று கூறுவதன் வழியே படைக் களத்தில் பக்கமே இருந்து படைபலம் கண்டும் போர்த்திறம் அறிந்தும் போர்க்களம் பாடும் பண்பினைப் பெற்றவராக விறலியர் காட்டப்படுகின்றனர். அத்தோடு போர்க்களத்திற்கு வந்து சேர்ந்த புலவனின் பரிசில் பெறத்தக்க வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ள பாணன் நம்முன் காட்டப்படுகிறான். விறலி போர்ப் பாசறையில் ஓர் அங்கமாக நம்முன் காட்டப் படுவதும் வாழ்த்திப் பாடும் பாணன் புதிதாய்ப் போர்க்களத்தில் வீற்றிருக்கும் வேந்தனைக் காணவந்துள்ளவன் என்றும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இளமுலை,பணைத்தோள் ,தேன் பாய் கூந்தல்,பூந்துகில் அல்குல்,எழில் மழைக் கண் என விறலியரின் அழகிய இளமைத் தோற்றம் குறித்துப் போர்க்களத்திற்குப் புதிதாய் வந்து சேர்ந்த பாணன் பதிவுகளில் காணமுடிகிறது. உளவியல் ரீதியாக மன்னனின் உள்ளத்து உணர்வுகளை விறலியர் அழகோடு பொருத்திக் காட்டி வேந்தனை அமைதி நிலைப் படுத்தியதோடு அவனின் வீரம் குறித்தும் பாராட்டி வேந்தனின் அக உணர்வையும் இணைத்துக் காட்டிச் சிறப்பிப்பது சிறப்பாகும். பரிசில்களைப் பெற்றிட வேண்டும் என எண்ணிப் பாடும் முனைப்பினை இப்பாடல் வழியே நாம் எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது.போர்ப்பாசறைகளில் தங்கியுள்ள மன்னருக்கும், வீரர்களுக்கும் சோர்வு எழாதிருக்க விறலி ஆடிப் பாடிக் கலை நிகழ்ச்சி நடத்தியவளாக அறியப்படுகிறா

பாடல் - 55

அடுபோர் கொற்றவனின் அறநெறிகள்

ஆன்றோள் கணவ சான்றோர் புரவல
நின் நயந்து வந்தனென் அடு போர்க் கொற்றவ
இன் இசைப் புணரி இரங்கும் பௌவத்து
நன் கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழும் தாழைக் கானல் அம் பெருந்துறை
தண் கடற் படப்பை நல் நாட்டுப் பொருந
செவ் ஊன் தோன்றா வெண் துவை முதிரை
வால் ஊன் வல்சி மழவர் மெய்ம்மறை
குடவர் கோவே கொடித் தேர் அண்ணல்
வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரின் தந்து அவர்க்கு ஆர் பதம் நல்கும்
நசை சால் வாய் மொழி இசை சால் தோன்றல்
வேண்டுவ அளவையுள் யாண்டு பல கழியப்
பெய்து புறந்தந்து பொங்கல் ஆடி
விண்டுச் சேர்ந்த வெண் மழை போலச்
சென்றாலியரோ பெரும அல்கலும்
நனந்தலை வேந்தர் தார் அழிந்து அலற
நீடு வரை அடுக்கத்த நாடு கைக்கொண்டு
பொருது சினம் தணிந்த செருப் புகல் ஆண்மை
தாங்குநர்த் தகைத்த ஒள்வாள்
ஓங்கல் உள்ளத்துக் குருசில் நின் நாளே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - துஞ்சும் பந்தர்

உரை

ஆன்றோள் கணவ சான்றோர் புரவல
நின் நயந்து வந்தனென் அடு போர்க் கொற்றவ

எனத் தொடங்கும் பாடல் வழியே பாணன் ஒருவன் மன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறும் நோக்குடன்

குடவர் கோவே கொடித் தேர் அண்ணல்
வாரார் ஆயினும் இரவலர் வேண்டி

என்று கொற்றவனைப் பார்த்துப் புகழ்ந்து வேண்டுவதாக இப்பாடல் அமைகிறது. பரிசில் பெறுவதற்கு யாரும் இல்லாத நாட்டுக்குச் சொந்தக்காரத் தலைவனே என்று புகழ்ந்து உரைப்பதன் வழியே ஈகை உள்ளத்தால் எல்லோரும் மன்னனிடம் இருந்து பெற்ற பொருள்களைக் கொண்டு வாழ்கின்றனர் எனக் கருத்து அமைகிறது. பாணனும் பரிசில் பெற வேண்டிப் பாட்டமைத்துப் பாடுகிறான் என்பது வெளிப்படையான பொருளாகும். ஆகப் பொருள் வேண்டி இப்பாணனைப் போலப் பலரும் இக் கொற்றவன் தேசத்தில் உள்ளனர் என்பதும் உணர்ந்து கொள்ளப்படுவதாகும். வறியோர் இக்கொற்றவனின் தேசத்தில் எவரும் இல்லாததால் நீ தேரனுப்பி, பாணர் போன்றோரை அழைத்துப் பரிசில் கொடுப்பவன் எனக் கூறுவதென்பது மிகைப்படுத்திப் பாணனால் கொற்றவனைப் புகழ்ந்துரைக்கப்பட்டதாகும். மன்னன் வறியோர்க்குப் பொருள்களையும், பரிசில்களையும் வழங்குவதற்கு உரிய வசதிகளைப் பெற்று இருக்கிறான் என்பது குறித்துப் பாடலில் விளக்கப்படுகிறது. அழகிய கடற்கரைப் பகுதியிலே இவனது நாட்டு எல்லை முடிகிறது. கடற்கொள்ளை செய்து பொருள் ஈட்டிக் கொண்டு வந்த மன்னன் என நாம் அறிய முடிகிறது. உயர்ந்த மலைகளின் அடுக்குகளைக் கொண்டமைந்த நாடுகள் பலவற்றைப் போரில் வென்று கைப்பற்றியவனாக இக்கொற்றவனான இம்மன்னவன் காட்டி விளக்கப்படுகிறான்.

மலைப்பகுதியிலே நாடுகளை வென்றவனாக மட்டுமல்லாது கடல்பகுதியிலே உள்ள தீவுகள் மற்றும் கடல் பகுதியிலே கொண்டு செல்லப்படும் கடல் வணிகம் சார்ந்த பொருள்களை ஏற்றிச் செல்லக் கூடிய கப்பல்களின் வழியே கொள்ளையடிக்கப் பெற்ற பொருள்களைத் தன் கடற்கரைப் பக்கமாக அமைந்துள்ள பண்டக சாலையில் பாதுகாத்து வைத்துள்ளான் இம்மன்னவன் என நாம் அறிய முடிகிறது. தரை வழியிலும் பல நாடுகளைத் தன் குடையின் கீழ்ப் போரில் வீழ்த்தித் தன் ஆட்சிக்குட்படுத்தி அவர்தம் பொருளைத் தன் நாட்டுச் செல்வங்களாக ஆக்கிக் கொண்டவன். கடல் வழியே கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைத் தனக்கு உடைமையாக்கிக் கொண்டவன். பல்வேறு திசைகளில் இருந்தும் பல்வேறு பொருள்களைக் கொண்டு வந்து சேர்த்த இம்மன்னன் போருக்குத் துணைநின்ற படைவீரர்கள் அனைவருக்கும். கள், அவரை, துவரை, பருப்பு வகையோடு துவையல் எனச் சிறப்பு உணவுகள் அளித்து வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் போதுதான் இப்புலவனின் பாடல் மன்னனை நோக்கிப் பாடப்படுவதாக அமைகிறது. போர்க் கொற்றவ, நன்நாட்டுப் பொருந, தேர் அண்ணல், நசை சால் வாய்மொழி இசை சால் தோன்றல், நனந்தலை வேந்தர், குரிசில், பலமுறை போர் செய்து பொருள் ஈட்டியவன் என்றும் மேகம் போலக் குளிர்ந்து மழை என நிலங் குளிரச் செய்த மேகத்துக்கு ஒப்பான வீரர்களின் கவசம் ஆனவன் என்றும் இரவலர்களை அழைத்து வந்து உணவளிப்பவன் என்றும் பாணனால் பாராட்டிச் சீராட்டப்படுகிறான். மன்னன் மனம் குளிரச் செய்து பரிசில் பெறும் நோக்கம் கொண்டு அமைந்த பாராட்டுச் சொற்களாகவே இப்பாடல் அமைகிறது. மன்னரைக் காக்கும் கவசமாகப் போர் வீரர்கள் திகழ்கின்றார்கள் வீரர்களைக் காக்கும் கவசமாக மன்னன் திகழ்கிறான் என்று சொல்வது பாணனால் அல்லது புலவனால் மிகைப்படுத்திக் கூறப்பட்ட செய்தியாகும்.

கொற்றவனைப் புகழ்ந்துரைக்கும் இப்பாடலை மறுவாசிப்பு செய்வோமானால் திசை எங்கும் போர் தொடுத்து நிலம் கடல் எனத் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளையும் ஊர்களையும் மக்களையும் தொடர்ந்து போர் தொடுத்து அவர்களின் அமைதி வாழ்வையும் அவர்களது உடைமைகளையும் கைப்பற்றிய அடுபோர்க் கொற்றவன் என்றே நாம் இவனை அறிய முடிகிறது. சங்ககாலத்தில் வாழ்ந்த பல

மன்னர்கள் கொள்ளையடித்த வரலாற்றுத் தடயங்களின் எடுத்துக் காட்டுகளுள் ஒன்றாகவே இப்பாடலை நாம் கணக்கில் கொள்ள நேர்கிறது.

அறங்கள் செய்க, அறங்கள் போற்றுக, அறத்தைப் பேணுக என்று அறம் குறித்த பல பாடல்களில் எழுத்தறிவு பெற்ற புலவர்கள் முன்வைத்தமைக்கான காரணம் அக்காலச் சமூகத் தேவையே என்பது மேற் பாடற் பொருள் தரும் கருத்தியலின் பின்னணியில் நாம் புரிந்து கொள்ள நேரிடுகிறது.



பாடல் - 56

கோடியர் ஏத்தும் கொற்றவன்

விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்க அவன் கண்ணி
வலம் படு முரசம் துவைப்ப வாள் உயர்த்து
இலங்கும் பூணன் பொலங் கொடி உழிஞையன்
மடம் பெருமையின் உடன்று மேல் வந்த
வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்து உகு போர்க்களத்து ஆடும் கோவே...

துறை	-	*ஒள் வாள் அமலை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி*

உரை

கோடியர் என்போர் யாழ் போன்ற நரம்பிசைக் கருவியை இசைக்கும் கலைஞர். தோல் இசைக் கருவியின் தாள வாசிப்பினைச் செய்யும் கலைஞர். மன்னன் புகழ் உரைக்கும் இசைப்பாட்டுப் பாடும் இசைக் கலைஞர்கள். வாழ்த்திப் பாடத்தக்கவர். எண்ணிப் பார்க்காமல் போர் தொடுத்துத் தோல்விகண்ட மன்னனின் அறியாமையை எண்ணி ஆனந்தக் களிப்பில் மெய் மறந்து ஆடுகின்ற போர்க்கள நாயகன்

சேரமன்னன். கோட்டு வாத்தியங்கள் முழவு இசைக் கருவிகள் முழங்கப் பாடிக் கூத்தாடும் கலைக்குழுவினராய் ஒரு கலைஞன் எனும் தகுதி பெற்ற கலைஞன் அல்லன். மாறாக, கலைஞர்களிடம் இருந்து வேறுபட்டுப் போர்க்கள வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் ஆடி மகிழத்தக்கவன்.

கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்க அவன் கண்ணி
வலம் படு முரசம் துவைப்ப வாள் உயர்த்து

எனும் இப்பதிற்றுப்பத்துப் பாடலடிகளைப் பார்க்கும் போது இவை கலைகுறித்தும் கலைஞர்களைக் குறித்தும் மிக ஆழமாகச் சொல்வதை நாம் உணர முடிகிறது. போர் குறித்தும் சேரன் வெற்றிச் சிறப்புக் குறித்தும் பேசும் பதிற்றுப்பத்துப் பாடல்கள் கலைகள் குறித்தும் கலைஞர்கள் குறித்தும் சிறப்புறப் பேசுகின்றன. உரையாசிரியப் பெருமக்கள் கலை குறித்த பதிவுகளைச் சரிவர நமக்குக் காட்டத் தவறியுள்ளனர்.

பாடல் - 57

துணங்கை ஆடிய வலம்படு கோமான்

ஓடாப் பூட்கை மறவர் மிடல் தப
இரும் பனம் புடையலொடு வான் கழல் சிவப்பக்
குருதி பனிற்றும் புலவுக்களத்தோனே
துணங்கை ஆடிய வலம்படு கோமான்
மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்
செல்லா மோதில் சில் வளை விறலி
பாணர் கையது பணி தொடை நரம்பின்
விரல் கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல் புணர் இன் இசைத் தழிஞ்சி பாடி
இளந் துணைப் புதல்வர்நல் வளம் பயந்த
வளம் கெழு குடைச் சூல் அடங்கிய கொள்கை
ஆன்ற அறிவின் தோன்றிய நல்இசை
ஒள் நுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவு எதிர்கொள் வனைக் கண்டனம் வரற்கே.

துறை	-	*விறலியாற்றுப் படை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*சில் வளை விறலி*

உரை

இப்பாடலில் மன்னனைப் பற்றிப் பாடும் அடிகளைவிட விறலியரையும் விறலியின் குரல் இசையையும், பாடலையும், ஆடலையும் விறலி மீட்டும் பாலைப்பண் எழுப்ப வல்ல பேரியாழையும் விரிவாகப் பேசப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

துணங்கை ஆடிய வலம்படு கோமான்
மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்
செல்லா மோதில் சில் வளை விறலி
பாணர் கையது பணி தொடை நரம்பின்
விரல் கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல் புணர் இன் இசைத் தழிஞ்சி பாடி

பதினைந்து அடிகள் கொண்ட இந்த விறலியாற்றுப்படைப் பாடலில் மேற்சுட்டிய அடிகளும்,

ஆன்ற அறிவின் தோன்றிய நல்இசை
ஒள் நுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவு எதிர்கொள் வனைக் கண்டனம் வரற்கே.

என வரும் தொடர்களும் விறலியைக் குறித்துப் பேசுகின்றன.

துணங்கையின் ஆட்டத்தை இரசிக்கக் கூடிய அரசன் துணங்கை ஆடிய வலம்படு கோமான் எனக் குறிப்பிடப்படுகிறான். சிறிய நெற்றியையும் மெல்லிய காலடியையும் அழகூட்டக் கூடிய ஒருசில வளையல்களையும் கொண்டு விளங்கும் அழகுடைய ஆட்டக் கலைஞராக மன்னனின் பார்வைக்கு இரசிக்கத் தக்கவளாக விளங்குகிறாள் விறலி. ஆட்டம் ஆடும் அழகிக்கு இசையும் தாளமும் , பாட்டும் தேவை. விறலி ஒருத்தி பேரியாழை ஒருபுறத்தே வைத்து நரம்பிசையை மீட்டிப் பாலைப் பண் வாசிக்கின்றாள் எனப் பாடலின் அடிகள் வழி நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பாட்டிசைக்கும் நல்ல குரல் வளம் மிக்க பாட்டுக் கலைஞராகப் பாணன் விளங்குகின்றான். பேரியாழை வாசிக்கும் விரல்கள் பாலைப் பண் தரும் அந்தப் பேரியாழின் வாசிப்புக்கு ஏற்ப மன்னன் புகழினைப்

பாடு பொருளாகக் கொண்டு அமைந்த குரலிசைப் பாடல் குரலும் விரலும் புணர்ந்தவாறு அதாவது கேட்போர் இரசித்து மகிழுமாறு இசையும் குரலும் இயைந்து செல்கின்றன. சிலம்பு அணிந்த கால்கள் வளையல் அணிந்த கைகள் பாடலுக்கு ஏற்ற தாளம் தரத்தக்கவையாக விளங்குகின்றன.

இவ்விறலியாற்றுப்படையில், விறலிக்குத் தரும் விளக்கங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. எனினும் மன்னனின் வெற்றிச் சிறப்பபையும்,கொடைச்சிறப்பையும் விதந்தோதும் உரைகள் பலராலும், பல முறையில் விரிவாக எடுத்து உரைக்கப்படுகின்றனவே அன்றிச் சில்வளை விறலியைப் பற்றியோ விறலி ஒருத்திக்கு ஆற்றுப்படுத்திக் கூறிடும் விறலி பற்றியோ விரிவுற எழுதப்படவில்லை. சேரன் மட்டுமே உரை ஆசிரியருக்குப் பெருமையாகவும், மையப் பொருளாகவும் இருந்துள்ளானே அன்றிக் கலை குறித்த பதிவு குறைவு.

மன்னனின் சினத்தை அமைதிப்படுத்திக் குடும்பத் தலைவனாகவும் நாட்டு மக்களின் நாயகனாகவும் மன்னனை உணர்ந்து கொள்ளச் செய்யும் ஒரு மருத்துவக் கலைஞராக விறலியைப் பார்க்கத் தவறியதென்பது இப்பாடலுக்கு உரை எழுதிய பல்வேறு உரையாசிரியர்களின் கவனத்தில் விடுப்பட்ட செய்தியாகும். போர்க்களத்தில் பாடியமைத்து வெற்றி முகம் கண்டு தங்கியுள்ள மன்னனைக் கண்டு வெற்றிக் களிப்புச் சிந்தும் பாடல்களைப் பாடி ஆட்டம் நிகழ்த்தி மன்னனை வாழ்த்தும் ஒரு சமுகப் போராளியாக விறலி அமைகிறாள் .

கலைஞர்களுக்கு மட்டும் யாருக்கும் கிடைக்கப் பெறாத சுதந்திரம் கிடைத்துள்ளது. அந்த வகையில் போர்க்களம் சென்றும் கலைநிகழ்ச்சி நடத்தி இன்புறுத்தும் சமூகக் கடமையை விறலியும், பாணரும் இயைந்து செய்வதாக நாம் இந்தப் பாடல் வழி அறியமுடியும். எதிரியை வீழ்த்திப் பெற்ற பல்வேறு பொருட்களை ஆடிப்பாடிய கலைஞருக்கு வழங்கும் வாய்ப்பினை மன்னன் இயல்பாகவே பெற்றுள்ளான் என நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

பாடல் - 58

ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்

ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்
வெண் தோட்டு அசைத்த ஒண் பூங் குவளையர்
வாள் முகம் பொறித்த மாண் வரி யாக்கையர்
செல் உறழ் மறவர் தம் கொல்படைத் தரீஇயர்
இன்று இனிது நுகர்ந்தனம் ஆயின் நாளை
மண் புனை இஞ்சி மதில் கடந்தல்லது
உண்குவம் அல்லேம் புகா எனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்
பொய் படுபு அறியா வயங்கு செந்நாவின்
எயில் எறி வல் வில் ஏ விளங்கு தடக்கை
ஏந்து எழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை
வானவரம்பன் என்ப கானத்துக்
கறங்கு இசைச் சிதடி பொரி அரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்
புன்புலம் வித்தும் வன் கை வினைஞர்
சீருடைப் பல் பகடு ஒலிப்பப் பூட்டி
நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்கு கதிர்த் திரு மணி பெறூஉம்
அகன் கண் வைப்பின் நாடு கிழவோனே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ஏ விளங்கு தடக்கை

"ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்"

எனத் தொடங்கும் இப்பாடல் பாணன் புகழ்ந்துரைக்க வேண்டும். பாணர்களின் பாட்டின் வழியே நாட்டில் உள்ள மக்களுக்கு மன்னனின் சிறப்புகள் விதந்தோதப் பட வேண்டும் என்பன உள்ளக் கிடக்கைகளாக அமைகின்றன. பாணனின் பாட்டு அரசவையிலும் மக்கள் மன்றுகளிலும் பாடப்பட வேண்டும் என்னும் கருத்தும் தலைவனின் புகழ் மக்களிடம் பரவ வேண்டும் எனும் கருத்தும் இங்கு முதன்மைப் படுத்தப்படுகின்றன.

பாணனை முன் நிறுத்திப் பாணனால் பாடக் கூடிய பாட்டாக இது அமைகிறது.

நாடு கிழவோனே எனக் குறிப்பிடுவதன் வழியே இந்த நாட்டுத் தலைவன் குறுகிய எல்லைகளைக் கொண்ட ஊர்களை உடைய சிறிய நாட்டுக்குத் தலைவன் என அறிய முடிகிறது. **கிழவோனே எனக் குறிப்பிடுவதன் வழியே இத்தலைவன் இனக்குழுத்தலைவனாக விளங்குகிறான் என எண்ணத் தோன்றுகிறது.** சிறிய வீடு மழை குறைந்த வறண்ட நிலப்பகுதி என்பதால் புன்புலம் எனப்பட்டது. உழவர்கள் உழும் நிலப் பகுதி நன்புலம் எனப்பட்டது.

எருமைகளைக் கொண்டு நன்புலத்தை உழக் கூடியவர்கள் வீரர்கள் எனச் சொல்லப்படுவதன் வழியே **போர்க்காலங்களில் போர் வீரர்களாகவும் பிற காலங்களில் நன்புலம் உழக் கூடியவர்களாகவும் விளங்குகின்றனர் என்னும் பொருள் பெற முடிகிறது.** இனக்குழுத்தலைவன், சிற்றூர்த் தலைவன், குறுநில மன்னன் போன்றோர் போற்றுதற்கு உரிய பாடல் வழியே மிகுந்த பெருமைக்கு உரியவனாக மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டியவன் எனப் பாணர்கள் கருதியதன் விளைவாக மன்னர்தம் பெருமையை விதந்தோதுவதே தம் கடமையாகக் கொண்டனர் என்பதும் மேற் பாடல் வழி அறிய முடிகிறது.

பாடல் - 59

சிறுகுடி ஏத்தும் பெருநில வேந்தே

பகல் நீடு ஆகாது இரவுப் பொழுது பெருகி
மாசி நின்ற மா கூர் திங்கள்
பனிச் சுரம் படரும் பாண்மகன் உவப்பப்,
புல் இருள் விடியப், புலம்பு சேண் அகலப்
பாய் இருள் நீங்கப் பல் கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றியா அங்கு
இரவல் மாக்கள் சிறு குடி பெருக
உலகம் தாங்கிய மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை வீற்று இருங் கொற்றத்துச்
செல்வர் செல்வ சேர்ந்தோர்க்கு அரணம்
அறியாது எதிர்ந்து , துப்பில் குறையுற்றுப்
பணிந்து திறை தருப நின் பகைவர் ஆயின்
சினம் செலத் தணியுமோ வாழ்க நின் கண்ணி
பல் வேறு வகைய நனந் தலை ஈண்டிய
மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்
ஆறு முட்டுறா அது அறம் புரிந்து ஒழுகும்
நாடல் சான்ற துப்பின் பணைத் தோள்
பாடு சால் நன்கலம் தரூஉம்
நாடு புறந்தருதல் நினக்குமார் கடனே

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*மா கூர் திங்கள்*

உரை

இப்பாடலில் காட்டப்படும் மன்னன் பெரு வேந்தன் எனும் நிலையைப் பெற்றவனாகக் காட்டப்படுகிறான். பல நாடுகளைத் தன் பொறுப்பில் அதாவது தன் தோள்களில் வைத்துப் பாதுகாக்கிறான் என்று சுட்டப்படுவதன் வழியேயும் பல்வேறு நாடுகள் இப்பெருவேந்தனின் ஆளுகைக்கு உட்பட்டுள்ளன என்றும் இவன் ஆளுகைக்கு உட்பட்ட பல நாட்டு அரசர்களும் முறையே காலம் தப்பாது திறை செலுத்தி வந்துள்ளனர் என்றும் அறிய முடிகிறது. செலுத்தப்பட்ட திறைகளில் இருந்து பல்வேறான பொருட்களைப் பாணன் பலருக்கும் பகிர்ந்தளித்துள்ளான் என நாம் அறிகின்றோம். இந்தப் பெருவேந்தன் கல்வியறிவு பெற்றவனாகக் காட்டப்படுகின்றான். அறங்கள் பல முறையே கற்று அறத்தின் வழி ஆட்சி நடத்துபவனாகக் காட்டப்படுகிறான்.

"இரவல் மாக்கள் சிறு குடி பெருக"

என்பதன் வழியே பல்வேறு சிறு சிறு குடிகள் கொண்ட நாட்டார்க்கு அல்லது அந்த நாட்டைச் சார்ந்த மக்களுக்கு இரவல் தரும் தகைமை சான்றவனாக விளங்குகின்றான் . இது போன்ற சிறுகுடிகள் பலவற்றைத் தன் ஆளுமையின் கீழ்க் கொண்டுள்ளான் எனத் தெரிகிறது.

பகல் நீடு ஆகாது இரவுப் பொழுது பெருகி
மாசி நின்ற மா கூர் திங்கள்
பனிச் சுரம் படரும் பாண்மகன் உவப்ப,
புல் இருள் விடிய, புலம்பு சேண் அகல
பாய் இருள் நீங்க பல் கதிர் பரப்பி

பெரும் பனிப் பொழுது வேளையில் உயிரினங்கள் யாவும் குளிரால் ஒடுங்கிக் கிடக்கும் சூழலில் கதிரவன் கதிர் வீச்சு அந்நிலையை மாற்றிவிடுகிறது. அதுபோலச் சிறு குடியினர் வாழ்க்கையில் வறுமையுற்ற போது தன் கொடைச் சிறப்பால் அவர்களுடைய வறுமை நிலையில் இருந்து மாற்றிய செல்வச் செல்வன் என்பதும் வில்லோர் மெய்மறை

என்றும் சொல்வதன் வழியே இந்தக் கொற்றவன் பெரு வேந்தன் எனும் நிலையைப் பெற்றவனாக விளங்குகிறான் என்பதும் அறியப்படுகின்றன.

பாண்மகன் உவப்ப எனக் குறிப்பிடுவதன் வழியே பாணனும் அவர்தம் உறவினரும் மன்னனின் பரிசில்களைப் பெற்று மகிழ்ந்தனர். **பாணர்கள் மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட நிலத்தில் நிரந்தரக் குடிமக்களாக இல்லை. மாறாகப் பாணரும், கூத்தரும் நாடோடிச் சமூகத்தவராக விளங்கினார்கள். இவர்களைத் தவிரப் பிற சிறு குடியினரும் இரந்துண்ணும் மாக்களாகவே வாழ்ந்துள்ளனர்.**

மாக்கள் என்று குறிப்பிட்டதன் வழியே மன்னனின் ஆளுகைக்குட்பட்ட அடிமைப் படுத்தப்பட்ட மக்கள் என்றும் இனக்குழுச் சமூகத்தில் தாங்கள் பெற்றிருந்த தங்கள் உடைமையை இழந்த அதாவது கொற்றவனின் அபகரிப்புக்கு ஆளான குடியினர் என்றும் நாம் பொருள் கொள்ள முடிகிறது.

ஆறு முட்டுறா அது அறம் புரிந்து ஒழுகும்
நாடல் சான்ற துப்பின் பணைத் தோள்

அறம் புரிந்து ஒழுகும் என்பதன் வழியே அறம் புரிந்து ஆட்சி செய்பவன் என்று காட்டப்படுகிறான். அறம் குறித்த சிந்தனைக் கல்வியை மன்னவன் பெற்றிருக்கிறான். வைதீகச் சிந்தனையை அந்தணர்களால் அதாவது வடக்கில் இருந்து வந்தோர்களால் அறம் குறித்த கல்வி போதிக்கப்பட்டுள்ளது என உணரமுடிகிறது . அல்லது வடக்கில் இருந்து வந்த அந்தணருக்கு முன்பாக இருந்த சமணரும் பௌத்தரும் நாடு முழுவதும் பரவி இருந்த தாக்கத்தின் வழியே அறம் குறித்த கல்விச் சிந்தனையை இக்கொற்றவன் பெற்றிருக்க வேண்டும். இக் கொற்றவனின் கீழ்ப் பல நாடுகளும் பல குடிகளும் வறுமையைச் சந்தித்தோராக விளங்குவதால் மன்னனின் கொடை வேண்டப்படும் அல்லது தேவைப்படும் தேடுதலைப் பெற்றவர்களாக மக்கள் விளங்கியுள்ளனர்.

பல்வேறு இனக் குழுச் சமூகங்களை ஒடுக்கித் தனிவுடமைக்கு உட்படுத்தி உடைமைச் சமூகத்திற்கு அடி கோலியவனாகவே இக் கொற்றவனை நாம் காண முடிகிறது.

பல் வேறு வகைய நனந் தலை ஈண்டிய
மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்
ஆறு முட்டுறா அது அறம் புரிந்து ஒழுகும்
நாடல் சான்ற துப்பின் பணைத் தோள்
பாடு சால் நன்கலம் தருஉம்
நாடு புறந்தருதல் நினக்குமார் கடனே.

என்று கூறிப்பிடுவதன் வழியே காடுகளில் வாழ்ந்த முல்லை நில மக்களையும், வயல் பகுதியில் வாழ்ந்த மருத நில மக்களையும் எனப் பலவாறான வேற்றுப்புல அதாவது வேறுபட்ட புலங்களில் வாழ்ந்த மக்களிடம் தான் வெற்றி பெற்ற பண்டங்களைப் பகிர்ந்து அளித்தவனாக இம்மன்னவன் காட்டப்படுகிறான். இம் மன்னனிடம் இருந்து பெற்றவர்களில் ஒருவனாகப் பாணனும் காட்டப்படுகிறான்.

உ. த. நி.
எண் ___
நூலகம்

பாடல் - 60

பாண் மகள் பாடும் பாட்டு

கொலை வினை மேவற்றுத் தானை தானே
இகல் வினை மேவலன் தண்டாது வீசும்
செல்லா மோதில் பாண்மகள் காணியர்
மிஞிறு புறம் மூசவும் தீம்சுவை திரியாது
அரம் போழ்கல்லா மரம்படு தீம் கனி...
அம் சேறு அமைந்த முண்டை விளை பழம்
ஆறு செல் மாக்கட்கு ஓய் தகை தடுக்கும்
மறாஅ விளையுள் அறாஅ யாணர்
தொடை மடி களைந்த சிலையுடை மறவர்
பொங்கு பிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வரும் கடல் ஊதையின் பனிக்கும்
துவ்வாநறவின் சாய் இனத்தானே

துறை	-	*விறலியாற்றுப்படை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*மரம்படு தீம் கனி*

உரை

வண்டுகள் துளைத்த பழங்களின் மணம் செல்லும் வழி எங்கும் வீசுகின்றது . வழிப்பயணம் மேற் கொள்வோர் பசி கொள்ளும் நேரத்தில்

பலா போன்ற தீங்கனிகள் நிறைந்த சோலைகளில் பல பழங்களைச் சுவைத்து விட்டு நடப்பதற்கு வழிவகை செய்துள்ளான்.

வில் அம்பு கொண்டு வெற்றி கொள்ளும் சேனையைப் பெற்றுள்ள தலைவனான இம் மன்னன் வீரனாக இருப்பினும் மெல்லிய தோள்களைக் கொண்ட மென்மையான தலைவியோடு உறைந்துள்ளான். இது பொங்குகின்ற கடல் அலைகுளிர்ந்த மேகங்களை உருவாக்கி மழை பொழியக் காரணமாவது போல வீரமும் கோபமும் கொண்டுள்ள மன்னன் நெஞ்சில் ஈரமும் அணுகுவோர்க்குக் கொடையும் அளித்து உதவும் கொடை கொண்டவனாக இருக்கிறான். அவனிடம் சென்று அவன் புகழ் பாடி அவனின் கொடையைப் பெறப் புறப்படவில்லையா என ஆட்டம் ஆடிப் பாட்டுப்பாடிப் பலவித உரைகளால் மன்னனின் புகழை எடுத்துக் கூறிக் கலை நிகழ்ச்சி செய்யும் விறலி ஒருத்தி தன் சக விறலியர்க்கு விதந்தோதும் பாடு பொருள் கொண்டதாக இப்பாடல் அமைகிறது.

விறலி என்பவள் பாணனின் பாட்டுக்கு ஆடக்கூடியவள் என்பது மட்டும் அல்ல, பாணருக்கு ஈடுகொடுக்கும் வகையில் பாடும் வல்லமை கொண்டவளாகத் திகழ்கிறாள். இங்குக் கூடுதல் செய்தி- மேலும் ஆடிப்பாடும் வேளையில் கண்டு கேட்டு இரசித்துக் கொண்டிருப்பவருக்கு விளக்கி உரைக்கும் உரைத்திறனும் அதாவது எடுத்து இயம்பும் வசனம் பேசும் வல்லமை கொண்டவளாகவும் விறலி விளங்குகிறாள் என்பது தெளிவு .

செல்லா மோதில் பாண்மகள் காணியர்
மிஞிறு புறம் மூசவும் தீம்சுவை திரியாது
அரம் போழ்கல்லா மரம்படு தீம் கனி...

செல்லா மோதில் பாண்மகள் எனும் வரி தரும் செய்தியால் விறலியர் என்பவர் பாணனின் மகள் மற்றும் உறவுக்குச் சொந்தமானவராக இருப்பதும் இங்கு உணரத்தக்க கூடுதல் செய்தியாக அமைகிறது. கூத்து நிகழ்த்தும் விறலியர் என நாம் உணர்வதால் விறலியர் நிகழ்த்தும் கூத்து பகல் வேளைகளிலும் நிகழ்த்தப் பட்டுள்ளது என உய்த்துணர முடிகிறது. மேலும் இப்பாடலில் காணப்படும் பாண்மகள் மற்றுமுள்ளோர் பாணன் வழி வந்தவர்கள். இவர்கள் மன்னன் அரண்மனையிலேயே தங்கி மன்னன் மற்றும்

மன்னன் சார்ந்தவர்களைத் தவிர வேறு யாரையும் பாடுவது இல்லை. பாணர்களில் ஒரு சில பிரிவினர் மன்னர் அவைகளிலே பல தரப்பட்ட பணிகளைச் செய்வோராகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

ஆறாம் பத்து - பதிகம்

பாணர் உறவும் மன்னர் விழைவும்

குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்
தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டி யுள் தந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஓர் ஊர் ஈத்து
வான வரம்பன் எனப் பேர் இனிது விளக்கி
ஏனைமழவரைச் செருவில் சுருக்கி
மன்னரை ஓட்டிக்
குழவி கொள்வாரின் குடி புறந்தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடு கோட்பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யுள் அடங்கிய கொள்கைக்
காக்கை பாடினியார் நச்செள்ளையார்
பாடினார் பத்துப் பாட்டு

பெயர்கள்

வடு அடு நுண் அயிர் , சிறு செங் குவளை, குண்டு கண் அகழி, நில்லாத் தானை, துஞ்சும் பந்தர், வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி, சில் வளை விறலி, ஏ விளங்கு தடக்கை, மா கூர் திங்கள், மரம்படு தீம் கனி.

உரை

தொகுத்தோன் அல்லது பழைய உரை எழுதியோன் ஆக்குவித்ததாக இப்பதிகம் அமைகிறது. வேள்வி பற்றியும், பார்ப்பனர் பற்றியும் ஊரை அழித்தும், பசுவினை வழங்கியும் பேர் பெற்ற குடநாட்டின் தலைவனாக நெடுஞ்சேரலாதனும், ஆவிக்கோமான் தேவி

ஈன்ற மகனாகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் எனப் புகழ்ந்துரைப்பதன் வழியே வைதீக மரபுக்கு உட்பட்டவனாக ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காட்டப்படுகிறான். தொடர்ந்து அவனை விளக்கும் போது தண்டகாரண்யத்தில் உள்ளவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட மலை ஆடுகளைத் தொண்டித் துறைமுகத்திற்குச் சேர்த்த குறிப்பு காணப்படுகிறது. ஆநிரைகளைக் கவர்தல் என்பது திணையாகச் சங்கப்பாடல் பலவற்றில் உள்ள செய்திகள் இங்கு நம் நினைவுக்கு வருகின்றன. இம்மன்னவனை வைதீக மரபு சார்ந்த ஒரு நிலையைக் கொண்டவன் எனப் பதிகத்தின் முதற் பகுதி காட்டுகிறது. பிற்பகுதி இவன் இனக்குழு மரபுக்குச் சொந்தக்காரன் என்றும் காட்டிநிற்கிறது. ஏன் எனில் இனக் குழுவினது ஆரிய செல்வாக்குப் பெற்ற பலி, வேள்வி எனும் வேறு ஒரு தரநிலை பெற்ற சமூக வளர்ச்சி நிலை காட்டப்படுகிறது.ஆகவே இப்பதிகத்தைப் பாடிய புலவனின் புனைந்துரையில் இரு தரப்பட்ட இனமரபுச் சமூகங்களை ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்குப் பொருத்திக் காட்டுவது என்பது பொருத்த மற்றதாகவே படுகிறது. **இருபெண்பாற் புலவர்களும் பாடிப்பரிசு பெற்ற புலவர்களாகக் காட்டப்பட்டிருப்பதனால் பெண்கள் கல்வி அறிவு பெறலாகாது என்ற பிற்போக்குச் சிந்தனைக்கு மாற்றுச் சிந்தனை கொண்ட சமணர் மரபில் தோன்றியவர்களாக மனங்கொள்ளவும் இடம் உண்டு.** மேற்காணும் பல வித கருத்துக்களைக் கருதுகோள்களாக்கிக் கொள்ள இடமளிக்கும் இப்பதிகம் பிற்கால இடைச் செருகல் எனக் கூறவும் இடம் உண்டு.

கபிலர்

இயற்றிய

ஏழாம் பத்து

பாடல் - 61

ஈகை வேந்தன் இயற்சிறப்பு

பலாஅம் பழுத்த பசும் புண் அரியல்
வாடை தூக்கும் நாடு கெழு பெருவிறல்
ஓவத்து அன்ன வினை புனை நல் இல்
பாவை அன்ன நல்லோள் கணவன்
பொன்னின் அன்ன பூவின் சிறியிலைப்
புன் கால் உன்னத்துப் பகைவன் எம் கோ
புலர்ந்த சாந்தின் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மா வண் பாரி
முழவு மண் புலர இரவலர் இனைய
வாராச் சேண் புலம் படர்ந்தோன் அளிக்க என
இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்
ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்
ஈத்தொறும் மா வள்ளியன் என நுவலும் நின்
நல் இசை தர வந்திசினே ஒள் வாள்
உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவின் அன்ன வெள் வேல் பாடினி
முழவில் போக்கிய வெண் கை
விழவின் அன்ன நின் கலி மகிழானே

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும்
பெயர் - புலாஅம் பாசறை

உரை

கலையையும், வீரத்தையும் குறிக்கும் செய்திகள் கொண்டதாக இப்பாடல் அமைகிறது. காட்சி வாழ்த்து எனும் துறையின் பொருள் ஒரு காட்சியை வாழ்த்துதல். ஒரு பெருவீரனை அல்லது வீரக்கல்லைக் கண்டு போற்றுதல்[1]. போர்ப்பாசறையின் கண் வீற்றிருந்த மன்னனின் இரக்கத் தன்மையையும் கொடைத் தன்மையும் வீரச்சிறப்பையும் இப்பாடல் காட்டி நிற்கிறது. பாரி எனும் குறுநில மன்னன் கொடைச் சிறப்புக் கொண்டவன். அவன் இறந்து பட்டதனால் அவனை நாடிச் சென்று பாடி ஆடிப் பரிசில் பெறும் கலைஞர் பெருமக்கள் வாடி நிற்கின்றனர்.

பலாப் பழம் பழுத்துத் தோல் விரிந்து பழச்சாறு சிந்துவதால் ஏற்பட்டுள்ள வாசனை ஒப்பப் பாரியைப் போல ஈகைத் தன்மையில் சிறந்து விளங்கும் இவன் புகழ் காதுக்கு எட்டியதனால் பலரும் வந்து பாடி ஆடிப் பரிசில் பெற்றுச் செல்லும் வகையில் நானும் நாடி வந்துள்ளேன் எனக் கபிலர் தன்னை முன்னிலைப் படுத்தி மன்னனிடம் பாடும் பாடலாக இது அமைகிறது.

பாவை அன்ன நல்லோள் கணவன்
பொன்னின் அன்ன பூவின் சிறியிலை
விழவின் அன்ன நின் கலி மகிழானே

எனும் பாடல் அடிகள் வழியே *விழவின் அன்ன நின் கலி மகிழானே* அடை மொழிகளும் உவமங்களும் மிகுந்த சிறந்த பாடல் அடிகள் கொண்டதாக இப்பாடல் அமைகிறது. ஈத்தது, ஈத்தது இரங்கான், ஈத்தொறும் மகிழான், ஈத்தொறும் மா வள்ளியன், இரக்கு வாரேன் என்பதான சொற்களில் உள்ள ஈகை குறித்த செய்திகளின் வழியே சேரனின் குணங்கள் உணர்த்தப்படுகின்றன. ஈகை அளிப்பதனால் பெற்றவர் இன்புறுவரே அன்றி ஈகை அளித்தோம் என நீ கொடை

1. தமிழ் வீரநிலைக் கவிதை. க.கைலாசபதி. பக்.272. குமரன் புத்தக இல்லம், ஆண்டு 2006.

உடையோன் என மகிழமாட்டாய். ஈகையின் பொருட்டுத் தன் இடத்தே உள்ள பொருட்கள் குறைவுபடுகின்றன என்று கழிவிரக்கம் கொள்ள மாட்டாய். ஈகைத் தன்மையையும் போர்க்களத்தே உள்ள வீரத்தன்மையையும் புகழ்ந்து பாடவே வந்தேன் எனப் பாசறையில் வீற்றிருக்கும் சேரனிடம் பாடுவதாக இப்பாடல் அமைகிறது. போர்ப் பாசறையில் தங்கி இருக்கும் வேந்தர்கள் மகளிரோடு இல்லத்திலே வீற்றிருந்த காலத்தை விடப் போர்ப்பாசறையில் தங்கியுள்ள காலமே அதிகம் என அறிய முடிகிறது.

பாரியைக் குறிப்பிட்டுச் சேரனிடம் கூறுவதனால் வள்ளல் தன்மையைத் தொட்டுக் காட்டி உளவியல் ரீதியில் இம் மன்னனிடம் பரிசில் பெற எண்ணியது இங்குக் கவனிக்கத் தக்கது. போர்க் களத்தை நம்முன் கபிலர் காட்டும் காட்சியாவது நாளோலக்கம் என்பதை இரு நிலைகளில் காணமுடிகிறது. ஒன்று மன்னர்தம் அவைக் களத்தில்; மற்றொன்று மன்னர்தம் போர்க்களத்தில். கலைஞர் பெருமக்களான விறலியர் பாணர் பாடினியர் போன்றோர் கலைநிகழ்ச்சி நடத்தித் திருவோலக்கம் எனுமாறு மன்னனையும் வீரர்களையும் மகிழ்ச்சிப்படுத்தியுள்ளனர் எனக் கபிலர் காட்சிப்படுத்துவதன் வழியே நம் மனத்திரையில் நிகழ்த்திக் காண முடிகிறது. போர்க் கருவிகளைப் புகழ்ந்து பாடும் பாடினி முழவினை வாசிக்கும் கைவிரல்கள் விளையாடுவது போல் ஆட்டக் கலைஞர்களின் ஆட்ட அடவு முறைகள் நிகழ்ந்துள்ளமையை மன்னன் மனமகிழ்ந்து கண்டுகளித்தான். இந்நிகழ்வு ஒரு விழாக் கோலம் போல இருந்துள்ளதாகக் கபிலர் பதிவு செய்துள்ளார். பாணர்கள் விறலியர் போன்ற கலைஞர் பெருமக்கள் போர்ப்பாசறையில் பாடுவதும் கலைநிகழ்ச்சி நடத்துவதுமான நிகழ்த்து கலைகளை நிகழ்த்துவதுமான கலை நிகழ்ச்சியைக் கவனிக்கும் போது நெடு நாட்கள் இல்லத்தையும் இல்லக்கிழத்தியையும் விடுத்த நிலையில் போர்ப்பாசறையில் மகிழ்ந்து பொழுது போக்கியுள்ள விதங்களை நாம் திருவோலக்கம் எனும் பதிவின் வழியேயும் விழவின் கண்ணே நின் மகிழானே எனும் இப்பாடல் காட்டும் அடிகள் வழியேயும் உணர்ந்து கொள்ள முடிகிறது. போர்ப்பாசறை அமைத்துப் பிற நாட்டரசன் எல்லையின் கண் வீற்றிருப்பது ஒரு விதமான போர் உத்தி முறை என்பதை நாம் ஏலவே கண்டுள்ளோம்.

பாடல் - 62

பாடல் சான்ற படை பலம்

இழை அணிந்து எழுதரும் பல் களிற்றுத்
தொழுதியொடு
மழை என மருளும் மா இரும் பல் தோல்
எஃகு படை அறுத்த கொய் சுவற் புரவியொடு
மைந்துடை ஆர் எயில் புடை பட வளைஇ
வந்து புறத்து இறுக்கும் பசும் பிசிர் ஒள் அழல்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர் திகழ்பு
ஒல்லா மயலொடு பாடு இமிழ்பு உழிதரும்
மடங்கல் வண்ணம் கொண்ட கடுந்திறல்
துப்புத்துறை போகிய கொற்ற வேந்தே
புனல் பொரு கிடங்கின் வரைபோல் இஞ்சி
அணங்குடைத் தடக் கையர் தோட்டி செப்பிப்
பணிந்து திறை தருப நின் பகைவர் ஆயின்
புல்லுடை வியன் புலம் பல் ஆ பரப்பி
வளனுடைச் செறுவின் விளைந்தவை உதிர்ந்த
களன் அறு குப்பை காஞ்சிச் சேர்த்தி
அரியல் ஆர்கை வன் கை வினைநர்
அருவி ஆம்பல் மலைந்த சென்னியர்
ஆடு சிறை வரி வண்டு ஓப்பும்
பாடல் சான்ற அவர் அகன் தலை நாடே

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வரைபோல் இஞ்சி*

உரை

நாடுகள் பலவற்றை ஆட்சிக்குட்படுத்திய ஒரு பெரு வேந்தன் புகழைப் பாட்டாகப் புலவர்கள் புகழ்ந்து பாடுக எனச் சுட்டும் இப்பாடல் மன்னரைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அவர்தம் வாழ்க்கை நிலை பற்றியும் எடுத்துரைக்கிறது. யானைப் படை, குதிரைப் படை, வாட்படை எனும் பல படைகள் சூழ்ந்துள்ள மதிலைக் கொண்டதாக அரண்மனை விளங்குகிறது. நெடிய மதில்கள் கடிய அரண் என அமைந்துள்ளன. வேல் படையும் வாட்படையும் அணிவகுத்து நிற்கின்றன. சூரியன்போல் மன்னன் பலம் பெற்றுப் பேரொளிபோல் புகழ்பெற்று விளங்குகிறான். வலிமை பெற்ற வேந்தனான கொற்றவேந்தன் ஆளுகைக்கு உட்பட்ட மக்களின் வாழ்க்கை சித்திரிக்கப்படுகிறது . அகழிகொண்ட மதில்களைக் கண்டு அஞ்சிடும் பகைவர்கள் கைகொண்டு வணங்கிடுவர். பகைவர்கள் தங்களது முல்லை நிலங்களைப் பசுக்கள் மேயும் புல் நிறைந்த இடம் எனத் திறை செலுத்தி அடங்கி வாழ்ந்துள்ளனர். வயற்களங்களில் உழைத்து உற்பத்தியான நெற்குவியலை முறையே அள்ளிக் கணக்கிட்டுக் களம் கண்ட உழவர் பெருமக்கள் வீட்டுக்கும் நாட்டுக்குமான பங்கினை எடுத்துக் கொண்டு எஞ்சியுள்ள நெல்லைப் பண்ட மாற்றுச் செய்து கொண்டனர். பண்டமாற்றுச் செய்து கொண்டு பாடி ஆடி வண்டுகள் போல மகிழ்ந்துள்ளனர். அகன்ற இடங்களைக் கொண்ட கொற்ற வேந்தனின் ஆளுகைக்கு உட்பட்ட இச்சிறப்புக்கு உரியவர்களாகிறார்கள்.

புலவர்களால் நாடு போற்றப்பட வேண்டும் எனும் விருப்பம் மன்னர்களிடையேயும் மக்களிடையேயும் இருந்துள்ளது என உணர முடிகிறது. மன்னர் சார் நாடு அங்கு வாழும் மக்கள் எனும் நிலைகளைப் புலவர்கள் தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ள வழக்கம் தமிழ் மரபில் சங்க காலத்தில் பரவலாக இருந்துள்ளமையை அறிகிறோம். இம்மரபின் தொடர்ச்சிதான் பக்தி இலக்கியக் காலங்களில் சமயவாதிகளால் தலம் பாடுதல் எனும் நிலை பெற வழி கோலியது என மனங் கொள்ள நேரிடுகிறது.

பாடல் - 63

வேத்தியல் மரபு சார் வேந்தனின் பண்புகள்

பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே
பணியா உள்ளமொடு அணி வரக் கெழீஇ
நட்டோர்க்கு அல்லது கண் அஞ்சலையே
வணங்கு சிலை பொருத நின் மணம் கமழ் அகலம்
மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலையே
நிலம் திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே
சிறியிலை உழிஞைத் தெரியல் சூடி
கொண்டி மிகைபடத் தண் தமிழ் செறித்துக்
குன்று நிலை தளர்க்கும் உருமின் சீறி
ஒரு முற்று இருவர் ஓட்டிய ஒள் வாட்
செரு மிகு தானை வெல் போரோயே
ஆடு பெற்று அழிந்த மள்ளர் மாறி
நீ கண்டனையேம் என்றனர் நீயும்
நும் நுகம் கொண்டு இனும் வென்றோய் அதனால்
செல்வக் கோவே ,சேரலர் மருக
கால் திரை எடுத்த முழங்கு குரல் வேலி
நனைந் தலை உலகம் செய்த நன்று உண்டு எனின்
அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி ஆத வாழிய பலவே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - அருவி ஆம்பல்

உரை

பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஒரு காலத்தே தொகுக்கப்பட்டவை என்றாலும் கூட இப்பாடல்களின் கருத்துக்கள் வழி நாம் கணலாகும் சமூக அமைப்புநிலைகள் பலவாக உள்ளன.

பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே
பணியா உள்ளமொடு அணி வரக் கெழீஇ
நட்டோர்க்கு அல்லது கண் அஞ்சலையே
வணங்கு சிலை பொருந நின் மணம் கமழ் அகலம்
மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலையே
நிலம் திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே

எனும் வரிகளில் பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே என்று சொல்வதன் வழியே சங்க காலத்தில் தமிழ் பேசும் நன்நிலத்தில் வடமொழி பேசும் பார்ப்பனர் வந்துள்ளமை குறித்து நாம் எண்ணிப் பார்க்க இடம் உள்ளது. பார்ப்பனர்கள் பேசும் மொழி வேறாகவும் தமிழ் மொழி பேசுவோர் மொழி வேறாகவும் இருந்த போதிலும் சேர மன்னனின் குடையின் கீழ் இவ்விரு இனத்தாரும் வாழ்ந்துள்ளனர் என அறிய முடிகிறது. **பார்ப்பனரின் வேதம், வேதமொழி, அவர் தம் ஒழுகலாறுகள் போன்றவற்றில் மதிப்பளிப்பவனாக ஆலோசனைகளைப் பெற்றே ஆட்சி நடத்தும் மன்னனாக இவன் விளங்கியுள்ளான்.**

செல்வக் கோவே,சேரலர் மருக
கால் திரை எடுத்த முழங்கு குரல் வேலி
நனைந் தலை உலகம் செய்த நன்று உண்டு எனின்
அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி ஆத வாழிய பலவே

நனந் தலை உலகம் செய்த என்ற தன் வழி அறம் குறித்த சிந்தனையோடு ஆட்சி செய்பவன் மன்னன் என நாம் அறிய முடிகிறது. வைதீக மரபு தமிழ் மண்ணில் சங்க காலத்திலேயே காலூன்றி உள்ளதை இப்பாடல் வழியே நாம் அறிய முடிகிறது. அரசன் நீதி தவறாதவன், மக்களை நேசிப்பவன், அரசனே முன்னோர் மரபைத் தெய்வ மரபோடு பொருந்திய நிலையில் போற்றப்படத்தக்கவன். இவ்விதம் அரசனைப் புனிதப்படுத்திப் பார்ப்பது என்பது பார்ப்பனரின் வேத மரபு வழியின் சாரம் என நாம் மனங்கொள்ள நேரிடுகிறது .

வேத மரபு சார்ந்த பார்ப்பனர் வருகை பதிவு செய்யப்பட்ட பாடலில் பெரும்பாலும் பாணர்கள் பற்றிய பதிவுகள் இடம் பெறவில்லை என்று ஒரு முடிவுக்கு வர வாய்ப்புள்ளது. இப்பாடலில் பாணர் குறித்த பதிவு இல்லை. பாணர் போன்ற வாய்மொழி மரபு வெளிப்பட்ட கலைஞர்களின் பதிவுகள் அற்ற பாடல்களாகப் பதிற்றுப்பத்தில் நாம் காண்பது மிகக் குறைவு. இவ்வாறு பாணர் பற்றிய பதிவுகள் இடம் பெறாமைக்கான காரணம் வாய்மொழி மரபு நெறிமுறை வழியே போற்றி வாழ்த்தும் மரபைக் கொண்டதே பாணர் பாடல்கள் ஆகும்.

வைதீக மரபு உள்வாங்கப்பட்ட நிலையில் வேதம் சார்ந்த கல்வி அறிவு பெற்றுள்ள பார்ப்பனர் அவர் வழி வந்த பிறரும் மன்னனைப் போற்றி வாழ்த்தும் மரபென்பது வேதக் கல்வி சார்ந்த ஒரு தனித்த புகழுரையாகும். எனவே போற்றி வாழ்த்தும் அதாவது மன்னனைப் புனிதப்படுத்தும் வாழ்த்துப் பாடலில் இருந்து பாணர்களின் வாய்மொழி மரபுப் பாடல்கள் தேவையற்றுப் போயின. **இன்னும் சொல்லப் போனால் வைதீக முறைக் கல்விக்கு நேர்மாறான ஒரு புறக்கணிக்கப்பட்ட சமூகமாக விளங்கியமையால் பாணர்கள் அவர்தம் பாடல்கள் பார்ப்பனர் சார்ந்த மன்னர் அவையில் இருந்து புறந்தள்ளப்பட்டுள்ள சூழலை மனங்கொள்ள முடிகிறது.**

பாடல் - 64

விறலியர் பாடிய கழல் தொடி அண்ணல்

வலம் படு முரசின் வாய் வாட் கொற்றத்துப்
பொலம் பூண் வேந்தர் பலர்தில் அம்ம
அறம் கரைந்து வயங்கிய நாவின் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங் கலம் ஏற்ப நீர் பட்டு
இருஞ் சேறு ஆடிய மணல் மலி முற்றத்துக்
களிறு நிலை முணைஇய தார் அருந் தகைப்பின்
புறஞ் சிறை வயிரியர் காணின் வல்லே
எஃகு படை அறுத்த கொய் சுவற் புரவி
அலங்கும் பாண்டில் இழை அணிந்து ஈம் என
ஆனாக் கொள்கையை ஆதலின் அவ் வயின்
மா இரு விசும்பில் பல் மீன் ஒளி கெட
ஞாயிறு தோன்றியாங்கு மாற்றார்
உறு முரண் சிதைத்த நின் நோன் தாள் வாழ்த்திக்
காண்கு வந்திசின் - கழல் தொடி அண்ணல்
மை படு மலர்க் கழி மலர்ந்த நெய்தல்
இதழ் வனப்பு உற்ற தோற்றமொடு உயர்ந்த
மழையினும் பெரும் பயம் பொழிதி அதனால்
பசியுடை ஒக்கலை ஒரீஇய
இசை மேம் தோன்றல் நின் பாசறையானே

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும்
பெயர் - உரைசால் வேள்வி

உரை

உரைசால் வேள்வி முடித்த கேள்வி அந்தணர் அரும்கலம் நீர் பட்டு எனும் வரிகள் வழியே வேள்விகளை நிகழ்த்தக் கூடிய அந்தணர்களைக் கொண்ட மன்னவன் இவன் என மதிப்பீடு செய்ய முடிகிறது.

எஃகு படை அறுத்த கொய்சுவல் புரவி எனும் பாடல் அடி வழியே கூரிய அம்பு முதலிய ஆயுதங்களை உடைய படைக்குச் சொந்தமானவன் மன்னவன் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது . குதிரைகளையும் எருதுகளையும் பூட்டி ஓட்டும் தேர்களையும் படை வீரர்களையும் கொண்டுள்ள சிறப்புக்குரியவன் என விளக்கப்படுவதன் வழியே பல ஊர்களை நாடாகக் கொண்டு ஆட்சி செய்த சேரன் எனப் பொருள் கொள்ள முடிகிறது.

அறம் கரைந்து வயங்கிய நாவின் என்பதன் வழியே அந்தணர்களின் ஆற்றுப்படுத்தலின் கீழ் ஆட்சி செய்தவன் அம்மன்னவன் என்பதை உணர முடிகிறது.

தொல்குடி மக்களைக் கொண்டுஆட்சி செய்த மன்னர்களில் இருந்து வளர்ச்சி பெற்ற ஒரு சமூகத்திற்குத் தலைவனாக இம்மன்னவன் விளங்குகிறான்.

"புறஞ்சிறை வயிரியர் காணின் வல்லே" *இரவலராகிய வயிரியர்க்குப் பெரும் பொருளை வாரி வழங்கத் தக்க வல்லமை கொண்டவனாக இம்மன்னவன் காட்டப்படுகிறான். வயிரியர் எனும் சொல் மூங்கில் பிரம்பு வழியே வடிவமைக்கப்பட்ட அழகிய ஓசையையும் இசையையும் தரத்தக்க ஊதுகொம்பு என்னும் பொருள்படும் வயிர் என்பதிலிருந்து பெறப்பட்டது . இது திருமுருகாற்றுப் படையில் முருகனை*

1. பக்.156, தமிழ் வீரநிலைக் கவிதை,கைலாசபதி, மொழிபெயர்ப்பு கு.வே.பாலசுப்பிரமணியம், குமரன் பதிப்பகம்.

வாழ்த்த இசைக்கும் இசைக் கருவிகளுள் ஒன்றாகக் கூறப்படுகின்றது . அலைவாய் என்னும் தலம் நோக்கி முருகன் வழக்கம் போல விரைந்து செல்கையில் தெய்வ முழவுகள் ஒலிக்கின்றன.[1]

திண்காழ் வயிர் எழுந்து இசைப்ப (திருமுருகு; 120)

வயிர்-கொம்பு என்னும் இசைக்கருவி, திண்காழ் வயிர் - திண்ணிய வாயையுடைய கொம்பு .எனவே வயிர் என்பது ஊதும் கொம்பு எனும் பொருள் பட்டு அமைகிறது.

மேற் குறிப்பிட்ட விளக்கத்திலிருந்து வளைந்த ஊதும் குழலிசைக் கருவி எனும் பொருள் அமைகிறது. இந்த வயிரியர் தனித்த நிலையிலும் குழும நிலையிலும் செயல்படுபவர்களாக இருந்துள்ளனர். கொம்பு ஊதும் இசைக்கருவியை இசைக்கும் வயிரியர் பெரும்பாலும் ஒருவர் இன்றிப் பலராக இசைத்து வாசித்துள்ளனர். வயிரியர் என்ற சொல் இப்பொருளை உணர்த்துகிறது. இவர்கள் பாணர்களோடும் பாடினிகளோடும் கண்ணுளரோடும் பொருநரோடும் வெவ்வேறு சூழல்களில் இணைந்து இயங்கியுள்ளனர். இப்பாடலில் போர்க்களங்களில் வயிர் எனும் கொம்பு இசைப்போர் வெற்றி முழக்கத்தையும் மங்கலக் குறியீட்டையும் தந்தவர்களாக விளங்கியதாதல் அவர்களுக்குப் பரிசில் வழங்குவது மன்னனின் கடமைகளில் ஒன்றாக விளங்கியுள்ளது. போர்க்களங்களில் போர் வீரர்களுக்குப் பல்வேறு குறிப்புக்களைக் கொண்டு இசைப்பதன் வழியே பல்வேறு குறியீட்டுப் பொருள் தரக் கூடியவர்களாக விளங்கியுள்ளனர். மன்னன் நிகழ்த்தும் போரில் கொம்பிசைக்கும் வயிரியரின் பங்கு என்பது முதன்மையானதாக விளங்கியுள்ளது. போர்வீரர்களை மன எழுச்சி கொள்ளச் செய்யவும் போர்க்குண வெறியைத் தூண்டுதல் செய்திடவும் போர் மூண்டுள்ளது எனும் செய்தியைப் போர்க்களத்தில் தொடர்புடைய அனைவருக்கும் அறிவிப்புச் செய்யும் பொருட்டும் வயிரியரின் கொம்பிசை வாசிப்பு இருந்துள்ளது என உணரமுடிகிறது.

அரசனின் அவைகளில் அல்லது போர்ப் பாசறைகளில் சடங்கு நிறை வேற்றும் பொருட்டு வயிரியர் மற்றுமுள்ள கலைஞர் பெரு மக்கள் தம் பங்களிப்பினைச் செய்துள்ளமைக்கு மன்னன் தந்த செல்வம் ஈதல் என்றும் இரவல் என்றும் புலவர்கள் குறிப்பிடுவது சரியன்று. மன்னன் தரும் மதிப்பூதியம் என மனங் கொள்ளாது போனமை யாதெனில் புலவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள் வயிரியர் போன்ற பாண் மரபினர் வாய்மொழிப் பாடலிசைக் கலைஞர் மரபினர் என்பதனால் ஆனது.

பாடல் - 65

பாணர் - புரவலர் - பரிசிலர் உறவு நிலை

எறி பிணம் இடறிய செம் மறுக் குளம்பின்
பரிஉடை நல் மா விரி உளை சூட்டி
மலைத்த தெவ்வர் மறம் தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெரும
வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ
பூண் அணிந்து எழிலிய வனைந்துவரல் இள முலை
மாண் வரி அல்குல், மலர்ந்த நோக்கின்
வேய் புரைபு எழிலிய விளங்கு இறைப் பணைத் தோள் ,
காமர் கடவுளும்ஆளும் கற்பின்
சேண் நாறு நறு நுதல் சேயிழை கணவ
பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை
பூண் அணிந்து விளங்கிய புகழ் சால்மார்ப நின்
நாள் மகிழ் இருக்கை இனிது கண்டிகுமே
தீம் தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையுள் உறுப்பின் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறு செய் மாரியின் அளிக்கும் நின்
சாறு படு திருவின் நனை மகிழானே.

துறை - பரிசில்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நாள் மகிழ் இருக்கை

உரை

மன்னனின் புற வாழ்க்கை

எறி பிணம் இடறிய செம் மறுக் குளம்பின்
பரிஉடை நல் மா விரி உளை சூட்டி
மலைத்த தெவ்வர் மறம் தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெரும
வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ

இப்பாடலில் உள்ள 15 அடிகளில் முதல் 5 அடிகள் மன்னனின் புற வாழ்க்கையைக் காஞ்சி சான்ற வயவர் பெரும என்றும், வில்லோர் மெய்ம்மறை, சேர்ந்தோர் செல்வ என்றும் மறம் பற்றியும் போரில் வீழ்ந்த எறி பிணம் பற்றியும் ஆன போர்சார் வாழ்வியலைச் சுட்டிவிளக்கியுள்ளன.

நெஞ்சில் நிலை பெற்று வீற்றிருக்கும் வீர மறவர்களுக்குக் குறிப்பாகப் போர்வீரர்களுக்குக் கவசம் போல விளங்குகின்றாய். அது மட்டும் அல்லாது நின்னைச் சார்ந்த வீரர்களுக்குச் செல்வம் போல் விளங்குகின்றாய் எனுமாறு போர்க்களத்தோடும் போர்வீரர்களோடும் மன்னனின் புற வாழ்க்கை விளக்கப்படுகிறது.

மன்னனின் அக வாழ்க்கை

மன்னனின் அக வாழ்க்கை பின்வரும் ஐந்து அடிகளில் விளக்கப்படுகிறது.

பூண் அணிந்து எழிலிய வனைந்துவரல் இள முலை
மாண் வரி அல்குல், மலர்ந்த நோக்கின்
வேய் புரைபு எழிலிய விளங்கு இறைப் பணைத் தோள் ,
காமர் கடவுளும் ஆளும் கற்பின்
சேண் நாறு நறு நுதல் சேயிழை கணவ.

சேரமாதேவியின் பெருத்த தோள்கள் அழகு வாய்ந்தவை. அவை சேரமாதேவியின் கற்புக்கு அழகு செய்வனவாக அமைந்திருந்தன. மலர்ந்துபட்ட கண்கள், மாட்சிமைப்பட்ட வரிகள் கொண்ட அல்குல். வண்ணங்களால் வரையப்பட்ட தோள்கள் மற்றும் முலைகள் கொண்ட சேயிழையாளுக்குக் கணவன் சேரமன்னன் ஆவான்.

மன்னனின் அகப்புற வாழ்க்கை

பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை
பூண் அணிந்து விளங்கிய புகழ் சால்மார்ப நின்
நாள் மகிழ் இருக்கை இனிது கண்டிகுமே
தீம் தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையுள் உறுப்பின் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறு செய் மாரியின் அளிக்கும் நின்
சாறு படு திருவின் நனை மகிழானே.

தொடர்ந்து பாணர் மற்றும் அவர் தம் சுற்றத்தாரோடு தங்கிப் பொழுது கழிக்கும் மன்னவனின் நிலை விளக்கப்படுகிறது. தொடை போன்ற வடிவம் பெற்ற யாழ் வழியே பாலைப்பண் இசைக்கும் பாணர்கள் மற்றும் அவர்தம் சுற்றத்தார்கள் குழும நிலையில் பலவகைப் பண்களை எழுப்பத்தக்க இசைவுருக்களை வாசிக்க மகிழ்ந்து நாளினைக் கழிக்கின்றான் மன்னன் .

கலைஞர்களோடு பொழுதுகளைக் கழிக்கும் மன்னன் குறித்தும் தனித்து விளக்கப்படுவது குறித்தும் எண்ணிப்பார்ப்போம் எனில் இல்லக் கிழத்தியாக அதாவது காமக் கிழத்தியாக அமையப் பாணன் கூட்டத்தில் உள்ள பாடினி, விறலியர், துணங்கையர் போன்ற ஆடல் மகளிரும், பாடல் மகளிரும் மன்னனின் பொழுதுகளைக் கழிக்க விருந்தாக அமைந்தார்களோ என எண்ணத் தோன்றுகிறது. திருவோலக்கம் குறித்து விளக்கப்பட்டுள்ளதன் வழியே பாடலில் சுட்டப்பட்டுள்ள இம்மன்னன் பெரு வேந்தனும் அல்லன். இனக்குழுத் தலைவனும் அல்லன் என எண்ணிட இடம் உண்டு.

இனக்குழுத் தலைவர்கள் காலத்தில் நாள் மகிழ் இருக்கை எனும் தனித்த அமைவு அமைந்ததாக நமக்குப் பதிவுகள் சரிவர இல்லை. இனக்குழுச் சமூகத்தில் பெண்ணாடல் என்பது உரிமை கோரல் எனும்

பெரும் பிரச்சினையாக இருந்துள்ளது. இனக்குழுச் சமூகத்தின் வளர்ச்சிக் கட்டமான திருவோலக்கம் கொண்டு அரசவாழ்க்கை மேற்கொண்ட சீறூர் வேந்தன் அல்லது சீறூர் நாடன் காலத்தில் பாணரைச் சார்ந்த பாடினி போன்ற பெண் கலைஞர்கள் மன்னனின் காமக் கிழத்திகளாகக் கையாளப்பட்டார்களோ என இப்பாடல் தரும் விளக்கம் வழியே உய்த்துணர முடிகிறது.

மது உண்டு மகிழ்ந்து பொழுது போக்குதற்கு மன்னனுக்குப் பாணர் துணை செய்கின்றனர். மது உண்டு பாணர் குடும்பத்தாருடன் மகிழ்ந்து பொழுது போக்கியுள்ளமை மேற்குறித்த பொருள் கொள்ளும் சூழலை அமைத்துத் தருகிறது.

பாடல் - 66

இடி இசை முரசும் இன் இசை வேந்தனின் சிறப்பும்

வாங்கு இரு மருப்பின் தீம் தொடை பழுனிய
இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணிப்
படர்ந்தனை செல்லும் முதுவாய் இரவல
இடி இசை முரசமொடு ஒன்று மொழிந்து ஒன்னார்
வேலுடைக் குழூஉச் சமம் ததைய நூறிக்
கொன்று புறம் பெற்ற பிணம் பயில் அழுவத்துத்
தொன்று திறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பண அளவை விரிந்து உறை போகிய
ஆர் பதம் நல்கும் என்ப கறுத்தோர்
உறு முரண் தாங்கிய தார் அருந் தகைப்பின்
நாள் மழைக் குழூஉச் சிமை கடுக்கும் தோன்றல்
தோல் மிசைத்து எழுதரும் விரிந்து இலங்கு எஃகின்
தார் புரிந்தன்ன வாளுடை விழவின்
போர் படுமள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய் வீ ஏய்ப்பப்
பூத்த முல்லைப் புதல் சூழ் பறவை
கடத்திடைப் பிடவின் தொடைக் குலைச் சேக்கும்

வான் பளிங்கு விரைஇய செம் பரல் முரம்பின்
இலங்கு கதிர்த்திரு மணி பெறூஉம்
அகன் கண் வைப்பின் நாடு கிழவோனே.

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*புதல் சூழ் பறவை*

உரை

பாணன் குறித்த கலைச்செய்திகள் கொண்டு தொடங்கும் பாடலாக இது அமைகிறது. வளைந்த கரிய தண்டினைக் கொண்ட நரம்பிசைக் கருவி பேரியாழ் எனப் பெயர் பெறுகிறது. இப்பேரியாழ் வழியே பாலைப் பண் இசைக்கப்படுகிறது. முதுவாய் இரவல எனக் குறிப்பிடப்படும் அறிவு முதிர்ந்த பாணன் சேரமன்னனின் புகழ்பாடுவதாக இது அமைகிறது.

பாடிப்பரிசில் பெறும் பாணனின் முதுவாய் இரவலனான இப்பாட்டின் வழியே சேரனின் புகழ் மற்றும் அவனது கொடைச் சிறப்பு விளக்கப்படுகின்றன. பாணன் பாட்டுப் பாடியதாகச் சங்கப் பாடல்கள் பல பரவலாக எடுத்துரைப்பினும் பாணன் பாட்டு இத்தன்மையினது என எந்த ஒரு புலவனும் அல்லது எந்த ஒரு பாடலும் சரிவர அடையாளம் காட்டவில்லை. பாணன் பாடிய பாட்டு பொதுவாக எத்தகைய பாடு பொருள் கொண்டிருக்கும் என்பது குறித்தோ பாட்டின் தொடக்கம் உள்ளடக்கம் என்பது குறித்தோ நமக்கு எத்தகைய தெளிவும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் புலவர்களால் எழுத்துருவில் தரப்பட்ட இப்பாடல்கள் வழியே பாணனின் பாடுபொருள் மன்னனின் கொடைச் சிறப்பு வெற்றிச்சிறப்பு போன்றவை முதன்மையானவையாக இடம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. மக்கள் நாடுவிட்டுப் புலம் பெயர்ந்தமை நிலம் உழுது பயிரிட்டமை உடைமைகள் பறிபோனமை போரிட வந்தமை எதிர்த்து நின்று போராடிப் பிணங்கள் ஆனமை என்பன போன்ற செய்திகள் யாவும் புலவன் பாடிய எழுத்துரு வடிவிலே பதிவுகள் பெற்று உள்ளன. அழிந்துபட்ட ஊர்கள் குடிகள் வளங்கள் பற்றிய பதிவுகளே பாணர்களின் வாய்மொழிப் பாடல்களிலும் பதிவுக்குள்ளாகி இருக்க வேண்டும் என நாம் மனங்கொள்ள முடிகிறது.

வாய்மொழிப் பாடல்களின் பாட்டுகளுக்குச் சொந்தக் காரர்களான பாணர்கள் மன்னனுக்கு ஒற்றர்களாகவும் நாட்டின் நிலைகுறித்த செய்திகளை எடுத்துச் சொல்லும் மக்களின் பிரதிநிதிகளாகவும் தலைவன் தலைவி போன்றோருக்குத் தோழன் தோழி போன்ற நிலையினராவும் இருந்துள்ளனர். இக்கருத்தின் வழியே எண்ணிப் பார்க்கும் போது ஏடு அறியாத எழுத்தறியாத பாணர்களே மன்னர்களின் ஆதரவுகளைப் பெற்று ஏடறிந்த எழுத்தறிவு பெற்ற புலவர்களாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மன்னர்களை நாடி வந்த வேதியர் சார் வாழ்வியலை மேற்கொண்ட பின் புலவர்களில் ஒரு பிரிவினர் வைதீக நெறிமுறை சார்ந்த அல்லது அறம் சார்ந்த வேள்வி மற்றும் கல்விபோன்ற அறிவு பெற்ற பிரிதோர் புலமை வாய்ந்தோர்களாகவும் விளங்கியுள்ளனர்.

கோபங்கொண்ட பகைவரது தாக்குதலைத் தடுக்க வல்ல படைகளைக் கொண்டுள்ளவன் இம்மன்னன். வானத்தில் தோன்றுகின்ற மேகச் சித்திரங்களைப் போன்று ஒளி பரவி விளங்குகின்ற பூமாலை அசைந்தாற் போலச் சுழலும் வாள்கள் அணிவகுத்த படையினரால் அழகுற வடிவங்கள் காட்டுவதாக அமைகின்றன. வாட்போரில் வென்றமையை மக்கள் அறியும் பொருட்டு மன்னன் திருவிழாப் போலவே நடத்தி மகிழ்வதுண்டு. இடியினை ஒத்த முரசுடைய பகைவரது வேல் போன்ற ஆயுதங்களை அபகரித்து எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த பெருமைக்கு உரியவன். போர்க்களத்தில் பிணங்கள் பலவற்றைக் கண்ட பெருமை கொண்டவன். தோற்று அடி பணிந்த மன்னர்கள் விளைவித்த விளைபொருட்களை மரக்கால் கொண்டு வெற்றி பெற்ற இம்மன்னவனுக்குத் திறைசெலுத்தியுள்ளனர். சிறப்புக்குரிய இம்மன்னன் நாடுகிழவோன் எனக் குறிப்பிடப்படுவதில் இருந்து குறுநில மன்னனாகவே அறிய முடிகிறது. முதுவாய் இரவலனாகப் பாணனைச் சுற்றி இயங்கும் இக்கிழவோன் பல இனக்குழுக் குடிகளை அழித்தவனாகவே எண்ணிப் பார்க்க இடம் உண்டு.

பாடல் - 67

பேர் இசை மூதூர் பொருநன் நெறி

கொடுமணம் பட்ட நெடு மொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேர் இசை மூதூர்க்
கடன் அறி மரபின் கை வல் பாண
தென்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
கொல் படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்கு கதிர் வயிரோடு வலம் புரி ஆர்ப்பப்
பல் களிற்று இன நிரை புலம் பெயர்ந்து இயல்வர
அமர்க்கண் அமைந்த அவிர் நிணப் பரப்பின்
குழூஉச் சிறை எருவை குருதி ஆரத்
தலை துமிந்து எஞ்சிய ஆண் மலியூப மொடு
உரு இல் பேய்மகள் கவலை கவற்ற
நாடுடன் நடுங்க பல் செருக் கொன்று
நாறு இணர்க் கொன்றை வெண் போழ்க் கண்ணியர்
வாள் முகம் பொறித்த மாண் வரி யாக்கையர்
நெறி படு மருப்பின் இருங்கண் மூரியொடு
வளை தலை மாத்த தாழ் கரும் பாசவர்
எஃகு ஆடு ஊனம் கடுப்ப மெய் சிதைந்து
சாந்து எழில் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தள் மாறாது ஊதிய

கடும் பறைத் தும்பிசூர் நசைத்தா அய்ப்
பறை பண் அழியும் பாடு சால் நெடு வரைக்
கல் உயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே.

துறை - பாணாற்றுப்படை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வெண் போழ்க் கண்ணி

உரை

பந்தர் எனும் பெயர் கொண்ட மூதூர் தென்கடல் பகுதியில் உள்ளது. அவ்விடத்தில் முத்துக்குளித்து எடுக்கப்பட்ட விலை உயர்ந்த முத்துக்களைப் பெருவாரியாகப் பெற்றவன் சான்றோர் பெருமகன் நேரிப் பொருநன் எனும் செல்வக் கோமான். அவனது போர்ச் சிறப்பினையும் வெற்றிச் சிறப்பினையும் புகழ்ந்து பாடினீராயின் முத்தொடு அணிகலன் பலவும் நீவீர் பெறலாம் என்று பாணன் ஒருவன் தன் சுற்றத்தாராகிய இன்னொரு பாணனுக்குக் கூறி ஆற்றுப்படுத்துவதாக இப்பாடலின் பொருள் அமைகிறது.

இசைக் கருவியை இசைத்துக் கொண்டு பாடிப்பொருள் பெறும் பாணர் இனத்தவர் கேரளாவில் இன்றும் இருந்து வருகின்றனர். அதுபோன்றே பாணன் இசைக் கருவியை இசைத்துப் பொருள் பெறும் பாணர் இனத்தார் இந்நாளிலும் ஜார்கண்டு மாநிலத்தில் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் .

வேளாளர்களுக்குக் குறிப்பிட்ட பாணர் வன்னியர்களுக்குக் குறிப்பிட்ட பாணர் பறையர்களுக்குக் குறிப்பிட்ட பாணர் எனத் தமிழ்ச் சூழலில் பாணர்கள் வாழ்ந்த தடையங்கள் என மானுடவியல் பேராசிரியர் பக்தவச்சல பாரதி அவர்கள் பதிவு செய்துள்ளார். பாணர்களின் பொதுப் பண்பு என்பது குறிப்பிட்ட இசைக்கருவியை இசைத்துக் கொண்டு பரிசில் பெறத்தக்க அல்லது பரிசில் வழங்குகின்ற தகுதி மிக்கவர்களின் புகழினை எடுத்து இயம்புவதாகும். இப்பாடலில் குறிப்பிடப்படும் பாணன் போரினை மேற்கொண்ட மன்னனின் வீரதீரச்

சிறப்புக்களை எடுத்துக் கூறிப் பரிசில் பெற்றதோடு மட்டுமின்றித் தன் சுற்றத்தாரும் இது போன்ற பரிசில் பொருளைப் பெற வேண்டும் என ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது .

ஆற்றுப்படுத்தக் கூடிய முறைமையில் சிறப்புக்குரியவனின் வீரதீரப் பெருமைகள் முதலியவற்றைத் தன் சக பாணனுக்கு எடுத்துக் கூறும் முறைமையில் உள்ள உத்தி முறைகள் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆகும். அரிய முத்துக்களைப் பெறலாம்; அப்பரிசினைப் பெறுவதற்குப் பரிசு வழங்கக் கூடிய நாயகனின் பெருமைகளை முறையே எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற முறைமையினை எடுத்துக்காட்டுவது என்பது இங்குக் கவனிக்க வேண்டியதாக உள்ளது. பண்இசை பாடும் திறன் மிக்க பாணனுக்கு மூன்று நிலைகளில் தலைவனின் புகழ்தனை விளக்க வழிகாட்டுகிறான் மற்றோர் பாணன்.

முதல் நிலை

கொல் படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்கு கதிர் வயிரோடு வலம் புரி ஆர்ப்ப
பல் களிற்று இன நிரை புலம் பெயர்ந்து இயல்வர
அமர்க்கண் அமைந்த அவிர் நிணப் பரப்பின்
குழூஉச் சிறை எருவை குருதி ஆர
தலை துமிந்து எஞ்சிய ஆண் மலியூப மொடு
உரு இல் பேய்மகள் கவலை கவற்ற (பதிற்று: 67 – 5 – 11)

யாழினை உடைய பாணனே, செல்வக்கடுங்கோ வாழியாதனின் வீரர்கள் பகைவர்களை வென்று உயர்த்திய கொடிகளை அசைத்தும்,கொம்பு எனும் இசைக்கருவியோடு வெற்றி முழங்கும் வலம்புரிச் சங்குகளை முழங்கியும், பல போர்களில் பகைவர்களை அழித்தனர். அப்படிப்பட்ட வீரர்கள் வென்ற போர்க்களம், பருந்துகளும்,பேய்மகளிரும் இறந்த உடல்களின் இரத்தம் குடிக்கும்படி தலை வெட்டுண்ட பகை வீரர்கள் கிடப்பர். பகை நாட்டு மக்கள் அப்போர்க்களத்திற்கு வர அஞ்சுவர்.

இரண்டாம் நிலை

நாடுடன் நடுங்க பல் செருக் கொன்று
நாறு இணர்க் கொன்றை வெண் போழ்க் கண்ணியர்

வாள் முகம் பொறித்த மாண் வரி யாக்கையர்
நெறி படு மருப்பின் இருங்கண் மூரியொடு
வளை தலை மாத்த தாழ் கரும் பாசவர்
எஃகு ஆடு ஊனம் கடுப்ப மெய் சிதைந்து (பதிற்று: 67 – 12 – 17)

சேர நாட்டு வீரர்கள் நல்ல மணமுடைய கொன்றைப் பூக்களைப் பனங்குருத்தின் நறுக்குகளின் இடையே வைத்துத் தலைமாலையாகிய கண்ணியை அணிந்தவர்கள். அவர்கள் உடம்பில் போர் செய்த அடையாளமாக வீரத்தழும்புகள் இருக்கும். அவ்வீரத் தழும்புகளில் சந்தனம் பூசி மேலும் பகைவர்களுக்கு அச்சத்தைத் தரத்தக்கவர்கள்.

மூன்றாம் நிலை

சாந்து எழில் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தள் மாறாது ஊதிய
கடும் பறைத் தும்பிசூர் நசைத்தா அய்
பறைப் பண் அழியும் பாடு சால் நெடு வரை

சிறந்த வீரர்களை உடையவன் செல்வக்கடுங்கோ வாழியாதன். அவன் நேரி எனும் மலைக்குத் தலைவன் ஆவான். இச்சிறப்புகளுக்கு உரிய அச்செல்வக்கடுங்கோ வாழியாதனை உன் சுற்றத்துடன் சென்று பாடி வாழ்த்தினால் பந்தர் எனும் துறைமுகத்தில் கிடைக்கும் முத்துக்களையும் ,கொடுமணல் என்ற ஊரில் செய்யப் பெற்ற அணிகலன்களையும் பெறுவாய் எனப் பாணன் ஒருவன் தன் இனத்தைச் சார்ந்த இன்னொரு பாணனுக்கு எவ்விதம் மன்னனைப் புகழ்ந்து பாட வேண்டும் என்ன முறைவைப்பில் அல்லது என்ன வடிவமைப்பில் பாடு பொருள்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற உத்தி முறைகளைத் தன் சக பாணனுக்கு எடுத்து விளக்கும் பாங்கு இதன் வழி உணர்த்தப்படுகிறது.

1. மன்னன் வெற்றி கொண்ட போர்க்களப் பகுதியை வாழ்த்தும் முதல் நிலைப் பகுதி.

2. விழுப்புண்பட்ட வீரர்களின் வீரங்களை அடையாளம் காட்டிச் சிறப்பிக்கும் இரண்டாம் நிலைப் பகுதி.

3. பாடலின் இறுதிப் பகுதியாக மன்னனின் வெற்றிச் சிறப்பினை எடுத்துரைப்பதாகவும் , புகழ்ந்துரைப்பதாகவும் அமைகிறது.

இவ்வாறு பாணன் இட்டுக்கட்டியுள்ள இந்த வடிவ முறை எத்தன்மையிலான இசைத் தன்மையை அல்லது இசை வகையைக் கொண்டுள்ளது என்பதை நம்மால் உணர முடியவில்லை. இப்பாட்டு பாணன் ஒருவன் தன் சக பாணன் ஒருவனுக்கு விளக்கிய முறைப் பாட்டு ஆகும்.

பாடல் - 68

இல்லறமும், போர் அறமும்

கால் கடிப்பு ஆகக் கடல் ஒலித்தாங்கு
வேறு புலத்து இறுத்த கட்டூர் நாப்பண்
கடுஞ் சிலை கடவும் தழங்கு குரல் முரசம்
அகல் இரு விசும்பின் ஆகத்து அதிர
வெவ் வரி நிலைஇய எயில் எறிந்து அல்லது
உண்ணாது அடுக்கிய பொழுது பல கழிய
நெஞ்சு புகல் ஊக்கத்தர் மெய் தயங்கு உயக்கத்து
இன்னார் உறையுள் தாம் பெறின் அல்லது
வேந்து ஊர் யானை வெண் கோடு கொண்டு
கட் கொடி நுடங்கும் ஆவணம் புக்கு உடன்
அருங்கள் நொடைமை தீர்ந்த பின் மகிழ் சிறந்து
நாமம் அறியா ஏம வாழ்க்கை
வட புல வாழ்நரின் பெரிது அமர்ந்து அல்கலும்
இன் நகை மேய பல் உறை பெறுப கொல்
பாயல் இன்மையின் பாசிழை ஞெகிழ
நெடு மண் இஞ்சி நீள் நகர் வரைப்பின்
ஓவு உறழ் நெடுஞ் சுவர் நாள் பல எழுதிச்
செவ்விரல் சிவந்த அவ்வரிக்குடைச்சூல்
அணங்கு எழில் அரிவையர்ப் பிணிக்கும்
மணம் கமழ் மார்ப நின் தாள் நிழலோரே?

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - ஏம வாழ்க்கை

உரை

போர்க்களச் சூழலையும் இல்லறத்துச் சூழலையும் படம் பிடித்துக் காட்டுவதாக இச் செந்துறைப் பாடாண்பாட்டு அமைகிறது. போர்ப் பாசறையில் வீரர்கள் கண்துஞ்சாது எதிரி நாட்டுப் படையை எதிர் நோக்கிக் காத்துள்ளனர். இல்லறத்தில் காதல் மகளிர் தலைவனை எதிர் நோக்கி எப்போது வருவார் என மண்ணால் எழுப்பப்பட்டுள்ள நீண்ட சுவர் கொண்ட கோட்டை அமைந்த நகரத்தில் உள்ள வீட்டில் உள்ள உயர்ந்த சுவரில் பல நாள்கள் கடந்து விட்டன எனக் கணக்கிடப்பட்டுக் கைவிரல்களைக் கொண்டு எழுதப்பட்ட குறிப்புக்களைக் கண்டு எண்ணி எதிர்பார்த்துக் காத்துள்ளனர். போர்ப்பாசறையில் வீற்றிருக்கும் வீரர்கள் நகரின் கடை வீதிகளுக்குச் சென்று கைப்பற்றப்பட்ட யானையின் வெண் தந்தத்தைப் பண்டமாற்று எனக் கொடுத்துக் கள்ளை வாங்கி உண்டு விட்டு எதிரி நாட்டின் படையை எதிர் நோக்கிக் காத்துள்ளனர் எனக் காட்டப்படுகிறது.

வெற்றி முரசு ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நான்கு பூதங்களால் ஆகாயம் தாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது எனும் நம்பிக்கையைக் கொண்டு உண்ணுதலை மறந்து பொழுதுகள் பல கழிய எதிர்பார்ப்பில் மன்னனும் போர்ப் படை வீரனும் ஊக்கத்துடன் காத்திருக்கின்றனர்.

நாமம் அறிய ஏம வாழ்க்கை
வட புல வாழ்நர்

என்பதன் வழியே எதிரிகளால் நேரப் போகும் துன்பத்தை எண்ணிப் பார்க்காமல் உத்தர குருவில் வாழ்வோரைப் போல இன்பத்துடன் அயற்புலத்தார் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்தம் இன்பத்தைத் தொலைத்து அவர்களுக்குத் துன்பத்தை அளித்துப் பாசறையில் வீற்றிருப்போர் இன்பம் காணும் நாளை எண்ணிக் கொண்டுள்ளனர். புலவன் காட்டியுள்ள இப்பாடலின் காட்சி இல்றைச் சூழலில் காதலின் சூழலில் தலைவன் காத்திருக்கும் சூழல் காட்டப்படுவதோடு

போர்க்களத்தில் மன்னன் எதிரியை வெல்லும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் சூழலும் காட்டப்படுகிறது. இருவகைச் சூழல்களிலும் பொழுதுகள் நாள்கள் காலங்கள் கடப்பதும் எதிர்பார்ப்பை எதிர்நோக்கி இருப்பதுமான மன உணர்வுகளைப் பாடலில் பதிவு செய்திருக்கும் வித்தையை இப்புலவனின் பாட்டுத் திறத்தில் உணர்ந்து இரசிக்க முடிகிறது. கள் விற்கும் வீதி என அடையாளம் காட்ட அக்காலச் சமூக அமைப்பில் அசைந்தாடும் கொடியை நாட்டி வைத்துள்ளனர் என அறிய முடிகிறது.



பாடல் - 69

அறிவு சால் அரசன் புகழ்

மலை உறழ் யானை வான் தோய் வெல் கொடி
வரை மிசை அருவியின் வயின் வயின் நுடங்க
கடல் போல் தானைக் கடுங் குரல் முரசம்
கால் உறு கடலின் கடிய உரற
எறிந்து சிதைந்த வாள்
இலை தெரிந்த வேல்
பாய்ந்து ஆய்ந்த மா
ஆய்ந்து தெரிந்த புகல் மறவரொடு
படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடு குடி பயிற்றிய கொற்ற வேந்தே
நின் போல் அசைவு இல் கொள்கையர் ஆகலின் அசையாது
ஆண்டோர் மன்ற இம் மண் கெழு ஞாலம்
நிலம் பயம் பொழியச் சுடர் சினம் தணியப்
பயம் கெழு வெள்ளி ஆநியம் நிற்ப
விசும்பு மெய் அகல பெயல் புரவு எதிரப்
நால் வேறு நனந்தலை ஓராங்கு நந்த
இலங்கு கதிர்த் திகிரி நின் முந்திசினோரே.

துறை	-	*வஞ்சித் துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்*
தூக்கு	-	*செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்*
பெயர்	-	*மண் கெழு ஞாலம்*

உரை

யானைப்படை செல்கிறது; யானையின் மேல் கொடி பறக்கிறது. மலை உச்சியில் கொடி அசைந்தாற் போல் காட்சிப்படுகிறது. இக்காட்சி மலையில் இருந்து நீர்வீழ்ச்சி கொட்டுவது போல் தென்படுகிறது. போர்க்களம் என உணரப் போர் முரசு ஒலிக்கின்றது. அதிர்ந்து முழங்கும் அவ்வோசை அலை எழுப்பும் கடலோசை போல் அமைகிறது. காலாட் படை வீரர்கள் வெட்டிச் சிதைத்த வாள்கள் மற்றும் வேல்கள் கூர்மையோடும் இலை வடிவத்தோடும் அமைந்துள்ளன. குதிரை வீரர்கள் பகைவர் மீது பாய்ந்து வெற்றி கொள்கின்றனர். போரை இனிமையோடு விரும்பும் வீரர்கள் பிணக்குவியலை ஏற்படுத்தி உள்ளனர். பாழ்பட்ட நாட்டை, அந்நாட்டு மக்களைத் தாள்பணிந்த அந்த வேந்தனையே அக்குடிகளின் அந்த நாட்டிலேயே அமர்த்தி மீண்டும் வாழச் செய்த பெருமைக்குரிய வேந்தனாக மண்ணுலகம் போற்றத்தக்க வரலாற்றுச் சிறப்புக்குரிய வேந்தனாக அறியப்படுகிறான். புகழ் பெற்ற வேந்தனின் முன்னோர் தொடர்ந்து குறிப்பிட்ட சிறப்புக்களோடு ஆண்டு வந்தனர். ஆண்டபோது அவர்கள் வழிவந்த வெற்றிக்குரிய வேந்தனாகிய நீ ஆண்டு வருகிறபோதும் தப்பாது வளம் கொழிக்கத் தக்கவாறு மழை பொழியும் கோடைக் காலத்திலும் வெப்பத்தை அள்ளிக் கொட்டாது நன்மை தரத்தக்க தன்மையோடு அமைகிறது .

குறிப்பிட்ட வெள்ளியான சுக்கிரன் வானத்தில் தென்புலத்தே தென்படுகிறது. இவ்விதம் தென்படுவதால் பிற கோள்களுடன் இயைந்து முறையே இயங்கும் தன்மையால் வறுமையற்ற வாழ்வைக் கொண்டுள்ளது. இவ்வளம் பெறுவதற்குக் காரணம் வேந்தனும் வேந்தர் குலம் தோன்றலும் சீராகவும் சிறப்பாகவும் நாட்டைச் செலுத்தியதன் பயன் என நம்பிக்கை கொள்ளப்படுகிறது.

இயற்கை குறித்த கணிப்பு சங்க கால மக்களிடத்தே இருந்துள்ளது. குறிப்பாக வானவியலில் கோள்கள் தென்படும் திசைகள்.

அவை வீற்றிருக்கும் இடங்கள் போன்றவை வழியே வான் அறிவியல் சிந்தனையையும், நம்பிக்கையையும் ஒருங்கே கொண்டு இருந்த சமூகமாக விளங்கியமை குறித்து அறிய முடிகிறது.

விலைதெரிந்த வேல்
பாய்ந்து ஆய்ந்த மா

என்றும்

சுடர் சினம் தணிய
ஆநியம் நிற்ப
பெயல் புரவு எதிர

என்றும் அமைந்திருக்கும் சொற்களும் தொடர்களும் இசைத் தன்மை வாய்ந்தவையாக அமைந்துள்ளன.

மலை
வலை
கடல்
பாய்ந்து
ஆய்ந்து

என்றும் அமைந்திருக்கும் பாடல் அடிகளின் தொடக்கங்களும் முடிவுகளும் இசைத் தன்மையோடு பொருந்தி வரும் பாடல் தன்மையை உணர்ந்து இரசிக்க முடிகிறது.



பாடல் - 70

கடுஞ்சின வேந்தனின் ஆளுமைத்திறன்

களிறு கடைஇய தாள்
மா உடற்றிய வடிம்பு
சமம் ததைந்த வேல்
கல் அலைத்த தோள்
வில் அலைத்த நல் வலத்து
வண்டு இசை கடவாத் தண் பனம் போந்தைக்
குவி முகிழ் ஊசி வெண் தோடு கொண்டு
தீம் சுனை நீர் மலர் மலைந்து மதம் செருக்கி
உடை நிலை நல் அமர் கடந்து மறம் கெடுத்துக்
கடுஞ் சின வேந்தர் செம்மல் தொலைத்த
வலம் படு வான் கழல் வயவர் பெரும
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ்சொல் கேளாப் புரை தீர் ஒண்மைப்
பெண்மை சான்று பெரு மடம் நிலைஇக்
கற்பு இறை கொண்ட கமழும் சுடர் நுதற்
புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கை சுற்றம் சுற்ற
வேள்வி யில் கடவுள் அருத்தினை கேள்வி
உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை

வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
இளந் துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல் கடன் இறுத்த வெல் போர் அண்ணல்
மாடோர் உறையும் உலகமும் கேட்ப
இழுமென இழிதரும் பறைக் குரல் அருவி
முழுமுதல் மிசைய கோடு தொறும் துவன்றும்
அயிரை நெடுவரை போல
தொலையாதாக நீ வாழும் நாளே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - பறைக் குரல் அருவி

உரை

போர்க்களத்தில் ஆண்யானையின் மேல் ஏறிப் பகைவரோடுப் போரிட்டவன். குதிரைகளின் மேல் ஏறிப் பகைவர்களை வென்றிட்ட பெருமை மிக்கவன். போர்ப் பயிற்சியின் விளைவாக உருண்டையான கணம் மிக்க கல் ஒன்றினைத் தோளில் தூக்கி வைத்துப் பின் புறம் போடும் பயிற்சியால் வலிமையைக் கூட்டிக் கொள்ளக் கூடியவன். பனைக் குருத்தினை வெட்டிக் குவளை நீர்ப் பூவை மொட்டு நிலையில் அதாவது வண்டு மொய்க்காத தேன் அற்ற பூ மொட்டினைச் சூடிப் போருக்குச் சென்று பகைவர்களை வெல்லக் கூடியவன். வீரக் கழல்களைக் கால்களில் அணிந்த போர் வீரர்களைத் தன்னகத்தேக் கொண்டு விளங்கும் பெருமகன். பகைவர் சொல்லும் புறஞ்சொற்களைக் கேளாதவன். கற்பு நெறிகாக்கும் ஒளிபடுகின்ற நெற்றியினை உடைய சிறப்பு மிக்க மனைவிக்குக் கணவனானவன். பல அரசர்களை வென்று அவர் முடிகளில் இருந்து உருவாக்கப்பட்ட ஆரம் மற்றும் ஆபரணம் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட மாலையைக் கொண்டு முடிசூட்டியுள்ளான். விளையாட்டுக்குக் கூட மறந்தும் பொய் சொல்லாத தன்மையைக் கொண்ட நீ நல்ல கோட்பாடுகளைக் கொண்ட அமைச்சர்கள், பாசம் மிக்க உறவினர்கள் முதலியோரை முன் வைத்து வேள்விகள் பல செய்து தேவர்களை மகிழ்வித்தவன். வேதங்களைக் கற்று ஓதிய வல்லமையால் தேவர் உலகத்தில் உள்ள முனிவர்களை இன்புறச்

செய்தவன். பெரியோரை வணங்கும் பண்பினை உடையவன். பகைவருக்கு ஆண்மையை நிலை நிறுத்திக் காட்டுபவன்.

இளமை கொண்ட மனைவியைப் பெற்றதனால் இனிய புதல்வர்களைச் செல்வமாகப் பெற்றுக் கொண்டவன். இல்லறத்தை முறையே நடத்தி வருவதனால் முந்தைய உனது தலைமுறையினர் செய்த பாவங்களையும் போக்கிக் கொண்டவன். கற்பகம் முதலான பல செல்வங்களைக் கொண்டு வாழும் தேவர் உலகத்திற்கு உன் புகழ் எட்டுகிறது. நீர்வீழ்ச்சி எழுப்பும் ஓசையைப் போல உனது போர்ப் பறை ஒலி அதிரக் கேட்கின்றது.

வயவர் பெரும, புரையோள் கணவ, பூண்கிளர் மார்ப, வேள்வியில் சிறந்தவன் என்பன போன்ற வாழ்த்துரைகளால் தேவர்களால் புகழப்படக் கூடியவன் எனும் பொருள் கொண்டதாகக் கபிலரின் பறைக் குரல் அருவி ஓசை எழுப்புகிறது.

பனங் குருத்து, நீர்க் குவளைப் பூவின் மொட்டு, இளவட்டக்கல் தூக்கும் இளையோர் போர்ப் பயிற்சி முறை, பனந்தோடு அணிந்துள்ளமை. ஏழு அரசர்களை வென்றமை எனும் குறிப்பின் வழியே பல சீறூர் மன்னர்களை வெற்றி கொண்டவன் எனப் பொருள் கொள்ள முடிகிறது. இத்தகைய அடையாளங்களைக் கொண்டு கவனிக்கும் போது போர் முறையில் பழைய முறைமைகளையே பின் பற்றியுள்ள கொற்றவனாகக் காட்டப்படுகிறான்.

அக வாழ்க்கையில் வேதம் கற்றல், வேள்வி செய்தல், ஒருத்தியோடு மட்டுமே வாழ்தல், நல்ல கோட்பாடுகளைக் கொண்ட அமைச்சர்கள் மற்றும் உறவினர்களை முன்நிறுத்தித் தேவர்கள் மகிழும்படி வேள்வி செய்தல் எனும் நடவடிக்கைகளைக் கவனிக்கும் போது கோட்பாடுகளைக் கொண்ட அமைச்சர்கள் யாவர் என அறியும் போது வேத நெறிப்பட்டவர்களாகவும் வேத நெறி வாழ்க்கையைக் கொற்றவனுக்குக் கற்றுக் கொடுப்பவர்களாகவும் உள்ள அமைச்சர் களாவர் என்பது புலனாகிறது. கற்புக் குறித்த இல்லற வாழ்க்கை குறித்த வாழ்க்கை வாழ்பவனாகவும் தேவர்கள் மகிழ அறநெறிப்படி வாழ்க்கை நடத்தக் கூடியவனாகவும் பாடல் வழியே உணர முடிகிறது. அக வாழ்க்கையில் பழைய வாழ்க்கை முறையினை ஒழித்துப் புதிய வாழ்க்கை முறையினை மேற்கொள்பவனாகக் காட்டப்படுகிறான்.

எனினும் புறவாழ்க்கையைக் கவனிக்கும் போது பழைய போர் உத்தி முறையை மேற்கொண்டவனாகக் காண முடிகிறது. புற வாழ்க்கையில் அதாவது போர்க்களத்தில் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் குறித்த பாடங்களை முறையே பெற்றவன். இல்லறத்தில் அறம் குறித்த சிந்தனையை மேற்கொண்டிருப்பவனாகப் பாடல் வழியே நாம் கண்டுணர்வதால் வேள்வி தேவர் முற்பிறப்பு எனும் படியான வைதீகச் சிந்தனையைப் புதிதாக உள் வாங்கிய வேந்தனாக இக் கொற்றவனை நாம் கண்டுணர நேர்கிறது.



ஏழாம் பத்து - பதிகம்

வேத மரபிசை வேந்தனின் சிறப்பு

மடியா உள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடு நுண் கேள்வி அந்துவற்கு ஒரு தந்தை
ஈன்ற மகள் பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன்
நாடு பதி படுத்து நண்ணார் ஒட்டி
வெருவரு தானை கொடு செருப் பல கடந்து
ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின்அறத்துறை போகி
மாய வண்ணனை மனன் உறப் பெற்று அவற்கு
ஓத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்துப்
புரோசு மயக்கி
மல்லல் உள்ளமொடு மாசு அற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழியாதனைக்
கபிலர் பாடினார் பத்துப் பாட்டு

பெயர்கள்

புலாஅம் பாசறை, வரைபோல் இஞ்சி, அருவிஆம்பல், உரைசால் வேள்வி, நாள் மகிழ் இருக்கை, புகல் சூழ் பறவை, வெண் போழ்க் கண்ணி,ஏம வாழ்க்கை, மண் கெழு ஞாலம். பறைக் குரல் அருவி.

பாடலின் தொடர்களைக் கொண்டு அவற்றின் சிறப்புக் கருதி பெயர் சூட்டியுள்ள பொறுப்பினைப் பதிகம் செய்தோர் செய்துள்ளனர்.

உரை

பத்துப் பாடல்களையும் பதிகம் செய்தோர்க்கு மனப்பதிவு கொள்ளப்பட்ட தொடர் வழியே பாடல்களுக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாடல்களை வாசிக்கும் கோணங்களில் வேறுவேறு தொடர்கள் அல்லது பாடல்கள் உணர்த்தும் பொருள்கள் வழியே பாடல்கள் கொள்ளும் தலைப்புகள் வேறுபட வாய்ப்புண்டு. ஏழாம் பத்தின் பத்துப் பாடல்களையும் கணக்கில் கொண்டு பார்க்கும் போது சீறூர்களை வெல்லுதல், சீறூர்த் தலைவர்களைத் திறை செலுத்த வைத்தல், வென்ற நாட்டையும் மக்களையும் திரும்ப அவர்களுக்கு அளித்தல் எனும் செய்திகள் கொண்ட பாடல்களுடன் அறச் செயல்களைச் செய்யும் மன்னர்கள் ஒருசிலர் காட்டப்படுகின்றனர். மண்ணால் செய்யப்பட்ட மதில் சுவர் கொண்ட கோட்டையில் மண்சுவற்றில் கைவிரல்களால் குறிப்பு எழுதிய மகளிர் என எழுத்தறிவற்ற மகளிர் மண் சுவர் கோட்டைக்குள் தலைவன் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். இப்பத்துப் பாடல்களில் ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சீறூர் மன்னன், பேரூர் வேந்தன், வைதீக அறிவுசார் மன்னர், மண்சுவர் கோட்டை எழுத்தறிவற்ற மகளிர், யானைத் தந்தத்தை அளித்துக் கள் உண்ணும் கலாச்சாரத்தைக் கொண்ட படைவீரர்கள் எனப் பல நிலைகளை அறியமுடிகிறது. மறுவாசிப்பு மேற்கொள்ளும்போது இப்பதிகம் கொண்டுள்ள பத்துப் பாடல்களுக்கும் மேற்குறிப்பிட்ட பார்வையில் சிறப்புக் கருதிச் செம்மாந்த பார்வையை விடுத்து, சமூக ஏற்ற இறக்கப் பதிவுகளின் வழியே புதிய தலைப்புகள் இடவும் வாய்ப்பு உண்டு.

அரிசில் கிழார்

இயற்றிய

எட்டாம் பத்து

பாடல் - 71

பதி பாழ் புல வேந்தன்

அறாஅ யாணர் அகன் கண் செறுவின்
அருவி ஆம்பல் நெய்தலொடு அரிந்து
செறு வினை மகளிர் மலிந்தவெக்கைப்
பரூஉப் பகடு உதிர்த்த மென் செந் நெல்லின்
அம்பண அளவை உறை குவித்தாங்கு
கடுந் தேறு உறு கிளை மொசிந்தன துஞ்சும்
செழுங் கூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெரும நின் உடற்றியோரே
ஊர் எரி கவர உருத்து எழுந்து உரைஇப்
போர் சுடு கமழ் புகை மாதிரம் மறைப்ப
மதில் வாய்த் தோன்றலீயாது தம்பழி ஊக்குநர்
குண்டு கண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆர்எயில் தோட்டி வெளவினை ஏறோடு
கன்று டை ஆயம் தரீஇப் பகல் சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக் கயிறு ஆடா வைகற் பொழுது நினையூஉ
ஆன் பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பதி பாழாக வேறு புலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந் திரு அற்றென

அருஞ் சமத்து அரு நிலை தாங்கிய புகர் நுதற்
பெருங்களிற்று யானையோடு அருங்கலம் தரா அர்
மெய் பனி கூரா அணங்கு எனப் பராவலின்
பலி கொண்டு பெயரும் பாசம் போல
திறை கொண்டு பெயர்தி வாழ்க நின் ஊழி
உரவரும் மடவரும் அறிவு தெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யார் இவண் நெடுந் தகை வாழு மோரே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - குறுந்தாள் ஞாயில்

உரை

நெற்கதிர்கள் வயல்களிலே முற்றிய நிலையில் தலைசாய்த்துக் கிடக்கின்றன. அறுவடைக் காலத்தில் எதிர்பாராது பெய்த மழை நீர் வயல்களிலே தேங்கி நிற்கின்றது. நெற்கதிர்கள் தேங்கி நின்ற நீரைத் தொட்டுக் கிடக்கின்றன. கதிர்கள் நீரில் முழ்கிக்கிடந்து கெட்டு விடும் என்பதால் மக்கள் நெற்கதிர்களை அறுவடை செய்து கட்டுகளாகக் கட்டித் நீர் தேங்காது இருக்கும் மேட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று எருமைமாடுகளைப் பிணையல் செய்து கதிர் அடித்து எஞ்சியுள்ள கதிர்மணிகளை உதிர்த்திடும் பொருட்டும் அவற்றின் மேல் எருதுகளை மிதித்து நடக்கச் செய்து நெல்மணிகளை உதிர்த்துக் குவியல் போலக் குவித்து வைத்துள்ளனர். தேனீக்கள் கூடுகட்டி வைத்திருப்பதைப் பார்த்து அவற்றை அடையும் பொருட்டுச் சின்னஞ் சிறார்கள் கூட்டைக் கலைத்துத் தேனீக்கள் கொட்டி விடும் எனும் அச்சம் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றிடுவர்.

கொட்டும் தேனீக்களுக்குச் சிறார்கள் பயந்து நீங்கி ஓடுவது போல் நின் வருகை அறிந்த மாத்திரத்திலேயே அருகருகே பிற நாடுகளில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த குறுநில மன்னர்கள் பயந்தோடி விடுவர். நின்னோடு மாறுபட்ட பகையரசர்கள் மிகவும் துன்பப்பட்டனர்.

பெருஞ்சேரல் இரும்பொறையை எதிர்த்துப் போரிடும் குறுநில மன்னர்களின் படைவீரர்களின் போர் ஆயுதங்களைப் பிடுங்கி எய்தவர்களையே மீண்டும் தாக்கும் வல்லமை கொண்ட படை வீரர்களை அவன் பெற்றிருந்தான்.

பல நாட்டுப் போர்களைச் சந்தித்த அனுபவங்களைக் கொண்ட வீரர்கள் பல்வேறு உத்தி முறைகளைக் கையாண்டு வெற்றி பெற்றதோடு எதிரிகளின் நாடு பாழாக வேண்டி, விளைந்த பொருள்கள் வீணாகிப் போக வேண்டித் தீயை மூட்டி விடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அகழியால் சூழப்பட்டதும் குறுகிய படிகளைக் கொண்டதுமான கோட்டைமதில்களில் அமைக்கப்பட்டிருந்த சிறுசிறு படிகளில் பதுங்கி இருந்த வீரர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டி பெருஞ்சேரல் இரும்பொறையின் படைகளை நோக்கி வீசி எய்துத் தப்பிக்கமுயலும் போது அவர்தம் எய்த அம்புகளைக் கைப்பற்றி எய்தோர் மீது மீண்டும் வீசிக் கொல்லும் போர் முறையை அவன் படைகள் பெற்றிருந்தன.

கழுவுள் என்றும் காமூர் என்றும் அழைக்கப்படும் ஊர் என்பது முல்லை நிலம் சார்ந்த ஒருவித இனக் குழுமக்களானவர்கள் வாழ்ந்து வந்த சிறப்புக்குரியோராவர். அத்தகைய குடியினரை வீழ்த்திய பெருமைக்குரியவன் இந்த இரும்பொறை ஆவான். சேர மன்னன் இரும்பொறை என்பவனை சேரன் வழித் தோன்றலான பொறையன் எனக் கூறுதல் இங்கு மனங் கொள்ளத்தக்கது. இவன் கோவலர் குடி கொண்ட நாட்டினை அகப்படுத்திப் போரில் வெற்றி பெற்றுத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்திருந்தான். அக்கோவலர் எண்ணிறந்த ஆநிரைகளையும் ஆடுகளையும் கூட்டம் கூட்டமாக வைத்திருந்த செல்வத்திற்கு உரியோராக விளங்குகின்றனர். கோவலர் பால், தயிர், மோர், நெய் எனக் கொண்டு வாழ்ந்திருந்தனர். ஒவ்வொரு வீடுகளிலும் மகளிர் மத்துக் கடைவது, அதன்வழி நெய் பெறுவது எனும் தம் குடித் தொழிலைத் தினந்தோறும் செய்து வந்த சிறப்புக்கு உரியோராக விளங்கினர். பொறையன் கைகளில் அகப்பட்டவுடன் மத்துக் கயிறினை ஆட்டி எடுத்து நெய் பெறும் பணி நடைபெறவில்லை. பொறையனால் அடிமைப்படுத்தப்பட்ட செல்வம் இழந்து தொழில் செய்ய முடியாது தவித்தனர் கோவலர். சில காலம் சென்று கோவலர் வாழ்க்கை முன்பிருந்தது போலத் தழைத்தது. அது கோவலர் குடித்தோன்றல்களான ஒருவகை இனக்குழுச் சமுதாயம் சிறப்புற விளங்கியதனால் கழுவுள் ஊர்

என்றும் காமூர் என்றும் பெயர் விளங்கி இருந்தது. இம்முறை சேரன் இரும்பொறை வழித்தோன்றலான பெருஞ்சேரலாதன் அதைத் தன் தன்வயப்படுத்திக் கொண்டான். தொடர்ந்து போர்ப்பசி கொண்ட காமூர் போன்ற பற்பல ஊர்களை இணைத்து, நாடுகள் எனப் பெயர் கொண்டிருந்த நாடுகள் பலவற்றைப் போரிட்டு, அவர்களையும் அவர்தம் முன்னோர்வழியே சேமித்து வைத்திருந்த செல்வங்களையும் கொள்ளையடித்ததோடு அவர்களை மாய்த்திடத் துணிந்தான். பொறையன் தொடங்கிப் பலர் அவன் வழித் தோன்றல்கள் தொடர்ந்து முல்லை நில மக்களான கோவலர் மற்றும் வேளிர் போன்ற பலவித இனக் குழுக்களைக் கொன்று ஒழித்து அடிமைப்படுத்தியது போல மீண்டும் நடத்த வேண்டாம் என முன் எச்சரிக்கை கொண்டு பலரும் பல நாட்டவரும் சேரனிடம் பணிந்து திறை செலுத்தி வாழும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பேய்கள் தாம் வேண்டிடும் குருதிப் பலியை விரும்பி உண்டு மகிழ்வதைப் போலப் பலரும் தந்த திறைகளை ஏற்றுக் கொண்டு பல நாள்கள் இருந்து வருகிறாய். தெய்வத்தின் துணை உன்பக்கம் இருப்பதால் அறுதியிடப்பட்ட வாழ்நாள்கள் நெடிதாக அமையப்படும் எனச் சேரனின் புகழ்பாடும் புலவன் இசைத்துப் பாடுகிறான். அறிவுடையோரையும் அறிவில்லாதோரையும் தெரிந்த அவர்களின் அறிவுப் பசிக்கு ஏற்ப, அவர்களின் தகுதிக்கு ஏற்ப அருள் செய்யக் கூடிய பண்பாளன். இவ்வுலகத்தில் நின்னை விட வேறு யார் உளர் எனப் பாராட்டிப் பரிசில் பெறுகிறான் பாணன்.

பாடலில் குறிப்பிட்டுள்ள பாணனின் கூற்று வழியே பலகாலங்களாக இனக்குழுக்கள் வளர்ச்சி கொள்வதும் அவர்களுக்குள் திறம் படைத்த ஓரிரு இனங்கள் எல்லைகளை விரிவு செய்துகொள்வது பொருள்களைச் செல்வங்களாகச் சேர்த்துக் கொள்வது தொடர் ஓட்டம் போல் தொடர்ந்து சண்டை, போரிடுதல், செல்வங்களை அள்ளிச் செல்லுதல், வறுமைக்கு உட்படுத்துதல் இனங்களை அழித்தல் எனும் பற்பல சமூக அசைவுகள் இயங்கியல் தன்மையில் இயங்கி வந்துள்ளன எனும் சமூக வளர்ச்சி நிலைப்பாடுகளும் வரலாற்றுச் செல் நெறிகளும் இப்பாணனின் பாட்டு வழியே நாம் அறிய முடியும். போர் முறைகள் குறித்த செய்திகளும் இங்கு நம்மால் உய்த்துணரத் தக்க வகையில் அகழி செறுபடிநிலைகள் கொண்டு போர் செய்யத் தக்கதான மதில்

சுவர்கள், அம்புகள் வழி நிகழ்த்தப்பட்ட போர் நடவடிக்கைகள், ஊரைத் தீவைத்து அழித்தல், அச்சம் கொள்ளும் பகைவர்களைத் திறை செலுத்த வைத்தல் என்பதான பலவிதப் போர் முறைமைகள் படம் பிடித்துக் காட்டப் பட்டுள்ளன. பாழ்பட்டுப் போன பலவித ஊர்கள், தீவைத்து அழிக்கப்பட்ட பல ஊர்கள், அழித்து நாடு எனும் நிலையில் ஆட்சி செய்த இனக்குழுத் தலைவர்கள் அழிந்து பட்ட செய்திகள், அழிந்து பட்ட ஊர்கள், பொறையன் சேரன் குடியினர் எனப் பல செய்திகள் வரலாற்றுப் பதிவுகளாக இங்குச் சுட்டப் படுகின்றன. இவ்வித இனக் குழுச்சண்டைகள் தொடர்ந்து அங்கிங்கெனாதபடி எங்கும் நடந்து கொண்டிருந்த வேளையில்தான் ஆரியர் வருகையும் அவர்தம் அறநெறிச் சிந்தனையும் உள்வாங்கப்பட்டதும், வணிகச் சமூகம் தலை எடுக்கத் தொடங்கிய சூழல்கள் வாய்ந்தமையும், சமண சமயத்தார் வருகையும், அவர்தம் அறநெறிச் சிந்தனையும், குறுநில மன்னர்களால் ஆங்காங்கு ஈர்க்கப்பட்டு ஆட்சி நடவடிக்கைகளில் அவை உள் வாங்கப்பட்டமையும் இங்குச் சமூகவியல் நோக்கில் எண்ணிப்பார்க்கத் தக்கவையாகும்.



பாடல் - 72

சான்றோர் ஏத்தும் படை கோள் அஞ்சான்

இகல் பெருமையின் படைகோள் அஞ்சார்
சூழாது துணிதல் அல்லது வறிது உடன்
காவல் எதிரார் கறுத்தோர் நாடு நின்
முன் திணை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து
மன்பதை காப்ப அறிவு வலியுறுத்தும்
நன்று அறி உள்ளத்துச் சான்றோர் அன்ன நின்
பண்பு நன்கு அறியார் மடம் பெருமையின்
துஞ்சல் உறூஉம் பகல் புகு மாலை
நிலம் பொறை ஒரா அ நீர் ஞெமரவந்து ஈண்டி
உரவுத் திரை கடுகிய உருத்து எழு வெள்ளம்
வரையா மாதிரத்து இருள் சேர்பு பரந்து
ஞாயிறு பட்ட அகன்று வரு கூட்டத்து
அம் சாறு புரையும் நின் தொழில் ஒழித்துப்
பொங்கு பிசிர் நுடக்கிய செஞ் சுடர் நிகழ்வின்
மடங்கல் தீயின் அனையை
சினம் கெழு குருசில் நின் உடற்றி சினோர்க்கே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - உருத்து எழு வெள்ளம்

உரை

"நன்று அறி உள்ளத்துச் சான்றோர் அன்ன நின்" என்று சொல்லும் புலவனின் கூற்று வழியே சான்றோரை முதன்மைப் படுத்துவது நோக்கமாகும். தருமம் குறித்தும் அறிவு குறித்தும் வழி காட்டுவோர் சான்றோர். மன்னனின் அமைச்சர் சான்றோர் எனும்நிலை பெறுகிறார். பண்புத்தன்மை குறித்த அறிவு, பகைவரை வெல்லும் உத்தி முறை, ஊழிக்காலம் குறித்த சிந்தனை எனபன போன்ற பலவற்றைக் கற்பிப்போராகச் சான்றோர் விளங்குகின்றனர் இப்பாடலில் ஊழிக்காலம் குறித்த அச்சம் குறித்த சிந்தனை உணர்த்தப்படுகிறது. நின் படையின் பலம் அறியாது அறியாமையால் நின்னோடு போரிடும் பகைவர் ஊழிக்காலத்தில் அழிவுபடுவோர் ஆவர் என்கிறது இப்பாடல்.

ஊழிக்காலம் குறித்த சிந்தனை அல்லது தொன்மை அறிவு புலவரால் பெரிதாகக் கட்டமைத்துக் கூறப்படுகின்றது. நில உலகு சிதைவுறும். நீர் அலைகள் விரைந்து வீசும். வெள்ளம் சூழ்ந்து உயிர்களைக் கவ்வும் எல்லை இன்னதென வரையறுக்க முடியாதவாறு திசைகள் யாவும் இருளாகி விடும். அப்போது சூரியர் பன்னிருவராவர். விழாக் கொண்டாடுவது போல் அழிவுக்கு உட்படுத்தும் இன்பம் செய்வதைத் தவிர்த்துப் பகைவர்க்குத் துன்பம் செய்வதை நின் தொழிலாகக் கொண்டவர் எனப் பகைவர் அறியார். பகைவர் ஒரு சிறிது போதும் எதிர்த்து நிற்க முடியாத நிலை கொள்வர். சினங்கெழு குரிசில் நின்னைச் சினந்தவர் நின் அறிவு சார் சூழ்ச்சித் திறனை அறியாமல் அழிவர். போர் செய்யும் இடத்தே அடங்காத தீயினை ஒத்த சினத்தை நீ கொண்டுள்ளதைப் பகைவர் அறியார்.

தொன்மம் குறித்த சிந்தனை கொண்ட இந்தப் பாடல் வழியே சான்றோர் எனப்பட்டவர் சிந்தனை அதாவது அறம் குறித்தும் அச்சம் குறித்தும் ஊழிக்காலம் குறித்ததும் அறிவுறுத்தி அறநெறி வழி நிறுத்தலை மனம் கொள்ள முடிகிறது. போர்ச் சிந்தனையைத் தரும் சான்றோர் கூடவே ஊழிக்கால அச்சத்தையும் கற்பித்துள்ளமை கவனிக்கத்தக்கது. அறிவைக் கற்பித்துள்ள சான்றோர் ஊழிக்காலம் குறித்த அறிவுக்கு ஒவ்வாத அச்சத்தையும் கூடவே தந்திருப்பது அக்கால மன்னர்களை ஆரிய வழிச்சிந்தனைக்கு உட்படுத்தச் செய்த முயற்சி எனக் கருத வேண்டியுள்ளது.

பாடல் - 73

பாணர் குரவையும் காவேரி வனப்பும்

உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்
பிறர்க்கு நீ வாயின் அல்லது நினக்குப்
பிறர் உவமம் ஆகா ஒரு பெரு வேந்தே
கூந்தல் ஒள் நுதல் பொலிந்த
நிறம் திகழ் பாசிழைஉயர் திணை மகளிரும்
தெய்வம் தரூஉ நெஞ்சத்து ஆன்றோர்
மருதம் சான்ற மலர்தலை விளை வயல்
செய்யுள் நாரை ஒய்யும் மகளிர்
இரவும் பகலும் பாசிழை களையார்
குறும்பல் யாணர்க் குரவை அயரும்
காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம் மறை
கழை விரிந்து எழுதரு மழை தவழ் நெடுங் கோட்டுக்
கொல்லிப் பொருந கொடித் தேர்ப் பொறைய நின்
வளனும் ஆண்மையும் கைவண்மையும்
மாந்தர் அளவு இறந்தன எனப் பல்நாள்
யான் சென்று உரைப்பவும் தேறார் பிறரும்
சான்றோர் உரைப்பத் தெளிகுவர் கொல்? என
ஆங்கும் மதி மருளக் காண்குவல்
யாங்கு உரைப்பேன் என வருந்துவல் யானே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நிறம் திகழ் பாசிழை

உரை

வளம் நிறைந்த காவேரி பாய்ந்து விரிந்து ஓடும் நிலங்களுக்குச் சொந்தமான மன்னனாகிய சேரனுடைய புகழினை விளக்க வந்த பாடலாக இது அமைகிறது.

உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்
மருதம் சான்ற மலர்தலை விளை வயல்
செய்யுள் நாரை ஒய்யும் மகளிர்
இரவும் பகலும் பாசிழை களையார்
குறும்பல் யாணர்க் குரவை அயரும்
காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம் மறை
கழை விரிந்து எழுதரு மழை தவழ் நெடுங் கோட்டுக்
கொல்லிப் பொருந கொடித் தேர்ப் பொறைய நின்

எனும் பாடல் அடிகள் வழியே வயல்களில் விளைந்த பயிர்களைக் கொத்தி நாசமாக்கும் நாரைகளை விரட்டும் வளையல் அணிந்த பெண்களைப் போல அழகிய அணிகலன்களை அணிந்து இரவு பகல் எனப் பாராது ஆட்டக் கலை நிகழ்த்தி ஆடுகின்றவர்கள் குரவைக் கூத்தாடும் இளமங்கையர்.

குரவை என்பது மகளிர் குலவை செய்து கொண்டு பாடி ஆடும் ஒரு வகைக் கூத்து என நம் தமிழ் இலக்கியத்தில் காணகிறோம். பலவகையான குரவைக் கூத்துக்கள் எனக் குறிப்பிடுவதன் வழியே மகளிர் இணைந்து ஆடிய ஆட்டத்தில் பல வகை உண்டு எனப் பொருள் அமைகின்றது. வட்டாரத்திற்கு வட்டாரம் மொழி வேறுபடுவது போலக் குரவையின் தன்மைகளும் வேறுபட்டு நிகழ்த்தப்பட்டு உள்ளன. கொல்லிமலை தொட்டுப் புகார் பட்டினம் வரை காவேரி பாயும் நாடுகள்

எண்ணற்றவையாக இருந்துள்ளன . அதில் ஒரு நாடுதான் பூழி நாடு என்பதாகும். இது போன்று பல ஊர்கள் சேர்ந்துள்ள சிறு சிறு நாடுகள் அமைந்திருக்கின்றன. பல்வேறு வட்டாரங்களில் பலநிலைகளில் திரிந்த குரவை ஆட்டங்கள் நிகழ்ந்துள்ளன. குலவை செய்து ஆடிய குரவைக் கூத்து என்பது பாடலுடன் இயைந்து ஆடப்படும் ஆட்டமாகும்.



பாடல் - 74

வசை இல் நெடுந்தகை

கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப
சாய்அறல் கடுக்கும் தாழ் இருங் கூந்தல்
வேறு படு திருவின் நின் வழி வாழியர்
கொடுமணம் பட்ட வினை மாண் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம்
வரையகம் நண்ணிக் குறும் பொறை நாடி
தெரியுநர் கொண்ட சிரறுடைப் பைம் பொறி
கவை மரம் கடுக்கும் கவலைய மருப்பின்
புள்ளி இரலைத் தோல்ஊன் உதிர்த்துத்
தீது களைந்து எஞ்சிய திகழ் விடு பாண்டிற்
பருதி போகிய புடை கிளை கட்டி
எஃகுடை இரும்பின் உள் அமைத்து வல்லோன்
சூடு நிலை உற்றுச் சுடர் விடு தோற்றம்
விசும்பு ஆடு மரபின் பருந்து ஊறு அளப்ப
நலம் பெறு திரு மணி கூட்டும் நல் தோள்
ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் கருவில்
எண் இயல் முற்றி ஈர் அறிவு புரிந்து
சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்

காவற்கு அமைந்த அரசு துறை போகிய
வீறு சால் புதல்வற் பெற்றனை இவணர்க்கு
அருங் கடன் இறுத்த செருப் புகல் முன்ப
அன்னவை மருண்டனென் அல்லேன் நின் வயின்
முழுது உணர்ந்து ஒழுக்கும் நரை மூதாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு என
வேறு படு நனந் தலைப் பெயரக்
கூறினை பெரும நின் படிமையானே.

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*நலம் பெறு திரு மணி*

உரை

தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு எனப் புலவரால் புகழ்ந்துரைக்கப்படும் இந்த மன்னன் வேள்வி செய்வதிலும் அறவழி நிற்பதிலும் இல்லறம் துறவறம் குறித்த தெளிவிலும் சிறந்தவன் எனக்காட்டப்படுகிறான்.

சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும் *எனும் பாடல் அடி வழியே உலக அறிவும் வானவியல் அறிவும் ஆன இரு அறிவும் பெற்றவனாக விளங்கக் கூடியவனாக இருக்கிறான். முதியோரை ஆற்றுப்படுத்தித் துறவறம் கொள்ள வழிப்படுத்துபவன் ஆக விளங்குகிறான்.*

துறைபோகிய புதல்வரைப் பெற்ற தேவியின் வழிவந்தவன். வேள்வி செய்வதனால் ஓதுவாரும் சான்றோரும் பாராட்டுவதோடு நின் செயற்பாடு குறித்து வியக்கின்றனர். வேள்வி செய்யும் பொருட்டு மான்தோலில் செய்யப்பட்ட ஆடையினை அணிந்து கொள்கிறாய். அந்த மான் தோலாவது சுற்றிலும் எஃகு இரும்பால் ஆன மணிகளைப் பொருத்திக் கட்டப்பட்டதாக இருக்கிறது. பந்தர், கொடுமணம் போன்ற பல அக்காலச் சிறப்பு மிக்க பழமையான ஊர்களில் முத்து மணி பவளம்

போன்றவை பெறுவதற்கு உரிய அரிய இடங்களாக விளங்கின. அவ்விடங்களில் இருந்து பெறப்பட்ட விலை உயர்ந்த அணி மணிகளைக் கவட்டை போன்ற மான்களிடம் இருந்து பெற்றுள்ள கொம்புகளில் அணிவித்து வேள்வி செய்ய முற்படும் போது வானில் பறந்து திரியும் பருந்து துவாரங்கள் இட்டுக் கட்டப்பட்ட மான் தோலையும் வேள்விக்காக அமைக்கப்பட்ட இடத்தில் உள்ள பொருள்களையும் இரை என மனங்கொண்டு அவை வட்டமிட்டுப் பறந்து திரிகின்றன.

சங்க காலம் என்பது குடிகளையும் நிலங்களையும் செல்வங்களையும் போர் செய்து தம் வயப்படுத்தும் பதிவுகளாகப் பாடல்களில் நாம் கண்ட போதிலும் வேதங்கள் தத்துவங்கள் வைதீகங்கள் அறச்சிந்தனைகள் என்பன போன்ற வாழ்வியல் நெறிமுறைகளில் சார்ந்த தன்மைகளும் இழையோடிப் பதிவு செய்திருப்பதை அவதானிக்க முடிகிறது. மலையில் உறையும் கொற்றவை காடுகளில் உறையும் துர்க்கை போன்ற தொல்குடித் தாய்த் தெய்வங்களுக்குக் குருதி கலந்த படையல் பொருள்களைக் காணிக்கை செலுத்தி வழிபட்ட முறைமையை ஆங்காங்குக் காண்கிறோம். அந்தணர் வழிப்பெற்ற செய்திகள் கீழ் வரும் பாடல் அடிகள் மூலம் விளங்குகின்றன.

கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப
சாய்அறல் கடுக்கும் தாழ் இருங் கூந்தல்

ஓதுதலும், வைதீக நெறிமுறைகள் சார்ந்த வழிபாடு கொள்வதும், வயது முதிர்ந்தோரைத் துறவறத்திற்குச் செல்ல ஆற்றுப்படுத்துவதும் இல்லறத்தை உணர்ந்து அருங்கடன் என ஒழுகுவதும் ஆன தெய்வ வழிபாடு கொள்வதும், திங்களையும், சூரியனையும் முதன்மைப்படுத்தி அறச்செயல் செய்து உயிர்களின் பால் அன்பு செய்து இல்லறத்தையும் துறவறத்தையும் ஒரு சேர மனங் கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் அறக் கருத்துக்கள் வழி நடக்கச் செய்வதுமான வைதீக அறச் சிந்தனைகள் புலவனது பாடல்கள் வழிப் பதிவு பெறக்காண்கிறோம். அறக்கொள்கை சார்ந்த சமணக்கொள்கைகள் குறித்துப் பதிற்றுப்பத்தின் பாடல்கள் பல நேரடியாகவும், மறைமுகமாகவும் பதிவு செய்திருக்கக் காண முடிகிறது.

எஃகு, இரும்பு, முத்து, அருங்கலம் என்பன போன்ற உயர்வாக மதிக்கத் தகுந்த அணிமணிகளை வாழ்வில் பயன்படுத்தும் உயர்தர வாழ்க்கையையும் பொன்னும் மணியும் கொடுத்தாலும் மறுத்து நெய்யைப் பண்டமாற்றுச் செய்து ஆட்டையும் மாட்டையும் பெரிதாக எண்ணி வாங்கிக் கொண்டு வாழும் கோவலர் வாழ்க்கையும் காட்டப்படுகின்றன.கோவலர், எயினர், வேளிர் இன மக்கள் போன்றோர் காடுகளையே வாழிடமாகக் கொண்டு வரகு, கொள், சாமை போன்ற தினைப்பயிர்களை விளைவித்துக் கொண்டு வாழ்க்கை நடத்திவரும் இனக்குழு வாழ்க்கையைப் பதிற்றுப்பத்தின் பாடல்கள் பலவற்றில் பரவலாகக் காண்கிறோம். ஏற்றத்தாழ்வு கொண்ட மேற்குறிப்பிட்ட மக்கள் போர் வீரர்கள் போன்றோரும் வேள்விகளுக்கு அறிவு புகட்டக் கூடியவருமான அந்தணர் அமைச்சர் சான்றோர் மன்னர் எனப் பலதரப்பட்ட மக்களையும் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பலவாக நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளன. போர் குறித்த வாழ்க்கையையும் இல்லறம் குறித்த வாழ்க்கையையும் பதிவு செய்யும் புலவர்கள் மற்றும் பாணர்கள் இல்லறம் துறவறம் எனக் குறிப்பிட்டுப் பேசுவதும் சங்ககாலச் சமூக அமைப்பு முறையில் காண முடிகிறது.

பாடல் - 75

வெண் வரகு வாழ்வும் செந்நெல் பண்பும்

இரும் புலி கொன்று பெருங்களிறு அடூஉம்
அரும் பொறி வய மான் அனையை பல் வேல்
பொலந் தார் யானை இயல் தேர்ப் பொறைய
வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப் பணிந்து
நின் வழிப்படாஅர் ஆயின் நெல் மிக்கு
அறை உறு கரும்பின் தீம் சேற்று யாணர்
வருநர் வரையா வளம் வீங்கு இருக்கை
வன்புலம் தழீஇ மென்பால் தோறும்
அரும் பறை வினைஞர் புல் இகல் படுத்து
கள்ளுடை நியமத்து ஒள் விலை கொடுக்கும்
வெள் வரகு உழுத கொள்ளுடைக் கரம் பைச்
செந்நெல் வல்சி அறியார் தம்தம்
பாடல் சான்ற வைப்பின்
நாடு உடன் ஆள்தல் யாவணது அவர்க்கே?

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - தீம் சேற்று யாணர்

உரை

வேந்தனும் வேளிரும் பிறரும் பொறையனிடம் அடிபணிய நேரிடுவது எப்போதெனில் பொறையனின் அடிபணிதலுக்கு ஆளாகி வாழும் முறைமையில் திரிபு ஏற்படும் போது மட்டுமே என்பதனால் அவர்கள் யாவரும் எப்போதும் பொறையனுக்கு அடிமைப்பட்டு இருந்தனர் என்னும் கருத்து பதிவு செய்யப்படுகிறது.

புலவனின் புழ்ந்துரை கொண்ட பாடல் நாயகனான பொறையன் தன் வழிப்படாத எதிரிநாடுகளைத் தன் வயப்படுத்தி விடும் பேராற்றல் உடையவன். ஆதலால் அவன் வழிப்படாதவர் தத்தம் நாடுகளைப் பெற்று ஆள்வது எவ்வாறு? ஆனால் பொறையன் கரும்பு நெல் போன்ற நஞ்சைப் பயிர்களை விளை நிலங்களாகக் கொண்டு செழிப்புறத் தன் நாட்டை ஆண்டு கொண்டு வருகின்றான். வரகு நெல் போன்ற புன்செய்ப் பயிர்களான நீர் வளமற்ற நிலப் பகுதிகளில் வளர்கின்ற பயிர்கள் விளையும் காடுகளையும் அப்பயிர்களும் விளையாத காலத்தில் காட்டுப் பகுதிகளிலே கடந்து செல்லக்கூடிய நபர்களின் பொருள்களைக் களவாடி உண்ணும் தேவைக்கு ஆளாக நேரிடும் தொழிலைக் கொண்டுள்ள பிற இன மக்கள் கொண்டுள்ள நாடுகளை வெல்லத் தக்கவன் பொறையன் ஆவான்.

நீர்வளம் கொண்ட நெற்பயிர், கரும்பு போன்ற நல்விளை நிலங்கள், விளையும் பொருள்களைக் கொடை செய்யக் கூடிய குணம் கொண்ட பொறையன் முல்லை நிலப்பகுதி இன மக்களையும் அதாவது உற்பத்தி வளமை குன்றிய நிலப்பகுதிகளுக்கு உரியவர்களை எளிதில் வெல்லக் கூடியவன். வளம் நிறைந்தோர் வளம் குறைந்தோரை வெல்லும் முறை ஒரு வழக்கமாக அன்று தொட்டு இன்று வரை விளங்கக் காண்கிறோம் பொறையன் புலியைக் கொன்றும் யானையைக் கொன்றும் வீழ்த்துகிற சிங்கத்தைப் போன்றவன். பொன்னால் செய்யப்பட்ட பல அணிகலன்களை மாலையாக அணிந்தவன். யானைப் படையைக் கொண்டவன். தேர்ப்படையை உடையவன். முடியுடை அரசரும் குறுநில மன்னர்களும் நீர்வளம் நிலவளம் கொண்டுள்ள பொறையன் போன்றோருக்கு எப்போதும் அடிபணிபவர்களாகவே விளங்குபவர்கள் எனப் புலவன் ஒரு பொது விதியை இப்பாடலில் காட்டிக்

கொடைச் சிறப்பினையும்வீரச் சிறப்பினையும் விதந்தோதிப் பாடலாகப் பாடுகிறான்.

நெற்சோறு உண்போர் உயர்தரம் கொண்டோராகவும் நீர் வளம் குறைந்த நிலப்பகுதியில் விளைந்த வெல்வரகு கொள்ளு சாமை போன்ற தினைகளை உண்போர் கீழ்த்தரமானவர்களாகவும் சங்ககாலத்தில் மதிக்கப்பட்டுள்ளனர் என்ற நிலையை இப்பாடல் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. வர்க்கம் என்பது வளத்தினை அடிப்படையாகக் கொண்டது எனும் தத்துவம் பின்நாளில் விரிவுறச் சொல்லப்பட்டாலும் சங்க காலச் சமூகத்திலேயே விளையும் பயிர்களைக் கொண்டும் உண்ணும் உணவு முறைகளைக் கொண்டும் வர்க்க முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கும் முறைமையை நாம் கண்டுணர முடிகிறது. யாருடைய நாடும் யாருக்குத்தான் எப்போதுதான் சொந்தம் எனும் ஒரு நீதியுரை இப்புலவன் குரலில் தென்படுவதன் வழியே போர் என்பது சங்ககாலச் சமூகத்தில் நிரந்தர வாழ்க்கை முறையாக அதுவே வாழ்வின் ஒழுக்கம் என்பதாக அமைந்திருந்தமையைக் காட்டுகிறது.

பாடல் - 76

அருந்துறை கண்ட அரசன் இருக்கை

களிறுடைப் பெருஞ் சமம் ததைய எஃகு உயர்த்து
ஒளிறு வாள் மன்னர் துதை நிலை கொன்று
முரசு கடிப்பு அடைய அருந் துறை போகிப்
பெருங் கடல் நீந்திய மரம் வலி யுறுக்கும்
பண்ணிய விலைஞர் போலப் புண் ஒரீஇப்
பெருங் கைத் தொழுதியின் வன் துயர் கழிப்பி
இரந்தோர் வாழ நல்கி இரப்போர்க்கு
ஈதல் தண்டா மா சிதறு இருக்கை
கண்டனென் செல்கு வந்தனென் -கால் கொண்டு
கருவி வானம் தண்தளி சொரிந்தெனப்
பல்விதை உழவின் சில் ஏராளர்
பனித் துறைப் பகன்றைப் பாங்கு உடைத் தெரியல்
கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி
இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன் கண் வைப்பின் நாடு கிழவோயே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - மா சிதறு இருக்கை

உரை

பல ஊர்களை நாடு எனக் கொண்டு சீறூர் நாட்டுத் தலைவனாக விளங்கும் தலைவனின் புகழினை மட்டும் பாடி முடியாது. அந்நாட்டுத் தலைவனின் பல்வேறு சிறப்புக்களையும் அக்காலக்கட்ட மக்களின் வாழ்க்கையையும் இணைத்தே பதிவு செய்திருக்கும் பாங்கு சிறப்புக்குரியதாக அமைகிறது. விவசாயச் சமூகமும் வணிகச் சமூகமும் அரச சமூகமும் குறித்த பதிவுகள் இப்பாடலில் இருப்பதனால் சங்ககாலச் சமூக வளர்ச்சிப் படிநிலையை ஒருவாறு புரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

மின்னல் அடித்து இடி முழக்கம் செய்து மேகம் கருத்து மழைத் துளிகள் சொரிந்த நிலையில் ஆங்காங்கு நீர்த் துளிகள் குளிர்ச்சியுறக் காணப்படுகின்றன. நிலங்களை உழவர்கள் உழுது நல்ல விதைகளை விதைத்திருக்கின்றனர். நீர் நிலைகளில் பகன்றைப் பூக்கள் வெளிர்ந்த ஆடை என மிதந்து கிடக்கின்றன. விதைத்த நிலங்களில் விலை உயர்ந்த அழகிய மலைத் தானியங்கள் கிடைக்கின்ற ஊர்களைக் கொண்டுள்ள நாட்டுக்குத் தலைவன் நீ. வேல்களைக் கொண்டும் வாள்களைக் கொண்டும் அரசர்கள் பொருதிக் கொள்கின்றனர். கடற்போர் நடக்கும் கரைதனிலே காலாட் படையினரும், யானைப் படையினரும் போரினை வென்ற வெற்றி முரசைக் குறுந்தடியால் கொட்டி ஆர்ப்பரிக்கின்றனர்.

கடற்போரில் சிதைவு பட்ட மரக் கலங்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துச் செப்பனிட்டுச் சீர்ப்படுத்துகின்றனர். கடல் வாணிகம் செய்து வந்த வணிகர்களிடம் அவர்கள் கொண்டு வந்த பொருள்களை விலை பேசி வாங்கியும் விற்றும் வணிகத் தொழில் செய்கின்றனர்.

இறந்தோர் மகிழும்படி கொடை செய்யும் பண்பாளனாக இந்நாட்டுத் தலைவன் விளங்குகின்றான். கடற்போர் செய்து வெற்றி கொண்ட களிப்பில் பாசறை கொண்டு வீற்றிருக்கின்ற நாட்டுத் தலைவனைச் சுற்றிலும் குதிரைப் படைகள் காவல் செய்து கொண்டு இருக்கின்றன. போர்ப்பாசறைக்கு வந்து இத்தலைவனின் வெற்றிச் சிறப்பினைப் பாடிப் பரிசில் பெற்றுச் செல்லும் நோக்கோடு பாணன் பாடிய பாடலாக இது அமைகிறது. போரில் வெற்றி பெற்றுப் பாசறையில் வீற்றிருக்கும் மன்னனைப் போற்றிப்பாடும் வழக்கம் பாணர்களிடம் இருந்துள்ளது.

வெற்றி பெற்றுப் பெறப்பட்ட பல்வேறு பொருள்களைக் கொண்டுள்ள சூழலில் வெற்றியைப் பாராட்டிப் பாடும் போது பரிசில் வழங்கத் தக்க சூழல் தலைவனுக்கும் பரிசிலைப் பெற்றுச் செல்லும் வாய்ப்பு பாணனுக்கும் அமைகின்றன. பதிற்றுப்பத்தில் இது போன்ற வெற்றிச் செய்திகளைப் பதிவு செய்யும் முறைமை பாணன் மற்றும் புலவர்களின் பாடல்களில் காணப்படுகின்றது. இந்த நிலை பேரரசுகள் தோன்றிய பின் கல்வெட்டுப் பதிவுகளாகவும் செப்புப்பட்டையங்களின் பதிவுகளாகவும் மெய்க்கீர்த்தியின் பதிவுகளாகவும் பிற்காலத்தில் மன்னர்களின் வெற்றிச் சிறப்புகள் பொறிக்கப்பட்டமைக்குப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் தோற்றுவாயாக அமைந்திருந்தன எனில் அது மிகையல்ல.



பாடல் - 77

பின் தேர்த் துணங்கை

எனைப் பெரும் படையனோ சினப் போர்ப் பொறையன்
என்றனிர் ஆயின் -ஆறு செல் வம்பலிர்
மன்பதை பெயர ,அரசு களத்து ஒழியக்
கொன்று தோள் ஓச்சிய வென்று ஆடு துணங்கை
மீ பிணத்து உருண்ட தேயா ஆழியின்
பண் அமை தேரும் மாவும் மாக்களும்
எண்ணற்கு அருமையின் எண்ணின்றோ இலனே
கந்து கோளீயாது காழ் பலமுருக்கி
உகக்கும் பருந்தின் நிலத்து நிழல் சாடிச்
சேண் பரல் முரம்பின் ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவின் பல்
யானை காண்பல் அவன் தானையானே

துறை	-	*உழிஞை அரவம்*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வென்று ஆடு துணங்கை*

உரை

எனைப் பெரும் படையனோ சினப் போர்ப் பொறையன்
என்றனிர் ஆயின் –ஆறு செல் வம்பலிர்

மன்பதை பெயர, அரசு களத்து ஒழியக்
கொன்று தோள் ஓச்சிய வென்று ஆடு துணங்கை
மீ பிணத்து உருண்ட தேயா ஆழியின்

மேற்குறித்த பாடல் அடிகள் ஒருவர் கேட்க மற்றவர் அதற்கு விடை கூறுதல் எனும் முறையில் எதிர்பார்ப்புத் தன்மையோடு கேள்வி கேட்டவர் பதிலை ஆர்வத்தேடு எதிர்நோக்கி இருக்கப் பதில் தரும் விதத்தில் நாடகத்தன்மை வாய்ந்ததாக அமைகிறது. துணங்கைக் கூத்து ஆடுதல் என்பது தமிழ் இலக்கியங்களில் இரு நிலைகளில் காண முடிகிறது. ஒன்று மன்றுகளில் அல்லது ஊர் விழாக்களில் நிகழ்த்தப்படும் துணங்கைக் கூத்து. இரண்டு போர்க்களங்களில் வெற்றி பெற்ற பிறகு ஆடுவது. இரு கைகளையும் உயரே தூக்கியும் தாழ்த்தியும் பாட்டு மற்றும் தாளத்திற்கு ஏற்ப மகளிர் குதித்தும் இணைந்தும் ஆடுவது துணங்கைக் கூத்து ஆகும். போர்க் களத்தில் ஆடும் துணங்கைக் கூத்து எப்படி நிகழ்த்தப்படுகிறது என்பதை இப்பாடல் விரித்துரைக்கிறது. வெற்றிக் களிப்பில் துணங்கை கூத்து ஆடிய மன்னர்கள் சேரனோடு செய்த போரில் பிணமாகிப் போயினர். அதாவது போர்க்கு முந்தைய முன்தேர்க் குரவை ஆட்டத்தில் ஆடிய மன்னர் சேரனிடம் பொருது, தோற்றுப் போய்ப் பிணமாகிக் கிடக்கின்றனர். பல பிணங்களின் மீது ஓட இயலாத கழன்ற நிலையில் கிடக்கும் தேர்ச் சக்கரங்கள் வீழ்ந்துள்ளன. குதிரைப் படை வீரர்கள் மடிந்த குதிரைகளோடு வாளால் வெட்டப்பட்ட நிலையில் இறந்து கிடக்கின்றனர்.

இரத்த ஆறு ஓடுகிறது. பலவாறு சிதறிக்கிடக்கும் பிணங் களையும் தேர்ச் சக்கரங்களையும் எண்ணிப்பார்த்துத் தொகை கூற முடியவில்லை. யானைகள் பல இறந்துபட்டுள்ளன. சிதறிக்கிடக்கும் ஆயுதங்கள் பல எண்ண முடியாமல் கிடக்கின்றன. இறந்து கிடக்கும் யானைகளைக் கவனிக்கும் போது குன்றுகளைப் போலக் காட்சியளிக் கின்றன. இவ்வாறான போர்க்காட்சியைக் காட்டும் இந்தப் புலவன் துணங்கைக் கூத்தாடும் துணங்கையரை வைத்துக் காட்டுகிறான். பின் தேர் குரவை என்பது போருக்குப் பின் வெற்றி பெற்று ஆடும் வெற்றிக் களிப்பு ஆட்ட வகையைச் சார்ந்ததாகும். போர்க்களத்தில் நடத்தப்பட வேண்டிய, அதாவது நிறைவேற்றப்பட வேண்டியச் சடங்குகளுள் ஒன்று பாணரும் கூத்தரும் இணைந்து ஆடும் துணங்கைக் கூத்து ஆகும். இறந்துபட்டோரின் புகழையும் நினைவையும் போரிட்ட முறைமை யையும் நினைந்து போற்றும் சடங்குகளில் ஒன்றாகத் துணங்கைக்

கூத்து அமைகிறது. இன்றும் நாட்டுப் புறங்களில் இறந்தவர் பிணத்தைச் சுற்றி நின்று உறவினர்கள் மார்பில் அடித்துக் கொண்டு,

என்னரசே பொன்னரசே
என்ன சொல்லி கண்ணசந்த
கத்திரிக் காய் எங்களுக்கு – அந்த
கைலாசம் தான் உங்களுக்கு
மேலோகந்தான் உங்களுக்கு –இந்த
கீலோகந்தான் எங்களுக்கு

என்று பாடி ஆடிச் சடங்கு நிறைவேற்றும் தொல்குடி மக்களின் மாரடிப்பு ஆட்டத்தை எண்ணிப்பார்க்கும் போது போர்க்களத்தில் ஆடிய துணங்கைத் கூத்தின் எச்சங்களாகவே அதனைக் கொள்ள முடிகிறது. மாரடிப்பு ஆட்டப் பாடலில் பாடு பொருள் பொதுவாக இறந்து பட்டவரின் வாழ்க்கையை, வாழ்ந்த நினைவுகளைப் பெருமைகளைப் பாடுபொருள்களாகக் கொண்டு அமைந்திருப்பது இயல்பு. அக்காலத் துணங்கைக் கூத்து அதாவது போர்க்களத்தில் ஆடப்பட்ட துணங்கைக் கூத்து போர்க்களத்தில் இறந்துபட்டவர்களின் நினைவுகளைப் போற்றிச் செய்யும் சடங்குகளாகவே இதை எண்ணிப்பார்க்க முடிகிறது. இன்னும் விளக்கமுறக் கூறுவோம் எனில் போரில் இறந்து பட்ட வீரர்களின் ஈமச் சடங்குகளாகப் பாணர் மற்றும் கூத்தரின் ஆட்டம் அமைகிறது என மனங்கொள்ள முடிகிறது.

இப்பாடல் முழுவதும் போர்க் காட்சியையும் போரில் நிகழ்த்தப்பட்ட துணங்கைத் கூத்தினையும் பொது மக்களிடம் போர்க்களத்தில் துணங்கைக் கூத்துப் பாடத் துணை நின்ற பாணன் விதந்து கூறுவதாக அமைந்துள்ளது.

பாடல் - 78

சில் வளை விறலிக்கு சீர்நெறிக் காட்டல்

வலம் படு முரசின் இலங்குவன விழூஉம்
அவ்வெள் அருவி அவ் வரை யதுவே
சில் வளை விறலி செல்குவை ஆயின்
வள் இதழ்த் தாமரை நெய்தலோடு அரிந்து
மெல்லியல் மகளிர் ஒய்குவனர் இயலிக்
கிளி கடி மேவலர் புறவுதொறும் நுவலப்
பல் பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்
வில் பயில் இறும்பின் தகடூர் நூறி...
பேஎ மன்ற பிறழ நோக்கு இயவர்
ஓடுறு கடு முரண் துமியச் சென்று
வெம் முனை தபுத்த காலை தம் நாட்டு
யாடு பரந்தன்ன மாவின்
ஆ பரந்தன்ன யானையோன் குன்றே.

துறை - *விறலியாற்றுப்படை*
வண்ணம் - *ஒழுகு வண்ணம்*
தூக்கு - *செந்தூக்கு*
பெயர் - *பிறழ நோக்கு இயவர்*

உரை

சில்வளை விறலி என விளித்துச் சொல்லப்படும் செய்திகள்யாவும் மன்னனுடைய வீரச்சிறப்புப் பற்றியதாகும். இச்சிறப்புகள் யாவும் யாரிடம் சொல்லப்படுகின்றன எனக் கவனித்தோமாயின் அவையெல்லாம் பாடி ஆடிக் கூத்து நிகழ்த்தும் ஒரு பெண் கலைஞரிடம் சொல்லப்படக் கூடிய செய்திகளாக அமைகின்றன. மன்னனின் வீரச்சிறப்புகளை ஒரு விறலியிடம் சொல்லப்பட வேண்டிய காரணங்களை அறிய வேண்டும்.

ஒரு சாதாரணப் பெண்ணிடமோ அல்லது ஆணிடமோ மன்னனின் வீர தீரச் செயல்களையும் கொடைச் சிறப்புக்களையும் சொல்லப்படுவதில் யாதொரு பயனும் இல்லை. மாறாகப் பலர் முன்னிலையில் பாடி ஆடிப் பேசிக் கலைநிகழ்ச்சிகள் நடத்தும் ஒரு பெண்மகளிடம் சொல்லப்படுவதனால் சொல்லப்படும் செய்திகள் வலிமை பெறுகின்றன. எப்படி எனில் மன்னனின் சிறப்புச் செய்திகள் அனைத்தும் கேட்டுத் தெரிந்து கொண்ட ஓர் ஆட்டப் பெண்ணுக்கு மட்டும் அச்செய்தி உரியது ஆகாது. மாறாக அவள் குடிமக்கள் பலருக்கும் பல தளங்களில் வாழ்க்கை நடத்துகின்ற பலதரப்பட்ட மக்களுக்கும் மன்னனின் வெற்றிச் சிறப்புகள் அனைத்தையும் விரிவுற எடுத்துச் சொல்லி மக்கள் மனங்களில் பதிவு செய்யக் கூடிய மகத்தான பணியைச் செய்யக் கூடியவளாக விறலி அமைந்து விடுகிறாள்.இவ்வாறு மக்கள் மனங்களில் மன்னனின் பதிவுகளைச் செய்யக் காரணமாக இருக்கக் கூடிய கலைஞருக்கு மன்னன் எத்தகைய பரிசு தரினும், அப்பரிசுக்குத் தகைசான்றவராகவே மதிக்கப்படுகின்றனர்.

பின் நவீனத்துவ வாதிகளால் இன்றைக்கு முன் வைக்கப்படுவதில் முதன்மையானவை சொல்லாடல் என்பதும், கூற்று முறை என்பதும் ஆம். இவை மேற்சுட்டிய விறலிக்கும் பொருந்துவன, இப்பாடலில் சுட்டப்படும் மன்னனின் சிறப்புகளாவன:

மென்மையான இயல்பினையுடைய மகளிர் அசைந்து சென்று மருதநிலத்தேயுள்ள வள்ளிய இதழ்களையுடைய தாமரைப் பூவை நெய்தற் பூவோடு கட்டிச் சூடும் மென்மையான மகளிரை விரும்பும் மென்மையானவன் பெருஞ்சேரலிரும்பொறை. முல்லை நிலத்து ஊர்களையுடையதும் வெல்லும் போரைச் செய்யும் வீரர் மறத்தை

விரும்பிப் பாதுகாத்தலையுடையதும் விற்படைகள் நிலை பெற்ற காவற் காட்டையுடையதுமாகிய தகடுரை அழித்தவன்.

வள் இதழ்த் தாமரை நெய்தலோடு அரிந்து
மெல்லியல் மகளிர் ஒல்குவனர் இயலி
கிளி கடி மேவலர் புறவுதொறும் நுவல
பல் பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்
வில் பயில் இறும்பின் தகடூர் நூறி...

சேரனுடைய படைத்தோற்றத்தை நேரே நோக்காமல் தெளிவாக எடுத்தும் படுத்தும் வளைத்தும் என மாறுபட்ட நோக்கும் அச்சத்தையுண்டாக்கும் பார்வையையும் போர் முரசுகளையும் உடையவன் சேர மன்னன். பகைவர் தோற்று ஓடுதற்குக் காரணமான மிக்க வலிமை உள்ளவன். அவன் நாட்டில் ஆடுகள் பரந்து நின்றாற் போன்று குதிரைகளும் பசுக்கள் பரந்து நின்றாற் போன்று தோன்றும் யானைகளையும் உடையவன்.

இச்செய்திகள் யாவும் மக்களிடம் கொண்டு செல்லக் கூடிய ஊடகக்காரி ஆட்டக்காரிகையான சில வளையல்கள் மட்டுமே அணிந்திருக்கக் கூடிய விறலியே ஆவாள். நம்பிக்கையோடு சில் வளை விறலி செல்குவையாயின் என விளித்துச் சொல்வதன் வழியே மன்னனின் விலைமதிப்பற்ற பரிசுகள் விறலிக்கு அளிக்கப்பட உள்ளன என்பது தொக்கி நிற்கிறது. இதனால் தான் சொல்லாடல் என்பது குறித்துப் பின் நவீனத்துவ வாதிகள் மிகுந்த கவனத்தோடு கவனிக்கிறார்கள். விறலி, பாணர் எனும் கலைஞர் பெருமக்கள் பதிற்றுப்பத்தில் விரவிச் சுட்டப்படுகின்றனர். இவர்கள் இல்லையேல் சேரன் புகழ் வெளிப்பட வாய்ப்பே இல்லை எனும் சமூக அமைப்பில் கவனங்கொள்ளத் தக்கவர்களாகச் சொல்லாடல் புரியும் கலைஞர்கள் உள்ளனர்.

பாடல் - 79

செருவந்தானின் கோதை மார்பு

உயிர் போற்றலையே செருவத்தானே
கொடை போற்றலையே இரவலர் நடுவண்
பெரியோர்ப் பேணி சிறியோரை அளித்தி
நின்வயிற் பிரிந்த நல் இசை கனவினும்
பிறர் நசை அறியா வயங்கு செந் நாவின்
படியோர்த் தேய்த்த ஆண்மை தொடியோர்
தோளிடைக் குழைந்த கோதை மார்ப
அனைய அளப்பு அருங் குரையை அதனால்
நின்னொடு வாரார் தம் நிலத்து ஒழிந்து
கொல் களிற்று யானை எருத்தம் புல்லென
வில் குலை அறுத்துக் கோலின் வாரா
வெல் போர் வேந்தர் முரசு கண் போழ்ந்து அவர்
அரசு உவா அழைப்பக் கோடு அறுத்து இயற்றிய
அணங்குடை மரபின் கட்டில் மேல் இருந்து
தும்பை சான்ற மெய் தயங்கு உயக்கத்து
நிறம் படு குருதி புறம் படின் அல்லது
மடை எதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇக்
கேடு இலவாக பெரும நின் புகழே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நிறம் படு குருதி

உரை

உயிரைப் பொருட்படுத்தாது போர் செய்வாய், பொருள்களைப் பொருட்படுத்தாது கொடை செய்வாய், பெரியோர்களை அரவணைப்பாய், சிறியோருக்கு அருள் செய்வாய், பிறரிடம் இல்லாப் புகழை நீ எப்போதும் கொண்டிருப்பாய், கோதை மார்பனே, நின் தலைவியின் அன்புக்கு அடிபணிவாய். களிறின் பிடரியில் அமர்ந்து போர் செய்யும் போது பகைவரின் போர் முரசின் கண்களைக் கிழித்து அவர்தம் பட்டத்து யானையின் கொம்பினை வெட்டி, தெய்வத் தன்மை வாய்ந்த கட்டில் செய்தாய். தும்பைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரின் வீரர் தம் மார்பினைக் கிழித்து வெளிப்படும் இரத்தத்தைப் பலியாக அயிரை மலையை இருப்பிடமாகக் கொண்டுள்ள கொற்றவைக்குப் படையல் செய்துள்ள உன் புகழ் கேடற்றது ஆகும்.

பாட்டின் பொருள் மேல் குறித்தவாறு செய்திகளை உள்ளடக்கியுள்ளது. எதிரியின் மார்பைக் கிழித்துச் சிந்திய குருதியை அயிரை மலைக் கொற்றவைக்குப் பலி செய்யும் வேந்தன் இனக் குழு மரபின் வழிவந்த குறுநில மன்னன். குருதியைப் பலிசெய்வதும் மலையில் வீற்றிருக்கும் தாய்த் தெய்வமான கொற்றவையை வழிபடுவதும் ஆன அடையாளங்களால் இவன் இனக்குழு வழிவந்த குறுநில மன்னன் என அறிய முடிகிறது. தும்பைப் பூச்சூடிப் போர் செய்யும் இந்த முறைமை வழியே எண்ணிப் பார்க்கும் போது இக்குறுநில மன்னன் இயற்கை சார்ந்த வாழ்வில் இருந்து மீளவில்லை என்றும் மலைசார் கடவுளைப் போற்றித் துதிக்கும் வழிபாட்டில் குருதிப் பலி செய்வதுமான அடையாளங்கள் வழியே காணும் போது தமிழ் அடையாளம் தவிர்த்த ஆரியம் வைதீகம் பேரரசு என்பதான வளர்ச்சி நிலைகளை எட்டாத தொடக்க நிலைக் காலத் தமிழ் வேந்தனாக இவன் நமக்கு அறியப்படுகிறான். இரந்து வரும் மக்களுக்கும் பாணர்தம் உறவினர்களுக்கும் கொடை செய்யக் கூடிய பண்பாளன், தன் தலைவியை மட்டும் எண்ணி வாழும் பெருந்தகையன் எனச் சுட்டப்படுவதாலும் தமிழர் பண்பு, தமிழர் அடையாளம், தமிழர் வீரம் குறித்த தொடக்க நிலைக் கால வேந்தன் என நாம் இவனை அடையாளப் படுத்தித் தோழமை கொள்ள முடியும் .

பாடல் - 80

சினப் போர் கொள்ளலும் திறை சீர் கொள்ளலும்

வால் மருப்பின் களிற்றுயானை
மாமலையின் கணம் கொண்டு அவர்
எடுத்து எறிந்த விறல் முரசம்
கார்மழையின் கடிதுமுழங்கச்
சாந்து புலர்ந்த வியல் மார்பின்
தொடி சுடர் வரும் வலி முன் கை
புண்ணுடை எறுழ்த்தோள் புடையல் அம் கழற் கால்
பிறக்கு அடி ஒதுங்காப் பூட்கை ஒள் வாள்
ஒடிவு இல் தெவ்வர் எதிர் நின்று உரைஇ
இடுக திறையே புரவு எதிர்ந்தோற்கு என
அம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ
அனையை ஆகன்மாறே பகைவர்
கால் கிளர்ந்தன்ன கதழ் பரிப் புரவிக்
கடும் பரி நெடுந் தேர் மீமிசை நுடங்கு கொடி
புல வரைத் தோன்றல் யாவது - சினப் போர்
நிலவரை நிறீஇய நல்இசை
தொலையாக் கற்ப நின் தெம்முனையானே?

துறை - வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - புண்ணுடை எறுழ்த்தோள்

உரை

யானைப் படைகள் தொகுதியாய்க் காணும் போது மலைகளாய்த் தென்படும். போர் முரசு வெற்றியைத் தரத்தக்க வகையில் ஒலிக்கும் போது கார்கால மேகங்கள் தரும் இடியைப் போல ஒலிக்கும். பனம் பூ மாலை அணிந்த தோள்கள், கழல் அணிந்த கால்கள், எண்ணில் அடங்காப் போர் செய்த அடையாளங்களாகப் பெரிய மார்புகள், எப்போதும் வாளோடும் தோற்றமளிக்கின்ற இந்த அரசன் முன்னே பகைவர் யாரும் நிற்கத் தயங்குவர். பாதுகாத்துக் கொள்ள வேண்டித் திறையைச் செலுத்திப் பலநாட்டவரும் சிறப்பித்துப் போற்றத்தக்கவனாக விளங்குகின்றான்.

அழிவில்லாத நல்ல கல்வியை உடையவன். பகைவர்களின் கோட்டை கொத்தளங்களில் கொடிகள் எவையும் அசைய மாட்டா. ஏன் எனில் பகைவரை அழிக்கத்தக்க சினத்தைக் கொண்டு விரைந்த ஓட்டத்தைக் கொண்ட குதிரைகள் இயக்கும் தேரை உடைய உன்னை எண்ணும் போது அவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்.

கொடிகள் நாட்டையும் நாட்டு மக்களையும் அடையாளப் படுத்தும் குறியீடாகும். இந்த அடையாளம் சங்ககாலச் சமூக இயக்கங்களின் செயற்பாடுகளின் எழுச்சியோடு தொடர்புடையவனவாக அமைகிறது.

இடுக திறையே புரவு எதிர்ந்தோற்கு எனத் திறை செலுத்தி வாழும் வாழ்க்கை முறை அல்லது ஆட்சி முறையில் இருந்து மாறுதல் பெற்று விடுதலை, முன்னேற்றம் போன்ற இலக்குகள் கொண்ட பொருண்மை அரசியலை முன்வைத்து நடவாத ஒருவித முறைமையினைச் சங்க காலச் சமூகங்கள் பல கொண்டிருந் தமைக்கான அடையாளங்களாக இப்பாடலைக் காணமுடிகிறது.

எட்டாம் பத்து - பதிகம்

பாண் குடி ஏத்தும் வேள்வி செய் வேந்தன்

பொய் இல் செல்வக் கடுங்கோவுக்கு
வேளாவிக் கோமான் பதுமான் தேவி ஈன்ற மகன்
கொல்லிக் கூற்றத்து நீர் கூர் மீமிசைப்
பல்வேல் தானை அதிகமானோடு
இரு பெரு வேந்தரையும் உடன் நிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள் தீர் மகளிர் இரங்க துப்பு அறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சி தந்து எய்திய
அருந் திறல் ஒள் இசைப் பெருஞ்சேரல் இரும் பொறையை
மறு இல் வாய்மொழி
அரிசில் கிழார் பாடினார் பத்துப் பாட்டு

பெயர்கள்

குறுந்தாள் ஞாயில், உருத்து எழு வெள்ளம், நிறம் திகழ் பாசிழை, நலம் பெறு திரு மணி, தீம் சேற்று யாணர், மா சிதறு இருக்கை, வென்று ஆடு துணங்கை, பிறழ நோக்கு இயவர், நிறம் படு குருதி, புண்ணுடை எறுழ்த்தோள்

உரை

கொல்லிமலையை ஆட்சி செய்த பெருஞ்சேரல் இரும்பொறை குறித்த இந்தப் பத்துப் பாடல்களும் மலையையும் மலைசார்ந்த கொற்றவை, துர்க்கை வழிபாடு குறித்த செய்திகளையும் கொண்டுள்ளன. துணங்கையர் ஆடும் கலை நிகழ்ச்சி குறித்த பதிவு உள்ளது. வேல்படை

மற்றும் குறுந்தாள் கொண்ட மதில் சுவர், கோட்டை போன்ற பழமை மிகு செய்திகளைப் குறிக்கும் பாடல்களோடு போர்க்களத்தில் வேள்வி செய்துள்ள பதிவும் காட்டப்படுகின்றன. கொற்றவை வழிபாட்டில் இருந்து உயர்ந்தோர் சுட்டும் அல்லது சான்றோர் காட்டும் வேள்வி முறைமையும் வேள்வி முறை சார்ந்த வாழ்க்கையையும் ஒரு சேரக் கவனிக்கும் போது பழைய வழிபாட்டு முறையும் புதிய வழிபாட்டு முறையும் ஒருங்கே காணமுடிகிறது. எனவே தொகுக்கப்பட்ட பத்துப் பாடல்களும் காலத்தால் வேறுபட்டவை எனக் கருத்துக்கொள்ள முடிகிறது.

பெருங்குன்றூர் கிழார்

இயற்றிய

ஒன்பதாம் பத்து

பாடல் - 81

மல்லர்க்குப் பங்கு அளித்த மன்னரின் பொன் சிறப்பு

உலகம் புரக்கும் உரு கெழு சிறப்பின்
வண்ணக் கருவிய வளம் கெழு கமஞ் சூல்
அகல் அரு விசும்பின் அதிர் சினம் சிறந்து
கடுஞ் சிலைகழறி விசும்பு அடையூ நிவந்து
காலை இசைக்கும் பொழுதொடு புலம்பு கொளக்
களிறு பாய்ந்து இயலக் கடு மா தாங்க
ஒளிறு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப
அரசு புறத்து இறுப்பினும் அதிர் விலர் திரிந்து
வாயில் கொள்ளா மைந்தினர் வயவர்
மா இருங் கங்குலும் விழுத் தொடி சுடர் வரத்
தோள் பிணி மீகையர் புகல் சிறந்து நாளும்
முடிதல் வேட்கையர் நெடிய மொழியூஉக்
கெடாஅ நல் இசைத் தம் குடி நிறுமார்
அடாஅ ஏணி வியல் அறைக் கொட்ப
நாடு அடிப் படுத்தலின் கொள்ளை மாற்றி

அழல் வினை அமைந்த நிழல் விடு கட்டி
கட்டளை வலிப்ப நின் தானை உதவி
வேறு புலத்து இறுத்த வெல்போர் அண்ணல்
முழவின் அமைந்த பெரும் பழம் மிசைந்து
சாறு அயர்ந் தன்ன கார் அணி யாணர்த்
தூம்பு அகம் பழுனிய தீம் பிழி மாந்திக்
காந்தள் அம் கண்ணிச் செழுங் குடிச் செல்வர்
கலி மகிழ் மேவலர் இரவலர்க்கு ஈயும்
சுரும்பு ஆர் சோலைப் பெரும் பெயற் கொல்லிப்
பெரு வாய் மலரொடு பசும் பிடி மகிழ்ந்து
மின் உமிழ்ந் தன் சுடர் இழை ஆயத்து
தன் நிறம் கரந்த வண்டு படுகதுப்பின்
ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் அணி கொள
கொடுங் குழைக்கு அமர்த்த நோக்கின் நயவரப்
பெருந் தகைக்கு அமர்ந்த மென் சொல் திருமுகத்து
மாண் இழை அரிவை காணிய ஒரு நாள்
பூண்க மாள நின் புரவி நெடுந் தேர்
முனை கைவிட்டு முன்னிலைச் செல்லாது
தூ எதிர்த்து பெறாஅத் தா இல்மள்ளரொடு
தொல் மருங்கு அறுத்தல் அஞ்சி அரண் கொண்டு
துஞ்சா வேந்தரும் துஞ்சுக
விருந்தும் ஆக நின் பெருந் தோட்கே

துறை	-	*முல்லை*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*நிழல் விடு கட்டி*

உரை

வானத்தில் இடியால் பலத்த ஓசைகள் கேட்கும். உருவாகும் மின்னல் ஒளிக்கீற்றைக் கண்டு மலைகளிலும் நிலங்களிலும் வாழும் உயிரினங்கள் இயற்கையின் சீற்றம் என அதிர்ந்து வருத்தம் கொள்ளும் கார் காலமாக உள்ளது.

வண்ணக் கருவிய வளம் கெழு கமஞ் சூல்
அகல் அரு விசும்பின் அதிர் சினம் சிறந்து
கடுஞ் சிலைகழறி விசும்பு அடையூ நிவந்து

என்பன போன்ற புலமை ததும்பும் இயற்கை வருணிப்புகள். புலவனின் பாடல் தொடக்கத்தில் உலகம் புரக்கும் உரு கெழு சிறப்பு எனுமாறு அமைந்துள்ள பாடல் அடிகள் சிறக்கத் தக்கன. எதிரிகளோடு இடும் போர்க் காட்சிகள் புலவனின் அடுத்த நிலை விவரிப்பாக அமைகின்றன. பகை அரசர்கள் கொண்டுள்ள யானைகள் படைக்களத்தில் ஊடுருவுகின்றன. குதிரைப்படை வீரர்கள் ஊடுருவி யானைப் படையினரைத் தடுத்து நிறுத்த முற்படுகின்றனர். கொடிகள் கொண்டு அசைந்து ஓடுகின்ற தேர்களின் கால்கள் பொருதும் பொருட்டுச் சுழன்றோடுகின்றன. பகை வீரர்களுக்குத் துணையாக வந்த அரசர்கள் பாசறைகளில் தங்கினர். ஆயினும் ஓய்வின்றி நெஞ்சில் உறுதி கொண்டு நின் வீரர்கள் வன்மை உடையோராகித் துணிந்து போரிடுகின்றனர். இருள் கவ்வுகிறது. போர் தற்காலிகமாக ஓய்கிறது. பொழுது விடியும் வரை போர் வீரர்கள் ஆங்காங்குத் தங்கி ஓய்வு எடுத்து வருகின்றனர்.

கரிய இரவில் வீரர்கள் தம் வீர வாள்களை ஒளிவிடும்படி கையிலே பிடித்த நிலையில் இடத்தோள் மீது வலக் கையையும் வலத்தோள் மீது இடக்கையையும் உடையோராகித் தோள்களை ஒருங்கே பிணைத்துக் கொண்டு போரில் விருப்பம் மிகுந்து இருப்பினும், பல நாள்கள் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கும் போர் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் எனும் விருப்பத்தை மன்னனிடம் தெரிவிக்கின்றனர்.

முடிவில் பகைவரது நாட்டை நீ அடிமைப்படுத்தினாய். பகைவரிடம் இருந்து கொள்ளையடித்த பொன் மணி அணிகளை அழலில் இட்டு உருக்கி மாசுகள் நீக்கி ஒளிவிடும் தூய பொன்னாக ஆக்கினாய். அப்பொற்கட்டிகளுள் நின் வீரர்கள் இன்னவர் இன்னதனைப் பெற்றுக் கொள்ள அறிவுடையாரின் துணை கொண்டு பகிர்ந்து அளித்தாய். இது போல் வேற்று நாட்டிடத்தே சென்று அங்குப் போர்ப் பாசறை அமைத்துப் போரைச் சிறப்புற அமைத்து வெற்றி கொண்ட தலைவன் நீ. இது போல் பல நாட்டுடன் பல போர்கள் செய்த அனுபவம் மிக்கவன் நீ. பழுத்துள்ள பலாப் பழச் சுளைகளைக் கள்ளுடன் மூங்கில்

குழாயில் இட்டுப் பல நாள்கள் நிலத்தலே புதைத்து வைத்து இன்பம் தரத்தக்கவாறு அருந்துவர். வண்டுகள் ஒலிக்கின்ற சோலையை உடைய கொல்லி மலையை மேகம் தொட்டுச் செல்ல மழை பொழியும். மின்னலை உமிழ்ந்தாற் போலத் தலைவியைச் சார்ந்த தோழியர் ஒளிவிடுகின்ற அணிகளை அணிந்து காட்சி அளிப்பர். வளைந்த காதணி இனிமை தரும் பார்வை பெறும். இன்பத்தைக் காட்டும் இனிய சொற்கள், வண்டுகள் ஒலிக்கும் கூந்தல், குப்பி அணிந்த நெற்றி, அழகிய முகம் அனைத்தும் ஒருங்கிணைந்த தேவியைக் காண்பதற்காகப் போர்ப் பாசறையில் நின்று ஒருநாள் இரவைக் கைக் கொண்டு தேவியை மனம் கொண்டு வீரர்கள் துஞ்சும் இரவினைத் தேவியோடு துஞ்சா இரவாகக் கொள்ள வேண்டி நின் குதிரைகள் விரைந்தன. வீரர்தம் தோள்களுக்குப் போர்கள் இரவு ஓய்வளிக்கவும் நின் பெருந் தோள்கள் தேவியோடு ஓய்வளிக்காமையும் ஆக்கிக் கொண்டவன் நீ. துஞ்சாவேந்தர்க்குத் துஞ்சாக நின் பெரும் வேட்கை எனும் புலவனின் பாடல் இனிக்கத் தக்கது.

பெருங்குன்றூர் கிழாரின் இந்தப் பாடல் காந்தள் மலரைச் சுட்டியும் கொல்லி மலை அழகைக் காட்டியும் காமச் சிறப்பினை நயம்பட உரைத்தும் போர் வீரர்களின் உள்ளக் கிடக்கையை உய்த்துணரத் தந்தும் பெருந்தகைக்கு அமைந்த மென்சொல் திருமுகம் ஆன நயம் பட அணிசெய்து பண்புடன் சுடர் இழை கரந்த வண்டு உண்ணுதல் அணியும் எனுமாறு தலைவியை மாண் இழை அரிவை என மதிப்புடன் காட்டுவதன் வழியே தமிழ் வழி வந்த அறிவு சார் புலவனாக இவனை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இன்னார்க்கு இன்ன அளவு பொற்கட்டிகள் எனப் பகிர்ந்து அளிக்கும் பணியை அறிவு சான்றவர் செய்தளித்தனர் எனக் கூறும் இடத்துப் பொற்கட்டிகளுக்கு உரியார் அரசன் மற்றும் படைவீரர்களாக இருக்கின்ற போதிலும் அறிவு சான்றோர் பகிர்ந்து அளிக்கும் பணிக்கு உரியாராக அமைவதன் வழியே **உடல் உழைப்பு, மூளை உழைப்பு என்ற இரு வகைத்தான உழைப்புகளில் மூளை உழைப்பு கொண்டோருக்குத் தந்துள்ள சமூக மதிப்பு நிலை கூடுதலாக இருந்துள்ளது என அறிய முடிகிறது.**

பாடல் - 82

கொளக் கொளக் குறையா நல் இசைப்பாட்டு

பகை பெருமையின் தெய்வம் செப்ப
ஆர் இறை அஞ்சா வெருவெரு கட்டூர்ப்
பல் கொடி நுடங்கும்முன்பின் செறுநர்
செல் சமம் தொலைத்த வினை நவில் யானை
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
வண்டு படு சென்னிய பிடி புணர்ந்து இயல
மறவர் மறல மாப் படை உறுப்பத்
தேர் கொடி நுடங்கக் தோல் புடை ஆர்ப்பத்
காடுகை காய்த்திய நீடு நாள் இருக்கை
இன்ன வைகல் பல் நாள் ஆக
பாடிக் காண்கு வந்திசின் பெரும
பாடுநர் கொளக் கொளக் குறையாச் செல்வத்துச் செற்றோர்
கொலக் கொலக் குறையாத் தானைச் சான்றோர்
வண்மையும் செம்மையும் சால்பும் மறனும்
புகன்று புகழ்ந்து அசையா நல்இசை
நிலம் திரு திருவின் நெடியோய் நின்னே.

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கும்
பெயர் - வினை நவில் யானை

உரை

"மறவர் மறல மாப் படை உறுப்ப" என்னும் தொடர்கள் *இப்பாடலைப் பாடியுள்ள பாணன் வாய்மொழி மரபுப் பாணன் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஒரு சொல் மீண்டும் வருதல், சந்தத்தன்மை கொண்டு தொடராய்ச் சொற்கள் அமைதல் என்பவை வாய்மொழி மரபிசைப் பாடல் கூறுகளின் அடையாளங்களாகும். இதன் வழி இப்பாடலைப் பாடியோன் வாய்மொழி மரபிசைப் பாடகன் என்று உறுதி கொள்ள முடிகிறது .*

"பாடிக் காண்கு வந்திசின் பெரும" என்று பாடிப் பரிசில் பெற *வந்துள்ள இப்பாடகன் பாணன் மரபினன் என்றும் வாய்மொழி மரபிசைப் பாடகன் என்றும் அறியமுடிகிறது. பிற நாட்டோடு போர் தொடுக்கும் உத்தி முறைகளுள் ஒன்று, பிற நாட்டு அரசனின் எல்லை ஓரத்தே பாடி அமைத்துப் படைக்களத்தை நிறுத்தி எதிரி நாட்டு அரசனை அச்சங்கொள்ள வைத்து அடிபணியச் செய்வதாகும். இந்தப் போர் உத்தி முறையைச் சேர அரசர்கள் பலரும் கையாண்டுள்ளனர் என்பதைப் பதிற்றுப்பத்தின் பல பாடல்கள்வழி அறியலாம். அத்தகைய உத்தி முறையைக் கடைப் பிடித்துள்ளவனாகவே பாசறையில் வீற்றிருக்கும் இச்சேர அரசனும் ஆகிறான் .*

பாசறை பற்றிய விளக்கமும் மன்னன் கொண்டுள்ள செல்வம் பற்றிய விளக்கமும் கொண்ட பாடலாக இது அமைகிறது.வன்மை கொண்டவன், கொடை உள்ளம் கொண்டவன், நடுநிலைக் குணம் கொண்டவன், புகழுக்கு உரியவன், சான்றோன் என்று புகழுதலுக்கு உரியவன், பெருமகன், பகை வெல்லக் கூடியவன், திருவின் நெடியோய் எனும் அழகிய சிறப்புக்கு உரியவன் என்றெல்லாம் மன்னவனின் பாசறையின்கண் சென்று பாணன் புகழ்ந்துரைக்கும் இப்பாடலில் பாசறையில் பலகுடிகள் உள்ளன என்றும் ஏலவே போர் செய்து பழக்கப்பட்ட யானைகள் மதம் பிடித்து நிற்கின்றன என்றும் மதம் பிடித்த யானைக்குப் பெண் யானையைக் காட்டிப் புணரச் செய்து பாகன் யானையின் சினத்தைத் தணிக்கிறான் என்றும் படை வீரர்கள் பாசறையில் அஞ்சாது, கண் துஞ்சாது எந்த நேரத்திலும் எதிரி தாக்கலாம் என்னும் எதிர்பார்ப்பினை எண்ணங்களில் ஏந்தியவர்களாகவே

வாழ்கின்றனர் என்றும் இப்பாடல் வழி அறிய முடிகிறது. பாசறைக் காட்சி விளக்கமும் மன்னன் சிறப்பும் கூறும் செய்திகளைக் கொண்டதும் ஆக இப்பாடல் அமைகிறது.

தொடர்கள் ஒத்திசைவு மீள இடம் பெறல் இசைத்தன்மை வாய்ந்த சொற்கள் ஊடோடி அமைந்துள்ள சிறப்பினைத் தவிர இப்பாடல் பிற பாடல்களைப் போலப் பல்வேறு செய்திகள் இன்றி அமைந்துள்ளது.

பாடல் - 83

பெரிதும் இனிதுமான போர்ச் செலவு

கார் மழை முன்பின் கை பரிந்து எழுதரும்
வான்பறைக் குருகின் நெடு வரி பொற்பக்
கொல் களிறு மிடைந்த பல்தோல் தொழுதியொடு
நெடுந் தேர் நுடங்கு கொடி அவிர்வரப் பொலிந்து
செலவு பெரிது இனிது நிற் காணுமோர்க்கே
இன்னாது அம்ம அது தானே பல் மா
நாடு கெட எருக்கி நன் கலம் தரூஉம் நின்
போர் அருங் கடுஞ் சினம் எதிர்ந்து
மாறு கொள் வேந்தர் பாசறையோர்க்கே

துறை - தும்பை அரவம்
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கும்
பெயர் - பல்தோல் தொழுதி

உரை

யானைப் படை தேர்ப் படை காலாட் படை எனப் பலவிதமான படைகள் வகை வகையாக நிறுத்தியபடி போர்க்களத்தில் மன்னன் வீற்றிருக்கிறான். படைகள் அணிவகுத்துச் செல்லும் காட்சியைப் பார்ப்பவர்களுக்கு இனிதாக அமையும் எனப் பாடிய பாட்டினில் உள்ள காட்சி நன்கு விளக்கப்படுகிறது.

போர்ப் படை அணிவகுத்துச் செல்லும் காட்சியைக் காணும் எதிரி நாட்டு மன்னன் கண்ட மாத்திரத்திலேயே அடிபணிந்து மன்னன் ஆணைக்கு உட்பட்டுத் திறை செலுத்தக் கூடிய ஓர் அடிமை அரசனாக மாறி விடுவான். படைச் சிறப்புப் பற்றி இப்பாடல் விளக்குகிறது. பகைவர் நாடுகள் அழியும்படி சிதைத்து நல்ல ஆபரணங்களைக் கொண்டு வருவாய் என்று பாடலில் குறிப்பிடுவதன் வழியே தன்னைச் சுற்றி இருக்கக் கூடிய நாடுகளில் கார்காலமாயினும் கூட எக்காலத்திலும் எவரும் அமைதியான வாழ்க்கையை வாழ இத்தகைய வேந்தர்கள் மனம் பொறுப்பதில்லை என அறிய முடிகிறது. படைச்சிறப்பு என்றும் படைப்பெருமைச் சிறப்பு என்றும் மன்னவன் கொடைச் சிறப்பு என்றும், வென்றிச் சிறப்போடு பிற சிறப்புகளும் பாடலில் கூறப்படுகின்றன. மன்னன் பிற நாடுகளைக் கொள்ளையடித்தல் பிறநாடுகளைத் தனக்குத் திறை செலுத்தக் கூடியவாறு தன் ஆட்சிக்கு உட்படுத்தி அடிமையாக்கிய செய்திகளும் அறிய முடிகிறது.

பாடல் - 84

பூழியர் கோவின் தண்ணுமை ஆர்ப்பரிப்பு

எடுத்தேறு ஏய கடிப்பு டை அதிரும்
போர்ப்பு உறு முரசம் கண் அதிர்ந்தாங்கு
கார் மழை முழக்கினும் வெளில் பிணி நீவி
நுதல் அணந்து எழுதரும் தொழில் நவில் யானைப்
பார்வல் பாசறைத் தரூஉம் பல்வேல்
பூழியர் கோவே பெலந் தேர்ப் பொறைய
மன்பதை சவட்டும் கூற்ற முன்ப
கொடி நுடங்கு ஆர் எயில் எண்ணு வரம்பு அறியா
பல் மா பரந்த புலம் ஒன்று என்று எண்ணாது
வலியை ஆதல் நற்கு அறிந்தனர் ஆயினும்
வார் முகில் முழக்கின் மழ களிறு மிகீஇத் தன்
கால் முளை மூங்கில் கவர் கிளை போல்
உய்தல் யாவது -நின் உடற்றியோரே
வணங்கல் அறியார் உடன்று எழுந்து உரைஇப்
போர்ப்புறு தண்ணுமை ஆர்ப்பு எழுந்து நுவல
நோய்த் தொழில் மலைந்த வேல் ஈண்டு அழுவத்து
முனை புகல் வின் மாறா மைந்தரொடு
உரும் எறி வரையின் களிறு நிலம் சேர
காஞ்சி சான்ற செருப் பல செய்து நின்

குவவுக் குரை இருக்கை இனிது கண்டிகுமே
காலை மாரி பெய்து தொழில் ஆற்றி
விண்டு முன்னிய புயல் நெடுங் காலை
கல் சேர்பு மா மழை தலைஇ
பல் குரல் புள்ளின் ஒலி எழுந்தாங்கே.

துறை - வாகை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - தொழில் நவில் யானை

உரை

போரையும் வெற்றியையும் மட்டுமே பாடு பொருள்களாகக் கொண்டு அமைந்துள்ளது இப்பாடல். வைதீகம் குறித்தோ அறச்சிந்தனை குறித்தோ இல்லறம் குறித்தோ பதிற்றுப்பத்தின் பல்வேறு பாடல்கள் பல்வேறு செய்திகளைப் பதிவு செய்தமை போன்று இந்தப் பாடல் பதிவு செய்யவில்லை. மேற்குறிப்பிட்ட எந்த அடையாளங் களையும் கொண்டிராத இந்தப் பாடல் மன்னனை இயற்கையோடு பொருத்தி விதந்தோதக் கூடிய பாடலாக அமைகிறது. பிற பாடல்களில் உள்ள தன்மைகளைப் போல் இதில் உள்ள தன்மையும் போரில் வெற்றி பெற்றமை என்ற செய்தியைச் சொல்வதே. இது பதிற்றுப்பத்துப் பாடலில் காணும் பொதுப் பண்பாக விளங்குகிறது.

மேற்குறிப்பிட்ட எந்த அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டிராத இந்தப் பாடலில் பூழியர் கோ எனும் பொறையனின் போர்த்திறம் குறித்த அடையாளத்தை முன்நிறுத்துவது மட்டுமே புலவனின் நோக்கமாக அமைகிறது.

குறுந்தடி கொண்டு தோலிசைக் கருவியான தண்ணுமையை முழக்குவது கார்மேகம் மழைதரும் முன்பாக இடிக்கும் இடியோசையை ஒத்ததாக விளங்குகிறது. தண்ணுமை கொண்டு குறிப்பிட்ட தாளத்தில் தோலிசைக் கருவி முழக்கப்படும் போது போருக்கான புறப்பாடு என்ற குறியீடாக விளங்குகிறது. போருக்குப் புறப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேற்படைகளை முதன்மையாகக் கொண்டு தேரில் புறப்படும் பூழி நாட்டுத் தலைவன் நீ.

வாழ்க்கையைப் பற்றிப் பதிவு செய்துள்ள இந்தப் பாடலின் தலைவன் கொடி அசைந்தாடும் எயில் எனும் கோட்டை கொண்டவனாக விளங்குகிறான். மழைக் காலத்தில் உழவுத் தொழில் செய்வோர் ஆரவாரத்தை எழுப்புவர். அதனால் பல்வேறு பறவை இனங்கள் ஆர்ப்பரித்துப் பறந்து ஓடும். நோய்த் தொழில் எனக் குறிப்பிடப்படும் போர்த்தொழில் செய்யும் போர்க்களத்தில் இது போன்ற ஆர்ப்பரிப்புகள் எழுகின்றன என ஒப்புமை சொல்லப்படுகின்றது. போர்த் தொழில் குறித்தும், உழவுத் தொழில் குறித்தும் மழை பொழிவது குறித்தும் களிறுகள் மற்றும் புள்ளினங்கள் குறித்தும் விளக்கப்படும் இந்தப் பாடலில் நாம் ஏலவே குறிப்பிட்ட அறம், கல்வி, வேள்வி, அந்தணர், வானவியல் சிந்தனை, வைதீக் கொள்கை, சமணமதச் சிந்தனை போன்றவை குறித்து எப்பதிவும் இல்லை. இப்பாடலைப் பாடிய புலவன் பாணன் வழிவந்த எழுத்தறிவு பெற்ற புலவனாக இருக்க வேண்டும் என அறிய முடிகிறது. பதிற்றுப்பத்தில் காணலாகும் அனைத்துப் பாடல்களும் பாடாண்திணை குறித்தவையாக அமைகின்றன.

இந்தப்பாடல் வண்ணமும் தூக்கும் அதாவது சந்தமும் தாளமும் ஓர் இயல்புத் தன்மை கொண்டதாக அமைகிறது. இப்பாடல் மன்னன் முன் பாடப்பட்டதாக அறிகிறோம். வண்ணம் குறித்தும் தூக்குக் குறித்தும் அனைத்துப் பாடல்களிலும் பாடல்களோடு இணைத்துப் பதிவு செய்வதன் வழியே உற்று நோக்கும் போது புலவனின் இசைப் பாடல் பாடப்பெற்றுள்ளது என்றும் பாடலுக்கு ஏற்பப் பாணர் மற்றும் அவர்தம் கிளையினர் ஆட்டம் நிகழ்த்தியுள்ளனர் என்றும் அவதானிக்க முடிகிறது. பல பாடல்களில் வண்ணம் எனும் சந்தங்கள் மாறுபடுகின்றன. அதுபோலத் தூக்கு எனும் தாளமும் மாறுபடுகின்றது.

பதிற்றுப்பத்தின் பாடல்களில் வண்ணமும் தூக்கும் குறித்த சிந்தனையோடு நாம் எண்ணிப் பார்ப்போமெனில் பதிற்றுப்பத்துப் பாடல்கள் அனைத்தும் நிகழ்த்து கலை வடிவமாக ஆடப்பட்டதன் வழியே நமக்கு எழுத்துருக்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளன என உணர முடிகிறது.

பாடல் - 85

நல்லிசைக் கபிலன் பெற்ற நற்பெயர்

நல் மரம் துவன்றிய நாடு பல தரீஇப்
பொன் அவிர் புனைசெயல் இலங்கும் பெரும் பூண்
ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள் வேல் முத்தைத் தமென
முன் திணை முதல்வர் போல நின்று
தீம் சுனை நிலைஇய திரு மா மருங்கின்
கோடு பல விரிந்த நாடு காண் நெடு வரை
சூடா நறவின் நாள் மகிழ் இருக்கை
அரசவை பணிய அறம் புரிந்து வயங்கிய
மறம் புரி கொள்கை வயங்கு செந் நாவின்
உவலை கூராக் கவலை இல் நெஞ்சின்
நனவில் பாடிய நல் இசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே.

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*நாடு காண் நெடு வரை*

உரை

சேர நாடு சோழ நாடு எனும் பாகுபாடுகள் பேரரசுகளின் கீழ்ச் சரிவரக் கருத்துக் கொள்ளாத நிலையில் நிலவளப் பகுதிகளைக் கொண்டவர்கள் சோழ நாட்டவர் என்றும் மலைப்பகுதிகளைக் கொண்டவர்கள் சேர நாட்டுக் குறுநில மன்னர்கள் என்றும் கருத்தியல் கொண்டிருந்த காலச் சூழலை இப்பாடல் காட்டி நிற்கிறது.

சோழப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட சிலபகுதிகள் இலங்கை.சுபத்திரா என நீண்டிருந்த வரலாறு நமக்குப் பதிவில் உண்டு. சோழத் தலைவனான சென்னியர் பெருமான் என்பவன் தன் படை சூழ வெள்ளிய வேலைக் கீழே போட்டு விட்டு ஓடி விட்டான் என்னும் செய்தியால் மகிழ்ந்த இளஞ்சேரல் இரும்பொறை அமைதி கொள்கிறான்.

சேர மன்னனும் சோழ மன்னனும் பேரரசுகள் உருக் கொள்வதற்கு முன்பதாக உருக் கொண்டவர்கள் என அறியப் படுகிறார்கள். மறவு எனும் ஊரில் பாசறை அமைத்துத் தங்கியுள்ளான் மன்னன். விடியற் காலைப் பொழுதில் தன் குடையின் கீழ் ஆட்சி செய்து கொண்டிருக்கக் கூடிய அதாவது இளஞ்சேரல் இரும்பொறையின் பகையைத் தாங்கிக் கொள்ளாது விதிக்கப்பட்ட திறையை முறையே செலுத்தக் கூடிய பல்வேறு நாட்டு அரசர்களும் பணிந்து நிற்க, திருவோலக்கம் அமைந்துள்ளது. இளஞ்சேரல் இரும்பொறை பல்வேறு அரசர்களாலும் போற்றப்படுகிறான்.

முத்தைத் தம் என
முன் திணை முதல்வர் போல நின்று

என அறம் கலந்த கொள்கையை உடையவன் அறத்தையே விரும்பிச் செய்பவன் எனுமாறு பல மொழிகளால் பலரும் வாழ்த்துகின்றனர். பல மன்னர்கள் இளஞ்சேரலிரும்பொறையை வாழ்த்துவதும் ஆன திருவோலக்கக் காட்சியைப் பாடலில் வடித்துப் பாடுபவர் பெருங்குன்றூர் கிழார் ஆவார்.இத்திருவோலக்கக் காட்சியைப் புகழ்ந்தும் பாராட்டியும் பாடியமைக்காக நறவு எனும் ஊரிலே உள்ள நன்றா என்னும் மலையின் உச்சியில் நின்று பார்க்கும் இடம் எல்லாம் பரிசாகப் பாவலன் கபிலனுக்கு ஈந்துள்ளான் சேரன்.இப்பாடல் தரும் செய்தி வழியே கபிலன்

எனும் புலவன் பாடிய பாட்டு திருவோலக்கக் காட்சியைச் சேரன் மன நிறைவளிக்கும் விதத்தில் படம் பிடித்துக் காட்டி மகிழ்ச்சிப் படுத்தியதனால் கிடைக்கப்பெற்ற பரிசாக அறியலாம்.

மலையில் இருந்து பார்வைக்குட்பட்ட பகுதிகள் யாவும் பாடிய புலவனுக்குச் சொந்தம் எனப் பரிசில் கொடுத்தால் பாவலனும் கூட ஒரு நாட்டுக்கு மன்னன் எனும் நிலையைப் பெற்று விடுவான்.ஏனைய அரசர்கள் யாவரும் திறை செலுத்தி ஆண்டு கொண்டிருக்கப் பாட்டுக் கலைஞரான கபிலர் மட்டும் திறை செலுத்தாத வாய்ப்புப் பெற்றவராக விளங்குகிறார். ஆகவே புரவலர் புலவனுக்குக் கொடுத்ததாகப் பதிவு செய்துள்ள இப்பாடலைப் பாடிய பெருங்குன்றூர் கிழாரின் கவிதைப் புனைவுகளில் இதுவும் ஒன்று என நாம் உணர முடிகிறது. அரசனின் கொடைவள்ளல் தன்மையினைச் சிறப்பிக்கும் முறைமைகளில் இதுவும் ஒன்று என நாம் எண்ணிப் பார்க்கவும் முடியும் .

அரசவை பணியஅறம் மறம்புரி கொள்கை

போரிட்டு நாட்டை வயப்படுத்துவது என்பது அக்கால வேந்தர்களின் அறங்களில் ஒன்றாக விளங்குகின்றது. அடிபணிந்த அரசர்களைத் திறை செலுத்தச் செய்து அவர்களை மீண்டும் அவர்தம் நாட்டையும் நாட்டு மக்களையும் திறை செலுத்தி வாழ்வதற்கு வழிவகை செய்தளிக்கும் முறைமை என்பது அக்காலச் சமூக அமைப்பில் இயங்கிய அறங்களுள் ஒன்றாகக் காணமுடிகிறது. சேரனின் முன்னோருடைய முந்தின முதல்வர் வழியே ஆட்சி செலுத்துபவன் என்னும் பாடல் பதிவு அறியும் போது அக்கால வேந்தர் சமூக அமைப்பில் நாடுகளைப் பிடிப்பதும் நாடுகளை அவர்களிடமே மீள அளித்துத் திறை செலுத்தும் முறையில் ஆட்சி அமர்த்துவதும் ஒரு வித மரபின் நீட்சி என்றே மனம் கொள்ள முடிகிறது.

பாடல் - 86

பொறையன் கண்ட பாடுநர் பாட்டும் ஆட்டமும்

உறல் உறு குருதிச் செருக்களம் புலவக்
கொன்று அமர்க் கடந்த வெம்திறல் தடக்கை
வென்வேல் பொறையன் என்றலின் வெருவர
வெப்புடை ஆடுஉச் செத்தனென்மன் யான்
நல் இசை நிலைஇய நனந் தலை உலகத்து
இல்லோர் புன்கண் தீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
பாடுநர் புரவலன் ஆடு நடை அண்ணல்
கழை நிலை பெறாஅக் குட்டத்து ஆயினும்
புனல் பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன் செய்பூங் குழை மீமிசைத் தோன்றும்
சாந்து வரு வானி நீரினும்
தீம்தண் சாயலன் மன்ற தானே.

துறை	-	*செந்துறைப் பாடாண் பாட்டு*
வண்ணம்	-	*ஒழுகு வண்ணம்*
தூக்கு	-	*செந்தூக்கு*
பெயர்	-	*வெம்திறல் தடக்கை*

உரை

பொறையன் என்பான் சேர வமிசத்தில் உதித்த ஒருவன் ஆவான். போர்க்களங்களில் பகைவர்களுடைய உடல்களை வெட்டி வீழ்த்துவதனால் ஏற்படக் கூடிய குருதி வாடையோடு எப்போதும் சினத்துடனும் போர் வெறியுடனும் அஞ்சத்தக்க கொடுமையுடனும் விளங்குகின்ற ஆண்மகன் என்று எண்ணிப் பயந்து இருந்த உணர்வினைத் தவறு என மாற்றி உணரத்தக்க வகையில் பாணனின் பாட்டுக்கும் விறலியரின் ஆட்டத்துக்கும் மகிழ்ந்து அவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் வாரிவழங்கும் ஈகைத் தன்மை கொண்டவனாக நான் அறிந்து கொண்டேன் எனப் புலவன் பாட்டுடைத் தலைவனான பொறையனின் இருவேறு குணங்களையும் அதாவது கொடுஞ்சினத்தைப் பகைவனுக்குத் தரத் தக்கவனாகவும் மகிழ்ந்து மனம் இரங்கி ஈகை செய்யும் நற்குணத்திற்குச் சொந்தக்காரனாகவும் காட்டப்படுகிறான்.

"உரல் உறு குருதிச் செருக்களம்" என வருணிக்கும் புலவன் கொடுங்குணத்தைக் காட்ட வேண்டி உரல் உறு குருதி செருக்களம் கொன்று வெந்திறல் தடக்கை என்பன போன்ற கடுஞ்சொற்களைப் பயன்படுத்திக் கேட்போரும் உணர்வினைக் கொள்ளத் தக்க வகையில் புனைந்துரைத்துள்ளமை கவிதை நயம் கொள்ளத் தக்கது.

இல்லோர் புன்கண் தீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின் தீந்தண்
.... தீந்தண் சாயலன் மன்ற தானே

எனும் படியான சொற்களோடு பாடுநர் ஆடு நடை அண்ணல் புரவலன் என்பன போன்ற மகிழ்வுக்கு உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து இனியவன் புரவலன் என எதிர் எதிர்க் குணங்களை நம் முன் காட்ட வேண்டிப் பொறையன் எனும் சேரனைப் புகழ்ந்துரைத்துள்ள விதம் அறிய முடிகிறது.

போர்க்களத்தில் குருதி குறித்துப் பேசும் போது அமைதி மற்றும் மகிழ்வு தரத் தக்க பாடும் கலைஞர்களையும் ஆட்டக் கலைஞர்களையும் மகளிர்களையும் குறித்துப் பேசுவது என்பது இதுபேன்ற பல பாடல்களில் இணைத்துச் சொல்லப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இறந்துபட்ட

அல்லது குருதி சிந்திய உடல்பகுதிகளையும் பிணமான உடல்களையும் போர்க்களப் பகுதியில் இருந்து அகற்றக் கூடிய பணிகளையும் மருத்துவச் சேவை செய்யக் கூடிய செயற்பாடுகளையும் பாணர்களும் துணங்கையர்களும் அவர்சார்ந்த உறவினர்களும் செய்துள்ளனர் என எண்ணத் தோன்றுகிறது. போர்க்களங்களில் பாணர் மற்றும் அவர்தம் உறவினர்கள் பிணங்களுக்கான ஒருவிதச் சடங்கு செய்யக் கூடியவர்களாகவும் விளங்கியதனால் பாணர்களையும் அவர்தம் உறவினர்களையும் போர்க்களப் பகுதிகளில் இணைத்தே புலவர்கள் பதிவு செய்திருக்கின்றனர் என உறுதி கொள்ள முடிகிறது.

பாடல் - 87

நலம் பெறுகுவை பாடினி

சென்மோ பாடினி நலம் பெறுகுவை
சந்தம் பூழிலொடு பொங்கு நுரை சுமந்து
தெண் கடல் முன்னிய வெண்தலைச் செம்புனல்
ஒய்யும் நீர்வழிக் கரும்பினும்
பல் வேல் பொறையன் வல்லனால் அளியே

துறை - விறலியாற்றுப்படை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வெண்தலைச் செம்புனல்

உரை

பாடி நடனம் ஆடும் விறலியே ஆற்றைக் கடக்கும் தெப்பம் எவ்வாறு துணையாக மக்களுக்கு அரும் பணியைச் செய்கிறதோ கருணையோடு தொண்டாற்றும் பணியைச் செய்கிறதோ அத்தன்மை போன்று பணி செய்பவன் சேர மன்னன். அவனிடம் சென்று அவன் புகழ் பாடி ஆடி அவனை இன்புறுத்துவாயானால் சிறந்த பரிசில்களை அணிகலன்களைப் பெறலாம் என விறலியை ஆற்றுப்படுத்துவதாகப் புலவரின் கூற்று அமைகிறது. கடலை நோக்கிச் செல்கின்ற ஆறுகள் பல அக்காலத்தில் வழி எங்கும் குறுக்கிட்டு இருந்தன.

ஆற்றைக் கடப்பதென்பது அன்றைக்கு இருந்த பெரும் பிரச்சினைகளில் ஒன்று. ஓர் இடத்திற்கும் மற்றோர் இடத்திற்குமான

பாதையின் குறுக்கே பல ஆறுகள் ஓடித் தனித்த நிலப்பரப்புகளாக ஆக்கி இருந்த சூழல் உடைய காலம் அது. ஆற்றைக் கடக்க உதவும் இந்தப்படகைக் கூறுவதன் வழியே பல்வேறு நிலப்பகுதிகளுக்கும் ஊடாட்டமாக விளங்கும் பாடினியின் பணி என்பது மன்னரின் பெருமைகளை மக்களிடம் எடுத்துக் கூறி மன்னரிடம் பரிசில் பெறுவதாகும். மன்னரின் ஆளுமைக்கு உட்பட்ட பல இடங்களுக்கும் பயணித்து மன்னரின் சிறப்புகளை மக்களிடம் எடுத்துக் கூறும் பெரும் பணியைக் கலைஞர்கள் செய்கிறார்கள் என்பது இங்கு உணரத் தக்கதாகும்.

பாடினி போன்ற கலைஞரின் பங்களிப்பு என்பது மக்களின் கலாச்சாரத் தளத்தைத் தரப்படுத்துவதும் அதன் வழியே மன்னர்களின் ஆட்சியை மக்கள் நேசிக்கச் செய்வதும் மக்களின் மாண்பினை மன்னருக்கு எடுத்துரைப்பதுமான ஊடாட்டப் பணியை உறவின் மேன்மையைச் செயல்படுத்துவதாக அமைவதால் பாடினியை விளித்து மன்னர் புகழ் உரைப்பதான சூழலையும் கொண்டு இப்பாடல் விளங்குகிறது.

பாடல் - 88

சுடர் வீ வாகையும், மகளிர் பண்ணும்

வையக மலர்ந்த தொழில் முறை ஒழியாது
கடவுள் பெயரிய கானமொடு கல் உயர்ந்து
தெண் கடல் வளைஇய மலர் தலை உலகத்துத்
தம் பெயர் போகிய ஒன்னார் தேயத்
துளங்கு இருங் குட்டம் தொலைய வேல் இட்டு
அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து
பொருள் முரண் எய்திய கழுவுள் புறம் பெற்று
நாம மன்னர் துணிய
நூறி கால் வல் புரவி அண்டர் ஓட்டி
சுடர் வீ வாகை நன்னற் தேய்த்துத்
குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றோடு
உரு கெழு மரபின் அயிரை பரைஇ
வேந்தரும் வேளிரும் பின் வந்து பணிய
கொற்றம் எய்திய பெரியோர் மருக
வியல் உளை அரிமான் மறம் கெழு குருசில்
விரவுப் பணை முழங்கும் நிரை தோல் வரைப்பின்
உரவுக் களிற்று வெல் கொடி நுடங்கும் பாசறை
ஆர் எயில் அலைத்த கல் கால் கவணை
நார் அரி நறவின் கொங்கர் கோவே
உடலுநர்த் தபுத்த பொலம் தேர்க் குருசில்

வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந
நீ நீடு வாழிய பெரும நின் வயின்
துவைத்த தும்பை நனவுற்று வினவும்
மாற்று அருந் தெய்வத்துக் கூட்டம் முன்னிய
புனல் மலி பேரியாறு இழிதந்தாங்கு
வருநர் வரையாச் செழும் பல் தாரம்
கொளக் கொளக் குறையாது தலைத் தலைச் சிறப்ப
ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்
பாவை அன்ன மகளிர் நாப்பண்
புகன்ற மாண் பொறிப் பொலிந்த சாந்தமொடு
தண் கமழ் கோதை சூடி பூண் சுமந்து
திருவில் குலைஇத் திருமணி புரையும்
உரு கெழு கருவிய பெரு மழை சேர்ந்து
வேங்கை விரிந்து விசும்புறு சேட்சிமை
அருவி அரு வரை அன்ன மார்பின்
சேண் நாறு நல் இசைச் சேயிழை கணவ
மாகம் சுடர மா விசும்பு உகக்கும்
ஞாயிறு போல விளங்குதி பல் நாள்
ஈங்குக் காண்கு வந்தனென் யானே
உறு கால் எடுத்த ஓங்கு வரற் புணரி
நுண் மணல் அடைகரை உடை தரும்
தண் கடல் படப்பை நாடு கிழவோயே

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - கல் கால் கவணை

உரை

கொளக் கொளக் குறையாது தலைத் தலைச் சிறப்ப - பொருள்களை அள்ளி அள்ளி வழங்கும் ஈகை உள்ளம் படைத்தவன். வேந்தரும் வேளிரும் அடிபணிந்து வணங்கத்தக்கவன்.. எப்போதும்

முழுங்கிக் கொண்டிருக்கும் வளமான தொண்டிக் கடற்கரை நகரத்திலே பெயர் விளங்கும் பெருமகன் நீ. உனது வழித் தோன்றல்கள் பலரும் பல வீர வரலாற்றுக்கு உரியோர் ஆவர்.

கொற்றவை எனும் கடவுளின் பெயருக்கு விந்தாடவி எனும் பெயரும் பொருந்துவது ஆகும். விந்தாடவியுடைய காடும் காடு சார்ந்த மலையும் எல்லையாகக் கொண்டு அகன்ற நிலப்பகுதியில், சூழ்ந்துள்ள கடல் பகுதியை எல்லையாகக் கொண்ட பகைவர் அழிந்தொழியும்படி, வேல் படையைக் கொண்டு பகைவர் தம் காவல் மரமான கடம்பினை அடியோடு வெட்டி வீழ்த்தி வெற்றியின் அடையாளமாக நின் தோன்றல்களுள் ஒருவன் கழுவுள் எனும் ஊரைப் புறங்கொடுத்து பகைவனை ஓடச் செய்தான். அவனுக்குத் துணையாக வந்த மற்றுமொரு அரசனை உடல் துண்டாகும்படி செய்தாய் நீ. குதிரைகளில் படை என வந்து போர் தொடுத்த இடையர் இனத்தாரை நீ தோற்றோடுமாறு செய்தவன். வாகைப் பூக்களைச் சூடியதற்கு இணங்கப் போரிட்டு நன்னன் எனும் மன்னனை அழித்தவன். இவ்வாறான பல நாட்டு மன்னர்களை வெற்றி பெற்ற வரலாற்றுக்கு உரிமை கொண்ட மரபின் வழிப்பட்டு உதித்தவன் நீ. அயிரை மலையில் வீற்றிருக்கும் துர்க்கையை வழிபட்டு அவளது அருளால் ஆட்சி நடத்திக் கொண்டவன் நீ.

பல்வேறு வகையான தோலிசைக் கருவிகள் போரினை அறிவுறுத்தும் விதமாக விளங்குகின்றன. அணி அணியாகப் படைகள் நிரை வகுத்து நிற்கின்றனக் களிற்றின் மீது நாட்டின் அடையாளச் சின்னம் எனக் கொடிகள் பறக்கின்றன. போரில் கையாளப்படும் போர் முறைகளுள் ஒன்று கவண் வைத்துக் கல் எறிதல் ஒரு முறை. கல் கால் கவணை எனச் சொல்லப்படும் கவண் கற்களை எறிந்து மதில் சுவர்களைத் தாண்டி உள் இருந்து போரிடுவோரைத் தாக்கவல்ல ஒரு போர் உத்தி முறையாகும். பனையில் இருந்து எடுக்கப்பட்ட கள்ளை உண்டு போர் வெறியுடன் போரிடுகின்ற போர் வீரர்களைக் கொண்டுள்ள கொங்கு நாட்டுக்குத் தலைவனாக விளங்கக் கூடியவன் நீ. கடலோசையாகிய முழவு எப்போதும் ஓயாது ஒலித்துக் கொண்டு இருக்கும் கடல் வணிகம் சிறப்பாக நடக்கக்கூடிய பட்டினமான கடல் துறையில் அமைந்துள்ள தொண்டி எனும் பட்டினத் தலைவன் நீ.

ஆரவாரம் பொருந்திய தும்பைப் போரில் வெற்றி பெறுபவன் நீ. அயிரை மலையில் இருந்து தோன்றிய பேரியாறு நீர் வீழ்ச்சிபோன்று மலையினின்று பூமிக்கு இறங்கி வருகின்றது. இரத்தற் பொருட்டு நினை நாடி வருவோர்க்கு எல்லை இல்லாது வாரி வழங்குவதற்கு ஏற்ப நின் அரண்மனையிலே பல பண்டங்கள் காணும் இடம் எல்லாம் மிகுந்து காணப்படுகின்றன. மகளிர் நடுவே நின் தலைவி கொல்லிப் பாவையைப் போலத் துர்க்கையின் சாயல் பெற்று விளங்குகிறாள்.

மலை வளத்தையும் கடல் வளத்தையும் நில வளத்தையும் ஒருங்கே பெற்றுத் திகழும் சேர நாட்டுத் தலைவனான இரும்பொறை வீரத்தினைப் பல்வேறு தலைமுறைகள் தன் குலத்தே தோன்றிப் போரிட்டு வென்ற வரலாற்றினைக் கொண்டவன் என்று கூறுவதோடு அமையாது அவனுடைய செல்வச்சிறப்பினையும் இணைத்துக் கூறியுள்ள புலவனின் கூற்றில் பரிசில் பெறும் நோக்கு புலப்படுமாறு:

வருநர் வரையாச் செழும் பல் தாரம்
கொளக் கொளக் குறையாது தலைத் தலைச் சிறப்பு

எனப் புனைந்துரைத்திருப்பது சிறப்புக்கு உரியதாக அமைகிறது. பழங்காலப் போர் முறைகளுள் ஒன்றான கல் கால் கவணை என்பது இப்பாடலில் சொல்லப்பட்டது கூடுதல் கவனத்திற்கு உரியதாக அமைகிறது. இப்புலவனின் பரந்து பட்ட வரலாற்று அறிவு, பரிசில் பெறத்தக்கவாறு மன்னனை இணங்க வைக்கும் புலமைத் தன்மை என்பன இங்குக் கருதத்தக்கவையாக அமைகின்றன.

பாடல் - 89

அரசியல் பிழையாத அரசனும் வதுவை மகளிரின் துவராக் கூந்தலும்

வானம் பொழுதொடு சுரப்பக் கானம்
தோடு உறு மட மான் ஏறு புணர்ந்து இயல
புள்ளும் மிஞிறும் மாச் சினை ஆர்ப்ப
பழனும் கிழங்கும் மிசையறவு அறியாது
பல் ஆன் நல் நிரை புல் அருந்து உகளப்
பயம் கடை அறியா வளம் கெழு சிறப்பின்
பெரும் பல் யாணர்க் கூலம் கெழும
நன் பல் ஊழி நடுவு நின்று ஒழுகப்
பல் வேல் இரும் பொறை நின் கோல் செம்மையின்
நாளின் நாளின் நாடு தொழுது ஏத்த
உயர் நிலை உலகத்து உயர்தோர் பரவ
அரசியல் பிழையாது செரு மேந் தோன்றி
நோய் இலை ஆகியர் நீயே நின் மாட்டு
அடங்கிய நெஞ்சம் புகர்படுபு அறியாது
கனவினும் பிரியா உறையுளொடு தண்எனத்
தகரம் நீவிய துவராக் கூந்தல்
வதுவை மகளிர் நோக்கினர் பெயர்ந்து
வாழ் நாள் அறியும் வயங்கு சுடர் நோக்கத்து
மீனொடு புரையும் கற்பின்.
வாள் நுதல் அரிவை யொடு காண்வரப் பொலிந்தே

துறை - காவல் முல்லை
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - துவராக் கூந்தல்

உரை

உரிய காலத்தில் காலம் தாழ்த்தாது மழை பொழிவதனால் மக்கள் தொகுதி மட்டுமின்றி மான்கள் கூட்டம் பறவைகள் கூட்டம் எனப் பிற உயிரினங்கள் அனைத்தும் இன்புற்று விளங்குகின்றன.

புள்ளும் மிறும் மாச் சினை ஆர்ப்ப என்று சொல்வதனால் இந்த மழைக் காலத்தில் அவை புணர்ச்சி கொண்டு சினை கொண்டுள்ளன எனக் குறிக்கப் பெறுகிறது. என்பதன் வழியே வறட்சியான காலத்தில் புல் மேய வாய்ப்பற்று இருந்த மான் மற்றும் ஆநிரைக் கூட்டம் பழங்களையும் கிழங்குகளையும் தின்று திரிந்தன. மழைக்காலம் வந்தமையால் பசும்புல் காணப்படுகின்றது. பல வாகிய நல்ல ஆநிரைகள் புல்லை மேய்ந்து திரிகின்றன. அதனால் காட்டில் அவை இன்புற்றுத் திரிகின்றன.

எல்லாப் படையினும் சிறப்பானது வேற்படையாகும். இரும்பொறை வேற்படையினைச் சிறப்பாகக் கொண்டு விளங்கக் கூடியவனாக இருக்கிறான். வேற்படை துணையோடு பல போர்களில் வெற்றி பெற்றவனாக விளங்குகிறான். அரசியல் பிழையாது அரசு முறை செய்யக் கூடியவனாக விளங்குகிறான். நின் தலைவி உன்னை விட்டுப் பிரியாமையால் காதலோடு விளங்குபவள். அவள் எப்போதும் மணமகள் போலக் கூந்தலில் நெய்தடவி மயிற்சிக்கல் இன்றி மணம் மிகுந்த கூந்தலைக் கொண்டவளாகத் தம் வாழ்நாள் எல்லாம் அருந்ததி போல நின்னைச் சார்ந்த கற்போடு வாழும் அழகிய நெற்றியையுடைய எழில் பொருந்தியவளாக விளங்குகிறாள்.

பதிற்றுப்பத்தில் சுட்டப் படும் அனைத்துப் பாடல்களிலும் மன்னனின் போர்ச்சிறப்பைச் சொல்லும் போது தலைவியின் காதல் சிறப்பையும் இல்லறச் சிறப்பையும் தவறாது குறிப்பிடுவது கவனம்

கொள்ளத்தக்கது. தலைவனுக்காகத் தலைவி எப்போதும் காத்திருத்தல் என்பது பலவாறாகக் காட்டப்பட்டாலும் கூட இல்லறம் குறித்தும் தவறாது பதிவு செய்திருப்பது குறித்து நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியதாக உள்ளது. சமணர்கள் துறவறம் குறித்துப் பேசும் போது இல்லறத்தை முதன்மைப்படுத்திப் பேசுவது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. வைதீகக் கருத்துக்கள் பொதிந்த அதாவது வேள்வி குறித்தும் அந்தணர் குறித்தும் பரவலாகப் பேசப்படும் வேளையிலும்கூடத் தலைவனைக் குறித்தும் இல்லறம் குறித்தும் புலவனின் பாட்டில் தவறாது பாடுபொருள்களில் ஒன்றாக இடம்பெறுவது கவனம் கொள்ளத்தக்கது. பாணன் அல்லது புலவன் மன்னனைப் பற்றி (பாடாண் திணை), மன்னன் முன்னிலையில் பாடி நிகழ்த்தும் போது அவைக்களங்களில் மன்னர் தம் தலைவியோடு இருந்து இக்கலை நிகழ்வைக் கவனித்து இருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

உயர் நிலை உலகத்து உயர்ந்தோர் பரவ
அரசியல் பிழையாது செரு மேந் தோன்றி
நோய் இலை ஆகியர் நீயே நின் மாட்டு

என்றும் குறிப்பிடுவதன் வழியே தொல்குடி மக்களின் வாழ்வியல், அரசியல் குறித்த அறச்சிந்தனை மன்னரால் உள்வாங்கப்பட்டுள்ளன என உணர முடிகிறது.

உயர் நிலை உலகத்து உயர்ந்தோர் எனும் தொடரோடு அதனைப் பொருத்திப் பார்க்கும் போது உயர்ந்தோர் எனச் சொல்லப்படுபவர் ஆரியர் வழித் தோன்றல்கள் என அறிகிறோம். அக்காலத்தே வானவியல் அறிவு கொண்டும் கணித அறிவு கொண்டும் இயற்கை அறிவு கொண்டும் இல்லறம் குறித்த சிந்தனை கொண்டும் அறக்கருத்துக்களைத் தந்துள்ள சமணக் கொள்கைகளின் தாக்கங்களைப் பெற்ற மன்னர் அவர்தம் ஆட்சிச் சிறப்பு எனப் பல பதிவுகளை நாம் இப்பாடல்களில் காண நேர்கிறது.

பாடல் - 90

பல்துறை சான்ற மன்னன் புகழும், நல் இசை முழங்கும் தண்ணுமை முழவும்

மீன் வயின் நிற்ப வானம் வாய்ப்ப
அச்சற்று ஏமம் ஆகி இருள் தீர்ந்து
இன்பம் பெருகத் தோன்றி தம் துணைத்
துறையின் எஞ்சாமை நிறையக் கற்று
கழிந்தோர் உற்றும் கடுந் தூ அஞ்சா
ஒளிறு வாள் வய வேந்தர்
களிறொடு கலம் தந்து
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
அகல் வையத்துப் பகல் ஆற்றி
மாயாப் பல் புகழ் வியல் விசும்பு ஊர்தர
வாள் வலியுறுத்து செம்மை பூஉண்டு
அறன் வாழ்த்த நற்குஆண்ட
விறல் மாந்தரன் விறல் மருக
ஈரம் உடைமையின் நீர் ஓரானையை
அளப்பு அருமையின் இரு விசும்பு அனையை
கொளக் குறைபடாமையின் முந்நீர் அனையை
பல்மீன் நாப்பண் திங்கள் போல்
பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை

உரு கொழு மரபின் அயிரை பரவியும்
கடல் இகுப்ப வேல் இட்டும்
உடலுநர் மிடல் சாய்த்தும்
மலையவும் நிலத்தவும் அருப்பம் வெளவி
பெற்ற பெரும் பெயர் பலர் கை இரீஇய
கொற்றத் திருவின் உரவோர் உம்பல்
கட்டிப் புழுக்கின் கொங்கர் கோவே
மட்டப் புகா வின் குட்டுவர்ஏறே
எழாஅத் துணைத் தோள் பூழியர் மெய்ம்மறை
இரங்கு நீர்ப் பரப்பின் மரந்தையோர் பொருந
வெண்பூ வேளையொடு சுரை தலைமயக்கிய
விரவு மொழிக் கட்டூர் வயவர் வேந்தே
உரவுக் கடல் அன்ன தாங்கு அருந் தானை யொடு
மாண் வினைச் சாபம் மார்புற வாங்கி
ஞாண் பொர விளங்கிய வலி கெழு தடக்கை
வார்ந்து புனைந்தன்ன ஏந்து குவவு மொய்ம்பின்
மீன் பூத்தன்ன விளங்கு மணிப் பாண்டில்
ஆய் மயிர்க் கவுரிப் பாய்மா மேல் கொண்டு
காழ் எஃகம் பிடித்து எறிந்து
விழுமத்தின் புகலும் பெயரா ஆண்மை
காஞ்சி சான்ற வயவர் பெரும
வீங்கு பெருஞ் சிறப்பின் ஓங்கு புகழோயே
கழனி உழவர் தண்ணுமை இசைப்பின்
மூன மஞ்ஞை மழை செத்து ஆலும்
தண் புனல் ஆடுநர் ஆர்ப்பொடு மயங்கி
வெம் போர் மள்ளர் தெண் கிணை கறங்க
கூழுடை நல் இல் ஏறுமாறு சிலைப்ப
செழும் பல இருந்த கொழும் பல்தண் பணைக்
காவிரிப் படைப்பை நல் நாடு அன்ன
வளம் கெழு குடைச் சூல் அடங்கிய கொள்கை
ஆறிய கற்பின் தேறிய நல் இசை

வண்டு ஆர் கூந்தல் ஒண்தொடி கணவ
நின் நாள் திங்கள் அனைய ஆக திங்கள்
யாண்டு ஓரனைய ஆக யாண்டே
ஊழி அனைய ஆக ஊழி
வெள்ள வரம்பின் ஆக என உள்ளி
காண்கு வந்திசின் யானே செரு மிக்கு
உரும் எனமுழங்கும் முரசின்
பெரு நல்யானை இறை கிழவோயே

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வலி கெழு தடக்கை

உரை

ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும் ஆன இசைப்பாங்கு கொண்ட நெடும் பாடலாக இப்பாடல் விளங்குகிறது. சந்தம் கொண்டுள்ள தன்மையில் வண்ணம் என்பது தீர்மானிக்கப்படுகிறது. ஒளிறு எனத் தொடங்கும் அடி முதலாக நான்கு அடியும், அறன் வாழ்த்த முதலாக இரண்டு அடியும், தொடர்ந்து, கட்டிப் புழுக்கின் கொங்கர் கோவே என்பது முதலாக இரண்டு அடியும் காழ்எஃகம் என ஓர் அடியும் வஞ்சி அடியாக வருவதால் வஞ்சித் தூக்கு என அதாவது சொற்சீர் வண்ணம் எனப் பெயர் பெற்றது. மேற்குறிப்பிட்ட அடிகள் யாவும் ஒழுகு வண்ணமான செந்தூக்கு எனும் நிலை பெற்று அமைகின்றன. எனவே இப்பாடல்களில் இரு சந்த வேறுபாடுகள் கலந்து வருவதானால் ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும் ஆன செந்தூக்கும் வஞ்சித்தூக்குமாய் இப்பாடல் அமைகிறது.

இச்சந்தம் அமைந்த பாடலில் வலிகெழுதடக்கை எனும் தூக்கு நிலை பெற்றுள்ளது. தூக்கு என்பது தாளத்தினைக் குறிப்பதாகும், தாள வகைகளே சந்தங்களைத் தீர்மானிக்க வல்லமை பெற்று விளங்கும். தூக்கு என்பது தாளத்தை இசையாசிரியன் பாடும் போது எண்ணிக் கணக்குச் செய்யும் பொருட்டு மாத்திரை அளவுகளைக் கைகளால் அசைத்துப் பாடுவது இயல்பு.மேலும் தூக்கு என்பது நான்கு நான்கு

அடிகளாக அமைவதைக் குறிப்பதாகும். தாளம் என்பது குறித்துக் கீழ்வரும் பாடல் அடிகள் விளக்கக் காண முடிகிறது.

கொட்டும் அசையும் தூக்கும் அளபும் ஒட்டப் புணர்வது பாணி

பதிற்றுப்பத்தில் உள்ள அனைத்துப் பாடல்களும் இவ்வாறு இசை தாளம் எனும் தன்மையில் அமைந்துள்ளன. தமிழிசை வல்லுனர்கள் பதிற்றுப்பத்தின் பாடல்களில் சுட்டப்பட்டுள்ள சந்தம், தாளம் எனும் வண்ணம் தூக்குக் குறித்தும் விரிந்த நிலை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. தமிழிசை குறித்த தேடலுக்குப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பல தளங்களை அமைத்துத் தந்துள்ளன. மன்னன் முன்னிலையில் பாடப்பெற்ற இப்பாடல்கள் தாளக்காரர்களும் ஆட்டக்காரர்களும் ஒருங்கிணைந்து துணைசெய்ய நிகழ்த்தப்பட்ட நிகழ்த்து கலை வடிவத்தில் வெளிப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட பாடல்களாக அமைந்திருக்க வேண்டும் என உய்த்துணர முடிகிறது.

இயற்கை வானவியல் குறித்த அறிவியல் சிந்தனையையும் இயற்கை மாறுபாடுகள் குறித்த சிந்தனையையும் நம் முன்னோர் ஏலவே கணித்து வைத்திருந்த அறிவுடையோராக இருந்துள்ளனர். வானத்தில் நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் குறிப்பிட்ட இடங்களிலேயே குறிப்பிட்ட காலம்வரை இடம்பெற்று இருக்கும் தன்மைகளைக் கொண்டு எதிர்கால வளம் குறித்த கணித அறிவினையும் கொண்டிருந்தனர்.

நிறையப் பல்வேறு துறைசார் நூல்களைப் படித்து நூல் அறிவு பெற்றிருந்தனர். அறிவு பெறுவதற்கு அந்தணர்கள் துணை நின்றனர். ஆண் யானைகளையும் அணிகலன்களையும் பல மன்னர்கள் தொடர்ந்து திறையாக அளித்து வந்தமையால் சேரன் பெரும் செல்வத்திற்கு உரியவன் ஆகியுள்ளான். அறம் செய்யும் நோக்கோடு பலருக்கும் பொருள்கள் உதவி செய்து அதன் வழிப் பெற்ற பெரும் புகழினைப் பல திசைகளிலும் கொண்டிருந்தனர். மன்னர்கள் அறியுமாறும் பலரும் வாழ்த்துமாறும் புகழ் பெற்ற நீ நின் வழித்தோன்றலாக வரும் அனைவருக்கும் அது தொடர்ந்து வருகிறது.

அன்புடையவன் நீ கொண்ட அன்பு குற்ற மற்ற நீருக்கு ஒப்பானதாகும். கொண்டிருந்த ஆட்சித் திறன் அளக்க முடியாத

ஆகாயத்திற்கு ஈடானது. ஆடும் வயிரியர் குறைவுபடாது பெற்றுக்கொள்வதற்கு நீயோ கடலைப் போன்றவன். விண்ணில் உள்ள நட்சத்திரங்களுக்கு இடையே அமைந்த நிலவைப் போன்றவன் நீ. அச்சம் பொருந்திய துர்க்கை குடிகொண்டுள்ள அயிரை மலைக்குச் சென்று வழிபாடு செய்யக் கூடியவன். மலையில் உள்ள எல்லைப் பகுதியை வரையறுக்கச் சென்ற போது பெற்ற திறைகளைக் கொண்டு பலருக்கும் பரிசில்கள் என வழங்கியவன். சர்க்கரைக் கட்டியோடு அவரை துவரைப் பருப்புகளோடு நல் உணவை வழங்கிய கொங்கர்த் தலைவனே, பகைவர் புறமுதுகு காட்டி ஓடும் போது அவர்களுக்குத் துன்பம் விளைவிக்காத பூழி நாட்டுக்குக் கவசம் போன்றவனே. நீர்வளம் மிக்க நரந்தைப் பகுதி வாழ் மக்களுக்குத் தலைவனே, நீ சுரைக் கொடிகளும் வெள்ளிய பூவை உடைய வேலைச் செடியும் கொடியும் எங்கும் படர்ந்து இருக்கக் கூடிய நிலப் பகுதிகளை உடையவன். பலவித மொழிகளைப் பேசக் கூடியோர் வாழ்கின்றனர். வீரர்களும் உன்பாசறையில் பல மொழிகளைப் பேச வல்லோராகத் திகழ்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் தலைவனானவன் நீ. சேரனது கடற்கரையிலே பகைவரின் அரிய சேனைகள் வராது தடுக்கும் பொருட்டு நின் கடற்படைகள் எப்போதும் கடலில் உலவிக் கொண்டு திரிகின்றன.

மார்புகளிலே பல தழும்புகளைப் பெற்று விளங்கும் தோள்களைக் கொண்டுள்ளவன் நீ. குதிரையில் ஏறிக் கொண்டு நீ பகைவர்களுக்குத் துன்பம் தரத்தக்க வீரமுடைய பெருமகன். நிலையாமை குறித்த உணர்வோடு நெஞ்சிலே வீரத்தைச் சுமந்துள்ள நீ, உயர்ந்த பெரிய சிறப்புடைய பிற அரசர்களுடன் மேம்பட்ட புகழுடையவன். வயற்காடுகளில் உழவன் தண்ணுமைப் பறைகளை முழங்கினால் குளிர்ந்த நீரில் உள்ள மயில்கள் அவ்வோசையை மேகங்கள் தந்த ஓசைஎனக் கேட்டுத் தோகைவிரித்து ஆடும்.

ஆர்ப்பரிக்கும் ஓசை எனப் போரைச் செய்யும்போது தாடாரிப் பறையை வீரர்கள் ஒலித்து ஆர்ப்பரிப்பர். வயல்கள் காவேரி நீரைப் பெற்றுச் சோழ நாட்டைப் போல் செழிப்புற்று விளங்கும். நல்ல வேலைப்பாடுகள் கொண்டு விளங்கும் சிலம்பினை அணிந்து அறக் கற்பினைக் கொண்டு வண்டுகள் ஒலிக்கும் கூந்தலைப் பெற்று இடையினில் நல்ல கொடியை அணிந்துள்ள சேரமாதேவியின் கணவன் இறை கிழவோன் ஆவான்.

வானவியல் அறிவு கணித அறிவு புவியியல் அறிவு அறம் சார்ந்த அறிவு எனப் பல்வேறு அறிவுகளைப் பெற்றும் வயற்கள வளத்தையும் சிலம்பு அணிகலம் செய்கின்ற தொழில் வளத்தையும் கடற்படையைச் செலுத்துகின்ற கடல் வணிகத்தையும் பல்வேறு மொழிகளைப் பேசித் திரிகின்ற வீரர்களைப் பெற்றுள்ள ஊர்வளத்தையும் பெற்றவன் சேரனாவான். பல்வேறு நாடுகளோடு சண்டையிட்டதன் பயனாகவும் அந்நாட்டு வீரர்களைத் தன்படை வீரர்களாக ஆக்கிக் கொண்டதன் விளைவாகவும் பல்வேறு மொழிகள் பேசும் வீரர்களையும் மக்களையும் கொண்டவனாகத் திகழ்கிறான்.

சோழ, நாடு குறித்த அறிவையும் இவன் பெற்றுத் திகழ்கிறான் என்ற குறிப்பையும் அறிய முடிகிறது.பல நூல்களைக் கற்றிருந்த அறிவாளியாக இவன் திகழ்கிறான்.பூழி நாட்டுக்குத் தலைவனாகவும் மருத நாட்டுக்குத் தலைவனாகவும், கொங்கர் நாட்டுக்குத் தலைவனாகவும் விளங்கும் இவனைப் பெருவேந்தனாகவும் நாம் அறிகிறோம். **நாள்கள் பல கடந்தது திங்கள் ஆகும். ஆண்டுகள் பல கழிய ஊழி எனக் கணக்காகும் எனப் புலவன் வாழ்த்திப் பாடுதலில் மன்னன் கொண்டுள்ள கணித அறிவினைப் புலவனும் கொண்டு வாழ்கிற முறைமையால் அறிவுத் திறன் கொண்ட அரசனை அறிவு சால் புலவன் வாழ்த்துவதாக அமைகிறது.பல்வேறு நாடுகளைத் தன் வயப்படுத்திப் பல்வேறு மொழி பேசுவேரைத் தன் படை வீரர்களாக்கி மலைப்பகுதியையும் மருத நிலப் பகுதிகளுமான பல்வேறு நிலப் பகுதிகளைத் தன் உடைமைப் பகுதிகளாக்கி ஆட்சி செய்யக் கூடிய இம்மன்னன் போன்றோரின் ஆட்சியின் வளர்ச்சி நிலையே பின்னர் உருப் பெற்ற பேரரசு உருவாக்கத்திற்கு அடிகோலியது எனில் மிகை இல்லை.**

ஒன்பதாம் பத்து - பதிகம்

பொறையனின் கடுங்குரல் முரசு

குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழா அன்
வேண்மாள் அந்து வஞ்சிசெள்ளை ஈன்ற மகன்
வெரு வரு தானையொடு வெய்துறச் செய்து சென்று
இரு பெரு வேந்தரும் விச்சியும் வீழ
அருமிளைக் கல்லகத்து ஐந்து எயில் எறித்து
பொத்தி ஆண்ட பெருஞ் சோழனையும்
வித்தை ஆண்ட இளம் பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்கு உதவி
மந்திர மரபின் தெய்வம் பேணி
புரை அறு கேள்விப் புரோசு மயங்கி
அருந் திறல் மரபின் பெருஞ் சதுக்கு அமர்ந்த
வெந் திறற் பூதரைத் தந்து இவண் நிறீஇ
ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன் உயிர் காத்த மறு இல் செங்கோல்
இன்இசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறையைப்
பெருங்குன்றூர் கிழார் பாடினார் பத்துப் பாட்டு

பெயர்கள்

நிழல் விடு கட்டி, வினை நவில் யானை, பல்தோல் தொழுதி, தொழில் நவில் யானை, நாடு காண் நெடு வரை, வெந்திறல் தடக்கை, வெண்தலைச் செம்புனல், கல் கால் கவணை, துவராக் கூந்தல், வலி கெழு தடக்கை.

உரை

ஓர் இயல்புத் தன்மை கொண்ட இசைவடிவம் அதாவது சந்தம் எனும் வண்ணம் கொண்டு விளங்குபவையாக இப்பத்துப் பாடல்களும்

உள்ளன. தூக்கு எனும் தாள கதிகளும் பிறபதிகங்களில் காணலாம். ஒன்பதாம் பத்தில் இடம்பெற்றுள்ள பத்துப் பாடல்களிலும் காண முடியவில்லை. மாறாகச் சந்தமும் தாளமும் பத்துப் பாடல்களிலும் ஓர் இயல்புத் தன்மை கொண்டவைகளாக விளங்குகின்றன. தண்ணுமை எனும் இசைக் கருவி குறித்த பதிவும் இனிய ஓசைதரும் முரசு என்பன போன்ற தோலிசைக் கருவிகளின் பதிவுகளும் இந்தப் பதிகப் பாடல்களில் இடம்பெறக் காணமுடிகிறது. மன்னன் அந்தணரைக் காட்டிலும் அமைச்சர்களைக் காட்டிலும் நெறிகளிலும் சிறந்து விளங்குபவனாகக் காட்டப்படுகின்றான். வேள்வி செய்து செங்கோல் செலுத்துபவனாக விளங்குகிறான். பொத்தி எனும் புலவனை ஆதரித்த கோப்பெருஞ் சோழன் சுட்டப்படுவதனால் சோழன் மற்றும் பாண்டியன் என்ற இருகுடி வேந்தர்களை அறிந்தவனாகவும் அவர்களோடு அவ்வப்போது போரிட்ட வனாகவும் காட்டப்படுகிறான். சேர சோழ பாண்டியர்களின் உட்பூசல்கள் நடந்துள்ள வெளிப்பாடு உணர்ந்து கொள்ள முடிகிறது.

சேர சோழ பாண்டியர் எனும் பெருவேந்தர்கள் ஆட்சி முறைக்கு முன்பதாகவே இது போன்ற சிறு சிறு பூசல்கள் சிற்றரசர்களுக்கு இடையே வந்துள்ளன. பொறையன்,அதிகமான்,பாரி,சடையன்,பழையன் எனும் பெயரிலும் குறுநிலமன்னர்கள் தத்தம் ஆட்சிப் பொறுப்புகளை விரிவாக்கம் செய்து கொள்ள வேண்டி அவ்வப்போது போர்கள் நடத்தியுள்ளனர் எனத் தெரிய வருகிறது. பேரரசுகள் அமைவதற்கு இது போன்ற குறுநில மன்னர்களின் போர்களே தோற்றுவாயாக அமைந்துள்ளன என இப்பதிகம் வழி உணர முடிகிறது.

துறை அகராதி

இயல்மொழி வாழ்த்து	18,20,24,43,48
உழிஞை அரவம்	77,
ஊர்ப்புறச் செருகிடை நிலை	15,16
ஒள்வாள் அமலை	56
களவழி	41,54,61,64,82,90
காட்சி வாழ்த்து	41,54,61,64,82,90
காவன் முல்லை	89
குரவை நிலை	52
செந்துறைப் பாடாண் பாட்டு	11,12,13,14,15,16,17,21,27,31, 32,37,38,42,44,45,46,,47,53, 55,58,59,62,63,66,68,70,71, 72,73,74,75,76,79,85,86,88
தும்பை	34,83
நாட்டு வாழ்த்து	28
பரிசில்துறைப் பாடாண்பாட்டு	19,65
பாணாற்றுப்படை	67
பெருஞ்சோற்றுநிலை	30
முல்லை	81
வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு	22,23,25,26,29,33,50,51,69,80,
வாகை	39,84
வாகைத்துறைப் பாடாண் பாட்டு	35
விறலி ஆற்றுப்படை	40,49,57,60,78,87

அருஞ்சொல் அகராதி

அ-அழகு	78-2,31-26
அக்குரன்	14-7
அகப்பா	22-26,3ஆம் பத்து பதி-3
அகலம்	14-11,16-17,40-13,63-4
அகலிருவிசும்பு	52-28,81-3
அகலவன்	பாணன் 43-28
அகழ்	33-9
அகழி	45-7, 53-8
அகைப்ப	25-12
அச்சு	90-2
அசைத்தல்	58-2
அசைநடை	16-13,51-21
அசையா	82-15
அட்ட	82-15
அடிசில்	45-13
அடுக்கம்	55-18
அடுப்பு	18-6
அடூஉ நின்ற	13-11
அடும்பு	30-6,51-7
அடை	24-20
அணங்கு	44-13,71-22
அணை	50-19
அத்தம்	41-14
அதிகமான்	பதி-8
அந்தரம்	51-19
அந்தில்	40-6

அம்பணம்	66-8,71-5
அம்பு	80-11,22-29,19-9
அமர்	42-9
அமல் போர்	42-9,16-12,51-21,17-11
அமை	54-3
அமையார்	2ஆம் பதி 12
அயிர்	51-8
அயிரை	3ஆம் பதி -8, 21-29,70-21,79-18, 21-29,29-4
அர	51-13
அரசுவா	79-13
அரண்	10-11,17-11
அரம்பு	15-13
அரம்போழ்கல்லா	60-5
அரி	12-12
அரிகால்	30-15
அரிமான்	12-5
அரியல்	40-8,61-1,62-16
அரில்	12-1
அருப்பம்	45-9,50-13
அரை	12-21
அல்கலும்	55-16,68-13
அலங்கல்	39-12,31-9
அலவன்	51-7
அவல்	11-4
அவுணர்	11-4
அழல்	13-25,14-3,19-20,23-23,25-7
அழுவம்	21-36,31-30, 45-12,66-6,84-16
அளகு	35-5
அளறு	27-13
அளை	28-7
அறல்	74-3
அறுகை	44-10
அறுவை	34-3
அறை	24-14,81-14
ஆடு	86-18

ஆடுறுமடா	24-20
ஆடூஉ	86-4
ஆநியம்	24-25,69-14
ஆம்பல்	27-3,62-17,71-2
ஆரம்	11-15,48-2
ஆலி	50-2
ஆலும்	27-8
ஆவணம்	68-10
ஆவுதி	21-7,21-13,
ஆறிய	16-10,90-49
ஆறு	13-22,24-7,43-15
ஆன்பயம்	71-17
இகூஉ	40-3
இஞ்சி	16-1,58-6,62-10,68-16
இரும்பில் பதி	5-9
இணர்	30-1
இமிழ்	13-7
இயவர்	17-7,19-7,27-5,78-10,
இரலை	74-10
இரிய	29-4
இரீஇய	90-23
இரும்	43-12,13-4
இருள்	22-23,90-2
இரைஇய	52-11
இவணர்	74-21
இவுளி பதி	2-4
இழை	12-33,22-18,31-26,40-22,39-15
இளை	28-5
இளையர்	41-2, 48-8,51-34,71-15
இறா அலியர்	40-2
இறும்பு	78-9
இறும்பூது	30-38,32-17,33-1
இன்னியம்	26-3
ஈரைம்பதின்மார்	14-5
உகக்கும்	77-9
உகிர் நகம்	12-4

உஞற்றும்	51-8
உடலுநர்	90-21,88-20
உம்பல்	22-11,90-24
உம்பற்காடு	பதி 3-5
உயக்கம்	79-15,68-7
உயர்நிலை	52-9,54-10,70-19'
உரவர்	71-25
உரவு	90-31
உரவுக்களிறு	88-17
உரும்	25-10,33-10,30-42
உருளி	27-11
உலவை	39-12
உளை	29-5,34-4
உளைதல்	41-25
உன்னம்	40-7
ஊக்கலை	11-11
ஊதை	51-8,60-12
ஊர்தல்	13-15
ஊனம்	21-10,24-17,67-17
எஃகம்	11-17,19-4,33-9,24-2,90-37
எஃகு	12-16,24-21,49-6
எடுப்பு	50-25
எயில்	20-19, 25-5,29-13. 33-12,37-9,52-31,53-11
எயிறு	51-20
எரிபரப்பல்	15-2,71-9
எருக்கல்	83-7
எருத்து	12-4,34-7,36-8,39-10.
எருது	27-13
எருமை	13-4
எருவை	36-9,67-9
எல்லி	19-11
எவ்வம்	21-3
எழால்	36-10
எழிலி	18-10,20-25
எழு	45-10

எறுழ் வலிமை	80-7
ஏ	58-10
ஏஎய்	11-3
ஏமம்	11-4
ஏனம்	16-6
ஏனல்	30-22
ஐம்பால்	18-4
ஐயர்	70-19
ஐயவி	16-4
ஒக்கல்	12-14,64-19,67-1
ஒகந்தூர் பதி	7-9
ஒய்தல்	73-9,87-4
ஒரால்	23-17
ஒரீஇ	13-27,76-5
ஒலித்தல்	22-30
ஒலி	13-7,18-4,31-24
ஓச்சம்	41-20,
ஓத்திரம் பதி	7-9
ஓதி	61-3,88-28
ஓவம் (ஓவியம்)	61-3,88-28
ஓவு	68-17
கசடு	44-6
கங்குல்	81-10
கங்கை	பதி 5-7
கட்டில்	79-14
கட்டூர்	68-2,82-2,90-30
கடம்	66-17
கடம்பு	11-12,12-3,20-4,பதி 4 -7,88-6
கடவுள்	பதி 5-4
கடறு	30-29,53-4,78-7
கடாஅம்	16-7,82-5
கடாஅய்	30-33
கடி	43-6,11-1320-17,22-24,33-3,40-15,39-4
கடிப்பு	17-7,19-8,40-3,41-23,68-1,84-1
கடுக்கை	43-16
கடுந்தேறு	49-4,81-6

கண்ணிய	58-8
கணம்	20-12,80-2,17-11,39-11
கணிச்சி	21-2
கணை	16-2
கதழ்	25-12,28-4,50-2,80-13
கதுப்பு	12-22,14-14,81-27
கதுவாய்	45-4
கந்து	77-8
கம்பலை	27-14
கமஞ்சூல்	11-2
கயம்	42-2
கரணம் பதி	5 -23
கரந்தை	40-5
கலப்பை	15-26,23-4,41-5
கலம்	15-26,23-4,41-5,21-9,37-4,44-5,54-8,67-4, 71-24,90-7,30-22
கலன் பதி	8-6
கலிங்கம்	12-21,76-13
கலித்தல்	15-9
கலிமா	38-7,42-15
கலிழ்தல்	24-26
கவடு	23-1
கவை	13-15,74-9
கழனி	13-13
கழி	11-9,30-3
கழுது	13-15
கழுவுள்	71-17,88-7
கழை	32-13,41-14,73-10,86-9
கள்ளுடை	75-10
கறுத்த	26-12,32-15,39-4
கனை	14-3
செறு	13–2,19–21,27–10,71–3
சென்றாலியர்	55–16
சென்னி	25–2,27–4
சேஎர்	41–11
சேக்கும்	51–5,66–17

சேண்	22–5,44–11,65–10,88–36
சேம்பு	24–20
சேரல்	38–4
சேறுகம்	49–1
சொன்றி	24–22
ஞரலுதல்	30–6
ஞாட்பு	45–5
ஞாயிறு	24–3
ஞாலம்	69–2
ஞாழல்	51–5
ஞிமிறு	12–12,50–18
ஞெமர்தல்	14–11,16–17,31–7,40–13,72–9
தகடூர்	பதி 8–9
தகரம்	89–16
தகம்பு	42–11,43–34
தடிதல்	11–5
தண்டமிழ்	63–9
தண்ணுமை	51–33,84–15,90–41
தண்பனை	22–31,90–46
ததை	11–21,23–19,30–1,30–41,43–9,66–5,70–3,76–1
தலைக்கை	52–15,
தவாஅக்கள்	43–35
தழிஞ்சி	57–9
தளி	24–28,43–18,76–10,
தா	38–14
தாமரை	19–20
தாயம்	45–9
தார்	11–17,12–4,15–22,23–10,31–7,42–10,66–13,24–4,32–4,40 16,55–17,64–7
தாழை	55–5
தாவல்	41–17
திகிரி	14–18,22–4,69–17,31–8
திங்கள்	59–2,14–3
தித்தி	52–17

திணை 14–20–31–13
திரங்க 43–12
திரு 14–11
திரை 42–21
திவவு 29–7
திற்றி 18–2
திறல் 37–13,46–3
திறை 17–3
தினை 19–6,
துகிர் 30–7
துகில் 54–5
துஞ்சல் 55–4,16,2,72–8,81–3
துஞ்சு மரம் 16–3,22–21
துணங்கை 13–5,45–12,52–14,57–4
துணை 90–3
துதைநிலை 76–2
துப்பு 14–6,15–36,32–5,59–11
தும்பை 88–23
துமிதல் 11–3,28–2,35–6,46–9
துய் 43–23,44–18
துயலும் 49–2
துருத்தி 20–2
துவை 45–13
துழாய் 31–8
துழாய்ச் செல்வன் 31–3
துனித்த 57–13
தூம்பு 41–4,81–21
தெங்கு 13–7
தெண்கண் 40
தெம்முனை 80–17
தெரியல் 76–12
தெவ்வர் 31–32,39–4,41–20,45–15,53–10,65–3
தெறல் 22–3
தேஎம் பதி 2–13
தேவி பதி 4–3,பதி3–6
தைஇ 39–15

தொடை	15–26,28–4,0–6,41–4,46–5,44–9
தொழுதி	14–16,62–1,76–6,83–3
தொறு	13–1
தோட்டி	25–5,38–6,71–13
தோமரம்	54–14
தோல்	50–9,82–8
நகை	16–4
நசை	18–12
நந்து	12–11
நரந்தம்	11–22
நரம்பு	41–1
நரை	74–24
நளி	11–3,23–18
நறவு	51–18,11–15
நன்றா	பதி 7
நன்னன்	40–14
நா	15–25
நாட்டம்	21–1
நாமம்	13–20,54–14,68–12
நார்	11–15
நாரை	23–2
நிகழ்தல்	49–15,
நிணம்	12–16
நியமம்	15–9,30–12,75–10
நிரையம்	15–30
நிவத்தல்	28–10
நிறம்	11–8,79–16,11–9,49–11,51–32
நிறை	28–12
நீரழுவம்	21–36
நுகம்	63–15
நுவணை	30–24
நூலாக்கலிங்கம்	12–21
நெடுமிடல்	32–20
நெய்த்தோர்	30–37
நெய்தல்	13–3
நெரிதர	33–6

நேரி	40–20,7–22
நொசியா	45–3
நொடை	30–12,67–22
பகடு	58–16,71–4
பகர்நர்	13–23
பகன்றை	76–12,12–15
பசும் பொன்	16–15,39–14
படப்பை	23–22,30–8,55–6,90–47
படியோர்	20–11,79–6
பண்ணியம்	59–15,76–5
பத்தல்	19–23,22–13
பதலை	49–3
பதன்	55–11,66–9
பரடு	52–20
பரிதல்	30–18
பரிவேட்பு	21–27
பருதி	74–12,46–8
பழையன்	பதி 5–13
பறை	22–28
பாக்கம்	13–28
பாகுடி	21–26
பாசடை	30–3
பாசம்	71–23
பாசவர்	21–9,67–16
பாசறை	16–8
பாடு	67–16
பாண்டில்	52–13,49–6,64–10,74–10,90–35
பாண்மகள்	60–3
பாண்மகன்	59 –3
பாணர்	57–7,65–11
பாணி	22–36
பாத்தி	18–3
பாயல்	16–14,19–12,68–15
பார்ப்பார்	63–1
பார்ப்பனி	பதி 3
பார்வல்	21–27,84–5

பாவை	61–4
பிடவு	66–17
பிடி	12–13,43–22,82–6
பிழி	30–12,
பிறக்கடி	80–8
பீடர்	45–14
பீர்	15–10,26–10
புகர்	89–14,53–18,71–20,34–6
புடையல்	31–31,37–8,42–1,57–2,80–7
புணரி	11–1,42–23,55–3,88–40
புதல்	66–16
புதவு	16–5,53–16,27–9
புயலேறு	51–28
புரவு	18–9,26–6,80–10
புரிசை	53–9
புரோசு	பதி7–10
புல்லென	13–13,28–8
புலிக்குழூஉ	41–7
புறக்கொடை	31–33
புறவு	13–20,30–25,78–6,39–11
புன்கண்	54–7,86–6
புனிற்றுமகன்	16–3
பூசல்	44–12,22–29,27–15,31–3,
பெயர்	69–15,26–6,41–14
பெருங்கை	43–4
பெரும்பெயர்	21–7,90–23
பெருவாய் மலர்	81–25
பேஎம்	35–9
பேஎய்	36–9
பேய்மகள்	13–15
மடை	79–17
மண்ணுதல்	19–7,31–6
மணிநிறம்	11–9,31–11,42–12
மதர்	30–11
மதன்	30–11
மதியம்	31–12

மதில் மரம்	15–3
மயக்கல்	12–1
மயிர்புதைமாக்கண்	29–12
மரந்தை	90–28
மரம்	76–4
மருதம்	27–6,30–16,73–8
மருது	13–7
மருப்பு	11–8,15–22,80–1
மரை ஆ	23–14
மல்லல்	36–3
மலைதல்	30–6
மழகளிறு	12–12,16–8,32–3,84–11
மழலை	15–25
மறலுதல்	82–7
மறுகு	23–5,29–9,43–26
மன்பதை	40–11,77–3,42–16,72–5
மன்னியர்	54–11
மாகம்	88–37
மாண்டனை	19–27
மாரி	13–26,18–11,62–6,84–21
மான்	12–5,61–13
மாவள்ளியன்	61–13
மிஞிறு	60–4,89–3
மிதி	21–23
மிலைச்சுதல்	41–10
மீமிசை	80–14,பதி 8–3,86–11
முகவை	22–14
முகில்	84–11
முகிழ்	18–5
முச்சி	43–1
முடந்தை நெல்	29–3,32–13
முண்டை	60–6
முத்தம்	39–16,67–4,74–6
முத்தை	85–4
முதிரை	55–7,
முந்நீர்	20–2,31–21,90–16

முந்நீர்த் துருத்தி	20–2
முயக்கம்	50–20
முரச்சுதல்	44–16
முரண்	11–11
முரம்பு	66–18,77–10
முழா	52–14
முழுமுதல்	11–5,88–6,பதி 5–14
முன்பு	20–4,36–4
மூசுதல்	31–30
மூய	42–20
மூரி	45–16,67–15
மெய்புதை அரணம்	52–6
மேவல்	15–28,43–22,43–24
மைந்து	23–16,40–16,42–9,81–9
மையூர்	பதி 9–11
மொய்	49–8
மோய்ம்பு	49–8
மோகூர்	44–14,49–8
யாக்கை	13–12
யாடு	78–13
யாண்டு	15–1,90–52
யாவணது	75–14
யாழ்	41–2,66–2
யூபம்	67–10
வங்கம்	52–4
வசி	42–4
வஞ்சி	பதி 9–9
வடவர்	5–1
வண்டு	51–6
வடிம்பு	70–2
வண்டன்	31–23
வம்பலிர்	77–2
வம்பு	36–3,19–9,22–19
வயம்	41–7
வயமான்	75–2
வயிர்	67–6

வயவு	36–2
வயிர்	67–6
வயின்	24–19,51–3
வரகு	30–22
வரி	68–5
வருடை	பதி6–3
வல்சி	19–1,55–8,75–12
வல்லே	64–8,58–10
வலத்தர்	19–8,41–12,51–30,54–14
வலம் புரி	67–6
வலை	51–53
வழிபு	47–47–5
வள்	12–4
வழை	41–13,
வள் கூர்மை	12–4
வள்ளியை	54–1
வழை	41–13
வள்	78–4
வள்ளை	29–2
வளை	23–23,29,2,30–6,30–2,51–14,13–6
வறும்	23–2
வன்கண்	52–7
வனப்பு	73–8
வாகை	40–15,43–3
வாய்	18–11,64–1
வால்	12–21,21–10,30–4,41–25, பதி 5–15,55–8
வானி	86–12
விச்சி	19–4
விடத்தர்	13–14,28–7
விண்டு	31–17,51–15,
வித்தை	பதி 9–7
வியம்	54–15
வியலூர்	பதி 5–11
விலங்கல்	16–2
விலைஞர்	76–5

விறலி	40–21,57–6–78–3
விறலியர்	18–6,43–21,48–21,49–2,54–6,58–1
விளக்கம்	14–4
வினைஞர்	58–15
வீ	40–15,42–15,43–23
வீட்டி	பதி 5–6
வீயாமை	35–10,36–1
வீறு	74–21
வெஃகாமை	22–7
வெக்கை	71–3
வெண்தலை	30–17,42–22,87–3
வெப்பு	39–3,86–4
வெய்துறவு	15–27
வெம்மையுறல்	26–6
வெவ்வர்	41–20
வெள்ளி	21–38,63–20,90–54,33–6,72–10
வெறி	51–11
வெறுக்கை	15–21,55–4
வேங்கை	40–22,41–8,88–34
வேட்கையர்	21–27
வேம்பு	49–27
வேய்	27–37,65–8
வேல்	45–21,46–11,51–23
வேலம்	39–12,58–14
வேலிபதி	2–5,63–17
வேழம்	30–11
வேள்	11–6, பதி 8–2
வேள்வி	64–4,70–18
வேளிர்	30–30,49–7,75–4,88–13
வேளை	15–9,90–29
வேனில்	48–15
வைகல்	71–16,82–10
வைகு	41–22
வைப்பு	13–9,15–8,29–10,76–15,30–13,53–4
வையாமாலையர்	32–15

பாடற்பெயர் அகரநிரல்

அட்டு மலர் மார்பன்	20,
அடுநெய் ஆவுதி	21,
அருவிஆம்பல்,	63,
உருத்து எழு வெள்ளம்,	72,
உருத்து வரு மலிர் நிறை	28,
உரைசால் வேள்வி	64,
ஊன் துவை அடிசில்,	45,
ஏ விளங்கு தடக்கை,	68,
ஏம வாழ்க்கை,	39,
ஏவல் வியன் பணை,	58,
ஏறாஏணி,	43
ஐந்தவைத் துணை	
ஒண் பொறிக் கழற் கால்,	43
கமழ் குரல் துழாய்,	31
கயிறு குறு முகவை,	22
கரை வாய்ப் பருதி,	46,
கல் கால் கவணை,	88,
கழை அமல் கழனி,	32,
காடுறு கடு நெறி	26,
கான் உணங்கு கடு நெறி	25,
குண்டு கண் அகழி,	53,
குறுந்தாள் ஞாயில்,	71,
கூந்தல் விறலியர்	18,
சான்றோர் மெய்ம்மறை	14,

சில் வளை விறலி,	57,
சிறு செங் குவளை,	52,
சீர் சால் வெள்ளி	24
சுடர் வீ வேங்கை,	41,
செங் கை மறவர்,	49,
தசும்பு துளங்கு இருக்கை,	42,
தைைந்த காஞ்சி	23,
தீம் சேற்று யாணர்,	75,
துஞ்சும் பந்தர்,	55,
துயிலின் பாயல்	16,
துவராக் கூந்தல்,	89,
தொடர்ந்த குவளை	27,
தொழில் நவில் யானை,	84,
நல் நுதல் விறலி,	47,
நலம் பெறு திரு மணி,	74,
நாடு காண் அவிர் சுடர்	40,
நாடு காண் நெடு வரை,	85,
நாள் மகிழ் இருக்கை,	65,
நிரைய வெள்ளம்	15,
நில்லாத் தானை,	54,
நிழல் விடு கட்டி,	81,
நிறம் படு குருதி,	79,
நோய் தபு நோன் தொடை	44,
பாசிலர் வெறுக்கை,	38,
பல்தோல் தொழுதி,	83,
பறைக் குரல் அருவி.	70,
பிறழ நோக்கு இயவர்	78,,
புகல் சூழ் பறவை,	30,
புகன்ற ஆயம்,	11,
புண்ணுடை எறுழ்த்தோள்	80,
புதல் சூழ் பறவை,	61,
புலாஅம் பாசறை,	66
பூத்த நெய்தல்	13,
பேர் எழில் வாழ்க்கை,	48,

மண் கெழு ஞாலம்	69,
மரம்படு தீம் கனி,	60,
மா கூர் திங்கள்,	12,
மா சிதறு இருக்கை,	59,
மெய் ஆடு பறந்தலை,	76,
வடு அடு நுண் அயிர் ,	35,
வரம்பு இல் வெள்ளம்,	51,
வரைபோல் இஞ்சி,	3,
வலம் படு வியன் பணை	62,
வலம் படு வென்றி,	37,
வலி கெழு தடக்கை	90
வளன் அறு பைதிரம்,	19,
வாள் மயங்கு கடுந் தார்,	36,
வினை நவில் யானை,	82
வெண் போழ்க் கண்ணி,	29,
வெண்கை மகளிர்	87
வெண்தலைச் செம்புனல், ,	67,
வெந்திறல் தடக்கை,	86
வெருவரு புனல் தார், ,	50,
வென்று ஆடு துணங்கை,	77,
வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி,	56

செய்யுள் முதல் தொடர் அகராதி

அட்டு ஆனானே	47	களிறுடைப் பெருஞ்சமம்	76
அலந்தலை உன்னத்து	23	கார்மழை முன்பின்	83
அவல் எறி உலக்கை	29	கால் கடிப்பு ஆக	68
அறான யாணர்	71	குட்டுவன் இரும்பொறை	9ப
ஆடுக விறலியர்	58	குடக்கோ நெடுஞ்சேரலாத	5ப
ஆராத்திருவின்	4ப	குன்றுதலை மணந்த	31
ஆன்றோள் கணவ	55	கேள்விகேட்டுப்	74
இகல் பெருமையின்	72	கொடி நுடங்கு நிலைய	52
இணர்ததை ஞாழல்	30	கொடுமணம் பட்ட	67
இமயவரம்பன்	3ப	கொலைவினை மேவற்று	60
இரும்பனம் புடையர்	42	கொள்ளைவல்சி	19
இரும்புலி கொன்று	75	கோடு உறழந்து	16
இழையணிந்து	62	சிதைந்தது மன்ற	27
இழையர் குழையர்	46	சினனே காமம்	22
இறும்பூதால் பெரிதே	33	சென்மோ பாடினி	87
உண்மின் கள்ளே	18	சொல்பெயர்	21
உலகத்தோரே பலர்	38	திரு உடைத்து	28
உலகம் புரக்கும்	81	துளங்கு நீர் வியலகம்	51
உயிர் போற்றலையே	79	தேஎர்பரந்த புலம்	26
உரவோர் எண்ணினும்	73	தொறுத்த வயல்	13
உறல்உர குருதி	86	நல்மரம் தவன்றிய	85
எடுத்தேறு ஏய	84	நிலம்நீர் வளி	14
எறி பிணம் இடறிய	65	நிலம் புடைப்பன்ன	44
எனைப் பெரும்படை	77	நும்கோயார்	20
ஒருஉப நின்னை	34	நெடுவயின் ஒளிறு	24
ஓடாப் பூட்கை	57	பகல்நீடு ஆகாது	59
கவரிமுச்சிக்	43	பகை பெருமையின்	82
களிறு கடைஇய தாள்	70	பலாஅம் பழுத்த	61

பிறர்க்கு எனவாழ்தி	39	யாமும் சேறுகம்	49
புணர்புரி நரம்பின்	41	வடவர் உட்கும்	5ப
புரைசால் மைந்த	35	வயவர் வீழ	12
புரைவது நினைப்பின்	17	வரைமருள் புணரி	11
பைம் பொற்றாமரை	48	வலம்படு முரசின் இலங்குவண	78
பொய்இல் செல்வக்	8ப		
பொலம் பூந் தும்பை	45	வலம்படு முரசின் வாய்	64
போர் நிழல் புகன்ற	40	வள்ளியை என்றலின்	54
மடியா உள்ளமொடு	7ப	வாங்கு இரு மருப்பின்	66
மலை உறழ்யானை	69	வால் மருப்பின்	80
மன்னிய பெரும் புகழ்	2ப	வாழ்க நின் வளனே	37
மாஆடிய புலன்	25	வானம் பொழுதோடு	89
மாண்டனை பலவே	32	விழவு வீற்றிருந்த	56
மாமலை முழக்கின்	50	வீயா யாணர்	36
மீன்வயின் நிற்ப	90	வென்று கலம் தரீஇயர்	53
யாண்டு தலைப்பெயர	15	வையகம் மலர்ந்த	88

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
நவீன நாடகங்களும் ஊடகங்களும்	**50.00**

663 பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப் புத்துரையும் 170.00